# தமிழ்த் தேசியம் எனும் அடையாள அரசியல்

## நேர்காணல் தொகுப்பு



தொகுப்பு கானகன்

E4

# தமிழ்த் தேசியம் எனும் அடையாள அரசியல்

பேட்டிகளின் தொகுப்பு

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

# தமிழ்த் தேசியம் எனும் அடையாள அரசியல்

## பேட்டிகளின் தொகுப்பு

தொகுப்பு:

**கானகன்**

தமிழ்த் தேசியம் எனும் அடையாள அரசியல்
பேட்டிகளின் தொகுப்பு

தொகுப்பு: கானகன்

© மதுரை பிரஸ்

முதல் பதிப்பு, 2011

வெளியீடு: மதுரை பிரஸ்
60, பி, கோதண்டராமர் கோவில் தெரு
மேற்கு மாம்பலம், சென்னை – 33
மின்னஞ்சல்: maduraipress@gmail.com

புத்தக ஆக்கம்: சுவடி, சென்னை – 5. தொ.பே. 28441672
புத்தக வடிவமைப்பு: கீழ்வேளூர் பா. ராமநாதன்

அட்டை: பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸில்
அச்சிடப்பட்டது. புத்தகம் மணி ஆஃப்செட்டில்
அச்சிடப்பட்டு பவுண்ட் செய்யப்பட்டது.

விற்பனை உரிமை: சுதர்ஸன் புக் புராசஸர்ஸ் &
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், 669, கே.பி. சாலை, நாகர்கோவில் – 1

விலை: ரூ. 160/–

*Tamil Desiyam Ennum Adayala Arasiyal*

*Collection of Interviews*

Compiled by Kanagan

First edtion 2011

© Madurai Press

Madurai Press, 60, B, Kodandaramar Kovil Street,
West Mambalam, Chennai -33.

maduraipress@gmail.com

ISBN: 978-81-909332-0-9

**கானகன்**

*பத்திரிகையாளர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக அரசியலை உன்னிப்பாக கவனித்து வருபவர். பல்வேறு இதழ்களில் இவரது விமர்சனக் கட்டுரைகள் வெளியாகியிருக்கின்றன.*

ஈழப் போராட்டத்தில் இன்னுயிர்
நீத்த அனைவருக்கும்

# உள்ளடக்கம்


முன்னுரை ........................................ 11

ஸ்ரீதரன், ராஜன் ஹூல் ........................................ 37

சா.செ. சந்திரஹாசன் ........................................ 57

மறவன்புலவு சச்சிதானந்தம் ........................................ 67

சிவாஜிலிங்கம் ........................................ 91

வ. கீதா ........................................ 99

அருள்மொழி ........................................ 119

அரு. கோபாலன் ........................................ 131

இரா. சனார்த்தனம் ........................................ 143

சங்கொலி திருநாவுக்கரசு ........................................ 157

அ.கா. பெருமாள் ........................................ 167

பண்டிருட்டி ராமச்சந்திரன் ........................................ 185

து. ரவிக்குமார் ........................................ 199

சி. மகேந்திரன் ........................................ 213

உ.ரா. வரதராஜன் ........................................ 223

ஞானசேகரன் ........................................ 233

தியாகு ........................................ 241

பெ. மணியரசன் ........................................ 251

விடுதலை ராஜேந்திரன் ........................................ 259

அ. மார்க்ஸ் ........................................ 271

பா. செயப்பிரகாசம் ........................................ 291

டி.எஸ்.எஸ். மணி ........................................ 299

முன்னுரை

# தமிழ்த் தேசியம் எனும் அடையாள அரசியல்

அண்மை இலங்கை நிகழ்வுகள் தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய உணர்வு எவ்வளவு பலவீனமடைந்திருக்கிறது என்பதை நிதர்சனமாகவே காட்டியிருக்கிறது. அடையாள அரசியல் எல்லாமே வெறும் அடையாளத்துடன் முடிந்துவிடும் அவலத்தைத் தான் நாம் இன்று காண்கிறோம்.

தடபுடலாக உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடத்தினால், மணிமண்டபம் அமைத்தால், சிலைகள் வைத்தால், நரம்பு புடைக்கப் பேசினரல், பாடல் எழுதினால், பெயர் வைத்தால் இப்படி ஏதாவது ஓர் சடங்கின் மூலம் தனது தமிழ்ப் பற்றை ஒருவர் வெளியிட்டுவிட்டால், அதுவே ஏதோ பெரும் சாதனையாக சித்தரிக்கப்படுகிறது.

தமிழினம் என்ற அடையாளத்தைக் கொண்டாடுவதாகச் சொல்லிப் புறப்பட்டவர்கள், அடையாளமாக எதையாவது வெளிப்படுத்திவிட்டு அமைதியாகிவிடுகின்றனர்.

தமிழின அரசியல் பேசி தங்களை வளர்த்துக் கொள்ளும் தலைவர்களுக்கு அடையாளத்தை வெளிப்படுத்திவிட்டு ஓய்ந்துவிடுவது ரொம்பவும் வசதியாக இருக்கிறது. இந்தச் சூழலில் இவ்வளவு தான் முடியும் என்று தொண்டர்களும் இதை நியாயப்படுத்துகிறார்கள்.

தமிழ்த் தேசியவாதத்தின் அடிநாதமாகக் கருதப்படுகிற இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சில தீவிரவாதிகள் தங்களையே மாய்த்துக் கொண்டனர். ஆனால் அத்தகைய இன அடையாள வலியுறுத்தல் பெரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்திவிடவில்லை. விடுதலைப் புலிகளை ஆதரித்தவர்கள், எதிர்த்தவர்கள் இரு தரப்பினருமே தங்கள் பற்றினை பறைசாற்றிவிட்டு, தேர்தல் வேலைகளில் மூழ்கிவிட்டனர்.

இலங்கையில் நடந்த போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் மரணத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்ற தகவல் வந்ததும், உண்ணாவிரத நாடகத்தை அரங்கேற்றினார் தமிழக முதல்வர் மு. கருணாநிதி. கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படமாட்டாது என்ற ஒரு வெற்று உத்திரவாதத்துடன் அந்தப் பரபரப்பு ஓய்ந்தது.

உண்ணாவிரதத்திற்கு மறுநாள் நடந்த செய்தியாளர் சந்திப்பில், தமிழர்கள் மீது தாக்குதல்கள் தொடர்வதாக வந்த செய்திகள் குறித்து கேள்வி எழுந்தபோது, சர்வ அலட்சியமாக முதல்வர் கருணாநிதி பதிலளித்தார்: “மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்ற கதைதான். மற்றபடி எல்லாம் சுமுகமாகவே முடியும் ....”

சுமுகமாகத்தான் முடிந்தது. அதாவது மஹிந்த ராஜபக்சே அரசுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் சுமுகமாகத்தான் முடிந்தது. தூவானம் கறுத்து, ஆகாயம் பிளந்து கொட்டி, யுகப்பிரளயமே நிகழ்ந்து, அந்த வெள்ளக்காட்டில் இலங்கைத்

தமிழர்களின் 30 ஆண்டு கால போராட்டமும் அடித்துச் செல்லப்பட்டது எப்படி? இதுவரை கருணாநிதி பதிலளிக்கவில்லை. அவரிடம் யாரும் கேட்கவுமில்லை அல்லது கேட்க முடியவுமில்லை.

தேர்தல் களேபரமெல்லாம் ஓய்ந்து, அமைச்சரவை பேரம் முடிந்து, தோல்வியுற்றவர்கள் தோற்றதற்கான காரணங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தபோதுதான், போரின் இறுதிக்கட்டத்தில் குறைந்தபட்சம் 20,000 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என்ற செய்தி வந்தது.

அதைத் தொடர்ந்து 250,000க்கும் அதிகமானோர் மிக அவலமான சூழலில் முள்வேலிகளுக்குப் பின்னால் அடைத்து வைக்கப்பட்டிருப்பது குறித்த செய்திகள். ஆயினும் சடங்கு, சம்பிரதாய ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு அப்பால் எதுவும் நடந்துவிடவில்லை. தமிழ்நாட்டில் அவரவர், அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். என்ன தமிழுணர்வு இது? இன தேசியம் தேவையானதொரு உணர்வுதானா? சிக்கலான கேள்விதான். சிந்திக்கத் தொடங்கினால் மேலும் கேள்விகள் எழுகின்றன. எந்த உணர்வுதான் தேவை? அதற்கான அளவுகோல் என்ன?

வாழ்க்கைக்கு, இருத்தலுக்கு பொருள் இருக்கிறதா போன்ற தத்துவார்த்தரீதியான கேள்விகளுக்குள் போகாமல், பிறந்துவிட்டவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியாக வாழ உரிமை இருக்கிறது, எவ்வித நாடு, இன, மொழி, மத வேறுபாடுகளும் அவ்வுரிமையை எவரிடமிருந்தும் பறித்துவிடக் கூடாது என்பதோடு இப்போதைக்கு நிறுத்திக் கொள்ளலாம். அது ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு கருதுகோள் என்ற அடிப்படையிலிருந்து, எத்தகைய பற்றுகள் அந்த லட்சியத்தை அடைய வழி செய்யக்கூடும் என்று நாம் ஆராயத் தொடங்கலாம்.

தனி ஒருவனுக்கு உணவில்லையேல் ஜகத்தினையே அழிப்பதில் தவறில்லை என்ற அணுகுமுறையே உண்மையான மனித நேயத்தின் கவித்துவ வெளிப்பாடென்றால், அதே மனித நேயத்தினை சாதித்துக்காட்ட வழிசொல்வதுதான் மார்க்சீயக் கோட்பாடு – இயன்ற அளவு உழைத்தல், வேண்டிய அனைத்தையும் பெறுதல் என்று அது முழங்கும் போது, ஒருவரது திறன்கள்கூட அவரது வாழ்நிலையை தீர்மானிக்கவேண்டியதில்லை என்கிறது.

மற்ற பாகுபாடுகளோடு உடல், உள்ளம், மூளை ரீதியான பாகுபாடுகளும் ஒதுக்கிவைக்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் வாழ்க்கையை முழுமையாக துய்ப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சமூக அமைப்பு இருக்கவேண்டும் என்று மார்க்சீயம் வலியுறுத்துகிறது.

தனி ஒருவனுக்கு உணவில்லையேல் என்று மஹாகவி போல் சீறலாம் அல்லது சமூக அமைப்பின் நோக்கம் எல்லோரும் இன்புற்று வாழச் செய்வதாக இருக்கவேண்டும் என்று கூறி, அவ்வாறு அனைவரையும் வாழச்செய்ய வழி சொல்லலாம் மார்க்ஸ் போல். அத்தகைய பெருங்கனவுகளின் அடிநாதம் ஒன்றுதான் – எல்லையற்ற மனிதநேயம்.

அத்தகைய உணர்வுகள் எச்சமூகத்திலும் மேலோங்கியிருந்ததாக வரலாறே கிடையாது. அப்படி இருந்திருந்தால் மனித குல வரலாறு வேறு மாதிரி இருந்திருக்கும். எல்லா கால கட்டங்களிலும் ஆண்டான் – அடிமை உறவுகள் பல்வேறு வடிவங்களில் இருந்து வந்திருக்கிறது, ஒரு சிலர் ஆள, மற்றவர் பல்லக்கு தூக்கி வாடவுமே வரலாறு நகர்ந்திருக்கிறது. மாற்றத்தைக் கொண்டுவருவதாகச் சொன்ன நபர்களும் தத்துவங்களும் ஏதேதோ புதைகுழிகளில் சிக்கி, சுரண்டலும் ஏமாற்றலும் தொடர்கின்றன.

இந்தப் பின்னணியில் எப்படியாவது பிழைத்துக் கொள்வதே வாழ்கை நெறியாக பலருக்கு இருந்து வந்திருக்கிறது. எனவே பெற்றோர், உற்றார், உறவினர் இவர்களைச் சுற்றியே ஒருவரது அக்கறைகள் அமைகின்றன. அதன் நீட்சியே கிராமத்தை, நாட்டை, ஜாதியை, மதத்தை ஒட்டி அமையும் பற்றுகள்.

Nation state என்றழைக்கப்படுகிற நாடு அல்லது தேசம் எப்போது தோன்றியது என்பது குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.

அத்தகைய நாடு எனும் அமைப்பு தோன்றாத நிலையில்கூட, தேச உணர்வு இருந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. அரசர்கள் ஆண்டுகொண்டிருந்தபோது, வெறும் கூலிக்காகவோ, மன்னனுக்குப் பயந்தோ மட்டும், பலர் படையில் சேர்ந்து, இன்னொரு நாட்டுடனான போரில் பங்கேற்று, மடிந்திருக்கமாட்டார்கள். தேசம் என்பதில் தனக்கும் ஏதோ பெரும் பங்கிருப்பதாக, தன்னுடைய நாடாக நினைத்திருப்பார்கள். புலவர்களும், ஊர்ப் பெரியவர்களும் பெற்றோர்களும் அப்படிப்பட்ட எண்ணங்களை வளர்த்திருப்பார்கள். குழுப் பற்றே நாட்டுப் பற்றாகவும் வளர்ந்திருக்க வேண்டும்.

இம்மாதிரிப் பின்னணியில் வளரும் இன தேசியங்கள் முற்போக்கானதாக அமையவே வாய்ப்பில்லை. ஏனெனில் நம் சொந்தங்களின் செயல்களை நாம் பகுத்தறிந்து பார்த்துவிடுவதில்லை. நமது தாய், தந்தை அல்லது வேறு உறவினர்கள் என்று வரும்போது அவர்கள் தவறு செய்தாலும் அவர்கள் பக்கமே சாயத்தோன்றுகின்றது. இதுவே Right or wrong, my country - தவறென்றாலும், சரியென்றாலும் என் நாடு எனும் பாசிச வெறியாக மாறிவிடுகிறது.

இதில் சிக்கல் என்னவென்றால், அத்தகைய பற்றுகள் மிக அடிப்படையானவையாக, தொடர்ந்து ஒவ்வொரு தலைமுறையும் உள்வாங்கி வந்திருப்பதனால் நம்முடைய ஜீன்களிலேயே ஊறிவிடுகின்றன. எனவே மற்ற பற்றுகளை விடவும் மிகவும் வலிமையானதாக விளங்குகின்றன.

எப்படியாவது தப்பிப் பிழைத்தால்போதும் என நினைப்பது (survival instinct), பாலியல் உணர்வுகள் ஆகியவற்றிற்கு அப்பால் வேறு ஏதேனும் அடிப்படை உணர்வுகள் என்று இருக்குமானால், அவை மனிதர்களின் குழு மனப்பான்மையை சார்ந்தே இருக்கும், அது ஜாதி, மதம், இனம், நாடு மீதான பற்றாக வெளிப்படும்.

இத் தொகுப்பில் நாம் விவாதிப்பது இன தேசியம் குறித்து. தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அதற்கோர் குணமுண்டு என்ற புரிதல் பற்றி. இனம் என்பதை எப்படிப் புரிந்துகொள்வது? இனத்தினுடைய அடிப்படையான அடையாளங்கள் என்ன? ஆங்கிலத்தில் race என்று பொருள் கொண்டால், அத்தகைய மனிதத் தொகுப்புகள் மிகச் சிலவே இருப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இவ் விவாததைப் பொறுத்தவரை, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களை ஒரு இனமாகக் கருதிக்கொள்ளலாம். அதிலும் ஒரு சிக்கல் எழுகிறது. பிராமணர்களை என்ன செய்ய? பிராமணர்களைத் தமிழராகக் கருதக்கூடாது என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார்.

அவர் திராவிடன் என்று, மொழியைக் கடந்து வேறு ஒரு குறியீட்டைப் பயன்படுத்தியதன் காரணமே தமிழ்ச் சமூகத்திற்குள் பிராமணர்களை அவர் அனுமதிக்க தயாராக இல்லாததுதான். பிராமணர்களும் தங்களை நீண்ட காலம் தமிழர்கள் என்றழைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதும் உண்மைதான்.

பாரதியாருக்கு தமிழின்மீது அளவுகடந்த பற்று இருந்திருக்கலாம். ஆனால் தன்னைத் தமிழன் என்று மட்டும் அடையாளப்படுத்திக்கொண்டாரா என்றால் இல்லை என்று சொல்லிவிடலாம். காக்கை, குருவியுடன் இப்பெரும் பிரபஞ்சத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட அந்த மாபெரும் மனிதநேயனிடம் தமிழ்த் தேசிய உணர்வுகளும் குடிகொண்டிருந்தனவா?

உ.வே.சா அரிய தமிழ்க் காவியங்களை கண்டெடுத்திருக்கலாம். ஆனால் தான் தமிழன் என்று நினைத்து அவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டாரா அல்லது அது ஒரு அறிவுஜீவித்தேடலா?

திராவிட இயக்க வளர்ச்சிக்குப் பிறகு தமிழன் என்று சொல்லிக் கொள்ளாவிட்டால் திரும்ப கைபர் கணவாய்க்கு விரட்டிவிடுவார்களோ என்ற அச்சத்தில் பிராமணர்கள் தங்களைத் தமிழர்கள் என்று அழைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் மனதளவில் அப்படி உணர்கிறார்கள் என்று சொல்லிவிடமுடியாது.

அவ்வாறு உணராமலிருப்பது தவறு என்று வாதிடுவதற்காக அது பற்றி இங்கே குறிப்பிடவில்லை. அவ்வுணர்வு குறிப்பாக இச்சாராரிடம் பலவீனமாகவே இருக்கிறது. அந்த அளவு தமிழ்த் தேசியம் பலவீனப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டவே விரும்புகிறேன்.

இரண்டு அல்லது மூன்று சதம் மட்டுமே இருக்கும் இச்சாரார் பற்றி விவாதிக்கவேண்டியது அவசியமா எனக்கூட கேள்வி எழலாம். கருத்துத் தளத்தில் பிராமணர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்; அவர்களால் பலவேறு தளங்களில் பொதுக் கருத்தினை உருவாக்கமுடிகிறது. அறிவுஜீவிகளில் பலர் பிராமணர்களாக இருக்கிறார்கள் என்பதால் தான் இச்சாரார் குறித்து பேசுவதும் அவசியமாகிறது.

பொதுவாக தமிழ்த் தேசிய நீரோட்டத்திலிருந்து பிராமணர்கள் தனித்தே இருந்து வந்திருக்கின்றனர். தமிழ் உணர்வாளர்கள் பிராமணர்களை தொடர்ந்து சாடும்போது அவர்கள் தமிழ்த் தேசியமே தங்களுக்கு எதிரானது என்றும் நினைக்கின்றனர். இன்னொரு புறம் தலித் மக்கள். அவர்களும் தமிழ்த் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகியே நிற்கின்றனர்.

*19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அயோத்திதாச பண்டிதர் தலித்துகள், குறிப்பாக பறையரின மக்கள், தமிழர்களே என்றும் பிராமணரல்லாத தமிழர்கள் அனைவருக்கும் ஒரே எதிரி பிராமணர்களும் பிராமணனை உச்சி தட்டில் அமர்த்தும் இந்து மதமுமே என்று சொல்லி வந்தார். ஒரு பைசாத் தமிழன் என்று கூட இதழெல்லாம் நடத்தினார். எந்த அளவு பெரியாரின் அங்கீகாரம் அவருக்கு கிடைத்தது?*

பெங்களூரில் நடைபெற்ற தனது 68 ஆவது பிறந்த நாள் விழாவில், "என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும், தங்கவயல் ஜி. அப்பாத்துரையார் அவர்களும் ஆவார்கள்" என்று கூறியதாக ஒரு பெரியார் ஆதரவாளர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதைத் தவிர பெரிய அளவில் அயோத்திதாசரைப் பற்றி பெரியார் பேசியதாகத் தெரியவில்லை.

ஏறத்தாழ முற்றிலுமாகவே மறக்கப்பட்ட அயோத்திதாசரை அண்மைக் காலங்களில்தான் ஆய்வாளர்கள் மீட்டெடுத்தார்கள். இப்போதும் தனிப்பெரும் தலைவராக, சிந்தனையாளராக அவரைக் கொண்டாடுவது தலித் அமைப்புகள்தான்.

பெரியார், அம்பேத்காருக்கு முன்னாலேயே ஜாதிக் கொடுமையின் வேர், இந்து மதத்தில் இருக்கிறது, அதை நிராகரிப்பதே பிராமணரல்லா

தாருக்கு சமூக விடுதலை பெற்று தரும் என்று முழங்கிய பண்டிதரை தமிழினவாதம் பேசும் கட்சிகள் கண்டுகொள்வதில்லை.

அவர் தமிழன் என்று ஏன் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார்? அத்தகைய சொல்லா டலைப் பயன்படுத்திய உயர் மற்றும் இடைநிலை பிராமணரல்லாதார் அப்போதாவது தலித்துகளை, சரியாகச் சொல்வதனால் அவர் சார்ந்த பறை யரினத்தவரை, சக மனிதர்களாவது ஏற்றுக்கொண்டு விடமாட்டார்களா என்ற நப்பாசையின் காரண மாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால் இன்று வரை அவரது நோக்கம் நிறைவேறவில்லை.

திருமாவளவன், டாக்டர் கிருஷ்ணசாமி போன்றோர் தமிழர்களாக தங்களை அடையாளப் படுத்திக்கொள்ள முயன்றாலும், மற்றவர்களைவிட தீவிரமாகவே அவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்தாலும், தமிழன் எனும் அங்கீகாரம் அவர்களுக்கு கிடைப்பதில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர்களு டன் கைகோர்ப்பவர்களும் தலித்துகள் அவமானப் படுத்தப்படும்போது, நசுக்கப்படும்போது, கண்டும் காணாமல்தான் இருந்துவிடுகிறார்கள். அதற்குக் காரணமான இடைநிலை அல்லது மேல்ஜாதி பிராமணரல்லாதாரை கண்டிப்பதில்லை.

அண்மையில் *தினமணி* நாளேட்டில் பழ. நெடு மாறன் எழுதியிருந்த ஒரு கட்டுரையில் கூறுகிறார் – "இன்னும் ஏராளமான கிராமங்களில் தீண்டாமை, ஜாதி இழிவு போன்ற பெரு நோய்கள் தங்கு தடையின்றித் தொடர்கின்றன. நமது சட்டங்களோ, அவற்றை அமல்படுத்த வேண்டிய அதிகாரிகளோ, அவர்களுக்கு ஆணையிட வேண்டிய அமைச்சர் களோ இந்த இழிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவில்லை. சமுதாயச் சீரழிவுக்குக் காரண

மான இவற்றை அறவே ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் துணிவும் இவர்களுக்கு இல்லை."

அதைத் தாண்டி தலித்துகளை இழிவுபடுத்தும், ஒடுக்கும், மேல், இடைநிலை ஜாதியினர் பற்றி ஒரு சொல்கூட இல்லை. அவரது கவனமெல்லாம் திராவிடக் கட்சிகளை, குறிப்பாக தி.மு.கவை சாடுவதிலேயே இருக்கிறது,

வட மாவட்டங்களில் தலித்துகளையும் வன்னியர்களையும் ஒருங்கிணைத்தால் பெரும் அரசியல் சக்தியாக வளரலாம் என்று கணித்த பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ச.ராமதாஸ் ஒரு கட்டம் வரை தலித் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கெதிராகக் குரல் கொடுத்தார். இடுகாட்டிற்கு வழி, பறையடித்தல் போன்ற பிரச்சினைகளில் தலித்துகளுக்கு ஆதரவாக நின்று ஒரு சில பகுதிகளிலேனும் அவர்கள் இழிவுபடுத்தப்படுவதை நிறுத்துவதில் ஓரளவு வெற்றியும் கண்டார். மத்திய ஆட்சியில் பங்கு பெறும் வாய்ப்பை பா.ம.க. பெற்றபோது, தலித் எம்.பி.க்களுக்கு முன்னுரிமை கொடுத்தார். ஆனால் குறுகிய காலத்திலேயே தேன் நிலவு முடிவுக்கு வந்தது. இப்போதெல்லாம் தீவிரமாகவே தனது வன்னியர் அடையாளத்தை வலியுறுத்துகிறார் ராமதாஸ்.

ஒருமுறை விருதுநகர் பகுதியில் தலித்துகள் தாக்கப்பட்டபோது ம.தி.மு.க. பிரமுகர் ஒருவரிடம், வைகோவை அறிக்கை விடச் சொல்லுங்களேன் என்று சொன்னேன். அதற்கு அவரது பதில் – நீங்கள் சொல்லுவதும் சரிதான். எங்கள் இமேஜ் கூடும். அரசியல்ரீதியாக பல பின்னடைவுகளை சந்தித்திருக்கும் எங்களுக்கு இப்படி தலித் மக்கள் மத்தியில் சற்று மதிப்பு உயர்ந்தால் நல்லதுதான். ஆனால் ஒன்றை நீங்கள் கவனிக்கவேண்டும்; எங்களுடைய அடிப்படை ஆதரவுத் தளம் கலகலத்துப் போனால்?.." அங்கே தலித்துகளைத் தாக்கியது நாயக்கர்கள். அவர்களை ம.தி.மு.க. பகைத்துக்கொள்ள விரும்ப

வில்லை. அந்த லட்சணத்தில் இருக்கிறது இவர்க ளின் தமிழுணர்வு.

திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தலித் அமைச்சர் களுக்கு சமூக நலத்துறை போன்ற அதிகாரம் அதிகமற்ற துறைகள்தானே தொடர்ந்து ஒதுக்கப் படுகின்றன? கட்சிப் பதவிகளில்கூட எத்தனை தலித்துகள் இருக்கிறார்கள்?

பல காலம் கழித்து பரிதி இளம்வழுதிக்கு வளம் கொழிக்கும் நகர்ப்புற வளர்ச்சி கொடுக்கப்பட்டி ருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அவை யெல்லாம் விதிவிலக்குகளே. தவிரவும் அவ்வாறு உயர்பவர்களும் பகிரங்கமாக தலித் மக்கள் நலனுக் காகக் குரல் கொடுப்பதில்லை. அவ்வாறு குரலை உயர்த்தினால் இவர்கள் அணிசேர்க்கிறார்கள் என்று தலைமை தவறாக புரிந்துகொள்ளக்கூடும் என்றெல்லாம் இரண்டாம் மட்ட, மூன்றாம் மட்டத் தலித் தலைவர்கள் அஞ்சுகிறார்கள்.

தேர்தல் அரசியலில் இறங்காத திராவிடர் கழகத் தில்கூட தஞ்சைப் பகுதியில் இன்று இடைநிலை ஜாதி யினரின் ஆதிக்கமே இருக்கிறது. "திராவிடனே, அல்லது தமிழனே, அதாவது பார்ப்பானல்லாத, முஸ்லிம் அல்லாத, கிறிஸ்தவன் அல்லாத, ஆதி திராவிடன் (ஷெட்யூல்ட் வகுப்பார்) அல்லாத, திராவிடனே, சூத்திரனே" என்றுதான் பெரியார் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

மேலும், "பார்ப்பனரல்லாத ஜாதி இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் தமிழர்கள் தான். அவர்களெல்லாம் இங்கே பிறந்தவர்கள். ஆரிய வழிவந்த பார்ப்பனர்கள் பிழைக்க இங்கே வந்த வர்கள்" என்றும் கூறியிருக்கிறார். அங்கே தலித்து கள் பற்றி பெரியார் பேசவே இல்லை. விடுதலை நாளை துக்க நாள் என்று அறிவித்தபோதுகூட, இட ஒதுக்கீடு பெறும் ஷெட்யூல்ட் வகுப்பாருக்கு

லாபம், நாம்தான் மோசம் போய்விட்டோம் என்ற ரீதியில் அவர் பேசுகிறார்.

சென்னையில் பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசும்போது திராவிட நாடு கிடைத்தால் ஆதி திராவிடர்களுக்கு லாபமா, நஷ்டமா என்று கேட்கப் பட்டது. இழப்பே என்றவர், சில விநாடி இடை வெளிக்குப் பிறகு அவர்கள் 'ஆதி' என்ற அந்த அடை மொழியை இழந்து, முற்றிலுமாக திராவிடர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படுவர் என்றார் பலத்த கரவொலிக்கிடையே. இப்படி அவர் எப்போதாவது கூறியிருந்தாலும், தலித்துகள் ஜாதியத் தளைகளி லிருந்து விடுபடுவதில் பெரியார் போதிய அக்கறை காண்பித்ததாகச் சொல்லமுடியாது.

அவர் காலத்திலேயே கருணாநிதி தமிழ்ச் சமூ கத்தை பல்வேறு வழிகளிலும் சீரழித்துக் கொண்டி ருந்ததைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந் தவர், தலித் பிரச்சினையிலும் அப்படியே இருந்து விட்டார். பிராமணரல்லாத முற்பட்ட மற்றும் இடைநிலை ஜாதியினர் அரசியலதிகாரத்தைக் கைப் பற்ற உதவியதோடு தன் கடமை முடிந்துவிட்டதாக அவர் நினைத்ததைப்போலத் தோன்றுகின்றது.

அவரது சீடர்களும் தத்தம் செல்வாக்கை நிலைநாட்டிகொள்வதில் காட்டிய அக்கறையை தலித் மக்கள் மீது காட்டவில்லை. அதன் விளைவே இன்னமும் தலித்துகளுக்கெதிரான கொடுமைகள் பல பகுதிகளில் அன்றாட நிகழ்வாக இருக்கின்றன.

பல கிராமங்களில் பிராமணரல்லாத ஜாதியின ரைத் 'தமிழாளுங்க' என்றே தலித் மக்கள் அழைக் கின்றனர். திராவிட இயக்க வளர்ச்சியின் விளை வாக இடைநிலை ஜாதியினர் அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றிய பின் தலித்துகளின் நிலை சில இடங்களில் இன்னமும் மோசமாகியிருக்கிறது. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, உத்தப்புரம் – இத்

தகைய பிரச்சினைகள் நீங்கலாக, இரட்டைக் குவளையிலிருந்து இடுகாட்டுக்கு பாதை மறுக்கப் படுவது வரை இன்னமும் பல வழிகளில் தலித் மக்கள் இழிகுலத்தோராகவே நடத்தப்படுகின்றனர். அண்மையில்கூட சிவகங்கையில் மேல் ஜாதியினர் ஈமச் சடங்கில் கொம்பு ஊத மறுத்த தலித் இளை ஞர் கொல்லப்பட்டார். அத்தகைய கொடுமைகள் நிகழும்போது, கீழ்வெண்மணியிலிருந்து இன்று வரை, அரசு எந்திரம் தலித் மக்களுக்கு ஆதர வாக செயல்படுவதில்லை. இதன் விளைவாக அம் மக்கள் மேலும் அந்நியப்பட்டு நிற்கிறார்கள்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பறையர், ஆதி திராவிடர், பள்ளர் அல்லது தேவேந்திரகுல வேளாளர் போன்றோரே மேலே கூறப்பட்ட கொடுமைகளுக்காளாகிறார்கள்.

இவர்களைத் தவிர தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத தலித் பிரிவினரும் இருக்கிறார்கள். குறிப்பாக கழிப்பறைகள், கழிவுநீர் ஓடைகள் போன்ற வற்றை பராமரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் ஆதி ஆந்திரர்கள், அருந்ததியர் என அழைக்கப்படும் செருப்பு தைக்கும் தொழிலாளிகள் இவர்களுக் கெல்லாம் தெலுங்கே தாய்மொழியாக இருக்கிறது. தமிழன் எனும் அங்கீகாரத்தைப் பெற கடுமையாக முயலும் திருமாவளவனும் கிருஷ்ணசாமியும்கூட இம்மக்களைப் பற்றிக் கண்டுகொள்வதில்லை.

இன்னும் சொல்லப்போனால் கிருஷ்ணசாமி ஒரு கட்டத்தில், கிராமம் கிராமமாகச் சென்று தான் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர் இல்லை என்று நிரூபிக்கக் கடும் முயற்சி மேற்கொண்டார். 1998ல் தேர்தல்களில் அவரது வேட்பாளர்கள் கணிச மான வாக்குகளைப் பெற்றபோது, அவர் தேவேந்திரரே அல்ல என்று ஒரு சிலர் பிரச்சாரம் செய்ய, அதனை முறியடிக்கும் வகையிலேயே கிருஷ்ணசாமி ஊர்ப் பெரியவர் ஒருவரை

அழைத்துச் சென்று தான் 24 காரட் தேவேந்திரன் என நிறுவ முயன்றார். இன்றுவரை திருமாவளவன் அருந்ததியர் நிலை குறித்து எப்போராட்டமும் அறிவித்ததில்லை. ஆதி திராவிடர் மத்தியிலும், அருந்ததியரை நாம் இழிவாக நடத்தக்கூடாது என்று அவர் பிரச்சாரம் செய்வதில்லை.

ஆனால் தலித் பிரிவினருக்கான தனி இட ஒதுக்கீட்டிலிருந்து ஒரு பகுதியை அருந்ததியருக்கு, அளிப்பதற்கு திருமாவளவன் எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. கிருஷ்ணசாமி எதிர்த்தார். இப்படியாக தமிழ்ச் சமூகத்தின் சில பிரிவினர் மைய நீரோட்டத்திலிருந்து தள்ளியிருக்கிறார்கள் அல்லது தள்ளிவைக்கப்படுகின்றனர்.

பிராமண எதிர்ப்பு வேண்டுமானால் தமிழுணர்வைத் தட்டி எழுப்பப் பயன்பட்டிருக்கலாம். ஆனால் இயற்கையான கூட்டாளிகளாக இருந்திருக்க வேண்டிய தலித்துகளை ஒதுக்கியது எந்த விதத்தில் நியாயம்?

தமிழ் பேசும் முஸ்லிம்கள் ஒரு கட்டம்வரை பெரியாரையும் திராவிட இயக்கத்தினரையும் ஆதரித்தனர். ஆனால் சுயமரியாதைக்காரர்களின் தீவிர இறை மறுப்பு அவர்களுக்கு அதிர்ச்சியளித்ததால் மெல்ல மெல்ல ஒதுங்கிக்கொண்டனர். பெரியாரின் 'வாரிசுகள்' முஸ்லிம் எதிர்ப்பு அரசியல் செய்யும் பாரதீய ஜனதாவினருடன் கூட்டணி அமைத்தாலும், முஸ்லிம்களை அதிகமாகப் பகைத்துக்கொள்வதில்லை. அதே நேரம் கோவை குண்டுவெடிப்புகளுக்குப் பின் முஸ்லிம்கள்மீது கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. திமுக, அ.இ.அ.தி.மு.க. ஆகிய இரண்டுமே இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எவ்வித இடமும் கொடுக்கக் கூடாது என்பதில் உறுதியாயிருக்கின்றனர். அந்த அளவில் ஒருவித பதற்றமான உறவே முஸ்லிம்களுடன் இருக்கிறது. கிறிஸ்தவர்கள்

இந்து ஜாதி அடுக்குகளை உள்வாங்கியிருப்பதால், மதரீதியாக தமிழினவாதிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பெரிதாக பிரச்சினை இருப்பதில்லை.

ஆக தமிழினவாதம் என்பது இடைநிலை மற்றும் மேல்நிலை பிராமணரல்லாதோரை அணிதிரட்டுவதாகவே அமைகிறது, இந்தப் போக்கு, தேசிய இன உணர்வென்பதே அடிப்படையில் ஒரு குறுங்குழுவாதம் என்பதைத்தான் உறுதிப்படுத்துகிறது.

புதிய ஆதிக்க ஜாதிகளாக உருவான பிரிவினரின் கருத்துருவாக தமிழ்த் தேசியம் ஆனது மட்டுமல்ல, அது நிலவுடைமைச் சமுதாய மதிப்பீடுகளை அப்படியே சுவீகரித்துக்கொண்டிருக்கிறது. அது பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்துவதாக இருக்கிறது என்பதை அண்மைக் கால கட்டங்களில், பல்வேறு தருணங்களில் பார்க்கமுடிந்தது. குஷ்பூ குறித்து என்னவிதமான அருவருப்பான போராட்டங்களையெல்லாம் நடத்தினர்? தி.மு.க. தலைவரும் அப்போராட்டங்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார். கண்ணகி தமிழினவாதிகள் தொழும் காவியத் தலைவி.

பாலியல் பிரச்சினைகள் குறித்துப் பேசும் பெண் கவிஞர்களை உயிரோடு எரிக்கவேண்டும் என்று ஒரு இளங்கவிஞர் அறைகூவல் விடுத்தார். அவர் தலித்துகளோடு தென் மாவட்டங்களில் கடுமையாக மோதிக்கொண்டிருக்கும் முக்குலத்தோர் வகுப்பைச் சார்ந்தவராக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் பெருமைகொள்பவர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

பெண்கள் அல்லது தலித்துகள் பாதிக்கப்படும் போது தமிழுணர்வாளர்கள் காணாமல் போய் விடுவார்கள். ஈழம், பிராமண எதிர்ப்பு, வடக்கிந்திய மார்வாரி எதிர்ப்பு, திருக்குறள் உள்ளிட்ட தமிழிலக்கியங்களின் மீதான காதல் ஆகியவற்றைத்

தாண்டி அவர்கள் தமிழனின் பிரச்சினையாக எதையும் அடையாளம் காண்பதில்லை.

அப்படி குறுங்குழு வாதமாக கட்டிதட்டிப் போய்விட்டதால்தான் அதற்கு இன்றளவும் ஓரளவு செல்வாக்கு இருக்கிறதோ என்னவோ? அதிகமாக கேள்விகளை கேட்கவிடாமல், பாதுகாப்பின்மையைத் தூண்டிவிட்டு, குழு உணர்வுகளைக் கொழுந்து விட்டெரியச்செய்யும் வாதங்கள் அறிவுபூர்வமான அணுகுமுறைகளை செல்லாக்காசாக்கியே வந்திருக்கின்றன. இன்றளவும் பிரபாகரன் அட்டைப் படம் போட்டால் இதழ்கள் அதிகம் விற்பனை யாகின்றன. பிரபாகரன் பெயரைச் சொல்லி கூட்டம்கூட்ட முடிகிறது. இதை நினைத்து இக் குறுங்குழுவினர் புளகாங்கிதப்படலாம். இவர்களை, உரத்துக் குரல் கொடுக்கும் சிறுபான்மையினர் (vocal minority) என்று ஒரு சில ஆய்வாளர்கள் அழைத்தாலும், பொதுவாக அவர்களுக்கு nuisance valueவைத் தாண்டிய செல்வாக்கு இருப்பதாக எவரும் கருதுவதில்லை.

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் போர்க்களத் திலும் அதற்கு அப்பாலும் ஏன் தொடர் தோல்வி கள்? உரத்துக் குரல் கொடுப்போரால் ஏன் போதிய அளவு மக்களை அணிதிரட்டி, அரசின் மீது அழுத்தம் கொண்டுவந்து, தாங்கள் விரும்பி யதை சாதிக்கமுடியவில்லை?

தமிழுணர்வாளர்களில் பலர் கொள்கைப் பிடிப்புடையவர்கள். அரசு அதிகாரங்களை அனுபவிக்கும் திராவிடக் கட்சிகளின் தலைவர் கள்போல விலை போகிறவர்களோ அல்லது ஏமாற்றுப்பேர்வழிகளோ அல்ல. ஆனாலும் அவர் களது லட்சிய வேட்கைக்கு மதிப்பில்லையே. பொதுவாக சராசரி மக்களுக்கு லட்சியங்களின்மீது அதிக ஈடுபாடில்லாததுதான் காரணமா அல்லது இந்தத் தமிழ் உணர்வாளர்களின் அணுகுமுறை

பெரிய நம்பிக்கை ஊட்டுவதாக இல்லையா? எப்படி யாயினும் தமிழ்தேசியவாதம் பேசுவோரின் கண்களை இனவெறி மறைத்திருக்கும் நிலையில், அவர்களுக்கு பெரிதாக செல்வாக்கு இல்லாததும் நல்லதே என்று எண்ணத் தோன்றுகிறது.

விடுதலைப் புலிகள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள மறுத்து பல்வேறு தரப்பினரை தொடர்ந்து பகைத்துக்கொண்டதற்குக் கூட இத் தமிழுணர்வு துதிபாடிகளும் ஒரு காரணம் எனலாம். இடிப் பாரை இல்லாத ஏமரா மன்னன் என்பதெல்லாம் இவர்களின் திருக்குறள் வகுப்பிற்கும், மேடைப் பேச்சிற்கும்தான் என்றாகிவிட்டது.

இங்கிருந்த ஈழ ஆதரவாளர்களுக்கு துவக்கத்தி லிருந்தே விடுதலைப் புலிகள் மீது ஒருவித மயக்கம் இருந்து வந்தது. அதற்கு இரண்டு முக்கியமான காரணங்களைச் சொல்லலாம்: விடுதலைப் புலிகள் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் சிங்களர்களை அழித்தொழிப்பதற்காக எதையும் செய்யத் தயாராய் இருந்தார்கள். அது மற்ற தமிழார்வலர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டால் அப்பாவித் தமிழ்மக்கள் பல்வேறு வழிகளில் இலங்கை ராணுவத்தாலோ அல்லது போலீசாராலோ துன் புறுத்தப்படுவார்களே என்று விடுதலைப் புலிகள் தயங்கியதே கிடையாது. அதைப் பற்றி வெளியி லிருந்த ஆர்வலர்களும் கவலைப்படவில்லை.

"தாக்கிவிட்டு ஓடுவது எனும் யுக்தியில் எனக்கு அறவே நம்பிக்கையில்லை. காரணம் அப்படிச் செய்வதால் அப்பாவித் தமிழர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். மாறாக மக்களை அணி திரட்டவேண்டும்," என்று ப்ளோட் தலைவர் உமா மஹேஸ்வரன் ஒரு முறை கூறினார்.

உண்மையிலேயே ஒரு கட்டத்தில் ப்ளோட் அமைப்பே மிக வலுவானதாக இருந்தது. மேலும் சிங்கள – தமிழ் பாட்டாளிகள் இணைந்து போராட வேண்டும் என்றுகூட அழைப்பு விடுத்திருந்தார் அவர். அத்தகைய பார்வையெல்லாம் தமிழ் ஆர்வலர்களுக்கு ஒத்துவரவில்லை. களத்தில் மோதல், சிங்களச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர், பயந்தோடினர். இதில் கிடைக்கும் மகிழ்ச்சி வெறும் ஆர்ப்பாட்டங்களில் கிடைக்குமா என்ன?

கனக – விஜயர் தலையில் கல்லை ஏற்றி வந்த கதையெல்லாம் ஏட்டில் படித்ததுதானே? தமிழன் இன்னொரு இனத்தானை குலைநடுங்கவைத்ததை இப்போதுதானே நேரடியாகப் பார்க்கமுடிந்தது? எனவே அதை மாபெரும் சாதனையாக இவர்கள் பார்த்தார்கள். ஆனால், உமாவின் கோஷங்களெல்லாம் வெற்றுக் கூச்சலாகப் போனது வேறு கதை. அணி திரட்டிய மக்களைப் பயன்படுத்தி எவ்வித நடவடிக்கைகளிலும் அவர் இறங்கவில்லை. கட்சியில் அதிருப்தியாளர்களை பழிவாங்கவே அவருக்கு நேரம் போதவில்லை. சொத்துகளை வாங்கிக் குவித்தார். இறுதியில் தனிமைப்பட்டு, இயக்கத்தவர் ஒருவராலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

வர்க்கப் பார்வை, பரந்துபட்ட சமத்துவம் பற்றிய கவலை எதுவுமே இல்லாத தமிழார்வலர்களுக்கு, அவர்களைப் போன்றே, அத்தகைய பிரச்சினைகளில் தங்கள் நேரத்தை வீணடிக்காது, செயலில் தீவிரம் காட்டிய, மூர்க்கமாக இருந்த, விடுதலைப் புலிகளின் அணுகுமுறை பெரும் மகிழ்ச்சியளித்தது.

துவக்க காலங்களில் எல்லா போராளிக் குழுக்களும் மார்க்சீயம் பேசின. பாலசிங்கத்தின் தாக்கத்தால், விடுதலைப் புலிகளின் கொள்கைப் பிரகடனங்களிலும் மார்க்சீய வாதம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் அவர்களும் சரி, வெளியிலிருந்தவர்களும் சரி, அதை சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை.

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த புலம் பெயர்ந்த தமிழர்களிடம் தொடர்ந்து பொருளுதவி பெற்றுக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயல்பாகவே பொதுவுடைமை பற்றிப் பேசுவதைத் தவிர்த்தனர். எவ்வித ஏற்றத் தாழ்வும் அவர்களை அதிகம் பாதிக்கவில்லை. ஈழ தலித்துகளை இழிவாக நடத்திய வேளாளர்களானாலும் சரி, முஸ்லிம் களையும் மராத்தியரல்லாதோரையும் எதிரிகளா கவே பாவித்த சிவசேனையானாலும் சரி, எவர் குறித்தும் விடுதலைப் புலிகள் அசூயைப்படுவ தில்லை. தங்களுக்கு ஆதரவளித்தால் உங்களின் மற்ற முகங்கள் பற்றி எங்களுக்கு கவலையில்லை என்ற மனோநிலைதான் அவர்களுக்கிருந்தது.

பிரச்சினைகளை நளினமாகக் கையாளும் திறனும் விடுதலைப் புலிகளுக்கில்லை. முஸ்லிம்களு டனான உறவு முற்றிலும் சீர்குலைந்ததற்கு அவர்கள்தான் ஏறத்தாழ முழுக் காரணம் என்றால் அது மிகையாகாது.

முஸ்லிம்களுக்கும் மற்ற இலங்கைத் தமிழர் களுக்கும் மிகுந்த இணக்கமான உறவிருந்ததாகக் கூறமுடியாது. அவ்வப்போது மோதல்கள் எழும். முஸ்லிம்கள் பொதுவாக தங்கள் மதத்தையே முன்னிலைப்படுத்துவதால், சிங்களர்–தமிழர் முரண் பாடு கூர்மைப்பட்டபோதும் இந்து அல்லது கிறிஸ் தவத் தமிழர் அளவு அவர்கள் கொதிப்படையவில்லை. அவர்கள் சற்று ஒதுங்கியே இருந்தனர். அதே நேரம் முஸ்லிம் இளைஞர்கள் பலர் எல்லா போராளி அமைப்புகளிலும் இருந்தனர். உரசல்கள் ஒட்டவே முடியாத பெரும் விரிசலாக மாறியது விடுதலைப் புலிகளின் அணுகுமுறையினால்தான்.

சிங்களத் தலைவர்கள் சில முஸ்லிம் இளைஞர் களை தங்கள் பக்கம் இழுத்து ஹோம் கார்ட்ஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தியபோது மோதல்கள் ஏற்பட்டன. ஆள்வோரின் சூழ்ச்சிகளையோ அல்

லது அடிப்படைவாதிகளின் வெறியினையோ சரியாக எதிர்கொள்ளும் சாதுரியமோ, பொறுமையோ புலிகளுக்கில்லை. மாறாக காட்டுத்தனமாகத் தாக்கத் தொடங்கினர்.

கிழக்குப் பகுதியில் காத்தான்குடி மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் 147 பேர் கொல்லப்பட்டது அம்மோதல்களின் கொடுமையானதொரு உச்ச கட்டம். இச்சம்பவம் நடந்து மூன்று மாதங்களிலேயே யாழ்ப்பாண வளைகுடாவிலிருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஈவிரக்கமின்றி வெளியேற்றப்பட்டனர். இன்றுவரை அவர்கள் அகதிகளாகத்தான் தென்பகுதியில், சிங்களவர் மத்தியில், புத்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இறுதிக் கட்டங்களில் 'நாங்கள் தவறு செய்துவிட்டோம், திரும்ப வாருங்கள்' என வருந்தி வருந்தி விடுதலைப் புலிகள் அழைத்தனர். யார் அவர்களை நம்புவார்கள்?

போதாக் குறைக்கு அவர்களது சாம்ராஜ்யக் கனவுகளுக்கு குறுக்கே வந்த மற்ற போராளிக் குழுக்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், அறிவுஜீவிகள் அனைவரும் அழித்தொழிக்கப்பட்டனர். இத்தகைய அராஜகமெல்லாம் தங்களது போராட்டத்தை எந்த அளவுக்கு பலவீனப்படுத்தும் என்ற சிந்தனையே அவர்களுக்கில்லை.

புலிகளின் அழிவிற்குப் பிறகு மஹிந்தாவா, பொன்சேகாவா – யார் அதிபராக வேண்டும் என்று முடிவெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டபோது, "பொன்சேகா ஒரு கருவிதான், உத்திரவிட்டது மஹிந்தாதான்" என்று காரணம் சொல்லி பொன்சேகாவை இலங்கைத் தமிழ்க் கட்சிகள் ஆதரித்தன. தமிழர்களும் பெருமளவில் அவரை ஆதரித்து வாக்களித்தனர். ஆனால் மஹிந்தா சிங்களவர் மத்தி

யில் அமோக ஆதரவைப் பெற்று வெற்றியடைந்தார். பொன்சேகா இப்போது சிறையில். விடுதலைப் புலிகளை ஆதரித்த தமிழர் கட்சிகள் தமிழர்களைக் கொன்றுகுவித்த பொன்சேகாவிற்காக பிரச்சாரம் செய்தது, இறுதியில் தமிழர்கள் எதிர்ப்பை மீறியும் மஹிந்தா வென்றது, இப்போது ராஜபக்சே குடும்பத்தினரை எதிர்த்து எவருமே இலங்கையில் அரசியல் செய்ய இயலாத நிலை. இதைப் பற்றியெல்லாம் தமிழுணர்வாளர்கள் மூச்சுகூட விடுவதில்லை.

பிரபாகரன் இறக்கவில்லை, மீண்டும் வருவார், தனி ஈழத்திற்கான போராட்டம் மீண்டும் முகிழ்க்கும், இப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய வெற்று முழக்கங்கள் தமிழர் நலனுக்கு எதிராகவே அமையும்; ஈழப் போராட்ட ஆபத்து இன்னமும் இருக்கிறது என்று சொல்லி மஹிந்தா அரசு தமிழர்களை ஒடுக்கவே உதவும் என்பதை இவர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றனர்.

மற்ற தலைவர்களைவிட இலங்கை அரசை கண்டிப்பதிலும் விடுதலைப் புலிகளுக்கு தனது விசுவாசத்தைக் காட்டிக்கொள்வதிலும் முன்நின்ற சிவாஜிலிங்கம் அதிபர் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டபோது மஹிந்தாவிற்கு எதிரான தமிழர் வாக்குகளைப் பிரிக்கவே களத்தில் நிற்கிறார் என்ற புகாருக்குள்ளானார். இது குறித்து தமிழகத்தில் எவரும் கருத்தை தெரிவிக்கவில்லை. இதே சிவாஜி லிங்கம்தான் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட பா.ஜ.கவின் இல. கணேசனை ஆதரித்துப் பிரச்சாரம்செய்து முற்போக்கு சிந்தனையாளரின் விமர்சனத்திற்குள்ளானவர். அது குறித்தும் தமிழ்த் தேசியவாதிகள் எதுவும் பேசவில்லை.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் விமர்சனத்திற்குரிய செயல்களில் ஈடுபடும்போது,

மௌனம் சாதிப்பதே தமிழார்வலர்களின் வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது.

*தினமணி* நாளேடு தமிழ்த் தேசியம் பற்றி அளவு கடந்த அக்கறை இருப்பதுபோல காட்டிக்கொள் ளும். பழ. நெடுமாறன் எழுதும் நீ...ண்...ட கட்டுரை களை அப்படியே பிரசுரிக்கும். எனவே அவர்களின் உள்ளங்கவர்ந்த அந்த ஏடு, இந்துத்துவாவை தீவிர மாக ஆதரிப்பதை தமிழ்த் தேசியவாதிகள் விமர் சிப்பது இல்லை. அவர்கள் நாயகன்தான் வழி காட்டியிருக்கிறாரே, ஆதரவு எங்கிருந்து வருகிறது என்பது முக்கியமில்லை, ஆதரவு வேண்டும்; அவ்வளவுதான் என்று.

விடுதலைக்குழு என்று கூறிக்கொண்டு தார் மீகத்திற்கு முரணான பல்வேறு செயல்பாடுகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டதால்தான் மோதல் களின் உச்சகட்டத்தில் அவர்களுக்கு உதவ எவரும் முன்வரவில்லை.

கொடுமை என்னவெனில், போரில் ஈடுபடாத தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவிக் கப்பட்டபோதும், ஏதோ சம்பிரதாய ஆட்சேபணை களுடன், மேற்கத்திய உலகம் நின்று கொண்டது. அந்தச் சடங்கில்கூட இந்தியா பங்கேற்கவில்லை. விடுதலைப் புலிகள் தொல்லை ஒழிந்தால் போதுமென்று மத்திய அரசு நினைத்ததால் அது மஹிந்தா அரசை ஊக்குவித்தது.

இலங்கையின் மீது அதிக அழுத்தம் கொடுக்கப் படுவதை இந்தியா விரும்பவில்லை என்பதனா லேயே, அமெரிக்கா உள்ளிட்ட மற்ற நாடுகள் அடையாளக் கண்டனங்களுடன் நிறுத்திக்கொண் டன என்பதே பொதுவான புரிதல்.

பாலஸ்தீனிய, ஈராக் கொடுமைகளைக் கண்டித்து தெருக்களில் இறங்கிய ஐரோப்பிய அமைதி ஆர்வலர்கள் இலங்கைப் பிரச்சினையில் அதிகமாக அலட்டிக்கொள்ளவில்லை என்பதை

யும் நாம் கவனிக்கவேண்டும். அரசுகள் வேண்டு மானால் போராளிக் குழுக்கள் வெற்றிபெற விரும் பாததையும், எவ்விதத்திலும் தங்களை பாதிக்காத இலங்கை போன்ற நாட்டில் நடக்கும் உள்நாட்டுப் பிரச்சினைகளில் அதிகம் ஆர்வம் காட்டாததை யும் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அமைதி ஆர்வலர்கள் ஏன் கண்டுகொள்ளவில்லை? அவர்களும் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கர வாத, பாசிச இயக்கமாகவே பார்த்தார்கள் என் பதுதான் இதற்கான விடை.

ஹமாசைப் பற்றி அவர்களுக்கு பல விமர் சனங்கள் இருந்தும் இஸ்ரேலின் அக்கிரமங்களும் அதற்கு அமெரிக்கா நிபந்தனையற்ற ஆதரவளித்து வருவதும் அமைதி ஆர்வலர்களை கோபமடையச் செய்ததால்தான் அவர்கள் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களிலும் ஈராக் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் பல்லாயிரக் கணக்கில் பங்கேற்றனர்.

புலிகள் விவகாரத்தில், புலிகளின் எதிர்ப்பாளர் கள் தொடர்ந்து கொலை செய்யப்பட்டது, பொது வாகவே விடுதலைப் புலி பிரதிநிதிகளின் அடா வடித்தனம் போன்றவையெல்லாம் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எரிச்சலையும் அதிர்ச்சியையுமே அளித்தன. விடுதலைப் புலிகள் முற்றிலுமாகவே தங்கள் நம்பகத்தன்மையை இழந்துவிட்டிருந்தனர்.

அதனால்தான் மனித உரிமை அமைப்புகள், போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்த புலம் பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டங்களைக் கண் டும் காணாமல் இருந்துவிட்டன.

விடுதலைப் புலிகள் அழிவை எதிர்நோக்கிய கட்டத்தில், அமெரிக்காவில் இருந்த அவர்களது ஆதரவாளர்கள் “எங்களைக் காப்பாற்றுங்கள்; உங்களைப் போன்றுதான் நாங்களும் வேட்டை யாடப்படுகிறோம்” என்று பகிரங்கமாகவே யூதக்

குழுக்களிடம் மன்றாடினர். இத்தகைய அற வீழ்ச்சியின் விளைவு, மேற்கத்திய மனித உரிமைக் குழுக்கள் மேலும் இதிலிருந்து விலகிச் சென்றன.

பிரபாகரனுக்கு கண்மூடித்தனமாக வாழ்த்துப் பா பாடியது, விமர்சனமற்ற ஆதரவை அளித்தது – இதெல்லாம் போராட்ட நியாயங்களையே கேள்விக் குறியாக்கிவிட்டன என்பதை புலம்பெயர்ந்த தமிழர்கள் கடைசிவரை புரிந்துகொள்ளவே இல்லை. தமிழகத்திலும் பத்மநாபா உள்ளிட்டோர், பிறகு ராஜீவ் காந்தி என்று தொடர்ந்த படுகொலைகள் காரணமாக மெல்ல மெல்ல தமிழ்நாட்டுத் தமிழர் மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவு குறைந்து வந்தது.

நாடி நரம்பு புடைக்க ஈழத் தமிழனுக்காக பேசுவதை ஒரு பிழைப்பாகக் கொண்டவர்களுக்கு விடுதலைப் புலிகளின் தவறுகள் பிரச்சினையாக இருந்திருக்க முடியாது. ஆனால் உண்மையிலேயே இலங்கையில் நடந்ததை ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் விடுதலைப்போராக, வர்க்கப் போராட்டத்தின் முன்னோடியாகப் பார்த்த தமிழக அமைப்புகள்கூட மக்களிடமிருந்து அன்னியப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை இறுதிவரை உணராதது பெரும் துரதிர்ஷ்டமே.

அப்படிப்பட்ட குழுக்களும் உண்மையைப் பேசினால், பிரபாகரனை விமர்சித்தால், தமிழனின் விடுதலைக்கு பங்கம் வரும் என நினைத்து அமைதியாயிருந்துவிட்டனர் எனலாம். விளைவு, புலிகள் போரில் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் அவ்வமைப்புகளால் விடுதலைப் புலிகளின் நியாயங்களை, குறைந்தபட்சம் போராட்டத்தின் நியாயங்களை எடுத்துவைத்து மக்களை நம்பவைக்க முடியவில்லை.

முத்துக்குமரனின் மரணம் மீண்டும் ஈழத்திற்கு ஆதரவான அலையைத் தமிழகத்தில் தோற்றுவிக்கக்

கூடும் என்ற நிலையை உருவாக்கியது. ஆனால் தேர்தல் களேபரம் எல்லாவற்றையும் அடித்துச் சென்று விட்டது. இந்திய அரசு செய்வது தவறு, அங்கே போர் நிறுத்தப்படவேண்டும் என்று நினைத்தவர்கள்கூட இலங்கைத் தமிழர் பிரச்சினையை மனதில் வைத்து வாக்களிக்கத் தயாராக இல்லை.

என்ன ஆயிற்று தமிழ்த் தேசியம்? இன உணர்வு பேசி வளர்ந்த திராவிடக் கட்சிகளும் இந்திய தேசியத்தை ஸ்வீகரித்துக்கொண்டு பல ஆண்டுகளாகிவிட்டன. இந்தி எதிர்ப்பெல்லாம் வெறும் சடங்காகிவிட்டது. திராவிடக் கட்சிகள் பாரதீய ஜனதாவுடன், இந்துத்துவாவுடன் தயங்காமல் சமரசம் செய்துகொள்கின்றன.

இன்னொரு புறம் தனித் தமிழ் ஆவேசங்களும் குறைந்துவிட்டன, குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர்கள் வைக்கக்கூட பலர் முன்வருவதில்லை. தமிழன் பெருமை பேசும் சொல்லாடல்களெல்லாம் குறைந்துவிட்டன. ஆங்கிலம், கணினி தொழில் இவற்றின் மீதுள்ள மோகம் பெரும்பான்மையானோரை ஆட்டிப்படைக்கிறது.

இவ்வாறாக ஒரு பக்கம் தமிழகமும் உலகமயமாதல் தாக்கத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் நிலை, இன்னொருபுறம் தமிழுணர்வு பேசும் கட்சித் தலைவர்களின் நாணயமற்ற தன்மை, அதன் விளைவாக அக்கட்சிகளின் நம்பகத் தன்மைக்கு ஏற்பட்டிருக்கும் கடும் வீழ்ச்சி, இத்தகைய சூழலில் தமிழ்தேசியத்தின் எதிர்காலம் – இவை குறித்து தமிழுணர்வாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்பியதன் விளைவே இந்நேர்காணல் தொகுப்பு.

சென்னை **கானகன்**

# ஸ்ரீதரன், ராஜன் ஹூல்

"விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றிருக்க வாய்ப்பே இல்லை. தோல்வியை வேண்டுமானால் சற்றுத் தள்ளிப் போட்டிருக்கலாம். இந்தியாவைப் பகைத்துக் கொண்டார்கள். மஹிந்த போன்ற ஒருவரை அதிபராக்கினார்கள். இத்தகைய போக்கில் அவர்கள் எப்படி வெற்றிபெற்றிருக்க முடியும்?"

**கோபாலசிங்கம் ஸ்ரீதரன், ராஜன் ஹூல்:** *மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள், (University of Teachers for Human Rights -Jaffna) என்ற அமைப்பை உருவாக்கியவர்கள். இருவரும் பல ஆண்டுகளாக இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடந்த நிகழ்வுகளை நடுநிலையுடன் பதிவு செய்து, அறிக்கைகளாக வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களிடம் நேரிலும் ஈ-மெயில் மூலமாகவும் எடுக்கப்பட்ட பேட்டி இது.*

**கே. தமிழ்த் தேசிய அடையாள வலியுறுத்தல், அதற்கான போராட்டங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ப. (ராஜன் ஹூல்) சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று அறிவிக்கும் சட்டம் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது எனக்கு வயது ஏழெட்டிருக்கும். எனது தந்தை பீட்டர் சோமசுந்தரம் ஃபெடரல் கட்சியில் தீவிர உறுப்பினராக இருந்தார். அதனால், எங்கள் உறவினர்கள் மத்தியில் இச்சட்டம் பற்றி தீவிரமாக விவாதிப்பார்கள். தமிழர்களின் உரிமைகள் பறிபோகின்றன என்றெல்லாம் பேசப்பட்டது.

பிறகு 1958இல் தமிழர்களுக்கெதிராக முதல் முறையாகப் மிகப் பெரிய கலவரம் நடந்தது. 1956லும் ஒரு கலவரம் நடந்திருந்தது. ஆனால், அது கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் மட்டுமே நடந்தது. 1958ஆம் வருடம் நடந்த கலவரம் இலங்கை முழுவதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் அப்போது யாழ்ப்பாணத்தில் பள்ளி மாணவனாக இருந்தேன். என் வகுப்பில் மூன்றில் ஒரு பங்கு

மாணவர்கள், கலவரத்தால் பாதிக்கப்பட்டு தென் பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிறகு 1961இல் சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்தது. என் தாயும் அதில் கலந்து கொண்டார். ஆனாலும் பெரிய அளவில் நாங்கள் சிங்கள பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டோம் என்று சொல்ல முடியாது. கல்லூரியில்கூட எங்களுக்குச் சிங்கள நணபர்கள் பலர் இருந்தனர்.

தரப்படுத்தல் விவகாரத்தின்போதுதான் சமூகத்தில் பரவலாக முரண்பாடுகள் எழுந்தன. அப்போது அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். கல்லுரிகளில் பெருமளவில் தமிழ் மாணவர்களே பயின்றார்கள். 1970ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வின் முடிவுகளின்படி, பொறியியல் பிரிவில் 150 இடங்களில் 120 இடங்கள் தமிழ் மாணவர்களுக்கே கிடைத்தன. தமிழர்கள் மொத்த ஜனத்தொகையில் 12 சதவீதம்தான். முஸ்லிம்களையும், மலையகத் தமிழர்களையும் சேர்த்தால் 20 சதவீத அளவுக்கு இருப்பார்கள். ஆனால் மலையகத் தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகமாக கல்லூரிகள் பக்கம் வருவதில்லை. ஆக 12 சதவீதத்தினர் 80 சதவீத இடங்களைப் பெற்றிருந்தால் அது ஒரு பிரச்சினைதானே!

அதற்கு மூன்று வருடங்களுக்கு முன்புதான் அறிவியல் பாடங்களுக்கு தமிழும் சிங்களமும் பயிற்றுமொழிகளாக ஆக்கப்பட்டன. விடைத் தாள்களைத் திருத்திய தமிழாசிரியர்கள் அதிக மதிப்பெண்கள் அளித்துவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்து, அது குறித்து விசாரணைக் கமிஷனும் நியமிக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று தெளிவானது. அச்சம்பவம், தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது.

தமிழர்களாக இருப்பதால் எங்கள் உரிமைகள் பறிக்கப்படுகின்றன, எங்களுக்கு அநீதி இழைக்கப் படுகின்றது என்ற உணர்வுவாயிலாகத்தான் நான் தமிழ்த் தேசியத்தை உள்வாங்கினேன். கூட்டாட்சி அமைப்பு வேண்டும், அதிகாரப் பகிர்வு வேண்டும் என்றும் நாங்கள் பேசத் தொடங்கினோம். 60களில் தமிழின உரிமை பேசியவர்கள் ஆயுதப் போராட் டம் பற்றி சிந்திக்கவில்லை. ஆனால் 70களில் நிலைமை மாறத் தொடங்கியது.

தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் உருவான தமிழ்த் தேசியம், தமிழரல்லா தவர் மீது மட்டுமல்லாமல், தமிழின உணர்வாளர் களின் அரசியல் நோக்கங்களை ஏற்றுக்கொள்ளாத முஸ்லிம், மலையகத் தமிழர்கள் மீதும் வெறுப்பையும் பகையையும் வளர்த்தது. இப்படியாக சகிப்புத் தன்மையற்ற, சர்வாதிகாரக் கூறுகள் தமிழ்த் தேசியத்தில் மேலோங்க ஆரம்பித்தன. இறுதியில் உரிமைப் போராட்டம் ஓர் அழிவு சக்தியாகவே மாறியது. ஐக்கிய தமிழர் விடுதலை முன்னணியின் அணுகுமுறை, முஸ்லிம்களை அன்னியப்படுத்தியது. தமிழ் பேசும் அனைவருக்காகவும் என்று கூறினாலுங் கூட, இவர்களுடைய அரசியல் திட்டத்தை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தெரிந்தவுடன் அவர்களுக்கெதிராகவும் திரும்பி னார்கள். முஸ்லிம்கள் 'தொப்பி பிரட்டி' என்று எள்ளி நகையாடப்பட்டார்கள். அவர்கள் நம்பத்தகாதவர் கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டது.

1980ஆம் ஆண்டு நடந்த பொது வேலை நிறுத்தத்திலும் இவர்கள் அக்கறை காண்பிக்க வில்லை. தாராளமயமாக்கல், பன்னாட்டு நிறு வனங்களின் நுழைவு, வேலைவாய்ப்பு குறைந்தது, இலங்கை ரூபாயின் வீழ்ச்சி ஆகியவற்றின் பின் னணியில் நடந்தது அவ்வேலைநிறுத்தம். இவர்

களோ, அதைச் சிங்களர்களின் பிரச்சினையாகப் பார்த்தனர். தமிழர்களின் கோரிக்கைகளுக்கான ஆதரவுத் தளம் மேலும் குறுகியது.

**தமிழ்த் தேசிய வலியுறுத்தலில் யாழ்ப்பாண வேளாளர் கள்தான் முக்கிய பங்கு வகித்தனர் என்பது உண்மையா?**

யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் 50களிலும் 60களிலும் சாதி உணர்வுகள் மேலோங்கியிருந்தன. 60களில் நடந்த ஆலய நுழைவுப் போராட்டத்தை தமிழ்த் தேசிய இயக்க முன்னோடிகளில் ஒருவ ரான சுந்தரலிங்கம் போன்றவர்கள் கடுமையாக எதிர்த்தனர். அவர் மிகப் பெரிய நிலச்சுவான்தார். அமைச்சராகவும் இருந்திருக்கிறார். ஐக்கிய விடு தலை முன்னணியினர் தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு தேர்தல்களில் போட்டியிட அதிக வாய்ப்பளிக்கவில்லை.

போராளிக் குழுக்கள் உருவானபோது இந்த ஜாதி பாகுபாடுகள் ஓரளவுக்குக் குறைந்தன. வல்வெட்டித் துறையை போராளிக் குழுக்களின் பிறப்பிடமாகக் கொள்ளலாம். அங்கிருந்த கரையர் மக்களே இந்தியாவிற்கு சென்றுவந்து கொண்டிருந்தார்கள். கடத்தலிலும் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் துணிச்சல் மிக்கவர்களாகவும் கருதப்பட்டனர். அவர்களால் ரகசியத் தொடர்புகளை வைத்துக்கொள்ளவும் முடிந்தது. அப்படி உருவான ஆயுதமேந்திய இயக்கங்களில் வேளாளர்களும் பெரிய அளவில் இணைந்துகொண்டனர். அவ்வளவுதான்.

ஆனாலும், இந்த இரண்டு ஜாதியினரைத் தவிர மற்றவர்கள் பெரிதாக ஈர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. காலப்போக்கில் துப்பாக்கியைத் தூக்க, களத்தில் மடிய அவர்களுக்கு ஆட்கள் தேவைப் பட்டபோது மற்ற ஜாதிகளும் உள்ளே வந்தன.

அதே நேரம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் அவர்கள் அலட்சியப்படுத்தப்பட்டார்கள் என்றோ, இழிவுபடுத்தப்பட்டார்கள் என்றோ சொல்ல முடியாது.

தமிழ்ச்செல்வன் நாவிதர் இனத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால் அவர் முக்கிய பொறுப்பு வகித்தார். அதே போல வடமராச்சியைச் சேர்ந்த செங்கதிர், ஒரு தலித். இவர்களெல்லாம் ஜாதிப் பின்னணி இல்லாமலேயே மேலே வந்தவர்கள். காரணம், அவர்கள் பிரபாகரனின் நம்பிக்கையைப் பெற்றவர்கள். அதுதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தப்பித்து இருப்பதற்கும் செல்வாக்கு பெறுவதற்கும் ஒரே வழியாக இருந்தது. அப்படிப் பட்டவர்களே பல்வேறு அத்துமீறல் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அப்போதெல்லாம் அவர்கள் ஜாதியினர்தான் மற்றவர்களால் பழிக்கப்பட்டனர் என்பது வேறு விஷயம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்ஃபை விடுதலைப்புலிகளே ஈழத்துப் பறையர்கள் என்று கேலி செய்தார்கள். அத்தகைய பிரச்சாரம் மக்கள் மத்தியில் எடுபடும், அவர்கள் மீது ஒருவித வெறுப்பு ஏற்படும் என்று தான் அப்படி ஒரு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். தமிழ் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட ஜாதியினர் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நீண்ட காலம் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டே இருந்தார்கள். மற்ற ஜாதியினரின் ஆதரவைப் பெற்றிருந்த விடுதலைப் புலிகள் ஜாதி முரண்பாடுகளுக்கெதிராக பிரச்சாரம் எதுவும் செய்யவில்லை. கீழ் ஜாதியினர் இழிகுலத்தோர் என்ற உணர்வை, அவர்கள் மீதான அவநம்பிக்கையை, வெறுப்பை தேவையானால் பயன்படுத்திக்கொள்ளவும் செய்தனர் புலிகள். ஆனால், அத்தகைய உணர்வுகளைத் தூண்டிவிட்டனர் என்று சொல்லிவிட முடியாது. அவர்கள்

சொல்வதைக் கேட்டால் போதும், அவ்வளவுதான். போராளிக் குழுக்கள் தலையெடுத்ததன் விளைவாக ஜாதி வேறுபாடுகள் ஓரளவுக்கு மங்கின என்பதை மறுக்கமுடியாது. ஆனாலும் மிக ஆழமான பண்பாட்டு மாறுதல்களை அவை ஏற்படுத்தினவா என்று என்னால் கூறமுடியவில்லை.

**தமிழர்களின் உரிமைப் போரில் கிறிஸ்தவர்கள் காட்டிய ஆர்வத்தை ஏன் முஸ்லிம்கள் காட்டுவதில்லை? தங்களைத் தனி இனமாகவே கருதினார்களா?**

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்துக்களின் ஜாதிப் பிரிவுகளை தக்கவைத்துக் கொண்டனர். திருமணம் உள்ளிட்ட பலவற்றில் ஜாதி சம்பிரதாயங்களைக் கடைபிடித்தனர். எனவே இந்துத் தமிழர்களின் உணர்வுகளை அவர்கள் முழுமையாகப் பகிர்ந்துகொண்டனர். ஆனால் முஸ்லிம்கள் அப்படியில்லை. அவர்கள் எப்போதுமே தங்கள் தனித்துவத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். இஸ்லாத்தைத் தழுவியவர்கள், குறிப்பாக கிழக்கில், தலித்துகளாகவும் தலித் கிறிஸ்தவர்களாகவும் இருந்திருக்கின்றனர். உருவத் தோற்றத்தை வைத்துக் கொண்டே ஒருவர் முஸ்லிமா அல்லது இந்துவா என்று நாம் கணித்துவிடலாம். அதன் விளைவாக தனித்துப் போவது, தத்தம் அடையாளங்களை வலியுறுத்திக் கொள்வது எல்லாமே இயற்கையாகவே நிகழும். அப்படிப்பட்ட சூழலில் சனாதன இந்து மதத்திற்கும் முஸ்லிம்களுக்குமிடையே நல்லுறவு இருப்பதற்கான வாய்ப்பு குறைவுதான். அவர்களை தமிழ்த் தேசியம் வென்றெடுக்காமல் போனதில் ஆச்சரியமில்லை என்றே நான் நினைக்கிறேன்.

**அவர்கள் தனித்துப்போனதற்கு மதம் ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்குமா? அண்மைக்காலங்களில்**

**வலுப்பெற்றிருக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதமுங் கூட அத்தகைய போக்கிற்கு ஒரு காரணம் என்று சொல்லலாமா?**

தனிமைப்பட்டிருந்தனர் என்றாலும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே மதரீதியிலான பகைமை ஏதும் இருந்ததில்லை. 1915ல் கொழும்பில் சிங்களர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கலவரம் ஏற்பட்டபோது தமிழர் பகுதிகளில் எவ்வித பாதிப்பும் இல்லை. முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகள் திட்டமிட்டு தாக்குதல் நடத்தியபோதும் முஸ்லிம்களின் கடைகள் சூறையாடப்படவில்லை. சமூகத்தில் எவ்வித பிணக்குகளும் தோன்றவில்லை.

**எண்பதுகளில் முஸ்லிம் ஹோம் கார்ட்ஸ் அமைப்பு தோன்றுகிறது. ஆங்காங்கே முஸ்லிம்கள் அல்லாத தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள். இப்படி ஒரு நிலை ஏற்படக் காரணமென்ன?**

இலங்கை அரசு முஸ்லிம்களுக்கும் மற்ற தமிழர்களுக்குமிடையே இருந்த பிரச்சினைகளை மேலும் கூர்மைப்படுத்த விரும்பியது. தமிழர்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தி, அதன் மூலம் உரிமைப் போராட்டங்களை பலவீனப்படுத்த விரும்பியது. அம்முயற்சியில் கணிசமான வெற்றியும் பெற்றது. தரப்படுத்தல் சிக்கலில், அப்போது கல்வி அமைச்சராக இருந்த பத்ருதீன் அஹமது, முஸ்லிம்களை தமிழ் பேசிய மற்றவர்களிடமிருந்து தனித்துக் காட்டி, அவர்கள் தமிழர்களே அல்லர் என்று வாதிட்டு, அவர்களுக்கு ஆங்கிலத்தை பயிற்று மொழியாக்குவதற்கு அரசை ஒப்புக்கொள்ளவைத்தார். இலங்கை அரசுடன் ஒத்துழைத்து தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தரமுடியும் என்று நம்பிய ஆல்ஃப்ரெட் துரையப்பாவின் பல ஆதரவாளர்கள் முஸ்லிம்கள்தான். இதெல்லாம் முஸ்லிம்களின் மத்தியில் அரசுக்கு ஆதரவான ஒரு

மன நிலையினை ஏற்படுத்தியது. முஸ்லிம் எம்.பிக் கள் சிலர் அரசுக்கு ஆதரவளித்தனர். ஆனாலும் சில முக்கியத் தலைவர்கள் தமிழ்த் தேசிய நீரோட் டத்தில் இருந்தனர். பின்னால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைத் துவக்கிய அஷ்ரஃப் 70களின் பிற்பகுதிவரை ஐக்கிய தமிழர் கூட்டணியில்தான் இருந்தார்.

முஸ்லிமல்லாதோர் மத்தியில் வாழவேண்டி யிருந்ததாலும் வியாபாரம் முதலியவற்றில் ஈடுபட வேண்டியிருந்ததாலும் முஸ்லிம்களும் மிகக் கவ னமாகவே நடந்துகொண்டனர் என்றே சொல்ல வேண்டும். போராளிக் குழுக்கள் உருவானபோதும் பெரிய அளவில் பிணக்குகள் ஏதும் ஏற்பட வில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பில் பல முஸ்லிம் இளைஞர்கள் இருந்தனர். ஈ.பி.ஆர். எல்.எஃப் முஸ்லிம்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்றே விரும்பியது. ஆனால் அரசு இரு சமூகத்தினருக்குமிடையே மோதல்களை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டது. விடுதலைப் புலிகளின் சில அதிரடி நடவடிக்கைகளும் பிளவு அதிகரிக்க காரணமாயிருந்தன.

குறிப்பாக பிரேமதாசா– விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் முறிந்தபோது, கிழக்கில் புலிகளால் கைது செய்யப்பட்ட 600 காவல்துறையினரில் சிங்களவர் கள், முஸ்லிம்களாக இருந்த 300 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழர்கள் தப்பவிடப்பட்டனர். இது முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே விரோதத்தைத்தான் வளர்த்தது. பின்னால் தமிழர் பகுதிகள் முஸ்லிம்களால் தாக்கப்பட்டன. இவ் வாறாக வன்முறை வளர்ந்தது. ஆனாலும் அஷ்ரஃப், இப்போது ஹக்கீம் போன்றோர் சற்று திறந்த மனதுடையவர்கள் என்றே கூறவேண்டும். மற்ற சமூகத்தினருடன் இணைந்து பழகினர். சங்க இலக் கியங்களிலிருந் தெல்லாம் சர்வ சாதாரணமாக

மேற்கோள் காட்டுவர். தமிழர்களும் முஸ்லிம்களும் இன்றும் ஒன்றாகவே இணைந்து, இணக்கமாக வாழ வேண்டிய கட்டாயமிருக்கிறது.

**யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்களை விரட்டிய தற்காக வருத்தப்படுவதாக ஒரு கட்டத்தில் பிரபாகரன் கூறினார். திரும்ப வாருங்கள் என்றுகூட அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கு ஏதாவது பயன் இருந்ததா?**

இல்லை. ஏனெனில் முஸ்லிம்கள் அவர்களை நம்ப வில்லை. 1990இல் விரட்டப்படும் முன் வாகரையில் முஸ்லிம்களை அழைத்து விடுதலைப் புலிகள் மாநாடே நடத்தினர். அவர்களை கௌரவித்தனர். சேர்ந்தே உணவருந்தினர். எல்லாம் நல்லபடியாகப் போவதாக ஒரு பிரமை இருந்தது...

**ஏன் முஸ்லிம்கள் விரட்டப்பட்டார்கள்? அவர்கள் ஒற்றர்கள் என்று கருதப்பட்டார்களா?**

இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. அப்படிப் பார்க்கப்போனால் எல்லாத் தமிழர்களையுமே அவர்கள் சந்தேகித்திருக்க வேண்டும். புலிகளின் ஆட்சி மீது அவ்வளவு அதிருப்தி இருந்தது. துப் பாக்கி பயத்தால் மௌனமாக இருந்தனர். அவ்வளவு தான். முஸ்லிம்களின் சொத்துகளைக் கைப்பற்ற வேண்டும் என்றுகூட அவர்கள் நினைத்திருக்க லாம். அந்த நேரத்தில் முஸ்லிம் ஹோம் கார்டுகள் மற்ற தமிழர்களைத் தாக்கத் துவங்கியிருந்தனர். பல வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. அத்தகைய சூழலில் யாழ்ப்பாண முஸ்லிம்களை விரட்டி கிழக்குப் பகுதி தமிழர்கள் மத்தியில் ஆதரவைப் பெருக்கிக் கொள்ளலாம் என்றுகூட விடுதலைப்புலிகள் நினைத்திருக்கலாம்.

நாம் இன்னொன்றையும் கவனிக்கலாம். முஸ்லிம் கள் விரட்டப்பட்டபோது யாழ்ப்பாணத் தமிழர் கள் முஸ்லிம்களுக்குத் தார்மீக ஆதரவு அளித்தனர்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளிடம் அவ்வாறு அவர்களை விரட்டிவிட வேண்டாம் என்று மன்றாடினர். அதுவே அன்றைய நிலையில் சற்று ஆபத்தான காரியம். அந்த முயற்சியில் தோற்றாலும், பின்னர் அவர்கள் கூட்டம்கூட்டமாக வெளியேறிய போது, அவர்களைச் சந்தித்து ஆறுதல்கூறி வழியனுப்பி வைத்தனர்.

**கிறிஸ்தவப் பாதிரிமார் பலர் விடுதலைப் புலிகளை தீவிரமாகவே ஆதரித்தது போன்று தோன்றியதே?**

அப்படிச் சொல்லமுடியாது. பிஷப் சௌந்திர நாயகம் அவர்களை எதிர்த்து வந்தார். யாழ்ப்பாணத்திலிருந்த மற்ற பிஷப்புகளும் அவர்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்ளவில்லை. போரின் இறுதிக் கட்டங்களில் குருமார்கள் பலர் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகவே மோதியிருக்கின்றனர். ஆனால் குருமார் மத்தியில் வேளாளர்களுக்கும் கரையர்களுக்கும் இடையில் எப்போதுமே ஒரு பதற்றமான உறவே நிலவி வந்தது. அதன் வெளிப்பாட்டை ஆங்காங்கே நீங்கள் பார்த்திருக்கக்கூடும், அவ்வளவே. தவிரவும், 1980 வரை பொதுவாகவே திருச்சபைகள் இப்பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டியதாகக் கூறமுடியாது. 1981ஆம் ஆண்டு தெல்லிப்பலையில் நடந்த செல்வநாயகம் அஞ்சலி நிகழ்ச்சியில் அவர் தமிழர்களின் மோசஸ் என்றும், ஆண்டவனால் உறுதிசெய்யப்பட்ட நாட்டை அடையும் முன் இறந்துவிட்டதாகவும் ஒருவர் பேசினார். அவர் ஒரு வெள்ளாளர். ஆனாலும் அத்தகைய உணர்வுகள் முதல்முதலாக வெளிப்பட்டது அப்போதுதான். பின்னர் விடுதலைப் புலிகள் வலுவடைந்தபோது அவருக்கு ஆதரவாகவும் சில குரல்கள் எழுந்திருக்கலாம். முழுக்க முழுக்க சந்தர்ப்பவாதப் போக்கு அது. பிரபாகரன் பிறந்த சமூகமான கரையர் பிரிவிலிருந்து தேவாலயப் பணிக்கு வந்த

சிலர் வேண்டுமானால் விடுதலைப்புலிகளை ஆதரித்திருக்கலாம். மற்றவர்கள் அப்படியொரு நிலைப்பாட்டை எடுத்ததாகச் சொல்லமுடியாது.

**புலம்பெயர்ந்த தமிழர்கள்?**

எண்பதுகளின் பிற்பகுதியிலெல்லாம் வெளிநாடு வாழ் தமிழர்களிடையே சூடான விவாதங்கள் நடைபெற்றன. பலர் விடுதலைப் புலிகளை விமர்சித்தனர். இந்தியத் தலையீட்டின்போது ஏதாவது தீர்விற்கு வழிஏற்பட்டிருக்குமானால் பலர் அதை வரவேற்றிருக்கக்கூடும். நாங்கள் Broken Palmyraவை அமெரிக்காவில் எளிதில் விற்பனை செய்ய முடிந்தது. சில விடுதலைப் புலி ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் பெரிதாக பிரச்சினை எதுவும் எழவில்லை. இது நடந்தது 1990இல். ஆனால் அதன் பிறகு நிலைமை மோசமடைந்தது. ஆஸ்திரேலியாவில் சி.ஜே. எலீசர், கனடாவில் டாக்டர் வில்சன் போன்றோர் பல காரணங்களுக்காக விடுதலைப் புலிகளைத் தீவிரமாக ஆதரிக்கத் தொடங்கினர். பின்னர் அது ஒரு மோகமாக, ஃபேஷனாக ஆனது. வியாதி பரவியது....

**விடுதலைப் புலிகளின் அதிரடி நடவடிக்கைகளால் சிங்களத் தரப்பில் பல இழப்புகள் ஏற்பட்டபோது, அதனால்கூட புலம் பெயர்ந்த தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம் அல்லவா? நமது எதிரிக்கு சரியான பாடம் கற்பிக்கிறார்கள் என்று நினைத்து அதனாலேயே முன்வந்து ஆதரவு தெரிவித்திருக்கலாமே....**

அதுவும் உண்மையே. ஜாமெண்ட்ரி பாக்சைத் தூக்கியெறிந்துவிட்டு துப்பாக்கியைத் தூக்கும் சிறுவர்களைப் பற்றியெல்லாம் இவர்கள் புளகாங்கிதமடைந்து எழுதுவார்கள். ஆனால் தங்கள் பிள்ளைகளுக்கு அப்படி எதுவும் நிகழ்ந்துவிடக் கூடாது

என்பதற்காக ஊரைக் காலிசெய்துவிட்டு வெளி நாடுகளில் குடியேறுவார்கள். இவர்கள்தான் உரத்து வாழ்த்துப்பா பாடிக்கொண்டிருந்தனர். ஆனால் இன்னொன்றையும் நீங்கள் கவனிக்கவேண்டும். விடுதலைப் புலிகள் வலுவடைவதற்கு, அவர்கள் அட்டகாசங்கள் தொடர்ந்ததற்கு ஒரு முக்கிய காரணம், மேற்கத்திய அரசுகளின் அணுகுமுறை.

விடுதலைப் புலிகளை விமர்சிப்பவர்கள் தாக்கு தலுக்குள்ளானபோது அவை கண்டும் காணாமல் இருந்தன. டொராண்டோவில் நூலகம் எரிக்கப் பட்டது. போராளிக் குழுக்களின் வரலாற்றை எழுதத் துவங்கிய சபாலிங்கம் பாரீசில் 1994ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். அந்த நேரத்தில் ஐரோப்பாவில் இருந்தபடியே லாரன்ஸ் திலகரும் கிட்டுவும் தங்கள் அடியாட்களுக்கு உத்திரவிட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சம்பவங்களுக்குப் பிறகும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை.

பத்மநாதன் போன்றவர்கள் சர்வ சாதாரணமாக பல்வேறு கனரக ஆயுதங்களை வாங்கி யாழ்ப் பாணத்திற்கு அனுப்பமுடிந்தது. 2002இல் உருவான போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு இவர்கள் மீண்டும் போரைத் துவங்கியதன் பிறகே, மேற்கத்திய நாடுகள் விழித்துக்கொண்டு விடுதலைப் புலி ஆதரவாளர்களின் செயல்பாடுகளுக்கு தடைவிதிக்கத் தொடங்கினர். இதன் விளைவாக இலங்கை ராணுவத்தை எதிர்கொள்ளத் தேவை யான ஆயுதங்களை புலிகளால் தருவிக்க முடிய வில்லை. இறுதியில் அவர்கள் பெருந்தோல்வி அடைவதற்கும் இந்தச் சூழல் வழிவகுத்தது.

இடைப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகள் குறித்து ஏற்பட்ட பிரமையின் காரணமாக புலம் பெயர்ந்தோர் அவர்கள்பால் ஈர்க்கப்பட்டிருக்க

லாம். இப்படியாக, புலிகளுக்கு இருந்த ஆதரவுச் சூழலுக்கு பல்வேறு காரணங்கள் இருந்தன என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. அதே போல உள்நாட்டிலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித் தவர்கள் ஏதோ ஒரு பிரமையில் மூழ்கிக் கிடந்தனர். இன்னும் சிலர் விடுதலைப் புலிகளோடு அடை யாளப்படுத்திக் கொள்வதன் மூலம் தங்களுக்கு ஏதோ அதிகாரம் கிடைத்துவிட்டது; சிங்களவர் தங் களைக் கண்டு அஞ்சுகின்றனர் என்ற எண்ணத் திலும் மூழ்கியிருந்தனர். அத்தகைய சிந்தனைகளுக்கு சில அறிவுஜீவிகள் உரமிட்டுக் கொண்டிருந்தனர்.

**மற்ற போராளிக் குழுக்களெல்லாம் ஒரேயடியாக செல்வாக்கிழந்ததற்கு என்ன காரணம்?**

பிரபாகரனின் திடமான, மூர்க்கமான அணுகு முறைதான் காரணம். மற்ற குழுக்களில் ஒருவித நெகிழ்ச்சி இருந்தது. அதுவே உட்பூசல்களுக்கு வழிவகுத்தது. அவற்றைக் கண்டறிந்து சம்பந்தப் பட்டவர்களைக் கொம்புசீவி விட்டு, பிளவு மோச மான நேரங்களில், தான் எதிரியாகக் கருதுபவர் களை அழித்தொழித்தார் பிரபாகரன். தனது இயக் கத்திலும் தனக்கு எதிராக எவரும் வளர்ந்துவிடக் கூடாது என்பதிலும் பிரபாகரன் உறுதியாக இருந்தார். உள்ளும் சரி, வெளியேயும் சரி, தன்னை எதிர்த்து எவரும் கேள்வி கேட்டுவிடக்கூடாது என்ற சர்வாதிகார மனோபாவம் அவரிடம் வேரூன்றியிருந்தது. ஈவிரக்கமில்லாமல் எதிரிகளை அழித்தொழிக்கவும் அவர் துணிந்தார். அத்தகைய குணாதிசயங்களெல்லாம் மற்ற போராளிக் குழுத் தலைவர்களிடம் இல்லாததால்தான் அவர்களால் பிரபாகரனை மீறி எதுவும் செய்யமுடியவில்லை.

குறிப்பாக, அவர்கள் பிரபாகரன் அளவுக்கு முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளத் தவறி விட்டனர். சிங்களவன் தமிழனுக்குச் செய்வதை

தமிழன் தமிழனுக்குச் செய்வான் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள்தானே!

**மற்ற தலைவர்கள் எவரேனும் வெற்றி பெற்றிருந்தால் தமிழர்களுக்கு அது நலன் பயத்திருக்குமா?**

அவர்கள் தோற்றுவிட்டார்கள். இப்படி ஆகியிருக்கலாமோ என்று கேட்பதில் பயனில்லை. பத்மநாபா போன்றவர்கள் கணிசமான அளவுக்கு உட்கட்சி ஜனநாயகத்தைக் காப்பாற்றினர். ஆனால் உமா மகேஸ்வரன் பிரபாகரன் அளவுக்கு மோசமாகத்தான் நடந்துகொண்டார். வேறு எதுவும் எங்களால் கூறத் தோன்றவில்லை.

**உங்கள் கட்டுரைகளிலும் புத்தகங்களிலும் நீங்கள் தொடர்ந்து தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் பற்றி விமர்சிக்கிறீர்கள். விடுதலைப் புலிகளை தங்கள் சுயலாபத்திற்கு பயன்படுத்த முயற்சித்தனர்; அதாவது தமிழர் மத்தியில் தேசியவாதம் மூர்க்கமான இன வாதமாக மாறியதில் அத்தலைவர்களுக்கு பங்கிருக்கிறது என்று தொடர்ந்து சொல்லிவருகிறீர்கள்..**

ஆமாம். ஆனால் அந்தப் போக்கு செல்வநாயகம் காலத்திலேயே தொடங்கிவிட்டது. 1974ம் ஆண்டு நடந்த உலகத் தமிழர் மாநாட்டில் நடந்த ஒரு மின்சார விபத்தை பெரிய சதியாக சித்தரித்து, அன்றைய மேயர் ஆல்ஃப்ரெட் துரையப்பாவின் கொலைக்குக் காரணமாகவிருந்ததே அன்றைய தலைவர்கள்தான். தங்கள் அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளாதவர்களை துரோகிகள் என்றழைக்கும் பழக்கம் அப்போதுதான் துவங்கியது என்று சொல்லலாம். அவர்கள் உருவாக்கிய பூதம் அவர்களையே இறுதியில் விழுங்கியது

**கிழக்குப் பகுதி தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்குமிடையே எந்த அளவு முரண்பாடுகள் இருந்தன, இருக்கின்றன?**

அந்த முரண்பாடுகள் ஓரளவுக்காவது இன்றும் இருக்கின்றன என்பது உண்மைதான். நெடுங் காலமாக கல்வியில் அதிக ஆர்வம் காண்பித்ததன் விளைவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் பலர் அரசுப் பணிகளிலும் பொதுவாழ்விலும் முன் னின்றனர். ஆனால் பெரிய அளவில் உரசல், மோதல், காழ்ப்புணர்வு இருந்ததென்று கூறமுடியாது, தமிழகத்தில்கூட சென்னைத் தமிழர்களுக்கும் மற்ற பகுதித் தமிழர்களுக்கும் பேச்சு முறை முதல் பல வேறுபாடுகள் இருக்கலாம், அதனாலேயே அவர்களுக்கிடையே முரண்பாடுகள் இருப்பதாகக் கூறிவிட முடியாதல்லவா?

**ஆனால் கருணா பிரச்சினை வெடித்தபோது, "சிங்களத் துப்பாக்கிகளுக்கும் பீரங்கிகளுக்கும் இரையாவதற்காகவே கிழக்குப் பகுதி இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மற்றபடி அவர்களுக்கு எவ்வித அதிகாரமும் மரியாதையும் வழங்கப்பட வில்லை" என குற்றச்சாட்டுகள் எழுந்தனவே?**

அது ஓரளவு உண்மையே. நாங்கள் எங்களுடைய ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் போல 2001ஆம் ஆண்டில் சிறுவர்களை புலிகள் சேர்த்துக் கொள்ளத் துவங்கியபோது, கிழக்குப் பகுதியில் தான் அத்தகைய ஆட்சேர்ப்பு நடந்தது. ஏனெனில், அங்கே அப்படிச் செய்தால் பொருளாதார ரீதியாக, சமூகரீதியாக பலவீனமானவர்களாகக் கருதப்பட்ட அம்மக்களிடமிருந்து பெரிய அளவில் எதிர்ப்பிருக்காது என்று அவர்கள் கணித்தார்கள். அது உண்மையாகவும் ஆயிற்று. யாழ்ப்பாணத்தில் அந்த அளவில் அவர்கள் சிறுவர்களைச் சேர்க்க முன்வரவில்லை. கிழக்கில் கருணா, கரிகாலன் போன்றவர்கள் வலுக்கட்டாயமாக பல சிறுவர் களைச் சேர்த்து தங்கள் நிலையினை வலுப்

படுத்திக் கொண்டனர். பின்னர் பிரபாகரனுக்கு அது தீங்காக முடிந்தது.

ஆனால், கருணாவின் குற்றச்சாட்டுகள் எந்த அளவுக்கு உண்மை என்பதை எங்களால் சரியாகக் கணிக்கமுடியவில்லை. விடுதலைப் புலிகளின் அதிகார அடுக்கு எப்படி அமைந்திருந்தது என்பது பற்றி எங்களால் துல்லியமாகச் சொல்ல இயல வில்லை. ஆனால் இப்படிச் சொல்லலாம்; கருணாவைவிட பொட்டு அம்மான் பிரபாகர னுக்கு நெருக்கமாக இருந்திருக்கக்கூடும். அதற்குக் காரணம் அவருக்கு விடுதலைப் புலியினர் மத்தி யில் தனியாக செல்வாக்கு எதுவும் கிடையாது. ஆனால் கருணாவிற்கோ பின்புலம் இருந்தது. அதைக் கண்டு அஞ்சியே கருணாவை பிரபாகரன் சற்று தள்ளி வைத்திருக்கக்கூடும். பொட்டு அம்மான் அதிக அதிகாரங்கள் பெற்றிருந்ததுபோலத் தோன்றியிருக்கலாம். ஆனால் அது உண்மையான அதிகாரம் அல்ல, பிரபாகரன் வழங்கியதே.

நான் சொல்லவருவது என்னவென்றால் கருணாவைப் பொறுத்தவரை அவர் எதிர்பார்த்த அங்கீகாரம் அவருக்கு கிடைக்காததற்கு காரணம் அவர் கிழக்குப் பகுதியைச் சார்ந்தவர் என்பதல்ல. மாறாக, அவர் வளர்வது தனக்கு ஆபத்து என்று பிரபாகரன் நினைத்ததுதான் காரணம்.

**பிரபாகரனின் இறுதி நாட்கள் பற்றி உங்கள் அறிக் கைகளில் விரிவாகவே எழுதியிருக்கிறீர்கள். நாங்கள் கேட்க விரும்புவது மாவிலாறில் தேவையில்லாமல் சிங்கள விவசாயிகளுக்கு தண்ணீர் செல்வதைத் தடுத்து, மோதலை உருவாக்கியது; ஆனால் இறுதியில் பெரும் தோல்வியடைந்து தங்கள் பலவீனத்தை விடுதலைப்புலிகள் காட்டிக்கொண்டனர். மாவிலாறில் துவங்கியது முள்ளிவாய்க்காலில் முடிந்தது என்கின் றனர் பலர். நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? அதாவது**

**மாவிலாறைத் துவங்கியிருக்காவிட்டால் முள்ளி வாய்க்கால் நிகழ்ந்திருக்காது என்று கூறலாமா?**

அப்படிக் கூற முடியாது. மாவிலாறு இல்லா விட்டால் இன்னொன்று, அவ்வளவுதான். விடு தலைப் புலிகள் வெற்றிபெற்றிருக்க வாய்ப்பே இல்லை. தோல்வியை வேண்டுமானால் சற்று தள்ளிப் போட்டிருக்கலாம். அவ்வளவே. இந்தியா வைப் பகைத்துக்கொண்டார்கள். கருணாவை இழந்தனர். மஹிந்த போன்ற ஒருவரை அதிபராக் கினார்கள். தங்களது தொடர்ந்த அட்டகாசங்களி னால், மனித உரிமை மீறலால் உலக நாடுகளின் அனுதாபத்தை இழந்தனர். புதிய ஆயுதங்களைப் பெறமுடியவில்லை. முக்கியமாக, விமானங்களை வீழ்த்தக்கூடிய கன ரக ஆயுதங்கள் அவர்களிடம் இல்லாமல் போனது இறுதிக் கட்டங்களில் பெரும் பின்னடைவாயிற்று. இத்தகைய போக்கில் அவர்கள் எப்படி வென்றிருக்க முடியும்?

**அண்மையில் நடந்த அதிபர் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது, தொடர்ந்து தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரிப்பதுபோலத் தோன்று கிறதே?**

நீங்கள் கூறுவது ஒருவிதத்தில் சரிதான். தொடக் கத்திலிருந்தே மேற்கத்திய நாடுகளை, ஏகாதிபத் தியத்தை அனுசரித்துச் செல்லும், வசதிபடைத்த வர்களின் நலனை மேம்படுத்துவதில் அக்கறை காட்டும் யு.என்.பிதான் தமிழ்க் கட்சித் தலைமை களுக்கு இசைவாக இருந்தது. ஜெயவர்த்தனா அரசின் தாராளமயக் கொள்கைகளுக்கெதிராக சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அணிதிரண்டு தேசிய அளவில் வேலைநிறுத்தப் போராட்டதில் இறங்கிய போது தமிழர் கட்சிகள் அதில் கலந்துகொள் ளவே இல்லை. அது ஏதோ சிங்களவர் பிரச்சினை என்பதுபோல நடந்துகொண்டார்கள்.

அதே சமயம் அடித்தட்டு மக்களை அணி திரட்டும் முயற்சியில் ஈடுபட்ட இலங்கை சுதந் திரக் கட்சி தங்கள் மக்களின் ஆதரவைப் பெறுவ தற்காக ஏதாவது ஒன்றிரண்டு செய்யும். ஆனால் அதுவே தமிழர் தலைவர்களை மிரளச் செய்யப் போதுமானதாக இருந்தது. சிங்கள அடித்தட்டு மக்களைத் திருப்திப்படுத்த சுதந்திரக் கட்சி ஏதா வது செய்யும்போது வசதிபடைத்த தமிழர்களும் பாதிக்கப்படுபவர்கள்தானே. தவிரவும் தரப் படுத்தல், வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்படுதல் போன்ற பிரச்சினைகள், சற்று முன்னேறிய நடுத்தர வர்க்கத் தமிழர்களை சுதந்திரக் கட்சிக்கு எதிராகத் திருப்பின.

சுதந்திரக் கட்சியும் சிங்களரின் ஆதரவைப் பெறுவதற்காக தடாலடியாக ஏதாவது செய்து வந்தது. அது தமிழ்க் கட்சிகளின் பிரச்சாரத்தை மெய்ப்பிப்பதாகவும், தமிழர்களுக்கு அச்சமூட்டு வதாகவும் அமைந்தது. சந்திரிகா காலத்தில்தான் தமிழர்களின் உணர்வுகள் மதிக்கப்படத் தொடங் கின. மீண்டும் இப்போது மஹிந்தவின் கீழ் 'பழைய குருடி' என்ற கதையாகிவிட்டது.

**இப்போது தேர்தல்களும் முடிந்துவிட்டன. மஹிந்தா வும் பெரும் வெற்றி பெற்றுவிட்டார். இனி உங்கள் நாட்டுத் தமிழர்களின் எதிர்காலம் எப்படி அமையும் என நினைக்கிறீர்கள்?**

இன்றைய அவலமான சூழலிலிருந்து மீள்வதற்கு சிங்கள எதிர்ப்பு உதவாது. மாறாக பரந்துபட்ட சிங்கள மக்களின் நலன்களை பிரதிபலிக்கும் கட்சிகளுடன் இணைந்து போராட தமிழ்க் கட்சிகள் முன்வரவேண்டும். இன்னும் சில காலம் ராஜபக்சே சகோதரர்களின் கொட்டம்தான். அனைத்து தரப்பினரின் ஜனநாயக உரிமைகளும் நசுக்கப்படும். இதை எதிர்த்துப் போராடுவதில்

தமிழர் கட்சிகள் முன்னணியில் நிற்கவேண்டும். அடித்தட்டு மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் போது இவர்களது கோரிக்கைகளின் நியாயங்களும் அவர்களுக்குப் புரியுமல்லவா? அதுதான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவும் என நாங்கள் நம்புகிறோம்.

## சா.செ. சந்திரஹாசன்

"இரு நாட்டுத்
தமிழர்களுக்குமான ஒரே தீர்வு
என்று எதையும் நாம்
முன்வைக்க முடியாது. இரு
பிரச்சினைகளுக்கும்
தொடர்பிருப்பதாக நினைப்பதே
மொட்டைத் தலைக்கும்
முழங்காலுக்கும் முடிச்சுப்
போடுவதைப் போல."

**சா.செ. சந்திரஹாசன்:** *ஈழத்தின் தந்தை சா.செல்வநாயகத்தின் புதல்வர். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் நிறுவனர்.*

**கே. வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்திற்கு இன்னமும் பொருளிருப்பதாகக் கருதுகிறீர்களா?**

ப. இல்லை என்றே நினைக்கிறேன். தந்தை செல்வா தனி ஈழத்திற்கான முன்முயற்சி எடுத்தபோது அதற்கான நியாயங்கள் இருந்தன. அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது சிங்களர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழமுடியாது என்ற எண்ணம் தமிழக மக்கள் மத்தியில் பரவலாக இருந்தது. ஆனால் இப்போது நிலைமை கணிசமாக மாறியிருக்கிறது.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் 1987இல் கைச்சாத்தானது. பின்னர் 1994இல் சந்திரிகா குமாரதுங்க இலங்கை அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, "அவர் எம்மோடு இணைந்து வாழுங்கள், அதிகாரங்களை பகிர்ந்தளிக்கிறோம்" என்று அழைப்பு விடுத்தார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட யு.என்.பியினர் அவர் குங்குமப் பொட்டு வைத்திருப்பது போன்ற படத்தை வெளியிட்டு நாடெங்கும் ஒட்டினர். அதாவது அவர் தமிழ்ப் பெண்ணாகிவிட்டார், சிங்களர்களுக்கு துரோகம்

செய்கிறார் என்று சுட்டும் வகையில் இந்தப் படங்கள் ஒட்டப்பட்டன.

தேர்தலின்போது யு.என்.பி. வேட்பாளர் காமினி திசநாயகா மனித வெடிகுண்டிற்குப் பலியானார். அப்படியும் சந்திரிகா மிகப்பெரிய வெற்றி பெற்றார். வரலாற்றிலேயே வேறு எந்த வேட்பாளரும் பெறாத அளவுக்கு வாக்குகள் அவருக்குக் கிடைத்தன. கிட்டத்தட்ட 60 சதவீத வாக்குகளை அவர் பெற்றார்.

வெற்றி பெற்ற பின்னர் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், சிங்கள பேரினவாதிகள் ஒத்துழைக்கவில்லை. இருந்தும் 2000ஆவது ஆண்டில் ஓரளவு அதிகாரப் பரவலுக்கு வழிசெய்யும் ஒரு திட்டத்தை நாடாளுமன்றத்தின் முன்வைத்தார். அதைக்கூட எதிர்க்கட்சியினர் கிழித்துப் போட்டனர். ஆயினும்கூட, அது ஒரு நல்ல துவக்கமே. ஒற்றை ஆட்சிக்கு மாற்றாக Union of Regions என்ற ஒரு அமைப்பை முன்மொழிந்தது அத்திட்டம். அண்மையில்கூட ரணில் விக்ரமசிங்க அரசுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்த பின்னர் விடுதலைப்புலிகளே ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான சுயாட்சி பெற்ற அமைப்பைத்தான் கோரியிருந்தனர். அதன் பிறகு எவ்வளவோ நடந்து முடிந்துவிட்டது. எப்படியும் அதிகாரப் பரவலுக்கு சிங்களர்கள் தயாராக இருக்கும்போது, நாம் தனி ஈழத்தை வலியுறுத்தத்தேவையில்லை.

**உங்கள் தந்தையான செல்வநாயகம் ஈழத் தந்தை என்றழைக்கப்படுகிறார். அவர் சிங்களர்களைப் பற்றி எப்படிப் பேசுவார்?**

பேரினவாதத்தை எதிர்த்தார். ஆனால் சிங்களர்களை அவர் எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ பாவிக்கவில்லை. அவர் அப்படி எல்லாம் எழுதவில்லை, பேசவில்லை, சிந்திக்கவும் இல்லை. அவர் வாழ்ந்த

காலத்தில் எங்களுக்கும் அத்தகைய சிந்தனை எழ வில்லை. பிரசித்திபெற்ற 56ஆம் வருட சத்தியா கிரகத்தின் போதுகூட தமிழர் தலைவர்கள் பக்கத் தில் சிங்களத் தலைவர்கள் பாதுகாப்பாக நின்றார் கள். 30 ஆண்டுகள் முயன்றும் அதிகாரப் பகிர்வு கிடைக்காததால்தான் அவர் தனி ஈழக் கோரிக் கைக்குத் தள்ளப்பட்டார். அதுவரை சமஷ்டி பற்றியே பேசினர். வட்டுக்கோட்டை மாநாட்டு உரைகளில் அனல் வீசி இருக்கலாம். ஆனால் இனவெறியைத் தூண்டும் வகையில் எவரும் பேசவில்லை.

**“ஆனால் செல்வா அவர்களே ஒரு கட்டத்தில் தி.மு.க. நிறுவனர்” அண்ணாவை சந்தித்தபோது இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளையும் தமிழகத்தையும் ஒன்றிணைத்து ஒரு தனி நாடாக்கவேண்டும் என்ற ரீதியில் ஆலோசனை கூறியதாகவும் அதற்கு அண்ணா இசைய மறுத்ததாகவும் கூறப்படுகிறதே...**

அச்செய்தி ஓரளவுதான் சரி. அதாவது ஐம்பது களில் சென்னையில் நடந்த ஒரு சந்திப்பில் அவ்வாறு ஒரு யோசனை கூறப்பட்டபோது செல்வாவும் உடனிருந்தார். ஆனால் அதை அவர் முன்வைக்க வில்லை. உடனிருந்தவர்கள்தான் அப்படிக் கூறினர். அண்ணா உடனடியாக மறுத்தும்விட்டார். சரியாகச் சொல்லவேண்டுமானால் செல்வாவிற்கு அத்தகைய எண்ணம் கிடையாது. மற்றவர்கள் அப்படி நினைத்தார்கள். அதற்கு இவர் பெரிதாக மறுப்பேதும் கூறவில்லை. தனி ஈழம் பற்றியே பல காலம் கழித்துப் பேசியவர் இப்படி ஒரு யோசனையை தடாலடியாக பேசிவிடுவாரா என்ன? ஆனால் ஒரு கட்டத்தில் இப்படி ஒரு மயக்கம் எங்களில் ஒரு சிலருக்கு இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அந்த எண்ணம் நீண்டநாள் நீடிக்க வில்லை என்பதும் உண்மை.

**தி.மு.கவின் தோற்றம், அதன் செயல்பாடுகள், இந்தி எதிர்ப்புப் போர் போன்ற தமிழ் உணர்வை வலியுறுத்திய நிகழ்வுகள் உங்கள் மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தின? இங்கிருந்த முன்னணித் தமிழ்த் தலைவர்கள் அங்கே உங்கள் நாயகர்களாக பார்க்கப்பட்டனரா?**

ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியது உண்மைதான். இங்கிருக்கும் தமிழ் உணர்வாளர்களை நாங்கள் பாராட்டினோம். அவர்களை அடியொற்றி எங்கள் எழுத்துகளும் பேச்சுகளும் மேலும் தமிழ்மயமாயின. அந்த self-assertion எங்களுக்குப் பிடித்திருந்தது. அவ்வளவுதான். அதைத்தாண்டி, திராவிட நாடு என்பதோ, தனித் தமிழ்நாடு என்பதோ எங்களை அதிகமாக ஈர்க்கவில்லை. நாங்கள் தனி ஈழத்திற்கு வந்து சேர்ந்தது எங்களுடைய அனுபவங்களின் காரணமாகத்தான்.

தமிழ்நாட்டுத் தலைவர்களை நாங்கள் நாயகர் களாகவும் வரித்துக் கொள்ளவில்லை. இங்குள்ள கட்சிகள் அங்கே வலுப்பெறவும் முடியவில்லை. எங்கள் பிரச்சினை, அடிப்படையிலேயே வேறு பட்டது. எடுத்துக்காட்டாக இங்கே நடந்த இந்தி எதிர்ப்புப் போர். இந்தித் திணிப்பிற்கு எதிராக நடந்த போராட்டத்தின் விளைவாக இந்தி ஒரே ஆட்சிமொழி என்பது சாத்தியமில்லாமல் போயிற்று. அதாவது நீங்கள் கேட்டீர்கள், தெருவுக்கு வந்தீர்கள், ஏதோ ஒரு தீர்வு ஏற்பட்டது. அப்படி எதுவும் அங்கே நடக்கவில்லை. அதனால்தான் தனி ஈழக் கோரிக்கை யும் பின்னர் ஆயுதமேந்திய போராட்டமும் உருவா யின. எனவே தமிழுணர்வு, தமிழ்த் தேசியம், தமிழின விடுதலை போன்றவற்றை வேறு வேறாகத்தான் புரிந்துகொள்ளமுடியும். இரு நாட்டுத் தமிழர்களுக்கு மான ஒரே தீர்வு என்று எதையும் நாம் முன் வைக்கமுடியாது. இன்னும் சொல்லப்போனால்

இரு பிரச்சினைகளுக்கும் தொடர்பிருப்பதாக நினைப்பதே மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடுவதைப் போலானது.

**எண்பதுகளில் தமிழ்நாட்டில் நிலவிய நிலைக்கும் இன்றைய சூழலுக்கும் ஏதாவது வேறுபாடு இருப்பதாக உணர்கிறீர்களா?**

*1983ல் இலங்கையில் நடந்த படுகொலைகளுக்குப் பின்னர், கூட்டங்கூட்டமாக தமிழர்கள் இங்கே வந்தபோது அவர்கள் மீது இந்நாட்டு மக்கள் மிகுந்த கரிசனையுடன் நடந்துகொண்டார்கள். மத்திய, மாநில அரசுகள் எங்கள் நலனில் மிகுந்த அக்கறை காட்டின. எங்களுக்காக முகாம்கள் திறக்கப்பட்டன. இங்கிருக்கும் மக்கள் லட்சக்கணக்கில் வாடிய போதும், எங்கள் மக்களின் வாழ்நிலை ஓரளவுக்கா வது உறுதிசெய்யப்பட்டது. "அவர்களுக்கு மட்டும் ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?" என்று இந்நாட்டு மக்கள் கேட்கவில்லை. நாங்கள் பல்வேறு இன்னல் களுக்குள்ளாகி இங்கு வந்திருக்கிறோம் என்று உணர்ந்து, எங்கள் மீது அளவுகடந்த அன்புகாட்டி னார்கள். அதை நாங்கள் ஒருபோதும் மறக்க வியலாது.*

*ஆனால் அண்மையில் நடந்த துயர நிகழ்வுகளின் போது பெரிய அளவில் இங்கே எழுச்சி இல்லை. அதற்கு முக்கிய காரணம் இங்கே சிலர் (விடுதலை) இயக்கத்தையும் மக்களையும் ஒன்றாக குழப்பியதுதான். அவர்கள் மக்களை முன்னிறுத்தாமல் இயக்கத்தை முன்னிறுத்தினார்கள். அதைத் தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முடிவில், தமிழ்நாட்டை விடுதலைப்புலிகளின் அரணாக மாற்றும் முயற்சி தோல்வியுற்றது. இதுதான் நடந்திருக்கிறது. மற்றபடி இலங்கைத் தமிழர் மீதான அனுதாபம் சற்றும் குறையவில்லை.*

**இப்போது மஹிந்தா அரசு பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. வெற்றிக்களிப்பில் இருக்கும் ராஜபக்ச அரசு எவ்வித அதிகாரப்பகிர்விற்கும் தயாராக இருப்பதாகத் தோன்ற வில்லை. அதற்கானதொரு சூழலே அங்கில்லை என லாம். அப்படி இருக்கையில் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகளில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடு பட்டால் தமிழ்நாட்டிலிருந்து எவ்வகையான ஆதரவுக் குரல்கள் எழும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

விடுதலைப் புலிகளுடனான மோதலைக் காரணங் காட்டியே தமிழ் மக்கள் மீது பல்வேறு ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இனி அதை அவர்கள் சாக்காகக் கூற முடியாது. தவிரவும், ஏதே னும் அநீதி இழைக்கப்படுமேயானால் உலகமெங் கும் பரவியுள்ள புலம்பெயர் தமிழர்கள் நிச்சயமாக பல்வேறு தளங்களில் அத்தகைய செய்திகளை வெளிப்படுத்துவார்கள். பன்னாட்டு அரசுகளின் அழுத்தமும் இருக்கும். எனவே அப்படி ஒரு துன்பியல் நிகழ்வு தமிழ் மக்களுக்கு ஏற்படும் என்று எண்ணத் தோன்றவில்லை. ஆனாலும் தமிழர் களுக்கிடையே ஒற்றுமை இல்லாத ஒரு நிலை கவலைக்குரியது. அனைத்து தரப்பினரும் ஒன்று பட்டு தமிழ் மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி னால் அதற்கு பயன் இருக்கும் என்றே நான் நம்புகிறேன்.

**தமிழர்களிடையே ஒற்றுமை எனும்போது முஸ்லிம்கள் பிரச்சினை நினைவுக்கு வருகிறது. தமிழர் போராட்டங் களிலிருந்து முஸ்லிம்கள் முற்றிலும் அன்னியப்பட்டு போய்விட்டார்களே?**

இயக்கங்கள் செய்த தவறுகளில் மிகப்பெரிய தவறு, இமாலயத் தவறு. முஸ்லிம்களைத் தாக்கி, நாட்டிலிருந்தே வெளியேற்றி, அவர்களை சிங்

களர்கள் பகடைக்காயாக பயன்படுத்தும் நிலையை உருவாக்கியதுதான். தொடக்க காலங்களிலெல்லாம் அவர்களுடன் எங்களுக்குப் பிரச்சினை எதுவும் கிடையாது. தந்தை செல்வா தமிழ் பேசும் மக்கள் என்றுதான் சொல்வார், தமிழர்கள் என்றுகூட சொல்லமாட்டார், அந்த அளவு அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்லவேண்டும் என அவர் விரும்பினார். அவர் உருவாக்கிய கட்டமைப்பு குலைந்துபோனது பெரும் பின்னடைவு.

ஒரு சமயம் அதிபர் ஜெயவர்த்தனா தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிரச்சினையை உருவாக்க முயன்றபோது, அரசுடன் பேச்சுவார்த்தை நடைபெறவிருந்தது. கிழக்கு பகுதி முஸ்லிம்கள் தங்கதுரைதான் தங்கள் குழுவின் தலைவராக கலந்துகொள்ளவேண்டும் எனக் கோரினர். அந்த அளவுக்கு ஒற்றுமை இருந்தது. அப்படி இருந்த நல்லிணக்கம் எல்லாம் பிறகு தகர்ந்து போனது. அதை மீண்டும் உருவாக்கவேண்டியது தமிழர் தலைவர்களின் இன்றைய முக்கிய கடமை.

மன்னாரிலிருந்து வந்த முஸ்லிம் அகதிகள் மீது எமது ஈழ ஏதிலியர் மறுவாழ்வு அமைப்பு காட்டிய அக்கறை, பின்னாளில் சுனாமிப் பேரழிவின்போது இலங்கையின் கிழக்கு பகுதிகளில் முஸ்லிம்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றியது எல்லாம் மீண்டும் இணக்கமான சூழல் உருவாகும் சாத்தியக்கூறு இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

**மலையகத் தமிழர்கள் உங்கள் போராட்டங்களில் அதிக அக்கறை காண்பித்ததே இல்லையே. அதுகூட உங்களைப் பலவீனப்படுத்தி இருக்கலாமல்லவா? குறிப்பாக 1948இல் அவர்களது வாக்குரிமை பறிக்கப் பட்டபோது உங்கள் தந்தை நாடாளுமன்றத்தில் அதைக் கடுமையாக விமர்சித்தார். ஆனால் 1964இல் சிறீ மாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்தாகி பல**

**லட்சம் பேர் இந்தியாவிற்கு, அவர்கள் விருப்பத்தை மீறி திருப்பி அனுப்பப்பட்டபோது உங்கள் கட்சிகள் எதுவும் போராட்டத்தில் இறங்கவில்லையே.**

வாக்குரிமை பறிக்கப்பட்டபோது என் தந்தையின் குரல் தனியாக, ஆனால், ஓங்கி ஒலித்தது. எனவே பலரின் கவனத்தை ஈர்த்தது. இன்றளவும் பேசப்படுகிறது. ஆனால் சிறீ மாவோ – சாஸ்திரி ஒப்பந்தத்திற்குப் பிறகு பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நானே பங்கேற்றிருக்கிறேன். மலையகத் தொழிலாளர் சங்கங்களும் போராடின.

**நான் கேட்பது இரு தரப்பினரும் அப்போதே ஒன்றிணைந்து போராடியிருந்தால் அது தமிழர்களின் உரிமைப் போருக்கு வலுச் சேர்த்திருக்குமல்லவா?**

அது சரிதான். ஆனால் மலையகத் தமிழர்களின் பிரச்சினை வேறு மாதிரியானது. அவர்கள் பெரும் பாலும் சிங்களர்கள் மத்தியிலேயே வாழவேண்டி யிருப்பதால், எம்மைப்போல் கடுமையான எதிர் நிலைப்பாடு எதையும் எடுக்கமுடியாது. பல்வேறு காலகட்டங்களில் அவர்கள் தங்கள் நிலையை எங்களுக்கு தெளிவுபடுத்தினர். நாங்களும் அப் படியே விட்டுவிட்டோம்.

**இனி வரும் காலங்களில் இலங்கைத் தமிழர்களும் இந்தியாவில் இருக்கும் தமிழர்களும் இணைந்து போராடுவதே தமிழர்கள் தங்கள் இன உரிமைகளை காத்துக்கொள்ளும் வழியாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?**

நாங்கள் அப்படி நினைக்கவில்லை. காலம் மாறிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள தமிழர் களைப் பொறுத்தவரை அகில இந்திய அளவில் முக்கியத்துவம் பெற்றவர்களாகிவிட்டார்கள். மிகவும் சாணக்கியத்தனமாக நடந்துகொண்டு, தங்களுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்

கிறார்கள். இந்திய நாட்டின் ஒரு பகுதியாக வாழ்வதில் அவர்களுக்கு பிரச்சினை ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

எங்களைப் பொறுத்தவரை ஒன்றுபட்ட இலங்கைக்குள் எங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளமுடியும் என்றே நம்புகிறோம். அது முடியாவிட்டால்தான் தனி ஈழம் பற்றி நாங்கள் பேசப்போகிறோம். இந்நிலையில் இருநாட்டுத் தமிழர்கள் இன அடிப்படையில் ஒன்றிணைந்து செயல்படுவதென்பது தேவையில்லாத சிக்கல் களுக்கே வழிவகுக்கும்.

## மறவன்புலவு சச்சிதானந்தம்

"தகுதியுள்ளவற்றின்
பிழைத்திருத்தல் என்பார்கள்.
களத்தில் தகுதியானவர்களே
தப்பி நிற்க முடியும்.
அத்தகைய தலைமைப் பண்பு
பிரபாகரனிடமிருந்தது.
எனவேதான் அவர்
மதிக்கப்பட்டார்."

**மறவன்புலவு சச்சிதானந்தம்:** *ஈழத் தமிழரான இவர் ஐ.நா.வில் பணியாற்றியவர். கடல்சார் வளங்களைக் கண்டறிவதில் நிபுணர். இப்போது சென்னையில் காந்தளகம் என்ற பதிப்பகம் ஒன்றை நடத்திவருகிறார்.*

**கேள்வி: கடல்சார் ஆய்வாளராக இருந்த நீங்கள் தமிழர் உரிமை அரசியலுக்கு வந்தது எப்படி?**

*பதில்: நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன் என்பதால் தமிழுணர்வும் என்னுடன் கூடப்பிறந்தது எனலாம்.*

**தமிழர்கள் மண்ணின் மைந்தர்கள். மூத்த குடிகள். என்ற உணர்வு எக்காலகட்டத்தில் உங்கள் மக்கள் மத்தியில் வளர்ந்தது?**

*18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒல்லாந்தர்கள் (ஹாலாந்துக்காரர்கள்) நிர்வாகச் சட்டத்தை எழுத்துவடிவில் கொண்டுவந்தபோது எங்கள் தேச வழமைதான் சட்டமாகியது. அச் சட்டத்திற்காக வாதாடி வென்றோம். அன்றிலிருந்து இன்றுவரை எங்கள் தனித்தன்மையை உணர்ந்திருக்கிறோம், அதை வலியுறுத்தியிருக்கிறோம். 19ஆவது நூற்றாண்டில் கிறிஸ்தவ மதமாற்றத்திற்கெதிராக ஆறுமுக நாவலர் குரல் கொடுத்தாரல்லவா? அதுவும் ஒரு முக்கியமான கால கட்டம்தான். ஆனாலும்கூட நாங்கள் எப்போதுமே தமிழர்கள்தான் என்று உணர்ந்து வந்திருக்கிறோம். அதை சொல்லிவந்திருக்கிறோம். சிங்களவர்களோடு முரண்பட்ட நேரத்தில்தான் நாங்கள் எங்கள் தமிழ்த் தன்மையை நிலைநிறுத்தினோம் என்பது பிழை.*

பிரித்தானியர்களுடன் அவர்கள் மோதியபோது நாங்களும் அவர்களுடன் சேர்ந்து விடுதலைக்காக குரல் கொடுத்திருக்கிறோம். சரியாகச் சொல்ல வேண்டுமானால் இந்தியாவிலிருந்து முஸ்லிம்களை யும் மலையகத் தமிழர்களையும் அதிக அளவில் இங்கே குடியேறச் செய்து தேவையில்லாத சிக்கல் களுக்கு வழிவகுத்தவர்கள் பிரித்தானியர்களே. அதன் பிறகு வரலாறு எப்படியெல்லாமோ சென்றுவிட் டது. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப் பாணத்தை ஆண்டு, போர்த்துகீசியர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்து, மத மாற்றத்தில் ஈடு பட்ட கத்தோலிக்க குருமார்களைக் கொன்று, சைவத் தமிழ் மரபைக் காத்த அரசன் சங்கிலியன் காலம் தொட்டு வெள்ளையர்களுடன் இறுதிவரை போரா டிய பண்டார வன்னியன் வழியாக வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை நாங்கள் தொடர்ந்து போராடி இருக்கிறோம், எங்கள் தேச வழமைக்காக. கா. சிவத் தம்பி போன்ற மார்க்சீயவாதிகள் கூறுவதுபோன்று எங்களுடையது reactionary nationalism அல்ல. பல நூறாண்டுகளாக வரலாற்றினூடாக வளர்ந்தது, உதிரத்தில் கலந்தது.

விடுதலைப் போரில் நாங்கள் சிங்களர்களுடன் இணைந்து செயல்பட்டிருந்தாலும், விரைவிலேயே நாங்கள் சிங்கள பேரினவாதத்திற்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. நீண்ட காலம் அறவழியில்தான் எங்கள் போராட்டம் நடந்தது. ஆனாலும் இலங்கை அரசு வன்முறையைத்தான் பரிசளித்துவந்தது.

1961ஆம் வருடம் யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிர கத்தில் இறங்கியவர்கள் போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் செல்வநாயகம், திருச்செல்வன் உட்பட பலர் அப்போது கைதுசெய்யப்பட்டனர். 90 நாட்கள் சிறையிலிருந்தனர். அதற்கெல்லாம் நாங் கள் கவலைப்படவில்லை. எங்கள் போராட்டம்

தொடர்ந்தது. 1974 உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது நான் யாழ்ப்பாணத்தில்தான் இருந்தேன். சிங்கள அரசு எங்களுக்கு சவால்விட்டது. நடத்திப்பாருங்கள் என்றார்கள். நாங்கள் நடத்திக்காட்டினோம். போலீசார் சுட்டதில் 9 பேர் இறந்தனர். இந்தச் சம்பவத்தின் பின்னணியில்தான் யாழ்ப்பாணத்தின் மேயர் ஆல்ஃப்ரெட் துரையப்பா கொலைசெய்யப்படுகிறார். பிரபாகரனின் வீர வரலாற்றில் முதல் கொலை இதுதான்.

**துரையப்பா நல்லவர் என்றும், அங்கு நிகழ்ந்த மரணங்களுக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும், அந்த நேரத்து தமிழ்த் தலைவர்கள் இளைஞர்களை உசுப்பிவிட்டு இந்தக் கொலைக்கு காரணமாக அமைந்தார்கள். குறிப்பாக மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், காசி ஆனந்தன் போன்றோர் அப்படிப் பேசினர். இதனால், தமிழ் இளைஞர்கள் தீவிரவாதத்திற்குப் பலியானார்கள். இவர்கள் வசதியாக ஜனநாயக அரசியலைப் பின்பற்றினார்கள் என்று ஒரு கூற்று இருக்கிறது..**

இல்லை, அப்படிச் சொல்லமுடியாது. ஆல்ஃப்ரெட் துரையப்பாவிற்கும் நடந்த அனைத்து சம்பவங்களுக்கும் தொடர்பிருந்தது. இளைஞர்கள் கொதித்துப் போனார்கள். அவர் கொலை செய்யப்பட்டார். அது முழுக்க முழுக்க இளைஞர்களின் செயல். அதற்கும் கட்சித் தலைவர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. 72 அல்லது 75ல் தமிழர் தலைவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தபோது, அதற்கெதிராக உண்ணும் போராட்டம் நடத்தினர் இளைஞர்கள். எங்கள் தலைவர்களின் கட்டுப்பாட்டில் அவர்கள் இல்லை. சிங்களத் தலைவர்களின் போக்குதான் இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டியது. இன்றுகூட வவுனியாவில் இருக்கும் முகாம்களில் காணப்படும் அவலங்களும்

அநீதியும் வேறு வடிவங்களில் விடுதலைப் புலிகள் தோன்றவே வழிவகுக்கும்.

**வேறொரு குற்றச்சாட்டும் தமிழ்த் தலைவர்கள் மீது இருக்கிறது. யாழ்ப்பாண உயர்குடி வேளாளர் சமூகத்தைச் சார்ந்த அவர்களிடம் ஜாதி குறித்த இறுமாப்பு அதிகமாகவே இருந்தது. அவர்கள் தலித் மக்களை கௌரவமாக நடத்தவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப்ஐ ஈழத்துப் பள்ளன்கள் கட்சி என்றுகூட இழித்துப் பேசினார்கள். பத்மநாபா உள்ளிட்டோர் படுகொலை செய்யப்பட்டபோது பெரிய அளவில் தமிழர் தலைவர்கள் விடுதலைப் புலிகளை கண்டிக்க முன்வராததற்குக்கூட இந்த ஜாதீய மனோபாவம்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. தவிரவும் லட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் சிரிமாவோ, சாஸ்திரி ஒப்பந்தத்தின் பெயரால் நாடு கடத்தப்பட்டபோது ஈழத் தமிழர் அமைப்புகள் அந்த அநீதி குறித்து அதிகம் அக்கறை காட்டாததற்கு காரணமும் இதே ஜாதீய மனோநிலைதான் என்கிறார்கள். என்ன சொல்கிறீர்கள்?**

எல்லாச் சமூகத்திலும் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரை இம்மாதிரி ஏற்றத் தாழ்வுகளுக்கு ஜாதி ஒரு முக்கியக் காரணமாக அமைகிறது. எங்களைவிட சிங்களவர் மத்தியில் ஜாதிக் கட்டுமானம் அழுத்தமாகவே உண்டு. எனவே ஜாதிய முறைக்கு ஈழத் தமிழர்களை மட்டும் குறை சொல்லமுடியாது.

தவிரவும் ஜாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எங்கள் மத்தியில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்துகொண்டே இருந்தன. ஒரு முறை தலித் மக்களுக்கென அச்சுவேலி என்று ஒரு தொகுதி உருவாக்கப்படவேண்டும் என்ற ஒரு யோசனையை அன்றைய தமிழரசுக் கட்சி முன்வைத்தது. இந்து

இளைஞர்கள் பேரவை சார்பில் நானும் வேறு சிலரும் தந்தை செல்வாவைச் சந்தித்து, அப்படி தனி ஒரு தொகுதியை ஒதுக்கினால் அத்தொகுதி மக்களுக்கே அத்தகைய அடையாளம் கிடைத்துவிடும். அது நல்லதல்ல. மாறாக யார் யாரெல்லாம் தாழ்த்தப் பட்டவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அவர் களைப் பத்து பதினைந்து தொகுதிகளில், பொதுத் தொகுதிகளிலேயே நிற்கவையுங்கள். அவர்களை தனித்து வைக்கும் போக்கு அப்போதுதான் நீங்கும் என்று வலியுறுத்தினோம். அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இறுதியில் தாழ்த்தப்பட்டோர் நால்வர் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

ஆனால் வெள்ளாள மனோபாவம் இருந்தது ஓரளவு உண்மைதான். தமிழ்நாட்டிலிருந்து வந்த வர்கள் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பி னராக இருந்ததால் அவர்களை இகழ்ந்து நோக்கும் பழக்கமும் இருந்தது. அவர்களும் எங்களை வடக் கத்தியான் என்று ஏசுவார்கள். ஆனால் ஒன்றை நீங்கள் கவனிக்கவேண்டும். தஞ்சாவூரில் பிறந்து இங்குவந்து குடியேறிய நடேச பிள்ளை ஒரு தேர்தலில் செல்வாவையே காங்கேசன் துறையில் தோற்கடித்தார். சர் பொன்னம்பலம் ராமநாதனின் மகளை அவர் திருமணம் செய்துகொண்டிருந்தார். செல்வாவைத் தோற்கடித்தவர், பிறகு அமைச்சரா கவே ஆனார். அதே போல பின்னாளில் யாழ்ப்பாண முதல்வராக ஆன வரதராஜபெருமாள் ஈழத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவரது தந்தை பிழைப்புத்தேடி இங்கே வந்து கூலிவேலை செய்தவர். அவர் பிறகு வியாபாரியாகி, ஈழத்திலே தங்கிவிட்டார். எங்கள் மக்கள் மத்தியில் இந்தியாவிலிருந்து குடியேறியவர் களை இரண்டாம் நிலை மக்களாகப் பார்க்கும் பழக்கம் இருந்ததென்றாலும் அவர்களையும் தலை வர்களாக ஏற்றுக்கொள்ள நாங்கள் தயங்கவில்லை

என்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டும்.

மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப் பட்டபோது பலர் எதிர்த்துக் குரல் கொடுத்தோம். நாடாளுமன்றத்திலேயே இதனை செல்வா வன்மை யாகக் கண்டித்தார். சென்னையில் அப்போது படித்துக் கொண்டிருந்த நானும் வேறு சில நண்பர்களும் சேர்ந்து இங்கு வந்த சிரிமாவோ பண்டாரநாயகா விற்கு விமான நிலையத்தில் கறுப்புக் கொடி காட்டி னோம். எனவே நாங்கள் அவர்கள் மீது அக்கறை காட்டவில்லை என்று சொல்வது தவறு. நாங்கள் மலையகத் தமிழர் மீது, மட்டக்களப்புத் தமிழர் மீது, வவுனியாத் தமிழர் மீது அக்கறை காட்டவில்லை; யாழ்ப்பாணத் தமிழர்களும், கொழும்புத் தமிழர் களும் தம்மைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டனர் என்று பிரச்சாரம் செய்யப்படலாம். ஆனால் அது உண்மையில்லை. நாங்கள் யாரையுமே வேறு படுத்திப் பார்க்கவில்லை. எல்லாத் தமிழர்களும் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய தனித் தமிழ் ஈழம் பெறவே விரும்பினோம், விரும்புகிறோம்.

**1964இல் யாழ்ப்பாணத் தமிழர்கள் எந்த அளவுக்குத் தங்கள் எதிர்ப்பை காட்டினார்கள்? மிகப்பெரும் நாடு கடத்தல் அப்போது நடந்தது.**

நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். மலையகத் தமிழர் பிரச்சினைகளை பொறுத்தமட் டில் நாங்கள் ஒரு வரையறைக்குள் நின்றே செயல் பட வேண்டியிருந்தது. அம்மக்கள் மத்தியில் தொண்டை மான் தலைமையிலான சிலோன் தொழிலாளர் காங்கிரசும், அஜீஸ் தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும் இருந்தன. அவை வலிமையுடனேயே திகழ்ந்தன. அவர்களுக்கு எங்கள் முழு ஆதரவு இருந்தது. அத்தலைவர்களும் எங்கள் போராட்டங்களுக்கு ஆதரவளித்தனர். தொண்டமான் 1961ஆம் ஆண்டு நடந்த சத்தியாக்

கிரகத்தில் கலந்துகொண்டார். 1964ல் தங்கத்துரை எம்.பியின் தலைமையில் தமிழரசுக் கட்சியின் தொழிற்சங்கமொன்று அமைக்க முயற்சி எடுக்கப் பட்டது. தொண்டமான் அதை விரும்பவில்லை. அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆனால் நல்லுறவு நீடித்தது. அவர்களது கட்டாயங்களை நாங்கள் புரிந்துகொண்டோம். அவர்களும் எங்கள் நிலைமையை உணர்ந்தே இருந்தனர்.

**1964 சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி தீவிரமாகப் போராடவில்லை என்பது உண்மைதானே?**

மலையக மக்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்ட தைக் கண்டித்துத்தானே தமிழரசுக் கட்சியே உதய மாகியது. எங்கள் தோற்றுவாய் அப்பிரச்சினை தான். சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று 1956ல் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு இரண் டாண்டுகள் கழித்து தமிழர்களுக்கெதிரான கலவ ரம் நடந்தது. ஆனால், எங்கள் தமிழரசுக் கட்சி அந்த சமயத்தில் துவங்கப்படவில்லை. மலையக மக்களுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டதற்காகத் தான் கட்சியைத் துவக்கினோம்.

**அந்த ஒப்பந்தம் கையெழுத்தான போதும் சரி, பிறகும் சரி, மலையகத் தமிழர்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்கள் பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை.**

அவர்களைப் பற்றி இங்குள்ள மக்களுக்கு அக் கறை இல்லை, சரியான புரிதல் இல்லை என்பது தான் வருத்தத்திற்குரிய உண்மை. பண்டித நேரு விற்கு இருந்த புரிதல் அவருக்குப் பின்னர் பிரதம ரான லால் பகதூர் சாஸ்திரிக்கு இல்லை. 1939ல் மஹாத்மா காந்தி அனுப்பி, இலங்கை இந்திய காங் கிரசை உருவாக்குவதற்காக நேரு இலங்கைக்கு வந் தார். அப்போது அவர் பேசுவதற்காக அமைக்கப்

பட்டிருந்த மேடையை அப்புறப்படுத்த சிங்களக் குண்டர்கள் முயன்றார்கள். நேருவே அவர்களை அடிக்கப்போனார். அவருக்கு சிங்களவர் மத்தியில் இருந்த இனவெறி நன்கு தெரிந்திருந்தது. அங்கிருந்த மலையக மக்களை இந்தியர்களாகக் கருதுவது தவறு என்பதில் உறுதியாக இருந்தார். ஆனால் சாஸ்திரிக்கோ தமிழ்நாட்டுப் பிரச்சினையே தெரியாது. அவருக்கெப்படி இலங்கை விவரம் தெரிந்திருக்கும், பாவம்.... (சிரிக்கிறார்).

அதே போல காமராஜரும் இது அந்த நாட்டுப் பிரச்சினை என்றுதான் கைவிரித்தார். எவருக்கும் எங்கள் மக்களின் நிலைமை புரியவில்லை. சிங்கப்பூர், மலேசியா, பர்மா என எந்த நாடாக இருந்தாலும் அங்கு சென்றவர்கள் இங்கிருப்பவர்களுக்கு பணம் அனுப்பிக்கொண்டிருந்ததால் அவர்கள் எல்லாம் வளமாக இருப்பதாகவே தமிழ்நாட்டு மக்கள் நினைத்தார்கள். மலையகத் தமிழர்கள் அல்லது யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்நிலை பற்றி இங்கே எவரும் சரியாக அறிந்திருக்கவில்லை...

**ஈ.பி.ஆர்.எல்.எஃப் போன்ற குழுக்களைத் தாழ்த்தப்பட்டவர்களின் அமைப்பு என்று கருதி அவற்றை யாழ்ப்பாணத் தமிழர்கள் புறக்கணித்ததாகச் சொல்லப்படுகிறது.**

ஈ.பி.ஆர்.எல்.எஃபை பள்ளர்கள் கட்சி என்று சொல்வதே தவறு. பத்மநாபா பள்ளரா என்பதே சந்தேகம்தான். டக்ளஸ் தேவானந்தா நிச்சயமாக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரல்ல. கேத்தீஸ்வரன் உயர்குடி வேளாளர். தவிரவும் தமிழர்களின் கட்சியாகவிருந்த தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் கிறிஸ்தவர். அவருக்குப் பின்னாலே வந்த அமிர்தலிங்கம் பண்டாரகத்தார், வேளாளரல்ல. சைவ வேளாளர்களே ஈழத் தமி

ழர்களின் அரசியலை வழிநடத்தினர் என்பதெல்லாம் பொய்ப்பிரச்சாரம். செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் பிரபாகரனும் வரதராஜ பெருமாளும் எங்களுக்குத் தலைமை தாங்கியிருக்கையில் இங்கே எங்கிருந்து வந்தது வேளாள மேலாதிக்கம்?

**விடுதலைப் புலிகளின் பல்வேறு மனித உரிமை மீறல்களை தமிழர் அரசியல் தலைமையும் புலம் பெயர்ந்த தமிழர்களும் நியாயப்படுத்தியதும் கண்டும் காணாமல் இருந்ததும் பெரும் தவறல்லவா?**

இவ்விஷயத்தில் விடுதலைப் புலிகளை மட்டும் குறைசொல்லுவது தவறு. எல்லா போராளிக் குழுக்களுமே அப்படித்தான் செய்திருக்கின்றன. பத்மநாபா சுட்டுக்கொல்லப்பட்டதைப் பற்றித் தான் எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் இந்தியப் படை அங்கிருந்தபோது பத்மநாபாவின் ஈ.பி.ஆர். எல்.எஃப். எத்தனை அக்கிரமங்களைச் செய்தது? ப்ளோட், டெலோ தலைமைகள் தத்தம் அமைப்பில் இருந்த அதிருப்தியாளர்கள் எத்தனை பேரை கொன்றொழித்தனர்? பிரபாகரனின் பின்னால் ஏன் மக்கள் நின்றனர் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அவர் தனி ஈழம் என்ற நிலைப்பாட்டில் கடைசிவரை உறுதியாக இருந்தார் என்பது தான் அதற்குக் காரணம். மற்றவர்கள் எல்லாம் ஒவ்வொருகட்டத்தில் சிங்களர்களுடனோ, இந்தியர்களுடனோ சமரசம் செய்துகொண்டுவிட்டனர். பிரபாகரன் ஒருவர்தான் அப்படிச் செய்ய மறுத்தார். நானே பிரபாகரனிடம் உங்கள் அணுகுமுறை தவறு என்று வாதிட்டிருக்கிறேன். "அண்ணே, சிங்களவனிடம் நியாயம் கிடைக்காது. அவர்களுக்குத் தெரிந்த ஒரே மொழி துப்பாக்கிதான்" என்றார் அவர். பிரபாகரனுக்கு அரசியல் தெரியவில்லை, வேறு வழிகள் புரியவில்லை என்று சொல்லலாம். ஆனால் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்க

வேண்டும் என்பதில் அவர் இறுதிவரை உறுதியாக இருந்தார். ப்ளோட் சித்தார்த்தனே பிரபாகரன் இல்லாவிட்டால் தமிழ்த் தேசியம் அழிந்துவிடும் என்று அடிக்கடி சொல்வார்.

'தகுதியுள்ளவற்றின் பிழைத்திருத்தல்' என்பார்கள். களத்தில் தகுதியானவர்களே தப்பி நிற்க முடியும். அத்தகைய தலைமைப் பண்பு பிரபாகரனிடமிருந்தது. எனவேதான் அவர் மதிக்கப்பட்டார். அமிர்தலிங்கத்தைக் கொன்றுவிட்டு வா என்றால் செய்தார்கள். எதிர்த்துக் கேள்வி கேட்கவில்லை. அதற்கு அவ்வமைப்பில் இருந்த கட்டுப்பாடுதான் காரணம். அதுமட்டுமல்ல, அந்த அளவுக்கு பிரபாகரன் மீது அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவரும் தனக்கென்று சொத்து எதுவும் சேர்த்து வைத்துக் கொள்ளவில்லையே? மாளிகை கட்டிக் கொள்ளவில்லையே. அவரது பெற்றோர்கூட அகதிகளாகத் தானே வாழ்ந்தார்கள். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு உணர்வுதான் பிரபாகரனின் செல்வாக்கு, புகழ் தமிழ் மக்கள் மத்தியில் உயர காரணமாக இருந்தது.

**ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு சில காலத்திற்கு முன், நீங்களும் காசி ஆனந்தனும் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் சார்பாகச் சந்தித்ததாகவும், அப்போது விடுதலைப் புலிகள் அவருடன் பேச விரும்புவதாக நீங்கள் அவரிடம் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது. ராஜீவின் பாதுகாப்பு விஷயத்தில் அவர் அலட்சியமாக இருக்கவே அந்த சந்திப்பு வழிசெய்தது. இது எல்லாமே ஒரு திட்டமிட்ட நாடகம் என்று அந்த சமயத்தில் செய்திகள் வெளிவந்தன.**

1990 நவம்பர் இறுதியில் இந்தச் சந்திப்பு நடந்தது. சந்திரசேகர் பிரதமராக இருந்த நேரம் அது. தமிழகத்தில் முதல்வராக இருந்தவர் மு. கருணாநிதி. இலங்கைக்கு செல்லவிருந்த ஏறத்தாழ இருபது இளை

ஞர்கள் போலீசாரால் சுற்றிவளைக்கப்பட்டனர். அவர்களில் காசி ஆனந்தனும் ஒருவர். பிடிபட்ட குழுவின் தலைவர் தங்களை விடுதலை செய்யா விட்டால் சயனைட் அருந்தி இறந்துவிடுவோம் என்று மிரட்டியிருக்கிறார். பிறகு கலைஞரின் தலையீட்டில்தான் காசி ஆனந்தன் உட்பட அவர் களில் பலர் விடுவிக்கப்பட்டனர். நான்கைந்து பேரே சிறையில் அடைக்கப்பட்டனர். பிறகு காசி ஆனந்தன் என்னை சந்தித்தபோது அவர் தனக்கும் சயனைட் குப்பி வழங்கப்பட்டிருந்ததாகவும் கருணாநிதி தலை யிட்டிருக்காவிட்டால் தான் மரித்திருக்கக்கூடும் என்றும் சொன்னார். அப்போது நான் அவரைக் கடிந்துகொண்டேன். "இதென்ன முட்டாள்தன மாக இருக்கிறது? பிரபாகரன் எதற்காக சயனைட் அருந்தச்சொல்லியிருக்கிறார். சிங்களவரிடம் மாட்டிவிடக் கூடாது என்பதற்காகத்தானே? இங்கே என்ன நடந்திருந்திருக்கும்? சாதாரண சட்டப் பிரிவுகள் ஏதாவது ஒன்றின் கீழ் வழக்குப் பதிவு செய்து ஏதோ தண்டனை கொடுத்து, பிறகு உங்களை வெளியே விட்டிருப்பார்கள். அவ்வளவுதானே? பயங்கரவாதி என்று சொல்லி ஏதேனும் கடும் தண் டனை கொடுத்துவிடுவார்களா என்ன? தமிழ் பேசக் கூடாது, தமிழனாக இருப்பதே தவறு என்ற ரீதி யிலா உங்களை அணுகுகிறார்கள்? இல்லையே. பின் ஏன் இப்படி தேவையில்லாமல் இந்தியாவுடன் பகைமையை வளர்த்துக்கொள்கிறீர்கள்? இந்தியா வுடன் நல்லுறவு நமக்கு தேவைப்படுகிறது என்று வாதிட்டேன். என் கருத்தை ஆனந்தனும் ஏற்றுக் கொண்டார். அதன் பிறகே இந்தியாவுடன் நல்லு றவை வளர்த்துக்கொள்ள எங்கள் பங்கிற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவெடுத்தோம். அதன் படி அப்போது சட்ட அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பிரமணியன் சுவாமியைச் சந்திக்க முயற்சித்தோம்.

அக்காலகட்டத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதியின் உதவியை நாடினோம். இரண்டு முறை சந்தித்தோம். அவரும் இலங்கைப் பிரச்சினையில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பிறகு அவரது சகோதரர் ஒருவர் மூலமாக சுப்பிரமணிய சுவாமிக்கு சொல்லி அனுப்பினோம். திரும்பி வந்தவர், பாலசிங்கம் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டால் அவர்களுடன் சந்திரசேகர் அரசு பேச்சுவார்த்தை துவங்க உதவுவதாக சுப்பிரமணியன் சுவாமி கூறியதாகச் சொன்னார். ஏனென்றால் பாலசிங்கம் ஒரு கிறிஸ்தவர். தவிர அவர் கடுமையாக சுப்ரமணியன் சுவாமியைத் தாக்கி வந்தவர். எனவே அவர் அவ்வமைப்பில் இருக்கும் வரை பேசமுடியாது என்று சுப்பிரமணியன் சுவாமி சொல்லியிருக்கிறார்.

இதில் நாங்கள் என்ன செய்யமுடியும்? விடுதலைப் புலிகள் இயக்கம் தனியான ஒரு அமைப்பு. இவர்களை வைத்துக்கொள்ளுங்கள் அல்லது விலக்கி விடுங்கள் என்றெல்லாம் எங்களால் கூறமுடியாது. அந்த முயற்சி அத்துடன் நின்றுபோனது. அதன் பிறகு நாங்கள் ஜெயேந்திரரைப் பார்க்கவில்லை. 1991ல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்ட பிறகு *தி இந்து*வின் நிருபர் டி.எஸ். சுப்பிரமணியம் எங்களை எதேச்சையாகப் பார்க்கவந்திருந்தார். தான் அனுப்பிய கேள்விகளுக்குப் பிரபாகரன் பதிலளிக்கவில்லை என்று வருத்தத்துடன் சொன்னார். காசி ஆனந்தன் விடுதலைப் புலிகளின் தலைமைக்குத் தகவல் அனுப்புவதாகக் கூறினார். பின்னர் அவரும் நிருபரும் *தி இந்து* அலுவலகம் சென்று மாலினி பார்த்தசாரதியைச் சந்தித்தார்கள். பிரபாகரனின் பேட்டி கிடைக்க உதவுவதாக அவரிடம் கூறினார் காசி ஆனந்தன். அப்போதுதான் ராஜீவ் காந்தியைச் சந்திக்க உங்களுக்கு விருப்பம் இருந்தால் நான்

ஏற்பாடு செய்கிறேன் என்றார் மாலினி. பின்னர் என்னிடம் இதனைத் தெரிவித்தார் ஆனந்தன். மாலினியின் முயற்சியின் காரணமாக மார்ச் முதல் வாரத்தில் ராஜீவைச் சந்திக்க ஏற்பாடு செய்யப் பட்டது. மார்ச் 5ந் தேதி நாங்கள் இருவரும் போனோம். புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் இல்லை என்ப தால் நான் உள்ளே போகவில்லை. காசி ஆனந்தன் மட்டும்தான் ராஜீவைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பு புது தில்லியில் இருந்த ராஜீவின் வீட்டில் ஏறத்தாழ 40, 50 நிமிடங்கள் நீடித்தது. அடுத்த ஒரு சந்திப்பு ராஜீவுடன் மார்ச் 25ல் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. அதற்குள் என்ன பேசலாம் என்பது பற்றிச் சொல்லுங்கள் என்று அப்போது லண்டனிலிருந்த கிட்டுவிடம் காசி ஆனந்தன் கூறினார். இறுதி வரை அதற்குப் பதில் வரவில்லை.

கிட்டு பிரபாகரனுக்கு சொல்லி அனுப்பினாரா என்பதும் எங்களுக்குத் தெரியாது. அது மட்டுமல்ல. காசி ஆனந்தன் ராஜீவை சந்தித்தது பற்றி பிரபாகர னுக்கு விளக்கமாகக் கடிதமொன்று எழுதினார். அந்தக் கடிதத்தை எடுத்துச் சென்ற நபர் துரதிர்ஷ்ட வசமாக காவல்துறையினரால் ராமேஸ்வரத்தி லேயே சுற்றிவளைக்கப்பட்டார். கடிதம் பிரபாக ரனைச் சென்றடையவே இல்லை. ராஜீவ் கொலை யான பிறகு மல்லிகையில் (ராஜீவ் கொலை விசா ரணை நடந்த கட்டிடம்) என்னையும் காசி ஆனந் தனையும் ஐந்து நாட்கள் வைத்துத் துருவித் துருவி விசாரித்தார்கள். எங்களிடம் ஒரு தகவலுமில்லை. அந்தச் சந்திப்பு நடந்தது பற்றி ராஜீவின் செயலர் ஜார்ஜிடம் கேளுங்கள் என்று நான் கார்த்திகேயனி டம் கூறினேன். அவரும் உறுதிப்படுத்தினார். பிறகு எங்களை விட்டுவிட்டார்கள்.

**இலங்கையில் நடந்த நிகழ்வுகளுக்கான எதிர் வினை தமிழகத்தில் எப்படி இருந்தது?**

1956இல் தமிழர்களுக்கெதிராக பெரிய அளவில் கலவரம் நடந்தது. அப்போது இங்கே காங்கிரஸ் ஆட்சி. யாரும் கண்டுகொள்ளவில்லை. ராஜாஜி மட்டும் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் ஒரு கலவரம். அப்போது அண்ணா குரல் கொடுத்தார். அவருடைய அறிக்கை அவரது தமிழுணர்வை வெளிப்படுத்தியது. அதன் பிறகு 60களின் துவக்கத்தில் அங்கே போராட்டம் வலுப்பெற்றது. ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அப்போதும் தமிழ்நாட்டில் பெரிதாக எதிர்வினை எதுவும் இல்லை. காசி ஆனந்தன் இலங்கை தூதரகத்தின் முன் உண்ணாவிரதம் இருந்தார். அது குறித்து யாரும் அக்கறை காட்டவில்லை. காலையில் துவங்கிய உண்ணாவிரதத்தை மாலையிலேயே முடித்துக்கொண்டார். எப்படி முடித்தார் தெரியுமா? அவரே கல்கி கார்டன்வரை நடந்து சென்று ராஜாஜியை சந்தித்து, அவரிடம் பழச்சாறு வாங்கிக் குடித்துத்தான் உண்ணா விரதத்தை முடித்துக்கொண்டார். அன்று நிலைமை அப்படித்தான் இருந்தது.

ராஜாஜி எங்களுக்காக ரொம்பவும் கவலைப்பட்டார். அவர் நடத்திவந்த *ஸ்வராஜ்யா*வில் தொடர்ந்து எழுதிவந்தார், அதிகாரப் பகிர்வே ஒரே தீர்வு என்று குறிப்பிட்டார். அண்ணாவால் கூட அப்படித் தெளிவாகச் சொல்லமுடியவில்லை.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? பெரியார் எங்களைப் பற்றிப் பேசியதே கிடையாது. நாங்களெல்லாம் பழமைவாதிகள், இந்துக் கடவுளர்களை வழிபடுபவர்கள், புராணங்களில் நம்பிக்கையுடையவர்கள், இவர்களுக்காக நாம் ஏன் குரல் கொடுக்க வேண்டும் என்றுகூட அவர் நினைத்திருக்கலாம். 1957 அல்லது 1958இல் யாழ்ப்பாணத்திற்குப் பெரியார் வந்தார். அப்போது மல்ல சேகரா என்ற சிங்களப் பேராசிரியரைச் சந்தித்தார் பெரியார்.

எங்களுடைய தாழ்த்தப்பட்ட மக்களை எப்படி புத்த மதத்திற்கு மாற்றுவது என்று இருவரும் ஆலோசனைகூட நடத்தினார்கள்.

பிறகு, தந்தை செல்வா இங்கே வந்து பெரியாரைச் சந்தித்தபோதும் பெரியார் பெரிதாகப் பிடி கொடுத்துவிடவில்லை. அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி நினைவு கூர்ந்தாரே, அதுபோலத்தான் பேசினார்: "நாங்களே இங்கே அடிமைகளாக இருக்கிறோம். அப்படியிருக்கையில் உங்களுக்கு நாங்கள் என்ன உதவி செய்துவிடமுடியும்?" என்றார் அவர். அன்பழகன் வேறு ஒரு கூட்டத்தில் கூறினார்: "எங்களால் உங்கள் கண்ணீரைத் துடைக்கத்தான் முடியும், கண்ணீர் விடுவதைத் தடுக்கமுடியாது." 1961ஆம் ஆண்டு நான் முன்பு குறிப்பிட்ட சத்தியாக்கிரகப் போர் நடந்துகொண்டிருந்தபோது சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். நாங்கள் அண்ணாவைப் போய்ப் பார்த்தோம். அவர் மதியழகனைச் சென்று பார்க்குமாறு எங்களிடம் கூறினார். அவர் கேட்டுக்கொண்டபடி மாணவர்கள் 1200 ரூபாய் திரட்டி தி.மு.கவிற்குக் கொடுத்தோம். அந்தப் பணத்தில்தான் அப்போது கடற்கரையில் சத்தியாக்கிரகிகள் மீதான தாக்குதலைக் கண்டித்து கூட்டம் நடந்தது. இதுதான் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் நடந்த முதல் பொதுக் கூட்டம். அன்றைய முதல்வர் காமராஜரையும் சந்தித்தோம். இது தொடர்பாக தன்னால் எதுவும் செய்ய முடியாது; இதெல்லாம் மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்ட விஷயம் என்று கைவிரித்து விட்டார்.

1977ல் நடந்த இனக்கலவரத்தின்போது நானும் என் குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டு அகதி முகாமில் இருந்தோம். அப்போது நானும் கோவை மகேஸ்வரன் போன்றோரும் தமிழ்நாட்டுத் தலைவர்களைத்

தொடர்புகொண்டோம். நான் பச்சையப்பன் கல்லூரியில் என்னுடன் படித்த துரைமுருகனிடம் பேசினேன். அவர் கலைஞரிடம் சொல்லி எங்களுக்கு ஆதரவாக ஒரு நாள் கடையடைப்பு போராட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் சொல்லித்தான், வற்புறுத்தித்தான் இங்கே ஆர்ப் பாட்டங்கள் நடைபெற்றன.

**ஆனாலும் 1980களில் இருந்த தீவிரம் அண்மைக் காலங்களில் காணப்படவில்லையே? வன்னியில் மோதல் கள் முற்றியபோது, இங்கே விடுதலைப்புலி ஆதரவா ளர்கள் ஆர்ப்பாட்டங்களைத் தீவிரப்படுத்தியபோது, பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரிய வில்லையே? இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான நிலை மக்கள் மத்தியில் இருந்தாலும்கூட, தனி ஈழம் அமைத்துக்கொடுப்பேன் என முழங்கிய ஜெயலலிதா தலைமையிலான அணி குறைந்த இடங்களிலேயே வெற்றி பெற்றது. உறுதியான நிலை எடுக்கத் தவறிய தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களில் வென்றது. இது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

இதில் நான் சொல்வதற்கு எதுவும் இல்லை. தமிழக மக்கள் தங்களுக்கு எது சரி என்று படுகி றதோ அதைச் செய்கிறார்கள். அதில் எனக்கு வருத் தம் எதுவும் இல்லை. எங்கள் போராட்டம் தோல்வி யுற்றதற்காகவும் நான் அதிகம் விசனப்படவில்லை. ஏன் தெரியுமா? எந்த ஒரு போராட்டமானாலும் அது வெல்லவும் வாய்ப்பிருக்கிறது, தோற்கவும் வாய்ப்பிருக்கிறது. போராடினால் நாங்கள் தப்பிப்பதற்கு வழியிருக்கிறதல்லவா, எனவேதான் அந்த நீண்ட போராட்டம். தோற்றுவிட்டோம் அவ்வளவுதான். ஆனால் நாங்கள் போராடாமல் இருந்திருக்கவே முடியாது. சிங்களவர்களுடன் மோதினாலும் அழிவு, மோதாவிட்டாலும் அழிவு என்ற நிலையில், மோதவாவது மோதுவோமே...

அதுதான் நடந்திருக்கிறது. இதிலே எவரையும் குற்றஞ்சொல்லமுடியாது.

இன்னுஞ்சொல்லப்போனால் நேரு எந்த அளவுக்கு எங்கள் நிலை பற்றி உணர்ந்திருந்தாரோ அந்த அளவுக்கு நரசிம்மராவ் உணர்ந்திருந்தார். எங்கள் நாட்டிற்கு இரண்டு மூன்று முறை வந்திருக்கிறார். சிங்கள மேலாதிக்கம் பற்றி நன்றாகவே அவர் தெரிந்து வைத்திருந்தார். அப்படிப்பட்ட சூழலில், எங்கள் தோல்விக்கு நாங்கள் யாரையும் காரணமாகக் காட்டமுடியாது. தீதும் நன்றும் பிறர் தர வாரா. உங்கள் மனசாட்சி சொல்லும் நீங்கள் செய்தது தவறா, சரியா என்று. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எங்கள் போராட்ட உத்திகளை செழுமைப்படுத்திக் கொள்ளவேண்டும், அவ்வளவுதான். அடக்குமுறைக்கு உட்பட்டு நாங்கள் வாழத் தயாராய் இல்லை. போராடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. அதனால் உத்திகள் மாற்றப்படலாம். ஏதோ ஒரு வகையில் நீதிக்கான எங்கள் போராட்டம் தொடரும். அவ்வுத்திகளைக்கூட எங்கள் எதிரிகள்தான், சிங்கள அரசுதான் தீர்மானிக்கமுடியும். அவர்கள் நடந்துகொள்வதைப் பொறுத்தே எங்களது போராட்ட வடிவம், திசை போன்றவையெல்லாம் அமையும்.

**எண்பதுகளில் இருந்த நல்லெண்ணமெல்லாம் வறண்டுபோகக் காரணம் ராஜீவ் கொலைதான். அக்கசப்புணர்வு மக்கள் மத்தியில் தணிந்திருக்கும் நிலையில் நெருக்கடியான கால கட்டத்தில்கூட தமிழகம் கொதித்தெழவில்லையென்றால் விடுதலைப் புலிகளின் அணுகுமுறைதான் அதற்குக் காரணம் என்றால் அது சரியாக இருக்குமா?**

சொல்லமுடியாது என்றே நினைக்கிறேன். காரணம். விடுதலைப் புலிகள் 30 ஆண்டு காலம்

களத்தில் நின்றார்கள் என்றால், அது அவர்களின் ஆளுமையினாலேதான். அந்த ஆளுமையில் குறைபாடுகள் இருந்திருக்கலாம், நான் மறுக்கவில்லை. குறைபாடுகள் இல்லா மனிதர்கள் உலகில் உண்டா என்று சொல்லுங்கள். விடுதலைப் புலிகள் பல தவறுகள் செய்திருக்கிறார்கள். ராஜீவை அவர்கள் கொலை செய்திருந்தால் அது மிகப்பெரிய தவறு. முஸ்லிம்களை வளைகுடாவிலிருந்து விரட்டியது கொடுமை. இப்படியெல்லாம் நடந்ததற்குக் காரணம், அவர்களது முதிர்ச்சியின்மை, அனுபவமின்மை. ஆனால் அவர்களது அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் குறைத்து மதிப்பிடலாகாது.

இன்னொன்றையும் கவனியுங்கள்; 30 ஆண்டுகள் நாங்கள் அறவழியில் போராடினோம். தொடர்ந்து எங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டபோதும் செல்வா இருந்தவரை நாங்கள் அவ்வழியிலிருந்து பிறழவில்லை. எப்போது தமிழகமும் இந்தியாவும் எங்கள் பிரச்சினையில் தடம்பதிக்கத் தொடங்கினவோ அப்போதுதான் நாங்கள் திசை மாறினோம். தவிரவும், 1981 காலகட்டத்தில் அமிர்தலிங்கம் இந்திராவை சந்தித்துவந்தபோதுகூட, உலக நாடுகளின் ஆதரவைக் கோரியபோதும், எங்கள் போராட்டத்தை நாங்களே வழிநடத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். ஆனால் அந்தத் தெளிவு போராளிகளிடம் இல்லை. இந்திய உளவுத்துறையின் கைப்பாவையாக மாறிவிட்டார்கள். இந்திய அரசின் நோக்கம் அக்காலகட்டத்தில் என்னவாக இருந்தது என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் போராளிகளுக்கு பயிற்சிகொடுப்பதற்காக பணிக்கப்பட்ட அதிகாரிகள், எங்கள் உரிமைகள், விடுதலை என்றில்லாமல் அவர்கள் எது இந்தியாவிற்கு நன்மை பயக்கும் எனக் கருதினரோ அந்த வழியில் சென்றனர், அதற்கு போராளிகளைப் பயன்படுத்தினர்.

அந்த செயல்திட்டத்திற்கு உட்பட மறுத்த முதல் போராளி உமாமகேஸ்வரன்தான். இவர்களுடன் இருந்தால் சரி வராது. அவர்கள் சொல்வதைக் கேட்டு ஆடவேண்டி வரும். அது நம் மக்களுக்கு எப்படிப் பயன் தரும் என்று சொல்லி நாடு திரும்பிவிட்டார். பின்னர் பிரபாகரனும் அதைத்தான் செய்தார். ஆனால் ராஜீவ் கொலை உட்பட என்னென்னவோ விரும்பத்தகாத விஷயங்களெல்லாம் நடந்துவிட்டன.

**விடுதலைப் புலிகளைக் கடுமையாக விமர்சிக்கின்றோருக்குக்கூட மத்திய அரசின் அணுகுமுறை ஏற்புடையதாக இருக்கவில்லை. மஹிந்த அரசின்மீது ஏதோ சொல்லப்படாத காரணங்களினால் அது அழுத்தம் கொடுக்கத் தவறியிருக்கிறது. அப்படிச் செய்தது தமிழர்களின் உணர்வுகளை அவமதித்திருப்பதாக பலர் கருதுகின்றனர். அப்படிப்பட்ட பின்னணியில் மீண்டும் தமிழ்த் தேசியம் தமிழ்நாட்டில் வலுப்பெறும், அது உங்கள் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் என்று நினைக்கிறீர்களா?**

தமிழ்த் தேசியம் பேசியவர்கள்தான் "இன்று உங்கள் கண்ணீரைத் துடைக்கலாம், ஆனால் கண்ணீர் வருவதைத் தடுக்கமுடியாது" என்கின்றனர். அவர்களுக்கு மக்கள் மனநிலை நன்கு தெரிந்திருக்கிறது. தேர்தலில் போட்டியிட்டு, அதிக வாக்கு பெற்று வெற்றியடைகிறார்கள். அப்படிப்பட்டவர்களின் கணிப்பு தவறாக இருக்கப் போகிறதா?. அதற்குமேல் நான் அதைப் பற்றி என்ன சொல்ல?

**முதலில் மருந்து கடத்தியதாக உங்களை சிறையில் அடைத்தார்கள். பிறகு உங்கள் கடவுச் சீட்டை பறித்துக்கொண்டார்கள். இன்னமும் திருப்பியளிக்கப்படவில்லை. இதெல்லாம் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கவில்லையா?**

நிச்சயமாக இல்லை. ஆறு வாரங்கள்தான் சிறையிலிருந்தேன். காசி ஆனந்தன் 6 வருடங்கள் இருந்திருக்கிறார். பண்டித நேரு 22 வருடங்கள். அதை நினைத்துப் பார்க்கவேண்டாமா? கடவுச் சீட்டு இல்லாதது சில சிக்கல்களை உருவாக்கியிருக்கிறது. அதனால் என்ன? உள்நாட்டில் நான் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் சென்று வரலாமே.

**இலங்கைத் தமிழர்களுக்கு உங்கள் ஆலோசனை என்னவாக இருக்கும்?**

Never give up. தளர்வறியா மனம் வேண்டும். எக்கட்டத்திலும் எக்காரணத்தாலும் சோர்வடையக்கூடாது. அரசியல் தீர்வு எப்படிவேண்டுமானாலும் அமையட்டும், தனி ஈழம், இந்தியாவுடன் அல்லது சிங்களவனுடன் இணைந்து வாழ்தல் எப்படி இருந்தாலும், நமது அடையாளங்களை நாம் மறக்கக்கூடாது. அவை பாதுகாக்கப்பட வேண்டும். விலை மதிக்க முடியாத செல்வங்களை, பண்பாட்டு விழுமியங்களை நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்றிருக்கின்றனர். அதை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்லவேண்டும். அந்த நோக்கத்தையொட்டியே நம் பயணம் அமையவேண்டும்.

## பின்னிணைப்பு

### மறவன்புலவு சச்சிதானந்தம் இணைய தளம் ஒன்றினில் எழுதிய கட்டுரை

அறம் தோற்றதாக மனித வரலாற்றில் எவரும் எழுதவில்லை.

சமரில் தோற்றால் போரில் தோற்றதாகாது. இழப்புகளால் தமிழர் துவளலாம், ஆனால் அவர்களின் மனஉறுதி குலையாது. கடந்த சில வாரங்களாகச் சமர்களில் ஏற்படும் பின்னடைவுகளால் முழுப் போரே தோற்றதாகக் கருதற்க. கடந்த பல ஆண்டுகளாக இத்தகைய பின்னடைவுகளைப் பலமுறை தமிழர் எதிர்கொண்டு வந்துள்ளனர். அப் பின்னடைவுகளால் தமிழரின் போராட்டக் குணம் தளரவில்லை, தொய்யவில்லை. மாறாக வீறுகொண்டு எழுந்துள்ளது.

1948ல் 10 இலட்சம் தமிழரின் குடியுரிமையைப் பறித்த பொழுதே தமிழர் அடங்கி ஒடுங்கியிருக்க வேண்டும். வீறுகொண்ட போராட்டக் குணத்தின் விதையாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அன்றே உருவானது. 1952இல் தமிழர் நிலப்பறிப்புக் கொள்கை, 1956இல் தனிச் சிங்கள ஆட்சி மொழிக் கொள்கை, 1958இல் இனக் கலவரத்தில் உயிரிழந்த, சொத்திழந்த ஆயிரக்கணக்கான தமிழர் நிலை, 1961இல் அறவழியில் போராடிய தமிழரைப் படை கொண்டு குலைத்த நிலை, 1964ல் ஸ்ரீமாவோ–சாஸ்திரி உடன்பாடு, 1971ல் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவருக்கு அநீதி, 1972இல் புத்த சிங்களக் குடியரசு அமைதல், 1974இன் தமிழாராய்ச்சி

மாநாட்டுப் படுகொலை, 1977இல் இனக் கலவரத்தில் பல்லாயிரக்கண்க்கான தமிழர் உயிரிழப்பு, சொத் திழப்பு, 1978இல் தமிழர் மேலாட்சி அரசியலமைப்பு, 1981இல் யாழ்ப்பாண நூலக எரிப்பு, 1983இல் உலகம் சிங்களவரைப் பழித்த கொடுமையான இனக் கலவரம் இவை யாவும் தமிழரின் போராட்ட மனோநிலையை, உள்ள உறுதியைக் கலைக்கவில்லை. 1948இல் தொடங்கிய அறவழிப் போராட்டத்தைத் தமிழர் இடைவிடாது நடத்தி வந்தனர்.

30 ஆண்டுகள் அறவழியில் போராடி, சிங்களப் பேரினவாதத்தை எதிர்ப்பதில் சலிப்போ, களைப்போ, கூர்மைக் குறைவோ கொள்ளாத தமிழரின் உள்ள உறுதியைப் படைக் கருவிகள் கொண்டு இலங்கை அரசு வன்முறையால் அடக்க முயன்றபொழுது, இன ஒழிப்பைக் கூர்மையாக்கிய பொழுது தமிழ் இளைஞர் ஆயுதமேந்தினர். ஐந்தாறு நாட்டுத் துப்பாக்கிகளால் சிங்களப் படையை எதிர்கொள்ள முடியுமா என அக்காலத் தைய மிதவாதத் தமிழரே ஆயுதப் போராளி களைக் கிண்டல் செய்தனர்.

1971 –1984வரை கரந்தடிப் படையாகத் தமிழர் நடத்திய ஆயுதச் சமர்களில் தமிழருக்கு வந்த பின்னடைவுகள் ஏராளம். முன்னேற்றங்கள் சிற்சிலவே! ஆனாலும் பின்னடைவுகள் போர்க் குணத்தையோ, இலக்கு மயக்கத்தையோ தமிழருக்குத் தரவில்லை.

1948இல் விதைத்த வீறு கொண்ட போராட்ட விதை அறம் சார்ந்தது. நீதி சார்ந்தது. இழப்பு களால் சாயாதது. சுடச் சுடரும் பொன்போல ஒளிர்வது. தமிழரின் போராட்டம் ஓய வேண்டு மெனில் தமிழர் மீது இன ஒழிப்பு இழப்புகளைத் திணிக்காமல் அறத்தையும் அன்பையும் பேணும் தலைமையைச் சிங்களம் உருவாக்குவதாக.

# சிவாஜிலிங்கம்

"ஜின்னா ப்ராணியில் நீங்களும் தனிநாடு பெற்றிருந்தால் எங்கள் மக்கள் இப்படியானதொரு அவலத்தைச் சந்திக்க வேண்டி வந்திருக்காது."

**சிவாஜிலிங்கம்:** தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். 2001ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக் கப்படும்வரை சிவாஜிலிங்கம், புலிகளின் எதிர்ப் பாளராகத்தான் பார்க்கப்பட்டார். ஆனால், அக் கூட்டமைப்பின் உறுப்பினர்களிலேயே தீவிர விடுதலைப் புலி ஆதரவாளராக கருதப்படுபவர்.

**கேள்வி. தொடர்ந்து விடுதலைப் புலிகளால் பாதிக்கப் பட்டதாகக் கூறுகிறீர்கள். அப்படி இருக்கும்போது நீங்கள் ஏன் அவர்களுடன் கைகோர்க்க வேண்டும்? சகிப்புத்தன்மையற்ற ஓர் இயக்கம் என்று பெயர் எடுத்த புலிகளுடனும் அவர்களது ஆதரவாளர்களுட னும் எப்படி உங்களால் சகஜமாகப் பழகமுடிகிறது?**

*பதில். எந்த பிரபாகரனை 2 பெரிய துப்பாக்கிகள், மூன்று சிறிய துப்பாக்கிகளுடன் ரகசியமாகப் பட கில் ஏற்றித் தமிழகத்திற்கு 1981ல் அனுப்பிவைத்தோமோ, அதே பிரபாகரனின் ஆட்கள்தான் என்னைப் பல முறை கொல்ல முயற்சித்தனர். எங்கள் தலைவர் ஸ்ரீ சபா ரத்னத்தையும் பின்னர் நான் என்றைக் கும் மதிக்கக்கூடிய அமிர்தலிங்கத்தையும் கொன்ற னர். இன்னமும் பல்வேறு குற்றங்களைப் புரிந்த னர். ஆனால் பிரச்சினை அதுவல்ல. தமிழ் மக்களின் நலன் முக்கியம். அனைத்து உரிமைகளையும் பெற்று, தலைநிமிர்ந்து எம் மக்கள் எங்கள் நாட்டில் நட மாட வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் நான் செய்தேன், இனியும் செய்வேன்.*

*அவர்களை மீறிப் போட்டியிட்டுதான் 1998ல் நான் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலை வரானேன். ஆனால் பின்னர் அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து, பல்வேறு தரப்பாருடனும்*

இணைந்து செயல்பட்டால்தான் ஈழத்தைப் பெற முடியும் என்று புரிந்துகொண்டு, தங்கள் செயல்பாடு களை மாற்றிக்கொண்டனர். அதற்குப் பின்னர் தான் நாங்கள் தமிழர் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினோம். பிறகு, 2004 தேர்தல்களில் விடு தலைப் புலிகளே தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டு, தமிழர் பகுதி களில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கை அங்கீ கரித்த இடைக்கால அரசமைப்பினை அமல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி தேர்தலில் போட்டி யிடும் அளவுக்கு நாங்கள் சென்றோம். இதெல் லாம் அவர்களின் துப்பாக்கிகளுக்கு பயந்தல்ல. அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்துவிட்டிருந் தார்கள். நாங்களும் அவர்களால்தான் இன விடு தலைப் போராட்டத்தினை முன் எடுத்துச் செல்ல முடியும் என்று உணர்ந்தோம்.

எங்களது போராட்டம் தற்காலிகமாக பெரும் பின்னடைவை சந்தித்திருக்கலாம். ஆனாலும் இறுதி வெற்றி எங்களுக்குத்தான். தனி ஈழத்திற்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம். எங்களது கோரிக்கைகளின் நியாயங்களை உலக நாடுகள் நன்கு உணர்ந்திருக்கின்றன. இன்றில்லாவிட்டால் இன்னொரு நாள் எங்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணுமாறு இலங்கை அரசை உலகம் வற்புறுத்தும். அத்தகையதொரு தீர்வு கிடைக்கவும் செய்யும்.

**தமிழகத்தில் தமிழின உணர்வு எந்த அளவுக்கு இருக் கிறது, இனி அது எத்திசையில் செல்லும் என்பதைக் குறித்தே பல்வேறு தலைவர்கள், ஆய்வாளர்களின் கருத்தை நாங்கள் கேட்டு வருகிறோம். அந்த அளவில் விடுதலைப் புலிகளுக்கு போரில் ஏற்பட்டிருக்கும் தோல்வி, அவர்களை தீவிரமாக ஆதரித்த கட்சி களுக்கு நாடாளுமன்றத் தேர்தல்களில் கிடைத்த தோல்வி போன்றவையெல்லாம் தமிழின எழுச்சிக்கு**

**ஏற்பட்ட பின்னடைவாக பார்க்கிறீர்களா?**

இங்கே ஏற்பட்ட தமிழன எழுச்சி அங்கே எங்களைப் பாதித்திருக்கிறது. அங்கு நடந்த போராட்டம் இங்கே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. 1949ல் இங்கே தி.மு.கவை அண்ணா உருவாக்கிய அதே காலகட்டத்தில்தான் அங்கே தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். வடமொழியைத் தவிர்த்து தூய தமிழ்ச் சொற்களை பயன்படுத்துகின்ற தி.மு.கவின் பாணி எங்களை மிகவும் ஈர்த்தது. இங்கே நடந்த இந்தி எதிர்ப்புப் போர் எங்களை உத்வேகப்படுத்தியது. 'தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து செல்லடா' என்று நாங்களும் உங்களுடன் சேர்ந்து சொன்னோம். ஜின்னா பாணியில் நீங்களும் தனி நாடு பெற்றிருந்தால் எங்கள் மக்கள் இப்படியானதொரு கொடுமையான அவலத்தை சந்திக்கவேண்டி வந்திருக்காது.

எங்கள் இல்லங்களில் இந்தியத் தலைவர்களின் படங்களும் இருந்தன. எங்கள் வல்வெட்டித் துறைக்கே மகாத்மா காந்தி வந்திருக்கிறார். ஜவஹர்லால் நேரு எங்கள் நலனில் அக்கறை காட்டியிருக்கிறார். அதேபோல எங்களுடைய போராட்டத்திற்கு இங்கே நிறையவே அனுதாபமும் ஆதரவும் இருந்தது. ராஜீவ் கொலைக்குப் பிறகு அதிலே சற்று பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எம்மக்கள் மீதான தாக்குதல் அதிகரித்த போது மீண்டும் ஆதரவு பெருகியது. தமிழ்நாட்டுத் தமிழர்களின் எழுச்சிக்குப் பிறகே மற்ற நாடுகளில் வாழும் எம்மக்கள் தீவிர ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். அந்த அளவுக்கு நமது தொப்புள் கொடி உறவு வலிமையானதாகவே இருக்கிறது.

நாடாளுமன்ற முடிவுகளைப் பற்றி அதிகமாக விசனப்படவேண்டிய அவசியமில்லை. எங்களுக்கு எல்லா கட்சிகளும்தான் ஆதரவு தெரிவித்தார்கள். எங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில்

தேர்தலையே புறக்கணிக்க வேண்டும் என்று கோரிய நடிகர் விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் பெற்ற வாக்குகளையும், தனி ஈழம் அமைக்கவேண்டும் என்று சூளுரைத்த ஜெய லலிதாவின் அஇஅதிமுக பெற்ற வாக்குகளையும் கூட்டினாலே பல இடங்களிலே திமுக–காங்கிரஸ் அணி தோல்வியுற்றிருக்கும். தவிரவும் தேர்தல் வெற்றி – தோல்விகளுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன அல்லவா?

இங்கு நடந்த ஆதிக்கப்போட்டியில் எங்கள் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஆனாலும் மக்கள் ஆதரவு எங்களுக்கிருக்கிறது. எதிர்காலத்தில் தமிழ்நாட்டுத் தமிழர்களின் உணர்வுகளைப் இந்திய அரசு புறக்கணிக்குமானால் அது இந்திய ஒற்றுமையை பாதிக்கும் அளவுக்குச் செல்லும்.

**ஒரு கட்டத்தில் போராளிக் குழுக்களுக்கே பயிற்சி கொடுத்த இந்தியா இன்று இப்படிப் பாராமுகமாக இருக்கிறது. சொல்லப்போனால் இலங்கையையே தூண்டுமளவுக்கு நடந்துகொள்கிறது. இப்படி ஒரு சூழலிலும் காங்கிரஸ் அணிக்கு மக்கள் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அது உங்களுக்கு அதிர்ச்சி யளிக்கவில்லையா, ஏன் இப்படி ஆனது என்று நீங்கள் சிந்திக்கவில்லையா?**

*2006இல் மாவிலாறு சம்பவங்களுக்குப் பிறகு புலிகள் பின்வாங்கத் தொடங்கினர். அவர்களது தோல்வி தொடர்ந்துகொண்டே போனது. நாங்கள் எங்களால் முடிந்தவரை போர் நிறுத்தத்தை வற் புறுத்தினோம். இந்திய அரசிடம் முறையிட்டோம். எதுவும் பலிக்கவில்லை. கடந்த அக்டோபரில், இறுதிக் கட்டம் நெருங்கிய வேளையில் இனி இந்தியாவால் ஆகப்போவது எதுவுமில்லை என்று நாங்கள் உணர்ந் தோம். அதன் பிறகே மற்ற நாடுகளின் உதவியை நாடினோம். அப்படியும் பேரழிவினை எங்களால் தடுக்கமுடியவில்லை. நீங்கள் சொல்லுவது சரி*

தான், இப்படியொரு ஒரு துயர முடிவிற்கு விடுதலைப் புலிகளின் செயல்பாடும் ஒரு காரணம் தான். சகோதரப் படுகொலைகள், ராஜீவ் கொலை போன்ற பல தவறுகளை அவர்கள் செய்ததன் விளைவாகத்தான் எங்கள் முயற்சிகள் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை. இந்திய ஆதரவு இருந்ததால்தான் மஹிந்தா அரசு நினைத்ததை செய்ய முடிந்தது.

விடுதலைப் புலிகளிடம் வீரம் இருந்த அளவுக்கு விவேகம் இல்லை. ஆனால் அவர்கள் தங்கள் தவறுகளை உணரத் தொடங்கி அதற்கேற்றாற்போல் தங்களை மாற்றிக்கொண்டு வந்த நேரத்தில் இப்படி ஆகிவிட்டது. நான் பிரபாகரனை அக்கால கட்டங்களில் சந்தித்திருக்கிறேன். அவ்வேறுபாட்டை என்னால் உணரமுடிந்தது. ஆனால், ஆங்கிலத்தில் சொல்லுவது போல் அதெல்லாம் too little, too lateதான். என்ன செய்ய?

அதே நேரம் அவர்களின் அளப்பரிய தியாகத்திற்கு நாம் உரிய மரியாதை செலுத்தியே ஆகவேண்டும். 40,000 இளைஞர்கள் ஈழப்போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். அவர்களுடைய வீரத்தின் காரணமாகவும் அர்ப்பணிப்பின் காரணமாகவும்தான் தமிழர்களின் இதயங்களில் அப்படி ஒரு தன்னிகரில்லா இடத்தை அவர்களால் பெறமுடிந்தது. 26/11க்குப் பின்னர் எல்லா விதமான ஆயுதப் போராட்டங்களும் பயங்கரவாதமாகப் பார்க்கப்பட்டது எங்கள் துரதிர்ஷ்டம்.

**விடுதலைப் புலிகளின் தவறுகள் என்று நீங்கள் சொல்லும் பட்டியலில் முஸ்லிம்கள் வளைகுடாவிலிருந்து விரட்டப்பட்டது; மற்றும் காத்தான்குடி உள்ளிட்ட கிழக்குப் பகுதி படுகொலைகள், முற்றிலுமாக இஸ்லாமியர்கள் அன்னியபடுத்தப்பட்டது போன்றவை இடம் பெறவில்லையே. நீங்களே பாரதிய ஜனதா வேட்பாளருக்காக பிரச்சாரமே செய்திருக்**

**கிறீர்கள். ஈழ விடுதலைப் போராட்டத்தில் யாழ்ப்பாண உயர்குடி வேளாளர்களின் ஆதிக்கம் அதிகமிருந் ததையே இது சுட்டிக்காட்டுகிறது எனக் கொள்ளலாமா?**

இல்லை, இல்லை. இதெல்லாம் மிகத்தவறான புரிதல். எங்கள் போராட்டத்தில் எந்த குறிப்பிட்ட ஜாதி ஆதிக்கமும் இல்லை. தொடக்க காலங்களில் வேளாளர்கள் தவறுகள் செய்திருக்கலாம். ஆனால் காலப்போக்கில் எல்லாம் மாறிவிட்டது. போராட்டக் களத்திலோ யுக்திகளிலோ அவர்களுக்கென்று தனிப்பங்கு எதுவும் இல்லை.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை நீங்கள் கூறியது போன்று பல்வேறு தவறுகள் நிகழ்ந்துவிட்டன. அவற்றிற்கெல்லாம் விடுதலைப் புலிகள் பொறுப் பேற்கத்தான் வேண்டும். அவர்களே ஒப்புக்கொண் டார்கள். வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் வாருங்கள் என்று அழைக்கவும் செய்தார்கள். சில குடும்பங்கள் திரும்பி வரவும் செய்தன. புத்தளத் தில் இருந்தவர்கள் எல்லோரும் திரும்பி வராமல் இருப்பதற்கு இலங்கை அரசும் வேறு சில சக்தி களுமே காரணம். பிரித்தாளும் சூழ்ச்சியின் இன் னொரு பரிமாணம் இது.

இன்னொன்றையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்; ஒற்றுமையாக இருந்த எங்களைப் பிரித்தது மொசாதின் சதிதான். இருதரப்பினருமே அதற்குப் பலியானோம். அதுவரை எங்கள் போராட்டங் களில் முஸ்லிம் இளைஞர்கள் பங்கேற்றிருக்கிறார் கள், தமிழர் கட்சிகளின் எம்.பிக்களாக முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், இப்போதுகூட எங்களில் ஒருவர் முஸ்லிம்தான். தனி ஈழத்திலும் முஸ்லிம்களுக்கென சுயாட்சிபடைத்த அலகொன்று வழங்கப்படவேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு...

**நீங்கள் பாரதீய ஜனதாவிற்கு ஆதரவு தெரிவித்தது பற்றி?**

திராவிடக் கட்சிகளின் பார்ப்பனீய எதிர்ப்பை எங்கள் பிரச்சினையில் போட்டு குழப்பிக்கொள்ளக் கூடாது. எங்கள் நாட்டு பிராமணர்கள் அப்பாவிகள். மிக நல்லவர்கள். எங்களுடன் இணைந்தவர்கள். நாங்கள் அவர்களைப் போற்றுகிறோம். எங்கள் போராட்டத்தால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்ற அளவில் எங்களுக்கு வருத்தமே. இந்தியாவைப் பொறுத்தவரை பாரதீய ஜனதா எங்களுக்கு ஆதரவாகவே இருந்து வந்திருக்கிறது. மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி செய்தபோது இலங்கைக்கு ராணுவ உதவி அளிப்பதில்லை என்று கொள்கை முடிவே எடுத்தனர். ஆண்டன் பாலசிங்கம் சிறுநீரக சிகிச்சைக்காக இங்கிலாந்துக்குச் சென்றபோது அவரது கப்பலை இந்தியப் படைகள் சுற்றிவளைத்தன. அய்யா நெடுமாறனின் தலையீட்டின் விளைவாக அக்கப்பலை அதன் பாதையில்போக அனுமதிக்குமாறு அன்றைய பிரதமர் வாஜ்பாயி உத்தரவிட்டார். இன்றும் பாஜக மத்தியில் ஆட்சிக்கு வந்தால் எங்களுக்கு உதவிசெய்யும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த அளவிலேயே என் நன்றியைத் தெரிவித்தேன். இதிலே முஸ்லிம் எதிர்ப்பு நிலைப்பாடு எதுவும் இல்லை.

**எதிர்காலம்?**

எங்கள் போராட்டம் தொடரும்.

# வ. கீதா

"தமிழின அடையாளத்தில்
ஒரு முற்போக்குக் கூறு
இருக்கிறது. அது
வளர்த்தெடுக்கப்படலாம்
என்று நினைக்கிறேன்.
வரலாற்றுரீதியாகவே தமிழ்த்
தேசிய அடையாளத்திற்கு ஒரு
முற்போக்குக் கூறு உள்ளதாக
நினைக்கிறேன்."

**வ. கீதா:** *எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர். பெண்ணியவாதி. பெரியார்: சுயமரியாதை, சமதர்மம் நூலின் இணையாசிரியர்.*

**கேள்வி: அடையாள அரசியல் என்பது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அவசியம்தானா? அப்படியானால் எந்த அளவு?**

**பதில்:** *எந்த ஒரு சமூகத்தையும் புரிந்துகொள்ள அதன் அதிகாரக் கட்டமைப்பையும் நாம் புரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. எல்லா அதிகாரமுமே எதேச்சாதிகாரம்தான். நியாயமான அதிகாரம் என்ற ஒன்று இருக்கவே முடியாது. அவ்வாறு அதிகாரம் செலுத்துபவர்கள் தங்களை நியாயப்படுத்திக்கொள்ள பல்வேறு வாதங்களை முன்வைக்கிறார்கள். அந்த நியாயங்கள் ஜாதி சார்ந்ததாக, இனம் சார்ந்ததாக, பகுதி சார்ந்ததாக இருக்கக்கூடும். ஆளப்படுவோர் அந்த நியாயங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, அந்த எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுக்கும்போது, அவர்கள் ஏதோ ஓர் அடையாளத்தின் கீழ் அணிதிரள்கிறார்கள்.*

*அதிகாரத்தை செலுத்துவதற்கும் சரி, அதை எதிர்ப்பதற்கும் சரி, அடையாள அரசியல் தேவைப் படுகிறது. மார்க்சியம் வர்க்கவுணர்வை முன்னிலைப் படுத்தினாலும், அந்த உணர்வு இயல்பில் இருக்கும்*

ஒன்றல்ல என்பதில் தெளிவாக இருந்தது. அதாவது அது வளர்த்தெடுக்கப்பட வேண்டியது. கம்யூனிஸ்ட் கட்சியின் பணிகளில் அது முக்கியமனது என்பது மார்க்சியத்தின் முக்கியமான படிப்பினை. ஹங்கேரிய மார்க்சியர் ஜார்ஜ் லூக்காக்ஸ் இதை மிக சிறப்பாக விளக்குவார். பாட்டாளி வர்க்கம் தன்னளவில் வர்க்கமாக இருந்தாலும் அது தன்னுணர்வைப் பெறும் போதுதான் அரசியல் வர்க்கமாக உருவெடுக்கிறது என்பது அவரது வாதம்.

வர்க்கவுணர்வு வளர்த்தெடுக்கப்படும்போது அது பாட்டாளிகளின், அதாவது ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தின், உணர்வாக மட்டும் இல்லாமல் பொது நீதி, நலம், அறம் பேணுவதாக அமைகிறது. இத்தாலிய மார்க்சியர் கிராம்சி இது குறித்துப் பேசும்போது பாட்டாளிவர்க்கம், தான் முன்வைக்கும் அரசியலின் பண்பாட்டு உள்ளீட்டையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், குறுகலான, மேலோட்டமான உணர்ச்சிகரமான பொருளாதாரவாதமாகவோ, தேசிய நலனாகவோ மட்டும் அது இல்லாமல், பரந்துபட்ட மக்களின் ஆசைகளை, கனவுகளை, உரிமைகளை, நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய–மக்கள் சித்தாந்தமாக இருக்க வேண்டும் என்பார்.

**வர்க்கம் என்பதும் ஓர் அடையாளம்தானே?**

நான் அப்படிப் பார்க்கவில்லை. வர்க்கம் என்பது ஸ்தூலமான ஒன்று. அது கற்பிக்கப்பட்டது மட்டுமல்ல. மனதிலே இருப்பது மட்டுமல்ல. ஆண்பால், பெண்பால் போன்று அது அடையாளம் மட்டுமல்ல. சில கட்டங்களில் அது அடையாளமாகவும் பயன் படுத்தப்படலாம். ஜாதி, மொழி, இனம் போன்றவை ஸ்தூலமனவையாக உணரப்பட்டாலும் அவை மரபு, பண்பாடு, சாத்திரம், சம்பிரதாயம் ஆகியவற்றினூடாக

தொடர்ந்து வளர்த்தெடுக்கப்படுபவை. வர்க்கம் இவ்வாறானதல்ல – அது வாழ்வியலை, ஏன், நமது இருத்தலுக்கான, பொருளியல் வடிவத்தை வழங்குகிறது.

**அதிகாரம் செலுத்துவதற்கும் எதிர்ப்பதற்கும் - இரண்டிற்குமே அடையாளம் தேவைப்படுகிறது என்கிறீர்கள். இந்தப் பின்னணியில் இந்தியா, தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்பது சரியா?**

ஒரு கால கட்டத்தில், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், அடுத்த நூற்றாண்டின் துவக்கத்தில், இந்தியா என்ற நாடு உருவானதைப் புரிந்துகொள்ள இந்த சூத்திரம் ஓரளவு பயன்படலாம்.. இந்த நாடு யாருடையது? யாருடைய நலனை மேம்படுத்த முயல்கிறது போன்றவை சரியான கேள்விகளே.

இந்தியா என்பது அங்கு வாழும் மக்களின் விருப்பங்களை முழுமையாகப் பிரதிபலிக்கும் ஒரு கட்டமைப்பு அல்ல. அதிகாரத்தை செலுத்தமுயல்வோர் தங்கள் முயற்சியில் வெற்றிபெற்று, இத்தேசத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அவ்வாறு இந்தியா உருவாக்கப்பட்ட காலத்தில் அந்த நிகழ்ச்சிப் போக்கையும், அது சார்ந்திருந்த வர்க்க, ஜாதி நலன்களையும் பெரியார் எதிர்த்தார் – அந்த எதிர்ப்புக்கு இன்றும் ஒரு நியாயம் இருக்கிறது.

அதே நேரத்தில் அன்றும் சரி, இன்றும் சரி, பலர் இந்தியா என்ற கட்டமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளதையும் பார்க்கிறோம். இந்தியா என்பது வெறும் அடக்குமுறையால் மட்டுமே உருவானதல்ல. அத்தகைய அதிகாரத்திற்கு பெருந்திரளான மக்கள் தங்களை உட்படுத்திக்கொண்டிருக்கின்றனர், விடுதலைப் போராட்ட காலத்தில், காங்கிரசின் கீழ் அணி திரண்டதைப்போல். வரலாற்றுரீதியாக இப்பிரச்சினையை அணுகும்போது, இந்தியா என்று நாம் குறிக்கும் பரப்பில் வாழ்வோருக்கிடையே

உள்ள உறவுகளைக் குறித்தும் வேறு விதமாக புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சிறை கொள்ளப்பட்ட தேசிய இனம் எனும்போது, தற்கால நிலைமைகளை கருத்தில் கொண்டு பேசுகிறோம், ஆனால் அதுவே நமது கடந்த கால வாழ்வைப் பற்றிய வர்ணனையாக இருக்க முடியாது – ஏனெனில் அது ஒரு அரசியல் நிலைப்பாடு.

வரலாற்றுரீதியாகப் பார்க்கும்போது இந்திய துணைக் கண்டத்தில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் சென்று வந்திருக்கிறார்கள். பல்வேறு பிராந்தியங்களில் வாழ்ந்த மக்களுக்கிடையே கொடுக்கல் – வாங்கல் இருந்திருக்கிறது. இத்தகைய சூழலில் இந்த மாநில மக்களும் தேசிய இனமும் நாங்கள் மற்ற இனங்களின் தாக்கமெதுவும் இல்லாமல், எங்கள் இனத் தூய்மையைக் காப்பாற்றி வந்திருக்கிறோம் என்று கூறிவிட முடியாது, ஆதிவாசிகள் உட்பட.

**அகில இந்தியாவிற்கும் இது பொருந்துமா?**

பூகோள அமைப்பையும் ஒட்டித்தானே போக்கு வரத்து நிகழ்ந்திருக்கும். தமிழகத்தைப் பொறுத்தவரை இலங்கையோடும் தக்காணப் பகுதியின் வெவ்வேறு பிராந்தியங்களுக்கிடையேயும் மிக நெருக்கமானதொரு உறவு இருந்ததை நம்மால் காணமுடிகிறது. தெலுங்குச் சோழர்கள் பற்றிப் பேசுகிறோம். சோழர்கள் என்றால் தெலுங்கு எங்கிருந்து வந்தது? வேண்டுமானால் ஒப்பீட்டளவில் சங்க காலத்தில் தனித் தமிழ் அடையாளத்துடன் வாழ்ந்தோம் என்று கூறிக்கொள்ளலாம்.

**பண்டைய காலத்தை விட்டு விடுங்கள். இன்று பார்ப்பன, பனியா ஆட்சி நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அக்கூட்டணியிடம் ஏறத்தாழ எல்லா தேசிய இனங்களுமே சிக்கித் தவிக்கின்றன என்கிறார்களே?**

பார்ப்பன, பனியா அரசு என்பது சரியே. ஆனால் அந்த அரசு தேசிய இனங்களை அடக்கி வைத்திருக் கிறது, ஒடுக்குகிறது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், ஒருகாலத்தில் புது தில்லி அரசை எதிர்த்த சக்திகள்கூட வேறொரு காலத்தில் ஒடுக்குமுறையின் காரணமாகவோ, சமரசம் செய்துகொண்டதன் விளைவாகவோ, இந்தியாவின் எல்லைக்குள் இருக்க சம்மதித்தன. தி.மு.கவின் வரலாறு நமக்கு இதை நன்றாக உணர்த்துகிறது.

அதே நேரம், மனித உரிமையாளர் டாக்டர் பாலகோபால் கூறியது போல, தனது தன்னிலையை எதிர்க்கத் துணியும் தேசிய இனங்களை கண்டு இந்திய அரசு அஞ்சுகிறதையும் காண்கிறோம். அந்த அச்சம் ஒடுக்குமுறையாக மாறி பஞ்சாபில் பலரைக் கொன்று குவித்தது. இன்றும் காஷ்மீரத்திலும் வட—கிழக்கு மாநிலங்களிலும் இத்தகைய ஒடுக்குமுறை தொடர் கிறது, என்றாலும் இந்தியாவுக்கு இணங்கிப் போன தேசிய இனங்களின் வரலாற்றையும் கருத்தில் கொண்டு தான் இந்தியா தேசிய இனங்களின் சிறைசாலையா என்ற கருத்தை விவாதிக்க வேண்டும்.

காலிஸ்தானுக்கான போராட்டத்தை எடுத்துக் கொள்வோம் – பாலகோபால் சுட்டிக்காட்டியது போல அனைத்து மக்களிடமும் வாக்கெடுப்பு நடந்தால் காலிஸ்தானுக்கு வெற்றி கிடைக்குமா என்பது பற்றி காலிஸ்தானிகளுக்கே ஐயம் இருந்தது. திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. பிரிந்தபோதும், அவர்கள் இந்திய அரசை ஏற்றுக்கொள்வதாகத்தானே பிரகடனம் செய்தார்கள்? மத்திய அரசில் அதிகாரங்கள் குவிந்திருப்பதை எதிர்த்தார்கள், கூட்டாட்சி வேண்டுமென்றார்கள் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் அவர்கள் இந்திய அரசை ஏற்றுக்கொண்டார்கள் என்பதும் உண்மைதானே.

**அதே போல் பார்ப்பன - பனியா அரசு என்பதும் சற்று மிகையாகத் தோன்றுகிறதா?**

பார்ப்பனீயம் என்பது இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களை நியாயப்படுத்தும் கருத்தியல். அது ஒரு உலகப் பார்வை. இங்குள்ள ஏற்றத்தாழ்வுகளை, அநீதிகளை "இயல்பானதாக" விளக்கிக்காட்டும் ஆற்றல்மிகுந்த மனநிலை. அம்பேத்கர் கூறியது போல மேல் – கீழ் வரிசையிலான ஜாதி, வருண முறைக் குரிய உளவியலை வழங்குவதுதான் பார்ப்பனீயம். இந்த படிநிலை அமைப்பில் மேலே செல்ல செல்ல ஒருவருக்கு மரியாதை கூடுகிறது, கீழே இறங்கி வர, வர அவர் இகழப்படுகிறார், வெறுக்கப்படுகிறார். இந்த மனநிலையைத்தான் இந்திய ஆளும் வர்க்கமும் ஆதிக்க ஜாதிகளும் கொண்டுள்ளன. நமது நீண்ட நெடும் வரலாற்றில் உடலுழைப்புக்கு மதிப்பு இல்லா மல் போனதும், இதனால் உடலுழைப்பாளிகள் "அசுத்தமானவர்"களாக, கீழ்மக்களாக கருதப் பட்டதும், அறிவுச் செயல்பாடுகளை மேற்கொள்வோர் மேன்மக்களாக அடையாளம் காணப்பட்டு, மேன்மை யானவர்களாக கருதப்பட்டது. இன்றும் அவ்வாறே கருதப்படுகிறது. இந்தப் பாகுபாட்டின் அடிப்படையில் ஒட்டுமொத்த பொருளாதார வாழ்க்கையும், சமூக ஏற்பாடுகளும் மதிப்பீடுகளும் அமைந்திருப்பதும்தான் பார்ப்பனீயம் சாதித்த வெற்றியின் விளைவுகள்.

இந்திய முதலாளிகளை எடுத்துக் கொண்டாலுங் கூட, அவர்களில் பெரும்பான்மையோர் பாரம்பரிய வியாபார சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதைக் காணலாம் – அவர்களுமே மூளை உழைப்பை செலுத்துபவர்களாக உள்ளனர். மேற்குலகில் உள்ளது போல சொந்த முயற்சியில் செல்வம் ஈட்டியவர்கள், மிகச் சிலர்தான். சொந்தக் காலில் நின்று, சிறுகக்கட்டி பெருக வாழ்ந்து, அதே நேரம் தொழிலாளியை சுரண்டி நிறுவனங்களைக் கட்டும் வழமையான

முதலாளித்துவத்தை ரிலையன்ஸ் போன்ற ஒரு சில குழுமங்களிடம்தான் பார்க்கமுடியும்.

**நீங்கள் விவரிப்பதைப் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட இனக் கூட்டணியை, குழுவை, அல்லது அமைப்பை சுட்டுவதுபோலத் தெரியவில்லையே. அது ஒரு உருவகமாக வல்லவா படுகிறது. சிலவித குணாதிசயங்களுடைய்வர்கள் ஆள்கிறார்கள் என்றால் அதை அடையாளங்காணத்தக்க ஒரு இனம் என்று எப்படிப் பொருள் கொள்ளமுடியும்?**

இப்படிச் சொல்லுகிறேன். பார்ப்பனர்கள் அனைவரும், பனியாக்கள் அனைவரும் இந்தக் குழுமத்தில், ஆளும் வர்க்கத்தில் அடக்கம், ஒரு சிலரைத் தவிர. ஜாதி அடையாளமும் அது ஏற்படுத்தித்தரும் "பிறப்புரிமைக"ளும் இன்றுமே அதிகாரத்துக்கும் அரசாட்சிக்கும் ஆதாரமாக இருந்து வருகின்றன. ஜனநாயக அரசியலின் வளர்ச்சி இந்தப் போக்கில் சில முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள போதிலும், தம்மை ஆளும் வர்க்கமாக, ஜாதியாக வளர்த்துக்கொள்ள விரும்புவோர் அந்த நிலையை நோக்கிச் செல்ல செல்ல தம்மை வளர்த்த ஜனநாயகத்தைக் கைவிட்டு பார்ப்பனீயத்துக்கு இசைவளிப்பதைக் காணலாம். பிற்படுத்தப்பட்ட ஜாதிகளின், ஏன் தலித்துகளின் பிரதிநிதிகளை கூட்டாளிகளாகக் கொண்டு ஆட்சி நடத்தினால்தான் தனது மேலாண்மையை நிறுவ முடியும் என்று ஆன பிறகு சிற்சில விட்டுக் கொடுப்புகளைச் செய்ய பார்ப்பனீயம் என்றுமே தயங்கியதில்லை. அதிகாரத்தை கைப்பற்ற விரும்பும் கடைநிலை மக்கள், அவர்கள் அந்த அதிகாரத்தை பார்ப்பனீயம் அல்லாத வேறு ஒரு பார்வையின், தத்துவத்தின் அடிப்படையில் நிறுவ முயன்றால்தான் பார்ப்பனீயம் ஆட்டங்காணும். இதைச் செய்ய கருத்தியல் தளத்திலும் அரசியல் தளத்திலும் செயல்பட்டால் மட்டும் போதாது – பொருளாதார மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

உழைப்புக்கு உண்மையான மதிப்பு வழங்கப்பட வேண்டும். பெரியார் சொன்னது போல பார்ப்பனீயத்துடன் பணக்காரத்தன்மையும் ஒழிய வேண்டும்.

**இந்தியச் சூழலில் தமிழனின் பங்கு என்ன? பெரியார் திராவிட நாடு கேட்டபோதும் சரி, இன்று விடுதலைப் புலிகள் அழிவதற்கு, தமிழனின் போராட்டம் தோற்கடிக்கப்படுவதற்கு, இந்தியா துணைபோயிருக்கிறது என்ற ஒரு புரிதலும் சரி, இரண்டுமே இந்தியா என்ற அமைப்பில் தமிழனுக்கு இடமில்லை என்பதைத்தான் வலியுறுத்துகிறது என்கிறார்களே?**

தமிழனுக்கு இடமில்லையா அல்லது தமிழர்களின் பிரதிநிதிகளாக கூறிக்கொள்வோர், தமக்கான இடத்தை பிடித்துக்கொண்டு சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல தமக்கு இடம் மறுக்கப்பட்டது என்று கூறிவருகிறார்களா என்று நாம் சிந்திக்க வேண்டும். பா.ம.கவின் வரலாற்றையும் வைகோவின் அரசியல் நாடகங்களையும் மதிப்பீடு செய்தாலே போதும், தமிழர்களுக்கு இடம் இல்லாமல் போன கதையின் ஒரு பகுதியை புரிந்துகொள்ளலாம். அக்கதையின் பெரும் பகுதிக்கான விளக்கத்தை பெரியார் அன்றே வழங்கிவிட்டார். அதைப் பற்றி புதிதாக என்ன சொல்லிவிடப் போகிறோம்?

**'திராவிட நாடு திராவிடருக்கே' என்கின்றனர் திராவிட இயக்கத்தினர். பிறகு அண்ணா 1962ல் அதைக் கைவிட்டார். பிறகு கருணாநிதி மாநில சுயாட்சி என்கிறார். இப்போதோ, நாங்கள் அடிமைகள், ஈழத் தமிழர்களுக்கு என்ன செய்துவிடமுடியும் என்று கைவிரிக்கிறார். இந்தப் போக்கு பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. பிரிந்தபோதே நான் முன்னர் குறிப்பிட்டது போன்று இந்திய தேசத்தை ஏற்றுக் கொண்டுவிடுகிறார்கள். தேர்தல் அரசியலுக்குள் செல்லச் செல்ல பல்வேறு தளங்களில்

அவர்களது கொள்கைகள் நீர்த்துப்போகின்றன.

ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்கள் சுயமரியாதைத் திருமணத்திற்கு அங்கீகாரம் அளிக்கும் சட்டம், இட ஒதுக்கீடு போன்ற விஷயங்களில் ஓரளவு திராவிட இயக்கக் கொள்கைகளைப் பின்பற்றியிருக்கின்றனர், அமல்படுத்தியிருக்கின்றனர். ஆனால், ஜாதி மறுப்பிலிருந்தெல்லாம் தள்ளிப்போய்விட்டார்கள். சட்டம் போட்டு மட்டுமே சமுதாயத்தை மாற்ற இயலாது. தொடர்ந்து அதற்கான கருத்தியல் பணிகளைச் செய்ய வேண்டும், மக்களை இயக்கமாக திரளச் செய்து சமுதாய ஏற்பாடுகளில் உடைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பன போன்ற பெரியாரின் கருத்துகளை அவர்கள் கைவிட்டனர்.

பெரியார் சட்ட மாற்றத்தைக் கோரிய கால கட்டங்களில்கூட, மக்களிடம் செல்வதை நிறுத்த வில்லை. சமுதாய மனநிலையை மாற்றுவதன் தேவையை உணர்ந்தவராகவே இருந்தார். தனது கொள்கைகளை ஆதரிக்கும் ஆட்சியை அவர் ஆதரித்த போதும், ஆட்சியதிகாரத்தின் மூலம் சமுதாய மாற்றத்தை சாதிக்க அவர் முயன்றதில்லை – இடைவிடாத போராட்டங்களின் அவசியத்தை அவர் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார், போராடவும் செய்தார். தி.மு.கழகத்தின் அரசியல் இதிலிருந்து வேறுபட்டு நின்றது – நாளாவட்டத்தில் ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதே, திராவிட அரசியலின் 'வெற்றி'யாக அறியப்பட்டது.

அ.இ.அ.தி.மு.கவோ, இன்னும் மோசம். தி.மு.கவிற்காவது ஏதோ செய்வதுபோல பாவனை செய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதுபோல ஒரு தோற்றம். அவர்களுக்கு அதுவும் இல்லை. தேர்தல் அரசியல் எப்படி தீவிர செயல்திட்டத்தினைக்கூட பலவீனமடையச் செய்துவிடுகிறது என்பதை திராவிட இயக்க

வரலாறு நமக்கு உணர்த்துகிறது. தவிரவும் தி.க. உட்பட அனைத்து திராவிடக் கட்சிகளிலும் உட்கட்சி ஜனநாயகம் என்பது இல்லை. அது மிகப் பெரிய குறைபாடு. அண்ணா இன்னும் அதிக நாட்கள் வாழ்ந்திருந்திருந்தால், தி.மு.கவில் சற்று ஜனநாயகம் பிழைத்திருக்கும்.

**ஏதோ ஒரு கட்டத்தில் வைகோ தி.மு.கவின் தலைவராகியிருந்தால் அதன் தமிழ்த் தேசியம் கூர்மை பெற்றிருக்குமா?**

அப்படிச் சொல்ல இயலாது. ஏனெனில், நான் முன்னர் குறிப்பிட்டது போன்று இந்திய அரசுடன் சமரசம் செய்துகொண்டவர்களிடம் எவ்விதத் தீவிரத் தன்மையை எதிர்பார்க்கமுடியும்?

**திராவிட நாடு பேசத்தானே செய்தார்கள்...**

சொன்னார்கள்தான். ஆனால் அதற்கான செயல் திட்டம் எதுவுமில்லை. பாட்டுப் பாடினார்கள், கூட்டம் போட்டார்கள், அவ்வளவுதான். அணி திரட்டல் நடக்கவே இல்லையே. அப்படிப்பட்ட சூழலில் தி.மு.கவிற்கு யார் தலைமையேற்றிருந்தாலும் நீர்த்துப்போன போக்கைத்தான் அவர்கள் பின்பற்றியிருப்பார்கள். அதுவே அவர்களுக்கு வசதி.

**நீங்கள் தி.மு.கவை சற்று அதிகமாகவே குறை சொல்வது போன்று தெரிகிறது. நீங்கள் வைக்கும் அதே விமர்சனம் பெரியாருக்கும் பொருந்துமல்லவா? ஜாதி மறுப்பிற்கோ இறை மறுப்பிற்கோ, அவர் அளித்த முக்கியத்துவத்தை பண்பாட்டு தேசியத்திற்கு அவர் அளிக்கவில்லையே....**

பெரியாரை இதில் தொடர்புபடுத்தமுடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை தி.மு.கவின் தொடக்கமே அதன் தலைவர்கள் திரா விடர் கழக நிலைப்பாடுகளிலிருந்து பல தளங்களிலும் விலகிநிற்பதைத்தான் சுட்டிக்காட்டுவதாக நான்

நினைக்கிறேன். அப்படிப்பட்ட சூழலில் தி.மு.கவின் எந்தக் குறைபாட்டிற்கும் பெரியாரை குறைசொல்ல முடியாது. மேலும் பெரியார் இந்திய அரசின் இருப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் சமூக, பண்பாட்டு அடிப்படைகளை தொடர்ந்து விமர்சித்து வந்தார். தி.மு.க. இதை செய்யவில்லை. காலப்போக்கில் அது இந்திய அரசின் ஒரு அங்கமாக அல்லவா ஆகிவிட்டது? இந்திய தேச அரசு, தேசியம் –இவற்றுக்கு மாற்று பண்பாட்டு தேசியமாகத்தான் இருக்க வேண்டுமா என்ற கேள்வியையும் நாம் கேட்க வேண்டும். அப்படியென்றால் யாருடைய பண்பாடு, அதன் அடிப்படைகள் என்ன, தேசிய–மக்கள் சித்தத்தை வெளிப்படுத்துவதாக உள்ளதா என்பன போன்ற கேள்விகளை கேட்க வேண்டியிருக்கும்...

**தேசியம் என்பதே பெரும்பாலும் பிற்போக்கானதாக, ஆதிக்க சக்திகளின் நலனை மேம்படுத்துவதாகத்தான் இருந்திருக்கிறது என்பது பற்றி...?**

ஏற்கனவே சொன்னதுபோல, தேசியம் என்பது மக்களின் சித்தாந்தத்தை வெளிபடுத்தியதாக உள்ளதா, அல்லது அச்சித்தாந்தத்தை குறிப்பிட்ட கருத்தியல் எல்லைக்குள் முடக்கப் பார்க்கிறதா என்பது முக்கியமாகிறது. தேசிய பரப்புரை செய்வோர் அதற்கான சமுதாய உள்ளீட்டை தொடர்ந்து வலியுறுத்துகின்றனரா அல்லது பண்பாட்டு காரணங்களை மட்டும் முன்நிறுத்துகின்றனரா என்பதும் முக்கியமாகிறது. வரலாற்றுரீதியாக பார்க்கையில், எந்த ஒரு தேசியமும் உருப்பெறும் கட்டத்தில் முற்போக்கான பல அம்சங்களைக் கொண்டிருக்கிறது. பின்னாலே அதை ஆதிக்க சக்திகள் தங்கள் பிடிக்குள் கொண்டுவந்துவிடுகின்றன. ஆனால் எப்போதுமே அப்படி ஆகவேண்டும் என்று அவசியமில்லை.

**தமிழ்த் தேசியத்தைப் பொறுத்தவரை பெண்களுக்கெதிரானது என்ற கருத்து குறித்து...?**

தி.மு.கவினரும் சரி, பெரியாரை பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் பலரும் சரி, ஜாதி, பால் இரண்டு தளங்களிலும் மிக பிற்போக்கானவர்களாகவே நடந்துகொள்கின்றனர். பெரியாரிடமிருந்தே அவர்கள் முரண்படுகின்றனர். அதில் ஐயமில்லை. இனத் தூய்மை பேசுவதே ஒரு வகையில் பெண்களை பாலியல்ரீதியாக ஒடுக்கும் முயற்சிதானே. ஏனெனில், இந்தத் தூய்மையை பிறப்புடன் தொடர்புபடுத்தினா லும் சரி, "கலப்பற்ற" உறவு என்ற ஒன்றுடன் தொடர்பு படுத்தினாலும் சரி, அது முடிவில் பெண்ணின் "கற்பு" சார்ந்ததாக, அவளுடைய பாலியல் அடை யாளத்தை வரையறுப்பதாக இருப்பதை தவிர்க்க முடியாது. அதுபோல இது ஜாதி சார்ந்ததாகவும் இருக்க வேண்டிவரும்.

**பெரியார் கூடத்தான் சூத்திரன் என்றால் தாசி மகன் என்று மொழிபெயர்த்தார். சூத்திரர்கள் மத்தியில் தங்கள் பிறப்பு பற்றி, தந்தை யார் என்பது பற்றி சந்தேகத்தை விதைத்துத்தானே பார்ப்பனர்களுக்கெதிரான உணர்வு களைத் தூண்டிவிட்டார் என்ற விமர்சனம் இருக்கிறது.**

இல்லை, இல்லை. அப்பிரச்சினையே, தேவதாசி ஒழிப்புச் சட்டம் பற்றி விவாதம் எழுந்தபோது சூத்திரனுக்கான விளக்கம்கூட இதுதான் என்றார் பெரியார். மற்றபடி அதை தனது பிரச்சாரத்தின் மையக் கருத்தாக வைத்தார் என்பது தவறான புரிதல். தாசி மகன் என்பதற்கு பெரியாரும் பிறரும் அளித்த விளக்கத்தையும் கவனிக்கவேண்டும் – குறிப்பிட்ட ஜாதிகளைச் சேர்ந்த பெண்களை பாலியல் அடிமை களாக்கி அவர்களுக்குப் பிறந்தவர்களை சூத்திரர்கள் என்று அழைக்கும் பழக்கத்தை சாடுவதாகவே இச்சொல் அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு பாலியல் அடிமைகளாக ஆக்கப்பட்டவர்கள்தான் தேவதாசிகள் என்ற வாதமும் அக்காலக்கட்டத்தில் முன்வைக்கப்பட்டது. பெரியார் வாழ்ந்த கால

கட்டத்தில் தாசி என்ற சொல்லுக்கு கற்பிக்கப்பட்ட இழிவை மையமிட்டே இந்த சொல்லுக்கான பொருள் அமைந்தது.

**1965இல் இந்தி எதிர்ப்பிற்கு இருந்த பின்விளைவு, ஏன் இப்போது இல்லை? முத்துக்குமாரின் மரணம் ஏன் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தவில்லை?**

அறுபதுகளில் தி.மு.க. ஒரு பெரும் மக்கள் சக்தியாக இருந்தது. அடித்தட்டு மக்களுக்கு அதன் மீது ஈர்ப்பு இருந்தது. தி.மு.கவின் பண்பாட்டு தேசியம் இந்திய அரசுடன் அக்கட்சி சமரசம் செய்துகொண்டதன் வெளிப்பாடுதான் என்றாலும், அதன் இலக்கியத் தன்மையும் அது தன்னை வெளிப்படுத்திக்கொண்ட விதமும் அதனை கவர்ச்சிகரமான கருத்தியலாக உருமாற்றின. தி.மு.கவின் அன்றைய தலைமையும் பன்முகத்தன்மையுடையதாக இருந்தது. பல்வேறு சமூக அடுக்குகளைச் சேர்ந்தவர்களை தம் பக்கம் ஈர்க்கும் ஆற்றல் அத்தலைமைக்கு இருந்தது. பரந்து பட்ட மக்களை சென்றடையும் வண்ணம் அதன் அரசியல் முச்சந்தியில் பேசப்பட்டது, படித்தவர்கள் என்று இல்லாமல், அனைவருக்குமான ஜனநாயகப் படுத்தப்பட்ட அரசியல் சொல்லாடலை அக்கட்சியினர் உருவாக்கியிருந்தனர். இந்தப் பின்னணியில், இந்தி எதிர்ப்புப் போரினால் ஏற்பட்ட சூழலைப் பயன்படுத்தி, தி.மு.கவால் ஆட்சிக்கு வரமுடிந்தது. ஆனால் பின்னர் அதற்கு அணிதிரட்டல், அரசியல் விவாதம், அடித்தட்டு மக்களை செய்திகள் சென்றடையச் செய்தல், இவற்றிலெல்லாம் அக்கறை இல்லாமல் போய்விட்டது. அவர்களின் கவனம் தங்களை வளப்படுத்திக்கொள்வதில் திரும்பிவிட்டது.

எண்பதுகளில் இந்திய அமைதி காக்கும் படையை எதிர்த்து பல மட்டங்களில் சூடான விவாதங்கள் நடந்தன. ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஆழமான

ஆர்வம் இருந்தது. இப்போதோ அவையும் காணாமல் போய்விட்டன. ஏனெனில், மக்கள் மத்தியில் இலங்கை குறித்த செய்திகளை எடுத்துச் சொல்ல, தமிழ்த் தேசிய உணர்வுகளை வலுப்படுத்த தி.மு.க. உட்பட எல்லா கட்சிகளும் தவறிவிட்டன.

**1965இலும் சரி, 1937இல் கூட ஒரு தன்னெழுச்சியான எதிர்ப்பைக் காணமுடிந்தது. இப்போதுகூட முத்துக்குமார் மரணத்தின்போது அப்படி ஓர் ஆதரவு அலையைக் கண்டோம் எனலாம். இருந்தாலும் அது தொடரவில்லை. ஆர்ப்பாட்டங்கள் பிசுபிசுத்தன. இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக எதுவும் செய்யவில்லை, மஹிந்தா அரசைத் தடுத்து நிறுத்த முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டுக் குள்ளான தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. இதெல்லாம் தமிழ்த் தேசியம் வலுவிழந்துவிட்டதை காண்பிக்கிறதா?**

ராஜீவ் கொலைக்குப் பிறகு விடுதலைப்புலிகள் இங்கே செயல்படமுடியாமல் போனது. மற்ற குழுக் கள் ஒன்று அழிக்கப்பட்டன அல்லது விலைபோயின. விளைவு, மக்களிடம் இலங்கைத் தமிழர் நிலை பற்றி எடுத்துச் சொல்ல ஆளில்லாமல் போய்விட்டது. சிறு சிறு குழுக்கள் பேசி வந்தனதான். ஆனால் அவற்றால் பரந்து பட்ட மக்களைச் சென்றடைய முடியவில்லையே?

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் உருவானது. ஆயினும் மற்றவர்களைவிட தீவிரமாகப் பேசிய திருமாவளவன் காங்கிரஸ்–தி.மு.க. கூட் டணியில் இணைந்தார். தேர்தல் வந்தவுடன் அவரவர் தங்கள் வேட்பாளர்கள் வெல்வதெப்படி என்ற கவலையில் மூழ்கிப்போனார்கள். ஆறரை மணி நேர உண்ணாவிரதத்துடன் முதல்வர் தனது கடமையை முடித்துக்கொண்டார். இது தலைவர்கள் மத்தியில். மக்களை எடுத்துக்கொண்டால், நிச்சயமாக இலங்

கைத் தமிழர்பால் ஆதரவும் அனுதாபமும் இருந்தது. மத்திய அரசு செய்வது தவறு, மாநில அரசு செய்வது போதாது என்றுகூட பல இடங்களில் மக்கள் கூறினர். ஆனால் அப்படிக் கூறியவர்களிடம், அப்படியானால் உங்கள் வாக்கு யாருக்கு என்று கேட்டபோது, "அது வேறு விஷயம். நாங்கள் இதை வைத்து யாருக்கு வோட்டு என்பதை முடிவு செய்யப்போவதில்லை" என்றார்கள்.

**அதாவது அண்மைக் காலங்களில் தமிழ்த் தேசியத்தின் ஸ்தூலமான வெளிப்பாடாக இருந்த இலங்கைத் தமிழர் போராட்டத்தின் ஒரு நெருக்கடியான கால கட்டத்தில், தலைவர்களுக்கும் சரி, மக்களுக்கும் சரி, பெரிதாக அக்கறை இல்லை, எழுச்சி இல்லை, எதிர்ப்பு இல்லை. அப்படியானால் தமிழ்த் தேசியம் என்பது ஒரேயடியாக மங்கிவிட்டதா? இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும், எப்படி இருக்கவேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

தற்சமயம், தமிழ்ச் தேசியத்துக்கான சொல்லாடலானது, தீவிரமான சமூக மாற்றத்தை வலியுறுத்துவதாக இல்லாமல், ஜாதியை எதிர்க்கும் காத்திரமான அரசியலை முன்னெடுக்காமல், உணர்ச்சிகரமானதாக, தமிழர்களின், தமிழ் ஆண்களின் வீராவேசத்தையும் அவர்கள் தங்களுக்குரியதாகக் கொள்ளும் ஆண்மைக்கான வெளிப்பாடாகவும் இருந்து வந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக பொதுவில் பேசப்பட்டு வரும் தேசியமானது இவ்வாறானதாக மட்டும் இருந்து வந்துள்ளது. அதன் வரலாறு, தேவை ஆகியன எவையாக உள்ள போதிலும் இப்போது புழக்கத்தில் உள்ள தேசியம் தொடர்பான சொல்லாடலானது நாம் வாழும் காலஇணைவுக்கு உரித்தானதாக இல்லை.

நீங்கள் கூறுவதைப்போல் இலங்கை நிகழ்வுகளுக்கு இங்கு இருந்த, அல்லது இல்லாமல் இருந்த எதிர்வினைகள் அந்த செய்தியைத்தான் நமக்குத்

தருகின்றன. இலங்கைப் பிரச்சினையில் பலர் தங்களை வீரர்களாகக் காட்டிக்கொள்ள முற்பட்டார்கள். அங்கே நடந்த மோதல்கள் இவர்களுக்கு கிளர்ச்சியைக் கொடுத்தன, மேடையில் முண்டாதட்டுவதை ஆகக் கூடுதலான சாகசச் செயலாகக் கருதினார்கள்...

**பிரபாகரனின் மீது சிறு துரும்பு விழுந்தாலும் இங்கே ரத்த ஆறு ஓடும் என்றாரே வைகோ அதைப்போல....**

ஆமாம். இறுதியில் ரத்த ஆறு எங்கோ ஓடிற்று, இங்கல்ல. இலங்கையில் கடந்து இருபது, முப்பது ஆண்டுகளில் தமிழ்ச் சமுதாயம் கண்டுள்ள மாற்றங்கள், குறிப்பாக, கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தமிழ்/முஸ்லிம் உறவு கண்டுள்ள சரிவு, புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தேசியம், ஜாதி, பண்பாடு தொடர்பாக நடந்து வந்துள்ள விவாதங்கள், இலங்கை அரசின் போக்கு, சிங்கள தேசியமும் பௌத்தமும் கண்டுள்ள புதிய பரிணாம வளர்ச்சி, விடுதலைப் புலிகள் பற்றிய உணர்ச்சி நீங்கிய விமர்சனம், மதிப்பீடு – இவை குறித்து நமது தேசியவாதிகள் போதுமான அளவுக்கு சிந்தித்ததற்கான அறிகுறிகள் இல்லை. தங்களுடைய வீராவேச தேசியவுணர்வுக்கு உகந்தவற்றை மட்டுமே அவர்கள் பேசி வந்துள்ளனர்.

மற்றொரு புறம், திராவிட அரசியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறுகிய அரசியல் நலனுக்காக இந்துத்துவத்துடன்கூட அரசியல் சமரசம், மத்திய அரசை எப்படியாவது கட்டிக்காக்க வேண்டும் என்பதற்காக எதைஎதையோ செய்தது... இப்படி எவ்வளவோ நடந்துவிட்டன. இவை போக, அ.தி.மு.கவை எப்படி விளங்கிக்கொள்வது? அதனுடைய ஜாதி, வர்க்க அடிப்படை தி.மு.கவின் அடிப்படையிலிருந்து மாறுபட்டதல்ல. அம்மக்களெல்லாம் ஜெயலலிதாவின் பின்னால் செல்லத் தயாராக இருக்கின்றனர். இட ஒதுக்கீட்டைத் தவிர

இவர்களால் தீவிரமாக சமூக மாற்றத்தை நோக்கிய எவ்வித நடவடிக்கையிலும் இறங்கமுடியவில்லை. தமிழக அரசியல்வாதிகளின் சிந்தனை எந்த அளவுக்கு வறண்டுபோயிருக்கிறதோ அந்த அளவுக்கு மக்களும் அரசியலிலிருந்தே அன்னியப்பட்டுவிட்டார்கள். தமிழ்த் தேசியம் என்பது எவ்வித உற்சாகத்தையும் கொடுப்பதில்லை.

இன்னொரு புறம், தமிழர்கள் உலகெங்கும் இன்று பரவிக்கிடக்கின்றனர். பல்வேறு பண்பாடுகளை, வாழ்முறைகளை உள்வாங்குகின்றனர். பல மொழிகளைப் பேசுகின்றனர். இவர்களுடைய உலகப் பார்வை, சென்ற தலைமுறையினரது பார்வையைப் போல் இருக்க வாய்ப்பில்லை. தமிழர்களின் வாழ்வனுபவங்கள் மாறிவரும் சூழலில், அவர்களுடைய "தமிழ்" உணர்வும் மாறத்தானே செய்யும்? அவர்கள் சர்வதேச சமுதாயத்தின் முக்கியமான அங்கமாக வாழ்ந்துவரும் சூழலில் அவர்களுடைய தேசியமானது புவிசார்த் தன்மையுடையதாக இருக்க முடியுமா என்றும் தெரியவில்லை. நினைவும், கனவும், தொலைவில் இருந்து விஷயங்களை அணுகுவது, இவையெல்லாம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் குறித்து நாம் வேறு விதமாக யோசிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

அப்புறம் அடித்தட்டு மக்கள், மிக வறியவர்கள் – அவர்களுக்கு தமிழ்த் தேசியத்தில் என்ன இருக்கிறது? அவர்கள் எதற்காகத் தமிழ்த் தேசியத்தை ஆதரிக்க வேண்டும், தெருவுக்கு வரவேண்டும், எவ்விதத்தில் அவர்கள் வாழ்நிலையை அது மேம்படுத்தப்போகிறது? இது போன்ற கேள்விகளை 1990களில் தலித்துகள் எழுப்பினார்கள் – அவ்வாறு அன்று பேசிய பலரும் இன்று தேசியம் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. அன்று அவர்கள் கேட்ட கேள்விகளுக்கான பதில்கள் இன்னமும் கிடைக்காத சூழலில் அவர்களுமே தேசிய விளையாட்டில் இறங்கியுள்ளது வருத்தமாக உள்ளது.

இவ்வாறு பேசப்படும் தேசியத்துக்கு இவர்களால் புதுப்பொருள் வழங்க முடியுமா என்று தெரியவில்லை, வரலாற்று ஆற்றலுடைய கருத்தியலாக தமிழ்த் தேசியம் இருக்க முடியுமா என்ற ஐயமும் தோன்றுகிறது...

**அதில் உங்களுக்கு வருத்தமிருக்கிறதா?**

வருத்தமென்று கூறமாட்டேன். ஆனால் தமிழின அடையாளத்தில் ஒரு முற்போக்குக்கூறு இருக்கிறது, அது வளர்த்தெடுக்கப்படலாம் என நினைக்கிறேன். வரலாற்றுரீதியகவே தமிழ்த் தேசிய அடையாளத்துக்கு ஒரு முற்போக்கு கூறு உள்ளதாக நான் நினைக்கிறேன் – ஜாதி, சமய, ஏன் அபூர்வமாக சில நேரங்களில் பால் வேறுபாடுகளையும் கடந்து பொது நலன், பொதுவுரிமை குறித்து பேச்சும் சொல்லும் எழுந்த தருணங்களில் மானுடத் தோழமைக்கான அடையாளமாக தமிழ் அடையாளம் பரிணமித்துள்ளது.

பல்வேறு பண்பாடுகள் சந்திக்கும் புள்ளியாக தமிழகம் இருந்தபடியால் நாம் அத்தகைய பண்பாடுகளின் சில கூறுகளையாவது ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் நாம், தமிழர் என்று சொல்லிக் கொள்ளும் அதே நேரத்தில் மற்ற இனங்களை வெறுப்பதில்லை. இத்தகைய கூறுகளை செழுமைப்படுத்தி, இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கருத்தில் கொண்டு புதியதொரு தமிழின அடையாளம் உருவாகுமேயானால், அது உலகிற்கே ஒரு முன்னோடியாக இருக்கும்.

# அருள்மொழி

"ஒரு பெரிய இனம். அதன்
வரலாற்றைக் குறிக்கும்
பெயர்தான் திராவிடம்.
ஆரியர்களுக்கெதிராக நமது
இருத்தலை வலியுறுத்தும்
பெயர். அது மறைந்துபோக
அனுமதிக்கக்கூடாது."

அருள்மொழி: *பெண்ணியவாதி. வழக்கறிஞர். திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலர்.*

கே. கடந்த 40 ஆண்டு கால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் எந்த அளவுக்கு தமிழின உணர்வு வளர்க்கப்படுவதாக நினைக்கிறீர்கள்?

ப. பொதுவாக, அத்தகைய உணர்வை ஒடுக்கும் அல்லது புறக்கணிக்கும் ஆட்சி இருக்கும்போது தான் அவ்வுணர்வுகள் பொங்கிப்பெருகும். ஆனால் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய, உள்வாங்கி இருக்கக்கூடிய ஆட்சியில் அதை வலியுறுத்த வேண்டிய அவசியம் இருக்காது.

விடுதலைப் புலிகளின் தோல்வி தமிழ்த் தேசியம் என்ற கருத்தாக்கத்தின் மீது எவ்விதமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

விடுதலைப் புலிகளை சிங்கள ராணுவம் மட்டுமே தனியாக நின்று தோற்கடித்தது என்று கூற முடியாது. ஐந்து பெரிய நாடுகளின் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்துதான் அவர்களை அழிக்க முடிந்திருக்கிறது.

தவிரவும், பிரபாகரன் இறந்ததாக செய்தி பரவிய அந்த இரண்டு, மூன்று நாட்களில் மாநிலம் முழுவதும் பெரும் சோகம் மக்களைக் கப்பியது.

சொற்களால் விவரிக்க இயலாத மன அழுத்தம் எல்லோரையும் பீடித்திருந்தது. ஓரிரு நாட்களில் அவ்வீரன், மாவீரன் உயிரோடுதான் இருக்கிறான் என்று நம்பிக்கையூட்டும் செய்திகள் வந்தன. மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். நம் மக்களைப் பொறுத்தவரை ஈழப் போராட்டம் தொடரும் என்றுதான் நினைக்கிறார்கள். எனவே போராட்டம் தோல்வி, யுத்தம் முடிந்துவிட்டது என்றெல்லாம் கூறிவிட முடியாது.

**பெரியார் பார்ப்பன எதிர்ப்பில் காட்டிய அக்கறையை தமிழின உணர்வை வளர்ப்பதில் காட்டினாரா?**

அவரது பார்ப்பன எதிர்ப்பே தமிழின உணர்வின் வெளிப்பாடுதான். தமிழின உணர்வின் போராட்ட வடிவமே பார்ப்பன எதிர்ப்பு. அவரது ஒவ்வொரு போராட்டமும் தமிழின மேம்பாட்டிற்காகவே இருந்தது. அப்படி இருக்கையில் இது மொழிக்காக, இது இன உணர்விற்காக என்று பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்யவும் முடியாது.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், பெரியாருடைய பணி தமிழுணர்வை மேம்படுத்துவதல்ல. மாறாக மனித சமத்துவம், ஜாதி ஒழிப்பு, மக்களை அறிவுவயப்படுத்துவது, ஆண் – பெண் உயர்வு – தாழ்வைக் களைவது ஆகியவைதான். ஒரு கட்டத்தில் இத்தகைய பணிகள் தமிழுணர்வு முன்வைக்கும் அடையாளங்களுக்கெதிராகக்கூட இருக்கலாம். ஆனால், அதற்காக அவர் பின்வாங்கியதில்லை. அவரது பணி மனித சமத்துவம். அதில் அவர் உறுதியாக இருந்தார்.

**தமிழைக் காட்டுமிராண்டி மொழியென்றும் தமிழை விட்டொழித்தால்தான் நீ உருப்படுவாய் என்றும் பெரியார் பேசியிருக்கிறார். எந்த அர்த்தத்தில் அப்படிப் பேசினார்?**

பெரியாரின் சொல்லாடல் நம் வீடுகளில் தாத்தாக்கள் பேசுவதைப் போன்றது. அவர் தமிழர்கள் தமிழை

மட்டுமே கற்று, ஆங்கிலம் தெரியாமல் இருந்து விடுவார்களேயானால் பார்ப்பனர்களும் பார்ப் பனரல்லாத மேல்ஜாதியினருமே அதிகாரம் மிக்க பதவிகளில் தொடர்வார்கள். அது தமிழர்களின் நலனுக்கு உகந்ததல்ல என்று நினைத்துத்தான் தமிழ்ப் பைத்தியத்தை விடுங்கள், தாய்ப்பால் பைத்தியத்தை விடுங்கள் என்றார்.

அவர் இன்னொன்றையும் சொல்லி இருக்கிறார். அதாவது, பதினெண்கீழ் கணக்கு, திரிகடுகம், ஆசாரக் கோவை, நாலடியார் என்று நாங்களும் தமிழ் படித் தோம். ஆனால் இந்த அறக் கருத்துகளையெல்லாம் கம்ப ராமாயணமும் மஹாபாரதமும் கெடுத்து விட்டன என்கிறார். தமிழன் தன் மூதாதையர் அறிந்திருந்த கணக்கை விட்டுவிட்டானே, திருக்குறளில் சொல்லப்படும் அரிய கருத்துகளை அறியவில்லையே என்று பதறுகிறார். தமிழே கற்கக்கூடாது என்பதல்ல. தமிழிலேயே காலத்தைக் கழித்து ஆங்கிலத்தை விட்டுவிடக்கூடாது என்ற அச்சமே அவருக்கு இருந்தது.

தாய்மொழியை படியுங்கள். மொழி உணர் வோடு இருங்கள். ஆனால் முன்னேறுவதற்குத் தேவையான எந்த மொழியையும் படியுங்கள் என்பதே பெரியாரின் நிலைப்பாடாக இருந்தது.

**1965ஆம் வருட இந்தி எதிர்ப்புப் போரிலிருந்து பெரியார் ஒதுங்கி இருந்ததன் காரணம் என்ன?**

நம்முடைய மக்களுக்கு தேசபக்தி, ஒழுக்கம் இவற்றைப் பற்றியெல்லாம் சொல்லவேண்டியிருக் கிறது. குடியரசு துவக்கப்பட்டு, முதல் இரண்டு இதழ்களில் தேசபக்தி, ஒழுக்கம் இவற்றைப் பற்றி யெல்லாம் கூறினார். ஆனால் பின்னால் மனித சமத்துவம் நோக்கி அவர் பயணம் திரும்பியபோது அவரது சிந்தனையில் பெரும் மாற்றம் ஏற்படு கிறது. அதன் விளைவாகவே எனக்கிந்த பாஷாபி மானம், தேசாபிமானம், கற்பாபிமானம் – இவை

யெல்லாம் இல்லை" என்கிறார். இவையெல்லாம் பெருந்தேசியம் சார்ந்த அடையாளங்களாகும். அத்தகைய தடைகள் அவரது மனதளவில் நொறுங்கி விட்ட பின் ஏன் இந்த மொழிப் போருக்கு வர வில்லை என்று கேட்பதில் பொருளில்லை. அவர் அந்த நேரத்தில் மிகப் பரந்ததளத்திற்கு வந்து விட்டார். தவிரவும் ஒவ்வொரு போராட்டத்திலும் தனது நிலையினை வெளிப்படுத்தியிருக்கிறார். குடியரசிலோ, விடுதலையிலோ விரிவாகவே தனது நிலையினை எடுத்துரைத்திருக்கிறார்.

**இல்லை, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று விளக்குங்கள்...**

1938இல் நடத்திய போராட்டம் மறைமலையடிகள் போன்ற அறிஞர்கள் தலைமையில் நடந்ததாகும். பின்னர் சட்ட எரிப்பு போராட்டம். பலர் இரண் டாண்டு, மூன்றாண்டு சிறைசென்று, பல குடும்பங் கள் நசித்துப் போயிருக்கின்றன. பெரியாரே பல ஆண்டுகள் சிறையிலிருந்திருக்கிறார். அந்த அளவில் போராட்டம், அதன் பின்விளைவுகள் எல்லாவற்றிற்கும் தன்னை தயார்படுத்திக்கொண் டவர்தான். ஆனால் 1965இல் மாணவர்களை முன்னிறுத்தியது ஒரு தவறான முன்மாதிரியை ஏற்படுத்துவதாகும் என்று அவர் நினைத்தார். அதில் தவறென்ன?

**திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை தமிழின உணர்வு மேம்படுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறதா?**

தமிழர் நலன் மேம்படவேண்டும், மற்ற சமூகத்தி னரைப் போன்றே அவர்கள் அறிவோடும் மானத் தோடும் வாழவேண்டும் என்றுதான் பெரியார் விரும்பினார். அதை நோக்கியே அவரது போராட் டங்கள் அமைந்திருந்தன. சமூக நீதி, ஜாதி ஒழிப்பு, பெண்கள் உரிமை, மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற வற்றையே திராவிடர் கழகம் பிரதானப்படுத்து கிறது. வெறும் தமிழ் உணர்வை மட்டுமல்ல.

ஆனால் எண்பதுகளில் "தமிழா இன உணர்வு கொள்", "தமிழா, தமிழனாக இரு" என்ற முழக்கங்கள் கழகத்தால் எழுப்பப்பட்டன, அதாவது ஒரு போராட்ட வடிவமாக, தமிழர்களின் எழுச்சியின் அடையாளமாக. ஆனால் திராவிடர் கழகத்தின் செயல்பாட்டினை இன உணர்வோடு குறுக்கி விடமுடியாது.

**திராவிடர் கழகம் என்று உங்களை அழைத்துக் கொள்கிறீர்கள். திராவிடர்கள் என்பது அனைத்து தென்னிந்தியரையுமே சுட்டும் ஒரு சொல். ஆனால் காவிரி, பெரியாறு, பாலாறு என்று அண்டை மாநிலத்தினருடனான எல்லா நதி நீர் பிரச்சினைகளிலும் பிற பிரச்னைகளிலும் மற்ற தென்னிந்தியர்கள் தமிழர்களுக்கெதிரான நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் முதலில் திட்டமிட்டதைப்போல் திராவிடர் கழகத்தையே தமிழர் கழகம் என்றழைத்தால் என்ன?**

ஒரு பெரிய இனம், அதன் வரலாற்றைக் குறிக்கும் பெயர்தான் திராவிடம். ஆரியர்களுக்கெதிராக நமது இருத்தலை வலியுறுத்தும் பெயர். அது மறைந்துபோக அனுமதிக்கக்கூடாது. ஆலமரத்தின் விழுதுகளிலிருந்து வேறு மரங்கள் உருவாகலாம், ஆனால் ஆலமரத்தின் பெயர் மாற்றப்படுவதில்லை.

ஆந்திரர்களும் மலையாளிகளும் கன்னடியர்களும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தான். அதை என்றாவது ஒரு நாள் அவர்கள் உணர்வார்கள். இப்போது வேண்டுமானால் அவர்கள் பார்ப்பனீய மாயையில், வடமொழி உயர்ந்தது என்று நினைத்து தமிழுடன், தமிழர்களுடன் தங்களை இணைத்துக்கொள்ள விரும்பாமல் இருக்கலாம். தமிழிலிருந்துதான் தங்கள் மொழி உருவாகியது என்று ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் இருக்கலாம். அந்நிலை என்றேனும் ஒரு நாள் மாறும். தவிரவும் அவர்கள் அப்படி இருக்கிறார்களே என்பதற்காக, நாம் நமது இன அடையாளங்களை,

ஆரியருக்கு மூத்த குடி நாங்கள் என்பதை வலியுறுத்தும் இச்சொல்லை ஏன் துறக்கவேண்டும்?

இன்னொன்றையும் கவனியுங்கள். மற்ற மாநிலங்கள் எதிலும் பெரியார் போன்று பார்ப் பனீயத்தை சமரசமின்றி எதிர்க்கும் சிந்தனையா ளர்கள் தோன்றவில்லை. நாராயண குரு போன்றோர்கூட ஆலய வழிபாட்டுக்கு வழிசெய்து மீண்டும் அவர்களை பார்ப்பன மாயையில் சிக்க வைத்துவிட்டனர். இப்படிப்பட்ட ஒரு நிலையில், பார்ப்பனரைப் பற்றிய ஒரு பிரமிப்பில் இருக்கும் அவர்கள் வடமொழியைத்தான் உயர்வாக நினைப்பார்கள். நம்மிலேயே, பார்ப்பனரல்லா தோரிலும் சரி, ஆதிதிராவிடர்கள் மத்தியிலும் சரி, பொருளாதாரரீதியாக, சமூகரீதியாக அவர்கள் மேம்படும்போது, பார்ப்பனர்களை அழைத்து பல்வேறு சடங்கு, சம்பிரதாயங்களை அனுசரிக்கி றார்கள். இந்த மயக்கத்திலிருந்தெல்லாம் அவ் வளவு எளிதில் விடுபட்டுவிட முடியாது. ஆனால் நமது பிரச்சாரம் தொடர வேண்டும்.

**இயக்கத்தின் பெயரைத் 'தமிழர் கழகம்' என்று வைப்பதாகத்தான் இருந்தது. ஆனால் ஒரு சிலரின் தூண்டுதலால் பெரியாரும் அண்ணாவும் 'திராவிடர் கழகம்' என்று பெயர்வைப்பதாக முடிவெடுத்ததாகவும், முடிவுக்கு உடன்படாது தமிழர் கழகம் துவக்கிய கி.ஆ.பெயின் கூட்டங்கள் தாக்கப்பட்டன என்று பதிவுகள் இருக்கின்றன.**

இந்த விவரமெல்லாம் அக்காலத்தில் வாழ்ந்தோ ருக்கே சரியாகத் தெரியும். ராஜாஜியைக்கூட பெரி யார் கருத்தியல் ரீதியில்தான் எதிரியாகக் கருதினாரே யொழிய அவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். வன் முறையில் இறங்கவேண்டும் என்று அவர் நினைத் திருந்தால் தமிழ்நாடே கலவர பூமியாகியிருக்கும். அப்படி ஆகாமல் தடுத்ததே அவரது சிறப்பு. இன்றள

வும் ஆங்காங்கே ஒரு சில சம்பவங்கள் நிகழ்ந்தாலும் பெருமளவு தமிழகம் அமைதியாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் பெரியார்தான்.

**மற்ற தென்னிந்திய மாநிலங்களில் திராவிட இன உணர்வை மீட்டெடுப்பது குறித்து...?**

பகுத்தறிவு, சமூகநீதி பேசுகிற சில அமைப்புகள் இம்மாநிலங்களில் இருக்கின்றன. அவற்றுடன் இணைந்து செயல்பட முயற்சிக்கலாம். இந்த நேரத்தில் அவ்வளவுதான் முடியும்.

**தமிழ் பேசும் பார்ப்பனர்களை தமிழ்த் தேசியத்திலிருந்து ஒதுக்கிவைப்பது அக்கோட்பாட்டிற்கு ஒரு பின்னடைவு தானே? அதற்கு பெரியார்தானே பொறுப்பு?**

இதை ஏற்க முடியாது. தமிழுணர்வு படைத்த, தமிழிலக்கிய வளங்களிலே தோய்ந்தெழுந்த, எழுத்தாளர்கள், கவிஞர்கள் இருக்கிறார்கள். பொதுவாழ்வில் பல்வேறு தளங்களில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு நாம் மரியாதை செலுத்துகிறோம். ஆனால் பெரும்பான்மை பார்ப்பனர்கள் வேறு வழியின்றித் தமிழ் பேசுகிறார்கள். இங்கு வாழ்வதால் தமிழைப் பயன்படுத்துகிறார்கள், அதாவது வயிற்றுப் பிழைப்புக்காக. மற்றபடி அவர்களுக்குத் தமிழ் மீது அபிமானம் எதுவும் கிடையாது. தங்கள் மொழியாக வடமொழியையே கருதுகிறார்கள். வடமொழியே உயர் மொழி, இறைவனுக்கேற்ற மொழி என்றெல்லாம் மற்றவர்களை நம்பவைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை தமிழர்கள் என்று எப்படி ஏற்றுக்கொள்வது?

**முஸ்லிம்கள், துவக்க காலங்களில் திராவிட இயக்கத்தில் பங்காற்றியிருக்கிறார்கள். ஆனால் இப்போது பொதுவாக அவர்கள் மதரீதியான அடையாளங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கிறார்கள். மீண்டும் அவர்கள் மத்தியில் தமிழுணர்வைத் தட்டியெழுப்ப என்ன செய்யலாம்?**

இரட்டை கோபுர தகர்ப்பு உள்பட பல்வேறு நிகழ்வுகளின் விளைவாக உலகெங்கும் அவர்கள் மத்தியில் அத்தகைய போக்கு காணப்படுவதென்னவோ உண்மைதான். ஆனால் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மத்தியிலும் இத்தகைய சிந்தனைகள், அதாவது தத்தம் தாய்மொழியைவிட, வாழும் சமூகங்களை விட மதத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் போக்கு, அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது.

இப்பிரச்சினையில் தமிழார்வலர்களுக்கும் ஒரு பொறுப்பிருக்கிறது. இலக்கியமென்றால் கம்பனைப் பற்றிப் பேசிவிட்டு நேரடியாக கண்ணதாசனுக்கு வந்துவிடுகிறார்கள். இரு நாட்டுக்கோட்டை செட்டியார்களுடன் தமிழிலக்கியம் முடிந்து விடுவதைப்போல் பேசுகிறார்கள். மற்றவர்களின் பங்களிப்பு குறித்து மௌனம் சாதிக்கும் போக்கு இங்கே இருக்கிறது. இது மாற வேண்டும். உமறுப்புலவர், அதற்கும் முன்னால் குணங்குடி மஸ்தான், சமகாலத்தில் செய்குதம்பிப் பாவலர் - இவர்களைப்பற்றியெல்லாம் நாம் விரிவாகப் பேசவேண்டும். இஸ்லாமியர்களில் தமிழுணர்வு கொண்டவர்களும் தம் மக்கள் மத்தியில் இதைப் பற்றிய பரப்புரையில் ஈடுபடவேண்டும்.

**தமிழ்த் தேசியம் என்பது பழமைவாதத்தை, குறிப்பாக பெண்களை இரண்டாந்தர மக்களாக சித்தரிக்கும் கருத்தியலை வலுப்படுத்துவதாக பலர் கருதுகிறார்கள். குஷ்பு விஷயத்திலும் இது வெளிப்பட்டது. பெரியாரின் பெண்ணிய நிலைப்பாட்டிற்கு இது முரண்பாடாக இல்லையா?**

தமிழ்த் தேசியம் பேசுவோர் பெண்களுக்கான அடையாளமாக முன்வைக்கும் சில கூறுகள் பெண்ணியவாதிகளால் ஏற்றுக்கொள்ளமுடியாதவை. தமிழ்த் தேசியத்தை பெரியாரியலுடன் இணைத்துப் பார்ப்பவர்கள் பெண்ணியத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களுக்கு எவ்வித சிக்கலும்

இல்லை. ஆனால் பெரியாரையே தமிழின விரோதி யாக சித்தரிப்பவர்கள்தான் அப்படி பெண்ணியத்திற் கெதிரான அம்சங்களை முன்வைக்கிறார்கள்.

குஷ்பு விஷயத்தில் எழுந்த எதிர்ப்பு ஏற்றுக்கொள்ள முடியாததுதான். திருமணத்திற்கு முன் யார்தான் உடலுறவு கொள்ளவில்லை என்ற ரீதியில் சற்று பொறுப்பற்ற முறையில் அவர் பேசியிருக்கலாம். ஆனால் அதற்காக அவ்வளவு கடுமையான எதிர்ப்பு கள், அவரை இழிவுபடுத்தும் ஆர்ப்பாட்டங்கள், தமிழ்நாடெங்கும் அவர் மீது வழக்குகள் — இவையெல்லாம் ஏற்புடையதல்ல. வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

**இன்னொருபுறம் நமது இளைஞர்கள் மத்தியில் தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சி களின் விளைவாக எல்லாவிதமான சமூக சிந்தனையுமே மழுங்கடிக்கப்படுகிறதல்லவா?**

இளைஞர்கள் மட்டுமல்ல, எல்லோருமே அப்படி யாகிவிட்டனர். ஐரோப்பிய நாடுகளில் குறிப்பிட்ட நேரங்களில்தான் தொலைக்காட்சிகளைப் பார்ப்பது என்ற பழக்கம் இருக்கிறது, இங்கோ பெண்களின் அன்றாட வாழ்வுடன் தொலைக்காட்சி இரண்டறக் கலந்துவிட்டது எனலாம்.

தொலைக்காட்சித் தொடர்களே உண்மை வாழ்க்கை என்று நம்பும் பெண்கள், அவற்றிலே கேட்கப்படும் உரையாடல்களை தங்கள் சொந்த வாழ்விலும் பயன்படுத்தி, பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இளைஞர்களோ பொழுதுபோக்கு, உல்லாசம், ஆடல்—பாடல்களை மையப்படுத்தும் காட்சிகளில் தங்களை இழக்கிறார்கள். வேலையை விட்டால் தொலைக்காட்சி அல்லது ஷாப்பிங் மால்கள் என அவர்கள் உலகம் குறுகிவிட்டது. இது மிக மிக வருத்தத்திற்குரியது. ஆனால் இதற்கு மாற்று என்ன என்று ஒருவராலும் கூறமுடியவில்லை. எல்லோரும் புலம்புகிறார்கள். அவ்வளவுதான்.

**இதில் அரசுக்கேதேனும் பங்கிருக்கிறதா? அவர்கள் ஓரளவாவது நெறிப்படுத்தமுடியாதா?**

*செய்யலாம். நேஷனல், பொதிகை இரண்டைத் தவிர வேறு எந்தத் தொலைக்காட்சிக்கும் அனுமதி இல்லை என்று சொல்லலாம். இவ்விரண்டிலும் அரசு சார்பான செய்திகள் மட்டுமல்லாமல், சுவைமிகுந்த செய்தி ஒளிபரப்பாக அவற்றை மாற்ற லாம். தவிரவும் ஒரு குறிப்பிட்ட அளவு பொழுது போக்கை அனுமதிக்கலாம். ஏற்கனவே இவ்விரண்டை யும் மக்கள் அதிகம் பார்ப்பதில்லை. இவ்விரண்டு தான் என்றால் தொலைக்காட்சி பார்த்து சீரழியும் போக்காவது நிற்கும்! (சிரிக்கிறார்); ஆனால் இதெல் லாம் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.*

*உலகமயமாதலின் பிடியில் இருக்கும் நாம் இதிலிருந்து விடுபடுவது அவ்வளவு எளிதல்ல. கனடா வில்கூட பே வாட்ச் நிகழ்ச்சிக்கு பெரும் எதிர்ப்பெ ழுந்தது. ஒரு கட்டத்தில் அதை நிறுத்தினார்கள். பிறகு அதைத் தொடர்ந்தார்கள். வேறு ஒன்றும் நடந்துவிடவில்லை. நம் நாட்டிலெல்லாம் அத்தகைய விழிப்புணர்வுப் போராட்டங்கள் நடப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகவே எனக்குத் தெரியவில்லை. ஆனால் சிறு சிறு அமைப்புகளாவது பிரச்சாரம் செய்யலாம். மக்கள் தொலைக்காட்சி போன்ற முயற்சிகளை வசதி படைத்த வேறு சிலரும் செய்ய முன்வரலாம்.*

**இந்த 40 ஆண்டுகால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் பெரியார் விரும்பிய அளவு முன்னேற்றம் இருக்கிறதா?**

*30–40 சதவீதம் தந்தை பெரியார் விரும்பிய பாதை யில் தமிழ்ச் சமூகம் சென்றிருக்கிறது எனலாம். 2000 ஆண்டுகளுக்கும் மேலாக நம் மீது சுமத்தப் பட்ட ஜாதியச் சுமைகளும் பெண்ணடிமைச் சுமை களும் மற்ற வகையான பிற்போக்குச் சிந்தனைகளும் மூடநம்பிக்கைகளும் ஒரு நூற்றாண்டிற்குள்ளேயே*

பெரியாரின் பிரச்சாரத்தின் காரணமாக கணிசமாக அகன்றிருக்கின்றன. ஆனால் இத்துடன் திருப்தி அடைந்துவிடமுடியாது. நாம் இன்னமும் வெகு தூரம் போகவேண்டும். பெண்கள் நிலையைப் பொறுத்தவரை நாம் பெருமைப்பட்டுக்கொள்ளும் அளவு முன்னேற்றமிருக்கிறது. தங்கள் நிலை பற்றி, தங்கள் பாதுகாப்புக்காக இயற்றப்படும் சட்டங்கள் பற்றி, தங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய செயல் பாடுகள் பற்றி விழிப்புணர்வோடு இருக்கிறார்கள். ஆனால் அடித்தட்டு மக்களைப் பொறுத்தவரை அந்த அளவுக்கு விழிப்புணர்வோ, பாதிப்பு ஏற்படும் போது அதற்கான நிவாரணத்தைத் தேடும் திறனோ இல்லை. இந்நிலை மாறவேண்டும். அரசியலில் மகளிருக்கு இன்னமும் அதிக பங்கு வேண்டும்.

தலித்துகளைப் பொறுத்தவரை மற்ற மாநி லங்களைவிட இங்கே அவர்கள் முன்னேறியிருக்கி றார்கள். ஆனாலும் அவர்கள் நிலையில் இன்னும் பலமடங்கு அதிகமான முன்னேற்றம் வேண்டும்.

சுயமரியாதைத் திருமணச் சட்டம், பெண்களின் சொத்துரிமைப் பாதுகாப்புச் சட்டம், உச்ச நீதிமன்றத் தின் முன் இருக்கும் அனைத்து ஜாதியினரும் அர்ச்ச கராகலாம் எனும் சட்டம் போன்றவை பெரி யாரின் கனவுகளை நிறைவேற்றுவனவாக இருக் கின்றன. குறிப்பாக பெரியார் தன் இறுதிக்காலத் தில் அர்ச்சகர் பிரச்சினையில் அதிக அக்கறை காட்டினார். இப்போதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அர்ச்சகர்களுக்கு பயிற்சியெல்லாம் கொடுத்து நீதிமன்றத் தீர்ப்பிற்காக காத்திருக்கிறார் கள். அதாவது, எந்த ஆலயங்கள் நம்மை இழிவு படுத்தும் மையங்களாக செயல்பட்டனவோ அங் கேயே நமக்கு கௌரவம் கிடைக்கும் நிலை! உண்மையிலேயே நாம் மகிழ்ச்சி அடைய வேண்டிய ஒரு செயல் இது.

# அரு. கோபாலன்

**“தி.மு.க. ஆட்சிக்கு வரும் வரையில் உயர்நிலைப் பள்ளிகளிலெல்லாம் தமிழே பயிற்றுமொழியாக இருந்தது. அந்நிலை மாறி இப்போது மழலையர் பள்ளிகளில் தமிழ் கற்றுத்தர வேண்டும் எனக் கெஞ்ச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.”**

**அரு. கோபாலன்:** *எழுகதிர் பத்திரிகையின் ஆசிரியர். முன்னணி தமிழ்த் தேசியவாதி*

**கே. தமிழ்த் தேசியத்தின் துவக்கம் பற்றிச் சொல்ல முடியுமா?**

ப. தமிழ்த் தேசியம்தான் முதன் முதலில் இங்கே உருவாயிற்று. திருப்பாப்புலியூர் மடாதிபதி ஞானியாரடிகள், ஈழத்து அடிகள் போன்றோர் சைவத்தைக் காப்பாற்ற தமிழனுக்கு என்று ஒரு நாடு வேண்டும் என்று நினைத்தனர். அவர்கள்தான் இந்தி எதிர்ப்பு உணர்விற்கு வித்திட்டனர். அவர்கள் உருவாக்கிய தமிழ்த் தேசியம்தான் பின்னால் பெரியார் தலையீட்டின் காரணமாக திராவிட தேசியமாகியது. இன்று எல்லோருமே இந்திய தேசிய ஜோதியில் கலந்துவிட்டது போன்று தெரிகிறது *(சிரிக்கிறார்)*.

பெரியார்கூட தமிழ்த் தேசியத்தில்தான் துவங்கினார். பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 1925இல் காங்கிரசிலிருந்து வெளியேறியவர், 1927இல் சென்னைக் கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துகிறார். அதில் நாவலர் சோமசுந்தர பாரதியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முன்வைக்கிறார். பெரியாரும் அதை வலியு

றுத்திப் பேசுகிறார். ஆனால் பெரியார் நீதிக் கட்சியில் இணைந்த பின்னர் தமிழ்த் தேசியம் திராவிட தேசியமாகிறது. அந்த அளவுக்கு அக்கட்சியில் மற்ற மொழிகளைப் பேசுவோரின், குறிப்பாக தெலுங்கு பேசுவோரின் ஆதிக்கம் இருந்தது. 17 ஆண்டுகள் நீதிக் கட்சி ஆட்சி நடந்தபோது பெரும்பாலும் தெலுங்கர்கள்தான் சென்னை மாகாணத்தின் பிரதமராக இருந்திருக்கிறார்கள்.

1937இல் நடந்த தேர்தல்களில் நீதிக்கட்சி பெரும் தோல்வி கண்ட பின்னர், அதைத் தமிழ்த் தேசியத்தின் பக்கம் திருப்பும் வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர் அந்நேரம் நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம். அவரும் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர் சுவாமிநாதன் என்பவரும்தான் தீவிரமாக இம்முயற்சியில் இறங்கினார்கள். சுவாமிநாதன் தனது பெயரை அண்ணல்தங்கோ என்று மாற்றிக்கொண்டார். 1944ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் நீதிக் கட்சியை தமிழர் கழகம் என்று பெயர் மாற்றலாம் என்ற தீர்மானம் கி.ஆ.பெவால் முன்மொழியப்பட்டது, அனைவராலும் அத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கமும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் மதிய உணவின்போது, டார்பீடோ ஜனார்த்தனமும், சிற்றரசு என்கிற சின்னராஜுவும் தந்தை பெரியாரிடம் நீங்கள் கன்னட பலிஜா நாயுடு, நாங்கள் தெலுங்கு பலிஜா நாயுடு, நாளை தனித் தமிழ்நாடென்று அமைந்தால் அதில் நமக்கேது இடம்? நம்மை விரட்டிவிடக்கூடுமல்லவா? எனவே அத்தகைய ஆபத்திற்கு இடம் கொடாமல் நாம் திராவிடர் கழகம் என்று பெயரிட்டு விட

லாம் என்றார்கள். அப்போது பெரியார் 'என்னை விட யாரடா தமிழன்' என்று கர்ஜிக்கவில்லை. மாறாக நீங்கள் போய் அண்ணாவைப் பாருங்கள். காலையிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை மாற்றி வேறு ஒன்று சொல்லி அதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய அவரால்தான் முடியும் என்றார். அவர்களும் சென்று பார்த்தனர். அண்ணாவும் ஒத்துழைத்தார். இறுதியில் நீதிக் கட்சி திராவிடர் கழகமாயிற்று.

கி.ஆ.பெவும் அண்ணல் தங்கோவும் வெளி நடப்புச்செய்தனர். சில காலம் தமிழர் கழகம் என்ற பெயரில் ஓர் அமைப்பையும் நடத்திவந்தனர். ஆனால் அவர்கள் நடத்திய கூட்டங்களெல்லாம் தாக்குதல்களுக்குள்ளாயின. மனம் நொந்துபோய் கி.ஆ.பெ. "கடைவிரித்தேன், கொள்வாரில்லை, சுருட்டிக்கொள்கிறேன்" என்று அமைப்பையே கலைத்துவிட்டார். அண்ணல் தங்கோ தன் பங்கிற்கு வேலூர் பகுதியில் ஆண்டுக்கு ஒரு மாநாட்டை மட்டும் நடத்தி வந்தார்.

1967இல் திமுக ஆட்சிக்கு வந்தது. இன்று ஆட்சியிலிருப்பது, பிரதான எதிர்க்கட்சி – இரண்டுமே திராவிடக் கட்சிகள்தான். இப்போது வேகமாக வளர்ந்துவருவதாகக் கூறப்படுவதுகூட நடிகர் விஜயகாந்தின் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடர் கழகம். இத்தகைய சூழலில் வரலாற்று உண்மைகள் மறைக்கப்படுகின்றன. தமிழ்த் தேசியம் மழுங்கடிக்கப்பட்டிருக்கிறது. திராவிடக் கட்சிகள் இப்படி செல்வாக்குடன் இருந்தும் அண்டை நாடான இலங்கையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கு காரணமே இங்கே தமிழ்த் தேசியம் சரியாக முன்னெடுத்துச் செல்லப்படாததுதான். நாம் வழி கடத்தப் பட்டுவிட்டோம் என்று மக்கள் உணரத் தொடங்கி

விட்டனர். அந்தப் புரிதல் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் குறித்து நமக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

**தமிழியக்கத்தின் முன்னோடிகளுடைய நோக்கம் என்னவாகவிருந்தது?**

அவர்களெல்லாம் சைவத்தைக் காப்பாற்ற, வளர்க்க தமிழ்த் தேசியத்தை முன்வைத்தார்கள். திருஞானசம்பந்தர் தன்னை தமிழ் ஞானசம்பந்தர் என்று அறிமுகப்படுத்திக்கொள்கிறார். இலக்கியத்திலேயே தன்னைத் தமிழர் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் முதல் நபர் அவர்தான். அவர் வழி வந்தவர்களெல்லாம், கிறிஸ்தவத்திற்கென்றும் இஸ்லாமிற்கென்றும் நாடுகள் இருப்பதால், அம்மதங்கள் தழைத்தோங்குகின்றன என்றும் அதைப்போல் சைவத்திற்கென்று தனி நாடு வேண்டும் என்றும் விரும்பினார்கள். அது தமிழனுக்கான நாடாகத் தான் இருக்கும் என்று நம்பினார்கள். துரதிர்ஷ்ட வசமாக தமிழ்த் தேசியம் திராவிட தேசியமாக மாறிவிட்டது. மற்ற மொழிக்காரர்களின் ஆதிக்கமும் அதிகமாக, தமிழனுக்கென்று தனி நாடென்பதும் வெறும் கனவாகிவிட்டது.

**சைவத்தை வளர்க்க விரும்பிய முன்னோடிகள் பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பை, தமிழ் பேசும் பார்ப்பனர்களை தமிழ்ச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்ததை எப்படிப் பார்த்தார்கள்?**

அப்படிச் செய்தது அவர்களுக்கு உவப்பாக இல்லை. சி.பா. ஆதித்தனார் மொழி வழி தேசியமே ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்றுணர்ந்து, தமிழ் ராஜ்ஜியக் கட்சியை 1944ஆம் ஆண்டு துவக்கினார். பிறகு 1958ல் அது நாம் தமிழர் இயக்கமாகியது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களையும், வீட்டில் வேறு

மொழி பேசினாலும் அவர்கள் வாழும் நாட்டின் மொழியாக தமிழை ஏற்றுக்கொள்பவர்களையும் தமிழர்கள் என்று அங்கீகரித்தோம். எங்களுக்கு அதில் ஒன்றும் சிக்கலில்லை. மாறாக திராவிட தேசியம் பேசியவர்கள்தான் பார்ப்பனர்களை அன்னியர்களாகக் கருதினர்.

**ஆனாலும் அவர்களின் பார்ப்பன எதிர்ப்பை மக்கள் ஏற்றுக்கொள்ளத்தானே செய்தார்கள்? தேர்தல் அரசியலில் திராவிட தேசியம்தானே பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. அதன் விளைவாகத்தானே பிராமண ரல்லாதார் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்?**

பிராமணர்கள் அன்னியமாகியது, அன்னியமாக் கப்பட்டது இரண்டுமே தமிழ்த் தேசியத்திற்கு தீங்காகவே முடிந்தது. தமிழ் பேசும் பார்ப்பனர்கள் அனைவரும் தமிழர்களுக்காக தனி ஒரு மாநிலம் உருவாவதை ஆதரித்திருப்பார்களேயானால், தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், ஏன் மைசூரேகூட மற்ற மாநிலங்களுக்குச் சென்றிருக்காது. எடுத்துக் காட்டாக, மொழிவாரி மாநிலங்கள் உருவானபோது திருப்பதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனந்த சயனம் அய்யங்கார் இப் பிரச்சினையில் அக்கறை காட்டி இருந்தால் அந்நகரம் தமிழகத்துடன் இணைந்திருக் கும். ஆனால் தெலுங்கு பேசிய பார்ப்பனரான ஆந்திர கேசரி பிரகாசம் மதராஸ் மனதே என்றல்லவா முழங்கினார். திராவிடத் தேசியம் பார்ப்பனர்களை நிராகரித்தது. அவர்களும் தங்களைத் தமிழர்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளத் தயங்கினர். விளைவு, தமிழ் சமூகம் வளம்கொழித்த பகுதிகளை இழந்தது. இரு தரப்பினருமே தவறு செய்துவிட்டனர்.

**தூய தமிழ் இயக்கத்தை உருவாக்கும் முயற்சிகள் என்னவாயின?**

அத்தகைய இயக்கத்தைத் தோற்றுவிக்க முயன்றவர்கள் மக்கள் இயக்கமாக அதனை மாற்றும் முயற்சியில் தோல்வியுற்றனர். கி.ஆ.பெ. எதிர்ப்புகளை மீறி தமிழர் கழகத்தை தொடர்ந்து நடத்தத் தவறியதன் விளைவு, திராவிட இயக்கம் வளர்ந்தது. திராவிடர் கழகத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம், பின்னர் அதிலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் – இப்படி திராவிட இயக்கம் 'பரிணாம வளர்ச்சியடைய,' தமிழ்த் தேசியம் அநாதையாகிப் போனது.

*1958இல் குமுதம்* வார ஏடு திராவிடஸ்தான் வேண்டுமா, வேண்டாமா என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தியது. நான் அதற்கென ஒரு சிறிய ஆய்வையே நடத்தி, திராவிட இயக்கத் தலைவர்களின் உரைகளைக்கேட்டு, திராவிடஸ்தான் என்பது தெலுங்குஸ்தான் என்ற முடிவுக்கு வந்தேன். தமிழ்நாட்டில் மட்டுமல்ல; கேரளாவில் குட்டநாடு, கர்நாடகத்தில் காவிரிப் பாசனப் பகுதிகள் ஆகியவற்றிலும்கூட தெலுங்கு பேசுவோரே பெரு நிலக்கிழார்களாக இருக்கிறார்கள். விஜயநகரப் பேரரசின் காலத்தில் நிலங்களெல்லாம் அம்மக்களுக்கு பிரித்துக்கொடுக்கப்பட்டன. எனவே தெலுங்கு பேசுவோரின் ஆதிக்கம், திராவிடத் திருநாட்டில் இருக்கிறது. இதைப் பலர் உணராததால்தான் தமிழ்த் தேசியத்திற்கு பின்னடைவு ஏற்பட்டது.

இன்றுகூட தமிழக அமைச்சரவையில் தெலுங்கு பேசுவோரின் எண்ணிக்கை அதிகம். தி.மு.க. சார்பாக மத்திய அமைச்சராகியிருக்கும் ஒருவர்கூட வீட்டில் தெலுங்கு பேசுபவர்தான்.

**நீங்கள் பங்கு பெற்ற நாம் தமிழர் இயக்கம் எப்படி சரிந்துபோனது?**

நாம் தமிழர் இயக்கம் அப்போது வேகமாக வளர்ந்துவந்த திராவிட இயக்கத்தை எதிர்கொள்ள

வேண்டியிருந்தது. 1962 சட்டமன்றத் தேர்தல்களில் அக்கட்சி தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும், தமிழருக்கென்று தனி நாடு வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டது. துரதிர்ஷ்டவசமாக அனைத்து வேட்பாளர்களும் தோல்வியுற்றனர். ஆதித்தனாரையும் கட்சியின் துணைத் தலைவர் ஈரோடு சின்னராசு என்பவரையும் தவிர மற்றவர் அனைவரும் தங்கள் கட்டுத் தொகையினையே இழந்தனர். அடிப்படையில் வணிகரான ஆதித்தனார், இனி நாம் தமிழர் இயக்கம் தனக்கு லாபத்தைக் கொடுக்காது, நஷ்டம்தான் என்று முடிவெடுத்து அடுத்த தேர்தல்களில் தி.மு.க. வுடன் உடன்பாடு செய்துகொண்டார், கட்சியும் ஒரு முடிவுக்கு வந்தது.

**நாம் தமிழர் இயக்கத்தால் ஏன் மக்களைக் கவரமுடியவில்லை?**

திராவிட இயக்கங்களும் 'திராவிடம்' என்று பெயரில் வைத்துக்கொண்டாலும், அவர்கள் தமிழ் வரலாறு பேசினர், பண்பாடு பேசினர், பெருமை பேசினர். ஆதலினாலே திராவிடம் என்ற சொல்லாடல் பார்ப்பன எதிர்ப்பிற்காக மட்டுமே, மற்றபடி அவர்கள் தமிழ்த் தேசியம்தான் பேசுகின்றனர் எனத் தமிழ்நாட்டு மக்கள் நினைக்கின்றனர். ஆனால் இது தவறு. இப்புரிதல் மாறவேண்டும்.

**திராவிட தேசியம் பேசியவர்கள் ஹொய்சாளர்களையோ ராஷ்டிரகூடர்களையோ ஏன் முன்னிறுத்தவில்லை? தமிழர்கள் மத்தியில் அது செல்லுபடியாகாது என்று தெரிந்துதான் அவர்கள் அப்படிச் செய்வதில்லையா?**

தமிழர்களிடம் ஆதரவுகோருவதற்காக, அவர்களைக் கவர தமிழ் பெருமை பேசுவார்கள், ஆனால் தெலுங்கு பேசுவோர் நலனையே அவர்கள் மேம்படுத்துவார்கள். மக்கள் அவர்கள் மாய்மாலத்திற்கு இரையாகிறார்கள்.

**ஆனால் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இந்தி எதிர்ப்புப் போருக்கு வித்திட்டவர்கள் அவர்கள்தானே. அந்த அளவுக்காவது தமிழர்கள் நலனை அவர்கள் காப்பாற்றினார்களா, இல்லையா?**

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், மறை மலை அடிகள், கா. அப்பாதுரையார் போன்றோர் தயாரித்த ஆயுதங்களை தி.மு.கவினர் பயன்படுத்திக் கொண்டனர். இவர்களுக்கு கட்டமைப்பு இருந்த காரணத்தால் தமிழறிஞர்கள் பலரால் உருவாக்கப் பட்ட மொழிஉணர்வை, தன்னெழுச்சியாக எழுந்த அப்போராட்டத்தினை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர், அவ்வளவே. 1937லும் பெரியார் அப் படித்தான் மொழியுணர்வை தனது இயக்கத்தை வளர்க்க பயன்படுத்தினார். அவருக்கு என்ன பெரிய மொழி உணர்விருந்தது? தமிழ் ஒழிந்தால் தான் தமிழன் உருப்படுவான் என்றுகூட பேசியிருக்கிறாரே?

இன்னொன்றையும் கவனியுங்கள். பல்கலைக் கழகம் வரை தமிழே பயிற்றுமொழியாக வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்த காலம் போக, இப் போது என்ன நடக்கிறது? தி.மு.க. ஆட்சிக்கு வரும் வரையில் உயர்நிலைப் பள்ளிகளெல்லாம் தமிழே பயிற்று மொழியாக இருந்தது, அந்நிலை மாறி இப் போது மழலையர் பள்ளிகளில் தமிழ் கற்றுத் தரவேண்டும் என்று கெஞ்சவேண்டிய அவல நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். அப்படி இருக்கிறது இவர்களது தமிழார்வம். நான் மறுபடி யும் அடித்துச் சொல்லுகிறேன். இவர்கள் மொழிப் போராளிகள் அல்ல. பித்தலாட்டக்காரர்கள்.

**இந்திக்கு எதிரான மொழிப் போரைப் பற்றிச் சொல்ல முடியுமா?**

அது இரண்டாவது மொழிப் போர். இந்திய அரசியல் சட்டப்படி 1965இல் இந்தி ஆட்சி மொழியாக,

ஆனால் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும். மாறாக, போராட்டம் வெற்றி பெற்றால் தமிழே ஆட்சி மொழியாகும், தமிழர்கள் ஆள்வார்கள் எல்லா வளமும் பெருகும் என்று மாணவர்கள் உட்பட சமூகத்தின் பல தரப்பினரும் நம்பவைக்கப் பட்டார்கள். போராட்டம் வெடித்தது. எல்லா போராட்ட முனைகளையும் மாணவர்களே நிர்வகித்தார்கள். ஆனால் தி.மு.கவினர் தங்கள் கட்சி அமைப்பைப் பயன்படுத்தி தாங்கள் ஏதோ ஒருங்கிணைப்பதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

நிலைமை கட்டுக்கு மீறிப்போவதாக அவர்கள் நினைத்தவுடன், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதிலேயே ஆர்வம் காட்டினார்கள். பிறகு தேர்தல் அறுவடையும் செய்தார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அப்போது அண்ணா அளித்த உறுதிமொழி எதையும் பின்னால் அவர் நிறைவேற்றவில்லை.

இவர்களுக்குத்தான் எதன் மீதும் உண்மையான அக்கறை இல்லையே? தனிநாடு பற்றி பேசி வளர்ந்தவர்கள், முதல் வாய்ப்பிலேயே, அதைக் கைவிட்டு விட்டார்கள். பிரிவானவாதத் தடை சட்டம் அவர்களுக்கு ஒரு சாக்கு. தற்காலிகமாகத் தான், இயக்கத்தைக் காப்பாற்றத்தான், தனிநாடு போராட்டத்தை ஒத்திவைப்பதாக அண்ணா 1962இல் கூறினார். அது உண்மையாயிருந்திருந்தால் ஆட்சிக்கு வந்த பிறகு முயன்றிருக்கலாம் அல்லவா? ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

குறைந்தபட்சம் அனைத்து அலுவலகப் பணி களும் தமிழிலேயே நடத்தப்படும் என்று முடிவெ டுத்திருக்கலாம். யாரும் அதற்குத் தடையாயில்லை. தமிழகத்திலிருக்கும் மத்திய அரசு நிறுவனங்கள் இம்மாநிலப் பணிகளைத் தமிழிலே நடத்த

வேண்டும் என்று வற்புறுத்தி இருந்தால்கூட, இந்தி எதிர்ப்புப் போரின் பின்னணியில் ஆட்சிக்கு வந்த அவர்களின் வேகம் புரிந்து மத்திய அரசு அப்படி ஒரு நடைமுறைக்கு சம்மதம் தெரிவித்திருக்கும். அப்படி எதுவும் செய்யாமல் ஆங்கிலத்தை அங்கிங்கெனாதபடி நிலை நிறுத்துவதில் அல்லவா இவர்கள் கவனம் செலுத்தினர்!

**அத்தகையதொரு நேர்மையற்ற போக்கின் விளைவு தான் இன்றைய கையறு நிலையா?**

அது ஒரு நீண்ட ஒரு கசப்பான வரலாறு. 1948ல் இலங்கை விடுதலை பெற்றவுடனேயே பத்து லட்சத்திற்கும் அதிகமான மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது, அவர்கள் நாடு கடத் தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது. அக்கட் டத்தில் மத்திய அரசு ஏதோ ஒப்புக்குக் கண்டனம் தெரிவித்ததே ஒழிய, இலங்கை அரசை எச்சரித்து, சட்டத்தினை நீங்கள் திரும்பப்பெறுங்கள் என வற்புறுத்தவில்லை. ஜவஹர்லால் நேரு என்ன செய் தாரோ அதைத்தான் அவரது மகளின் மருமகளும் செய்திருக்கிறார். கவலைதெரிவித்ததோடு நின்று விட்டார். எனக்கென்னவோ புதுதில்லியில் இருப்பவர்கள் இந்தியாவிலோ இலங்கையிலோ, வேறு எங்குமே தமிழர்கள் வலுப்பெறுவதை விரும்ப வில்லை என்றே தோன்றுகிறது. குஜராத்தியர்கள் உகாண்டாவில் பாதிக்கப்பட்டபோது அவர்கள் நலனில் இந்தியா காட்டிய அக்கறையில் பாதிகூட இலங்கைத் தமிழர்பால் காட்டவில்லையே.

சிறீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தத்தின்போது மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகளுடன் கலந் தாய்வு எதுவும் நடத்தப்படவில்லை. தமிழகத்தில் மலையக மக்கள் பிரச்சினை பெரும் தாக்கம் எதை யும் ஏற்படுத்தவில்லை. வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும் சரி, பின்னர் அம்மக்கள் கூட்டங்கூட்ட

மாக நாடு கடத்தப்பட்டபோதும் சரி, இங்கிருந்த திராவிடக் கட்சிகள் அதிகமாக அலட்டிக்கொள்ள வில்லை. இங்கே தமிழின் பெயரால் ஆட்சிக்கட்டி லில் அமர்ந்திருப்போருக்கும் உண்மையான அக்கறை இல்லை. இம்மாதிரி சூழலில் மத்திய அரசைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

ஆனாலும் நான் நம்பிக்கையுடன்தான் இருக்கி றேன். மக்கள் புரிந்துகொள்ளத் துவங்கிவிட்டனர். தமிழின விடியல் வெகுதொலைவில் இல்லை.

# இரா. சனார்த்தனம்

**"இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கியதும் நடத்தியதும் மாணவர்கள்தான். போராட்டம் தி.மு.கவின் கொள்கைகளுக்கு ஒத்ததாக இருந்ததால் தி.மு.கவினரும் அதிக எண்ணிக்கையில் பங்கு கொண்டனர்."**

**இரா. சனார்த்தனம்:** *நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்தவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர். 67ஆம் வருட தேர்தலின் போது தி.மு.கவிற்கு ஆதரவாக மாணவர்களைத் திரட்டியவர். தொடக்கக் காலத்திலிருந்தே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீவிர ஆர்வம் காட்டியவர்.*

**கே. 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆர்வம் காட்டியிருக்கிறீர்கள். இன்று திரும்பிப் பார்க்கையில் என்ன நினைக்கிறீர்கள்?**

ப. ஒரு பக்கம் மாவீரன் பிரபாகரன். துணிச்சலுக்கும் வீரத்திற்கும் மறுபெயர் என்று உலகையே உணர வைத்தவன். அவன் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறான், இருப்பான் என்று நம்புகிறேன். இன்னொரு புறம் இதுநாள் வரை நானும் என்னைச் சேர்ந்தவர்கள் மட்டும் எழுப்பிவந்த பிரச்சினையை இன்று உலகமே பேசுகிறது. ஒபாமா பேசுகிறார், ஐ.நாவின் செயலாளர் நாயகம் பேசுகிறார். அதிலே எங்களுக்குத் திருப்தி. பெருமையும் கூட.

**நீங்கள் பங்குபெற்ற யாழ்ப்பாண உலகத் தமிழ் மாநாடு பற்றி சற்று கூறுங்களேன்.**

உலகின் எம்மூலையிலும் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றாலும் அவற்றிலெல்லாம் பங்குபெற்றவன் நான். அவ்வாறு பங்குபெற்று இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பது நான் ஒருவன்தான் என நினைக்கிறேன். நான் தொடர்ந்து இலங்கைப் பிரச்சினை குறித்து பேசியும் எழுதியும் வந்ததால் யாழ்ப்பாண மாநாட்டில் பங்கேற்பது குறித்து

சிக்கல்கள் எழுந்தன. ஆனாலும் நான் பின்னிருந்த படி பல உதவிகளைச் செய்தேன். அப்போது நான் கவிஞர் கண்ணதாசனுடன் மலேசியா சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தேன். ஒரு ஞாயிறன்று நான் யார் என்பதைத் தெரியாமலேயே எனக்கு மலேசியாவிலேயே இலங்கைக்கு விசா வழங்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு என்னைக் கைது செய்ய ஒரு வாரம் முயன்றார்கள். முடியவில்லை.

நான் ஊர்வலத்தினை துவக்கிவைத்தபோதும் அவர்களால் என்னை நெருங்க முடியவில்லை. மாலையில் அரங்கு நிறைந்திருந்ததால் வீரசிங்க மண்டபத்திற்கு வெளியே கூட்டம். என்னைக் கைதுசெய்ய முயன்றார்கள். பேசிவிட்டுத்தான் வருவேன் என்றேன். அப்போதுதான் தடியடி நடந்தது. ஒரு ஜாலியன் வாலாபாக்கே நடந்தது என்றுதான் சொல்லவேண்டும். மின்சாரக் கம்பி அறுந்து விழுந்து 9 பேர் பலியானார்கள். என்னையும் தாக்கினார்கள். நான் தப்பித்து கொழும்பு வந்தேன். என்னைத் தொண்டைமான் பத்திரமாக இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார்.

**அந்தச் சம்பவத்திற்கு நேரடியாக பொறுப்பில்லாத மேயர் ஆல்பிரட் துரையப்பாவைக் குற்றஞ்சாட்டி, அன்றைய தமிழர் கூட்டணித் தலைவர்கள், குறிப்பாக கவிஞர் காசி ஆனந்தன், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் போன்றோர் மேடைகளில் பேச, அதன் விளைவாகவே துரையப்பா பிரபாகரனால் கொல்லப் பட்டார் என்று ஒரு கருத்து இருக்கிறது.**

ஆல்பிரட் துரையப்பா அரசு ஆதரவாளர். ரௌடியைப் போல நடந்துகொள்வார். தமிழர் நலனுக்கு விரோதமாகவே அவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. மாநாட்டிற்கு மு. கருணாநிதியை வரவிடாமல் தடுத்ததும் அவர்தான். அதனால் தான் அவர் மாணவர்களின் கோபத்திற்கு ஆளானார், சுடப்பட்டார்.

**அன்றைய காலகட்டத்தில் தேவையில்லாமல் இளைஞர்களை உசுப்பிவிட்டு, தீவிரவாதப் போராட்டங் களில் இறங்கச் செய்து, இவர்கள் மட்டும் அரசியலி லேயே தங்கிவிட்டார்கள் என்று தமிழர் தலைவர்கள் மீது ஒரு விமர்சனம் வைக்கப்படுகிறது...**

அமிர்தலிங்கம் இளைஞர்களின் அன்புக்குரியவ ராக இருந்தார். யோகேஸ்வரன் போன்றோர் அவர் களுக்குப் பல உதவிகளைச் செய்தனர். நாடாளு மன்றத்தில் "நீங்கள் என்ன விடுதலைப் புலிகள் இயக் கத்தினைச் சேர்ந்தவர்களா" என்று மற்றவர்கள் கேட்கும் அளவுக்கு அவர்கள் இயக்கத்தினருடன் நெருக்கமாக இருந்தனர். குட்டிமணி, தங்கதுரை போன்றோர் இருந்தபோது, இவர்கள் வழக்குக்களை யெல்லாம் தமிழர் தலைவர்கள்தான் நடத்தினர். ஆனால் இவர்களைத் தூண்டிவிட்டது தமிழர் தலை வர்கள் என்று கூறமுடியாது. மாறாக, சிங்கள ஏகாதி பத்தியம்தான் தனது அடக்குமுறை நடவடிக்கை களால், இளைஞர்களை ஆத்திரம் கொள்ள வைத்தது. அரசு தொடர்ந்து நயவஞ்சக நாடகமாடி, தமிழர்களை ஏமாற்றியதன் விளைவே அங்கே தோன்றிய ஆயுதப் போராட்டம்.

உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகுதான், இவர் களுக்குப் புரிகிற மொழியில் நாம் பேசவேண்டு மென்றால் ஆயுதமேந்தவேண்டும் என்று இளைஞர் கள் முடிவெடுத்தனர். அதற்குத் தமிழர் தலைவர்களை குறை சொல்லக்கூடாது. ஆல்பிரட் துரையப்பாவை சுட்டுக்கொல்வதற்கு முன்பு யோகேஸ்வரன் எதிர்ப்படுகிறார். அப்போது பிரபாகரனும் அவரு டன் இருந்தவர்களும், "அண்ணே, இன்னிக்கு ஒரு செய்தி வரும் பாருங்க" என்று சொல்லிவிட்டுத் தான் சென்றனர், தங்கள் திட்டத்தை அவருடன் பகிர்ந்துகொள்ளவில்லை. அமிர்தலிங்கம்கூட தன் மகன் போராளிக் குழுவில் இணைவதைத் தடுக்க முடியவில்லை. காண்டீபன் இங்கே கைதானபோது

நான்தான் அவரைக் காப்பாற்றினேன். பின்னால் பிரபாகரனுக்கும் அறை எடுத்துக் கொடுத்து இங்கே தங்க வசதிகள் செய்துகொடுத்தேன்....

**அப்படி நெருங்கிப்பழகிய காலகட்டத்தில் பிரபாகரன், அவரது அமைப்பு, அவரது செயல்பாடுகள் குறித்து உங்களுக்கு விமர்சனம் இருந்ததா? அவர்களிடம் அதை பகிர்ந்துகொண்டிருக்கிறீர்களா?**

துவக்கத்திலிருந்தே பிரபாகரன் செயல்படுவதில் துடிப்பாயிருந்தார். வெறுமனே அறை போட்டு பேசிக்கொண்டிருப்பது அவருக்குப் பிடிக்காது. அவரவர் வழிமுறை அவரவர்களுக்கு. அதில் நான் குறுக்கிட்டதில்லை. நான் அண்ணா வழியை, மஹாத்மா வழியை, அஹிம்சை வழியையே நம்பினேன், அதுதான் பலன் தரும் என்று கருதினேன். என்னுடைய அணுகுமுறையை நான் மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் ஈழ விடுதலைக்காக யார் குரல் கொடுத்தாலும் அவர்களுக்கு நான் என்னால் இயன்ற உதவிகளைச் செய்தேன். அவர்களது பயிற்சி முகாம்கள் ஒன்றைக்கூட நான் பார்வையிட்டதில்லை. ஆனால் அவர்கள் பயிற்சி பெறத் தேவையான தளவாடங்களைப் பெற்றுக் கொள்ள உதவியிருக்கிறேன்.

ஒவ்வொரு குழுவும் நாங்கள் இதைச் செய்தோம். அந்த வங்கியைக் கொள்ளை அடித்தோம் என்றெல்லாம் என்னிடம் சொல்வார்கள். நான் காதிலே போட்டுக்கொள்ளவேமாட்டேன், என்னிடம் இதைப் பற்றி பேசாதீர்கள் என்றே சொல்லிவிடுவேன். "உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா, போலீஸ் பிரச்சினை இருக்கிறதா, சொல்லுங்கள், முடிந்ததைச் செய்கிறேன். அதைத் தவிர நான் எதையும் தெரிந்துகொள்ளவிரும்பவில்லை" என்பேன். எல்லா அமைப்புகளுடனும் எனக்குத் தொடர்பு இருந்தது. ஆனால் நான் யாரையும் வெறுக்கவில்லை. எவரும் என்னை வெறுக்கவில்லை.

பத்மனாபாவும் அவரது சகாக்களும் சென்னையில் சுட்டுக்கொல்லப்பட்டபோதுகூட நான்தான் அன்றைய முதல்வர் கருணாநிதியிடம் சொல்லி உரிய மரியாதையோடு அவர்களது உடல்கள் அடக்கம் செய்யப்பட வழி செய்தேன். ஒரு கட்டத்தில் பிரபாகரனுக்கு பகிரங்கக் கடிதம்கூட எழுதினேன். "துவக்கை எடுப்பவன் துவக்காலேயே அழிவான்" என்ற தந்தை செல்வாவின் வாசகங்களை நினைவுபடுத்தி, நீ ஜனநாயகரீதியான போராட்டத்திற்கு வா என்று அழைத்தேன். பாரீசுக்குச் சென்று அமிர்தலிங்கம் நினைவு நாளில் கலந்துகொண்ட போது அங்கிருந்த விடுதலைப்புலிகள் என்னை அவர்களது அலுவலகத்திற்கு அழைத்தார்கள். நானும் தயங்காமல் சென்றேன். நீங்கள் ஏன் நெடுமாறனைப்போல, கோபாலசாமியைப் போல முழுவதுமாக எங்களுடன் இருக்கமாட்டேன் என்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் ஒரு ஷாக் அப்சார்பரைப்போல். மற்றவர்களுக்கு உங்கள் மீது இருக்கும் விமர்சனங்களை நான் வாங்கிக்கொள்கிறேன். அஹிம்சையில் அசையா நம்பிக்கை வைத்திருக்கும் நான் உங்களை ஆதரிக்கும்போது, பிரபாகரன் தலைமையில்தான் ஈழவிடுதலை என்று நான் கூறும்போது, இவன் சொல்வதிலும் உண்மை இருக்கலாம் என்று நினைப்பார்கள் அல்லவா என்று சொன்னேன்.

என்னுடைய வாதத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால்தான் உலகின் எந்த மூலையிலும்போய் தமிழீழ பிரச்சினைக்காகக் குரல் கொடுக்கமுடிந்தது. அமிர்தலிங்கம் நினைவு நாள் கூட்டத்திலும் பங்குபெறுவேன், விடுதலைப் புலி ஆதரவாளர்கள் நடத்தும் கூட்டங்களிலும் பங்கு பெறுவேன். எனக்கு அதில் சிக்கலில்லை.

**அஹிம்சையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதாகக் கூறும் நீங்கள் துப்பாக்கி வழியே விடுதலை**

**பெற முயன்ற பிரபாகரனுடனும் அவரது அமைப்புடனும் நட்பு பாராட்டியிருக்கிறீர்கள். இப்போதுகூட அவர் மாவீரர் என்கிறீர்கள். இது பெரிய முரண்பாடாக உங்களுக்குத் தெரியவில்லையா?**

*இல்லை. ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இரு முனைகளில் செயல்பட வேண்டி இருந்தது. அரசியல்ரீதியாகவும் அற வழியிலும் ஒரு புறம் செயல்பட வேண்டும். இன்னொரு புறம், ஆயுதமேந்தி, தமிழன் மீது அடக்குமுறையை ஏவினால் என்ன நடக்கும் என்று சிங்களர்களுக்குப் புரியவைக்கவேண்டும். இரண்டுமே தேவைப் பட்டது. எனவே இரு பிரிவினரிடமும் என்னால் நெருக்கமாக, எவ்வித பிரச்சினையும் இல்லாமல், பழகமுடிந்தது.*

**அவர்கள் சகோதரக் குழுக்களை அழித்தொழித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*அது என்னைப் பொறுத்தவரை மிகவும் வருத்தத் திற்குரியது. ஆனால் அப்படிச் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. உலக வரலாற்றைப் பார்த்தீர்களானால், இப்படிப் பல குழுக்கள் உருவாவதும், அதில் ஒன்று மட்டுமே எஞ்சி நிற்பதும் வழக்கமான ஒன்றுதான் என்பது தெரியவரும்.*

*வங்கதேசத்தில் என்ன செய்தார்கள்? ஜி.பி. (ஜி. பார்த்தசாரதி, இந்திரா காந்திக்கு நெருக்கமான வெளியுறவுத்துறை அதிகாரி) ஒரு முறை சொன்னார், எல்லா குழுக்களையும் நாங்கள் இந்தியாவிற்கு அழைத்தோம், அவர்களில் வங்கதேச விடுதலைக்கு யார் உதவமுடியும், யாரால் நின்று போராடமுடியும் என்று கணித்து, அவர்களுக்கு உதவினோம். அவர்களைத் தவிர வேறு எந்தக் குழுவும் தங்கள் நாடு திரும்பவில்லை என்றார். (சிரிப்பு)*

இலங்கையைப் பொறுத்தவரை 'ரா'விற்கும் இண்டெலிஜென்ஸ் பிரிவிற்கும் இடையே இருந்த போட்டியின் காரணமாக, சரியான குழு தேர்வு செய்யப்படவில்லை. படித்த இளைஞர்கள் அதிகம் இருந்தால் டெலோவிற்கு பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்கள். ஆனால் பயிற்சி பெற்று அங்கே சென்றவர்களை புலிகள் ஒரு நொடியில் அழித்து விட்டனர். இன்னொரு குழுவைக்கூட எதிர் கொள்ள முடியாதவர்களா இலங்கை ராணுவத் துடன் மோதப் போகிறார்கள் என்று இவர்களுக்கு அப்போதுதான் உரைத்தது. பிறகு தம் நிலையினை மாற்றிக்கொண்டது இந்திய அரசு. அப்போதுகூட இந்திய ராணுவம் விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி அளிக்க முன்வரவில்லை. பயிற்சி முகாம்கள் நடத்திக்கொள்ள மட்டும் அவர்கள் அனுமதிக்கப் பட்டார்கள்.

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தொடர்ந்து ஆர்வம் காட்டிவரும் தமிழகக் கட்சிகள் அதே அளவு ஈடு பாட்டை இந்தியத் தமிழர் பிரச்சினையில் காட்டியிருக் கின்றனவா? குறிப்பாக 1964ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ- சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டபோது, ஒரு பெரிய கூட்டம் நாடு கடத்தப்பட்டபோது, இங்கே போராட்டங்கள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லையே?**

நானே நிறைய கூட்டங்களை நடத்தியிருக்கிறேன். தோட்டத் தொழிலாளர்களின் பெரும் தலைவர் தொண்டைமானுக்கு மிக நெருக்கமானவனா னேன். தி.மு.கவின் செயற்குழு கூட்டங்களில், இலங்கைப் பிரச்சினை பற்றி ஏதாவது தீர்மானம் இயற்றப்படாமல் இருக்காது. கண்ணதாசனும் மதுரை முத்துவும் நுழைகின்றபோதே இதோ இலங்கை வருகிறது என்பார்கள். அந்த அளவுக்கு தி.மு.கவி னருக்கு இலங்கை குறித்த அக்கறை இருந்தது.

ஸ்ரீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தத்தை தி.மு.க. கண்டித்தது. அண்டை நாடுகளை திருப்திப்படுத்து

வதற்காக இப்படியெல்லாம் மத்திய அரசு செய்தது. கச்சத்தீவும் இப்படித்தான். பர்மாவிலிருந்து ஏராளமான தமிழர்களை திரும்ப அழைத்துக் கொண்டதும் இப்படித்தான். அவர்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று அண்ணா வலியுறுத்தினார். ஆனால் நேரு செவிசாய்க்கவில்லை.

**நாங்கள் கேட்பது பெரிய அளவில் எழுச்சி எதுவும் அப்போது காணப்பட்டதாகத் தெரியவில்லையே, ஏன்?**

இல்லையென்று கூறிவிடமுடியாது. ராயபுரத்திலிருந்து கடற்கரைவரை ஊர்வலமெல்லாம் நடத்தப்பட்டது.

**இந்தி எதிர்ப்புப் போரில் தி.மு.கவின் பங்கு என்ன?**

போராட்டத்தை துவக்கியதும் நடத்தியதும் மாணவர்கள்தான். தி.மு.கவைச் சேர்ந்த எல்.ஜி போன்றவர்களும் அதில் இணைந்துகொண்டார்கள். போராட்டம், தி.மு.கவின கொள்கைகளுக்கு ஒத்ததாக இருந்ததால் தி.மு.கவினரும் அதிக எண்ணிக்கையில் பங்கு கொண்டனர். அவ்வளவுதான். இன்னும் சொல்லப்போனால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தபோது கவனமாக, எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும், எல்லை மீறிப்போய்விடக்கூடாது என்று அண்ணா அறிவுரை கூறினார்.

**இதில் உங்களது பங்கு என்னவாக இருந்தது?**

கோவை மாவட்டத்து ஆர்ப்பாட்டங்களை ஒருங்கிணைத்தேன் என்று சொல்லலாம். பின்னாலே இதிகாச பிரசங்கியான கீரன், உயர் போலீஸ் அதிகாரி ரவி ஆறுமுகம் போன்றோரும்கூட அதில் ஈடுபட்டனர்.

**எல். கணேசன் போன்றோரின் பங்கு எவ்வளவு முக்கியமானது?**

அவர்களெல்லாம் தி.மு.கவில் இருந்ததால் தீவிர

மாக இறங்குவதற்கு தயங்கினார்கள் என்பதுதான் உண்மை. நான் முன்னர் குறிப்பிட்டதைப்போன்று அண்ணா நிலைமை கைமீறிப்போய்விடக் கூடாது என்றுதான் நினைத்தார். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு கோவை விவசாயக் கல்லூரி மாணவர்கள் தனித் தமிழ்நாடு கொடியை ஏற்றியபோது, மிகவும் கவலைகொண்டு அவர்களுடன் சந்திப்பிற்கு ஏற் பாடு செய்யுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார் அண்ணா. ஏனெனில் அப்போது உலகத் தமிழர் மாநாடு சென்னையில் நடைபெறுவதாக இருந்தது. மாணவர் போராட்டம் வலுத்தால், பல அறிஞர் கள் மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்துவிடு வர் என்றஞ்சியே என் உதவியை அவர் நாடினார். அப்போது நான் அனைத்துக் கல்லூரி மாணவர் தலைவனாக இருந்தேன். அவர் கேட்டுக்கொண்ட தால் நானும் கோவை மாணவர்களை சமாதானப் படுத்தும் முயற்சியில் இறங்கினேன்.

அவர்களை சென்னைக்கு அழைத்து வந்தேன். அப்போது சென்னை வந்த ரயிலில் எல்லாம் தமிழ் துரோகி 'ஜனார்த்தனம் ஒழிக' என்று எழுதப்பட்டி ருந்தது. நான் கவலைப்படவில்லை. அண்ணா இட்ட பணியினை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந் தேன். அண்ணாவும் அவர்களைச் சந்தித்தார்கள். தனித் தமிழ்நாடு வேண்டும் என அப்போது மாண வர்கள் வலியுறுத்தினர். "எப்படி நீங்கள் அதை சாதிக்க முடியும் என நினைக்கிறீர்கள்?" என்று அண்ணா பதிலுக்குக் கேட்டார். சிலர் ரயிலைக் கவிழ்ப்போம், விமான நிலையத்தைத் தாக்குவோம் என்றனர். வேறு சிலர் காந்தி வழியில் அறப்போராட்டம் என் றனர். முதலில் உங்களுக்குள் ஒற்றுமை வேண் டாமா என்று கேட்டார் அண்ணா. மேலும் தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது போன்ற வாதங்களை அவர்கள் முன்வைத்தபோது, "நான் உங்களுக்கு சொல்லிக் கொடுத்ததையே நீங்கள் எனக்குத் திருப்பிச் சொல்லாதீர்கள். இதையெல்லாம் அறி

யாதவனல்ல நான். இந்த உணர்வுகளெல்லாம் என்னிடம் ஆழமாகவே இருக்கின்றன. ஆனால் இன்றைய சூழலில் என்னால் அதிகம் செய்துவிட முடியாது. வேண்டுமானால் ஆசைத்தம்பி போன்றவர்களைவிட்டு தீவிரமாகப் பேசவைத்து, மக்கள் மத்தியில் அத்தகைய எண்ணங்களை வளர்த்து விடலாம். பின்னர் அவர்களைக் கைதுசெய்து, அரசு இதையெல்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுபோல காட்டிக்கொள்ளலாம். ஆனால் நீண்ட நாட்கள் அப்படிச் செய்யமுடியாதே. ஒரு கட்டத்தில் மத்திய அரசு தலையிடத்தானே செய்யும். அதேநேரம் நாம் மக்களைத் தயார் செய்துவிட்டால் அத்தகைய விளைவுகளை எதிர்கொள்ளலாம். அப்படி ஒரு செயல்திட்டமாவது நமக்கு வேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயல்படமுடியாது" என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்தார். போராட்டமும் முடிவுக்கு வந்தது.

**1965 இந்தி எதிர்ப்புப் போரை நடத்தியவர்கள் மாணவர்கள். அதை முடித்து வைத்தது தி.மு.க. அது ஆட்சிக்கு வந்ததற்கே, இந்தி எதிர்ப்பு எழுச்சி ஒரு முக்கிய காரணி என்று கருதப்படுகிறது. ஆயினும் 1968ல் மீண்டும் ஒரு வகையான இந்தி எதிர்ப்பு வந்தபோது, தனித் தமிழ்நாடு வரை மாணவர்கள் சென்றபோது, தி.மு.க. அதைத் தணிப்பதில்தான் அக்கறை காட்டியது. இவ்வாறு தொடர்ந்து தமிழின வலியுறுத்தல் போராட்டங்களை மழுங்கடிப்பதில்தான் தி.மு.க. முயன்றிருக்கிறது என்று சொன்னால் அது சரியாக இருக்குமா?**

இல்லை. அந்தந்தக் காலச் சூழலுக்கேற்றவாறு அண்ணா சரியாகவே செயல்பட்டிருக்கிறார். நான் முன்னர் குறிப்பிட்டதுபோல 1968ல் உலகத் தமிழ் மாநாடு சமயத்தில் இங்கு போராட்டம் வலுத்திருக்குமானால் நமக்கு எவ்வளவு பெரிய தலை குனிவு? அதைத் தவிர்க்கவேண்டிய கட்டாயம்

அவருக்கிருந்தது. தவிரவும் அன்றைய ஆர்ப்பாட்டங்களை பின்னிருந்து இயக்கியது காங்கிரஸ்காரர்கள். அவர்கள் சதிக்கு இரையாகிவிடாமல் சாதுரியமாக நடந்துகொண்டார் அண்ணா. அவ்வாறு அவர் நடந்து கொண்டிருக்காவிட்டால் இலங்கையில் நமக்கு ஏற்பட்ட கதிதான் இங்கும் நடந்திருக்கும். அண்ணா எப்போதுமே தொலை நோக்குடனேயே செயல்பட்டார். எடுத்துக்காட்டாக சீனா யுத்தத்தின்போது, ஆறு மாதங்கள் யோசித்து விட்டு, பிறகு அவர் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுகிறோம் என்றார். அதன் விளைவாகவே கட்சி பிழைத்தது. பின்னால் ஆட்சியையும் கைப்பற்ற முடிந்தது.

அவரைப்போல் பின்வருவதை யோசித்து, விடுதலைப் புலிகளும் பிரபாகரனும் 2001 செப்டம்பருக்குப் பிறகாவது பயங்கரவாதத்தைக் கைவிடுகிறோம், ஜனநாயக முறைப்படி போராட முன்வருகிறோம் என்று சொல்லியிருப்பார்களேயானால் அவர்கள் மீதான தடையினை பல நாடுகள் விலக்கியிருக்கும். அவர்களெல்லாம் பகிரங்கமாக செயல்பட்டிருக்க வேண்டியதில்லை. சரணடைந்திருக்க வேண்டியதில்லை. தலைமறைவாக இருந்துகொண்டே, அமைப்பையும் அப்படியே வைத்துக்கொண்டே, "நாங்கள் எங்கள் போராட்ட யுக்தியை மாற்றிக் கொள்கிறோம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று இலங்கை அரசை அவர்கள் கேட்டிருந்தால், உலக நாடுகளின் அனுதாபம் நம் மீது திரும்பியிருக்கும். துரதிர்ஷ்டவசமாக அப்படிச் செய்ய விடுதலைப் புலிகளின் தலைமை முன்வரவில்லை.

**நீங்கள் அண்ணாவின் விசுவாசியாக இருந்திருக்கிறீர்கள். இக்கட்டான சூழலில் தி.மு.க. அரசைக் காப்பாற்றவும் செய்திருக்கிறீர்கள். பல்வேறு போராட்டங்களில் முன்னோடியாகவும் இருந்திருக்கிறீர்கள். இருந்தும், கட்சியில் போதிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற வருத்தம் உங்களுக்கு இருக்கிறதா?**

நான் சுயமாக சிந்தித்துச் செயல்படுபவன். அது சிலருக்குப் பிடிக்கவில்லை. அண்ணா இருந்த போதே சிலர் எனக்கு எதிராகச் செயல்பட்டனர். அது கட்சிக்குள் என் வளர்ச்சியை பாதித்தது. ஆனால் அதற்காக நான் ஒன்றும் பெரிதாக வருத்தப்பட வில்லை. மன நிறைவோடுதான் இருக்கிறேன். என்னால் இயன்றதை அப்போது செய்தேன். இப்போதும் செய்கிறேன்.

# சங்கொலி திருநாவுக்கரசு

"சுதந்திரம் கேட்டுப் பல
ஆண்டுகளுக்குப் பிறகுதானே
நாடு விடுதலை பெற்றது.
அதுபோல நாமும் நமது
உரிமைகளுக்காகக் குரல்
கொடுத்துக்கொண்டேயிருக்க
வேண்டும். என்றோ ஒரு நாள்
விடிவு வரும்."

**சங்கொலி திருநாவுக்கரசு:** *பத்திரிகையாளர். திராவிட இயக்க வரலாற்றாய்வாளர்.*

**கேள்வி: 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போர் குறித்து விரிவாகக் கூற முடியுமா?**

**பதில்:** *தமிழகம் அதற்கு முன்னரும் பல இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை சந்தித்திருக்கிறது. 1937இலிருந்து 1940 வரை முதற்கட்டம். 1948இல் இரண்டாவது, 1952இல் மூன்றாவது. ஆக 1965இல் நடந்தது, நான்காவது இந்தி எதிர்ப்புப் போர்.*

*இந்தியா குடியரசான போது 15 ஆண்டுகள் கழித்து இந்தியே ஆட்சிமொழியாகும் என்று முடிவு செய்தார்கள். அவ்வாறே அமல்படுத்தப்படும் என்று செய்திகளும் வெளியாயின. 1963லிருந்தே தி.மு.கவின் போராட்டங்கள் துவங்கிவிட்டன. சட்ட நகலை எரிக்கும் போராட்டம், மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் என குறிப்பிட்ட நாட்களில் ஐந்தைந்து பேராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதென முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறு பலர் கைதாயினர். அதிகபட்சமாக சி.பி.சிற்றரசு ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார். அநேகம் பேருக்கு ஆறு மாதங்கள் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது.*

பிறகு 1965ஆம் ஆண்டு ஜனவரி 26ந்தேதியன்று அனைத்து திமுகவினர் இல்லங்களிலும் கறுப்புக்கொடி ஏற்றுவதெனவும் முடிவாயிற்று. இந்த அமைதியான, ஆரவாரமற்ற எதிர்ப்பைக்கூட காங்கிரஸ் அரசால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. முக்கிய தலைவர்களைக் கைதுசெய்ய ஆரம்பித்தனர். இவ்வாறு பிரச்சினையை பெரிதாக்கியதே காங்கிரஸ்தான்.

சென்னையில் மட்டும் 100 வட்டங்களிலும் ஒரே நாளில் 100 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் மட்டுமல்லாமல், வந்திருந்தவர்கள்கூட பலர் கைது செய்யப்பட்டனர். பலர் தாக்கப்பட்டனர். இதெல்லாம் மக்களின் கோபத்தை அதிகரித்தது. பெரும்பாலும், குடிசைப் பகுதிகளில்தான் அத்தகைய கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. இங்கெல்லாம்தான் தி.மு.கவிற்கு செல்வாக்கு இருந்தது.

புறம்போக்கு நிலத்தில் குடிசை போடுவார்கள். மன்றம், படிப்பகம் இப்படி ஏதாவது திறப்பார்கள். கொடியேற்றுவார்கள். கிளைக் கழகம் துவக்குவார்கள். இப்படியாகத்தான் தி.மு.க. வளர்ந்தது.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தி.மு.க.வின் பொதுச் செயலாளர் அண்ணா அப்போது கைதாகவில்லை. மாறாக கலைஞரும் *முரசொலி* மாறனும்தான் கைதாயினர். ஏன்? அவர்கள் *முரசொலி* நாளேட்டை நடத்திவந்தனர். அதன் வழியாக போராட்டச் செய்திகள் மக்களுக்குச் சென்றன. அதைத் தடுக்கவிரும்பியது அரசு. அதனால்தான் அவர்கள் இருவரும் முதலிலேயே கைது செய்யப்பட்டனர். ஆனாலும் போராட்டம் வலுத்தது. பெருமளவில் மாணவர்களும் கட்சி சார்பற்றவர்களும்கூட, போராட்டத்தில் குதித்தனர்.

அதையெல்லாம் நல்லதொரு திருப்பம் என்று

கூறமுடியாது. ஏனெனில், சமூக விரோதிகளும் போராட்டத்தில் பங்கேற்கத் தொடங்கினர். சாலை மறியலில் ஈடுபட்டு, வாகனங்களின் மீது முழக்கங் களை எழுதுவது என்று தொடங்கிய ஆர்ப்பாட்டம், சமூக விரோதிகள் வருகையால் அவற்றிற்கு தீ வைப்பது என்றாகியது. தபால் அலுவலகங்களுக் கெல்லாம் தீ வைக்கப்பட்டன. கோவையில் ஒரு இன்ஸ்பெக்டர் கொளுத்தப்பட்டார்.

ஏறத்தாழ, போராட்டம், தி.மு.கவின் கையை விட்டுப் போய்விட்டது என்றுகூட சொல்லலாம். இந்தப் போக்கு, திமுகவிற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் என அண்ணா அச்சப்பட்டார். எனவே அவர் போராட்டத்தைத் திரும்பப்பெறுமாறு மாணவர் களுக்கு கோரிக்கைவிடுத்தார். அந்த நேரத்தில் அது சரியான முடிவுதான்.

**இப்போராட்டத்தை பெரியார் எப்படிப் பார்த்தார்?**

1965 இந்தி எதிர்ப்புப் போரில் பெரியாருக்கு பங்கு எதுவும் இல்லை என்றே சொல்லலாம். 1953இலிருந்து பெரியார் தீவிரமாக காங்கிரசை ஆதரித்து வந்தார். 1937, 1948, 1952 என்று தொடர்ந்து இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டிய பெரியார், 1965ல் மட்டும் பங்கேற்க வில்லை. ஏனெனில், 65ஆம் வருடப் போராட்டம் காமராஜருக்கெதிரானது என அவர் நினைத்தார். அத்தகைய போராட்டங்களின் விளைவாக அண்ணாவின் செல்வாக்கு, புகழ் கூடுவதை அவர் விரும்பவில்லை.

**இந்தி எதிர்ப்பின் பின்னணியில் ஆட்சிக்கு வந்ததும் அண்ணா தனது நிலையிலிருந்து நழுவி விட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. 1965லேயே போராட்டத்தை நிறுத்தவே அவர் முயன்றார். ஆட்சிக்கு வந்தவுடன் மீண் டும் ஓர் போராட்டம் எழுந்தது. அப்போதும் வாக்குறுதிகள் அளித்து அதை நிறுத்தினார். இவ்வாறு போராட்டங்களை**

**முடிப்பதில் அவர் காட்டிய அக்கறையை இந்தி ஆட்சி மொழியாகத் தொடர்வதைத் தடுப்பதில் காட்டவில்லை என்கிறார்களே...**

அவர் முதல்வராக இருந்ததே 23 மாத காலந்தான். அகில இந்திய அளவில் சட்டத்திருத்தமெல்லாம் கொண்டுவரச்செய்ய அந்த அவகாசம் போதுமானதல்ல. அவரது மாநிலங்களவை உரையில் நாட்டில் உள்ள 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக அறிவிக்கப்படவேண்டுமென்று அவர் கோரினார். இப்போதோ 23 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் இருக்கின்றன. அவை அனைத்துமே ஆட்சிமொழிகளாக அறிவிக்கப் படவேண்டும் என்று கோருவது தமிழுணர்வாளர்களின் இன்றைய கடமை.

தொடர்ச்சியான பல போராட்டங்களின் பலனை நாம் முழுதாக அடைந்துவிடவில்லை. ஆயினும் இந்தி ஒரே ஆட்சிமொழியாவதை தடுத்து நிறுத்தி இருக்கிறோம். மற்ற இந்தி பேசாத மாநிலத்தவரும் நம்முடைய போராட்டங்களின் காரணமாக பயனடைந்திருக்கின்றனர். இந்திய அளவில் இந்தி ஆதிக்கத்தை நாம் தடுத்து நிறுத்தி இருக்கிறோம் என்ற பெருமை நமக்கு உண்டு.

**தமிழ்த் தேசியம் இனி எத்திசையில் பயணிக்கும், எத்திசையில் பயணிக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

ஈழப் பிரச்சினைக்குப் பிறகு மக்கள் மத்தியில் இன உணர்வு தீவிரமடைந்திருக்கிறது. ஈழப் போராட்டத்தின் துவக்க காலத்திலிருந்த பரவலான ஆதரவு பல்வேறு காரணங்களினால் பிறகு பலவீனமடையத் தொடங்கியது. ராஜீவ் காந்தியின் மரணம் மேலும் ஒரு பின்னடைவைக் கொடுத்தது. விடுதலைப் புலி ஆதரவாளர்களை மக்கள் சற்று அதிருப்தியுடனேயே பார்த்தார்கள். ஆனால் தொடர்ந்து ஈழத்தில்

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி, கொடுமைகள் அந்த எதிர்மறைப் போக்கை மாற்றின. மோதல்களின் இறுதிக்கட்டங்களில் தமிழுணர்வு மீண்டும் பொங்கி எழுந்தது. பிரபாகரனின் மரணம் எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்தது. ஒரு தமிழ் வீரன், தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய ஒருவன் சிங்களவரால் கொல்லப்பட்டுவிட்டான் என்ற செய்தியை எவருமே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏதோ தங்கள் வீட்டுப் பிள்ளை ஒருவன் இறந்துவிட்டதைப் போன்றே பலரும் வருந்தினர். அந்த அளவுக்கு தமிழ்த் தேசிய உணர்வு இன்று வலுவாக இருக்கிறது.

**இப்போராட்டம் இனி எத்திசையில் செல்லும் என நினைக்கிறீர்கள்?**

ஆயுதமேந்திய போராட்டம் தோற்றுவிட்டது. எனவே நாம் ஜனநாயக வழியிலேதான் செல்ல வேண்டும். தமிழனுக்கோர் தனிநாடு என்ற கோரிக்கைக்கு இன்றளவும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. திராவிட நாடு என்பதுகூட தமிழர்நாடுதான். கண்ணதாசன்கூட ஒரு திரைப்படப் பாட்டில் 'ஒரு காலத் தமிழ்நாடு இதுதானடா. உன்காலத் தமிழ்நாடு அறியாதடா' என்று எழுதியிருப்பார். அந்த அளவிலே திராவிட நாடு என்று அவர்கள் கேட்டதன் உட்பொருளே பழந்தமிழகத்தை மீட்டெடுக்கவேண்டும் என்பதுதான்.

தமிழிலிருந்து கிளைத்த மற்ற மொழிகள் வடமொழி ஆதிக்கத்தின் காரணமாக, இலக்கண வீச்சின் காரணமாக, நமது மொழிக் குடும்பத்திலிருந்து பிரிந்து போயின. அவர்கள் தனித் தனி தேசிய இனமானார்கள். இந்நிலையை மாற்றவேண்டும். நாம் எல்லோரும் ஒரு வகையில் தமிழர்களே அல்லது திராவிடர்களே என்று உணரவேண்டும்.

**'தமிழர் கழகம்' என்று பெயர் சூட்டப்படவிருந்ததாகவும், பின்னர் சிலர் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக பெரியாரும் அண்ணாவும் 'திராவிடர் கழகம்' என்று மாற்றியதாகவும் சொல்லப்படுகிறதே....**

இல்லை, அது தவறான செய்தி. நீதிக்கட்சியின் முழுமையான பெயர் என்ன? South Indian Liberal Federation. சௌத் இண்டியா அல்லது சென்னை மாகாணம், திருப்பதியிலிருந்து தற்போது ஒரிசாவுடன் இணைந்திருக்கும் பெர்ஹாம்பூர் வரை பரந்து விரிந் திருந்தது. தமிழர் வரலாற்றை நீங்கள் ஆராய்ந்தால், சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆளுகைக்குள் ஏறத்தாழ இந்த நிலப்பரப்பு முழுவதும் இருந்தது. பிரித்தானியர் ஆட்சியில் அது அப்படியே ஒரு மாகாணமாயிற்று. புதுக்கோட்டை, திருவிதாங்கூர், கொச்சி, மைசூர் போன்ற சமஸ்தானங்களைத் தவிர.

மேலும் வடபுலத்தறிஞர்கள் தமிழ்நாட்டை சுட் டும்போது திராவிடம் என்ற சொல்லைப் பயன் படுத்தினர், அதேபோல் தமிழர்களைத் திராவிடர்கள் என்றழைத்தனர். தமிழ் வேறு; திராவிடம் வேறல்ல. தமிழ்த் தேசியமும், திராவிட தேசியமும் ஒன்றுதான். அந்த முறையில்தான் திராவிட நாடு கோரிக்கையும் வைக்கப்பட்டது.

நீதிக் கட்சியின் பெயரை மாற்றும்போது நீங்கள் கூறுவதுபோல் தமிழர் கழகம் என்று முதலில் முடிவெடுக்கப்பட்டு பின்னர் மாற்றப்படவில்லை. அம்மாநாட்டில் கலந்துகொண்ட கி.ஆ.பெ. தமிழர் கழகம் என்று மாற்றுங்கள் எனக் கோரினார் என்பது உண்மை. அவரது கோரிக்கை ஏற்கப்படாததால் அவர் தமிழர் கழகம் துவங்கினார். பின்னர் அதையும் கலைத்துவிட்டார். இதுதான் நடந்தது.

**40 ஆண்டு கால திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்குப் பின்னர் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் தமிழின உணர்வு எப்படி இருக்கிறது?**

**ப.** நூறாண்டுகளுக்கும் மேலாக தமிழுணர்வு இங்கு பல்வேறு நபர்களால், குழுக்களால் போற்றி வளர்க்கப் பட்டிருக்கிறது. திராவிட இயக்கத்தைத் தவிரவும் பல தமிழறிஞர்கள் இதற்காகப் பாடுபட்டிருக்கிறார் கள். அதெல்லாம் ஒன்றும் வீண்போகவில்லை.

விடுதலைக்கு முன்பே காங்கிரஸ் தனது தமிழ்நாட்டுக் கிளைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எனப் பெயர் சூட்டியது. அந்த அளவுக்கு தமிழ் இயக்கங்கள் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன.

ஆனால், மாநிலத்தின் பெயரை மாற்ற காங்கிரஸ் அரசு மறுத்ததென்பது வேறு கதை!

**ஈழத்தைப் பொறுத்தவரை தமிழர்களின் குரல் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகக் கூறலாம். அந்த அளவுக்கு பலவீனமாகிவிட்டதா தமிழின வலியுறுத்தல்?**

நம்மிடம் ஒற்றுமை இல்லை என்பதைத் தவிர நமது தலைவர்களிடமோ, அமைப்புகளிடமோ எவ்விதக் குறைபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோருமே ஓங்கிக் குரல் கொடுத்தார்கள். ஆர்ப் பாட்டங்கள் நடத்தினார்கள். ஒன்றுபட்டு நடத்த வில்லை. அவ்வளவே. ஒரே குரலாக ஒலித்திருக்கு மானால் நிச்சயம் அப்படிப்பட்ட வலியுறுத்தலுக்குப் பயன் இருந்திருக்கும். தேர்தல்கள் காரணமாக தமிழ்ச் சக்திகள் மேலும் பிளவுபட்டன.

ஊடகங்களும் ஆயுதமேந்திய போராட்டத்தையும் தனி நாடு கோரிக்கையையும் பெரிதுபடுத்துகின்றன. இந்தியாவின் மற்ற பகுதிகளில், அசாமில், வட கிழக்கில், இம்மாதிரிப் பிரிவினைக் கோரிக்கைகள் எழவில்லையா?

அய்யா திரு.வி.க. டமில் நேஷன் என்பதை தமிழ்நாடு என்று குறிப்பிடுவேன், மொழிபெயர்ப்பேன் என்று இருபதுகளில் நவசக்தியில் எழுதினாரே;

அவர் என்ன தி.மு.கவா? நீதிக்கட்சிகூட தோன்றி அப்போது நான்காண்டுகள்தானே ஆகியிருந்தது?

**ஆனால் ஈழப் பிரச்சினையில் அனுதாபம் மனதளவில் இருந்தது, செய்தியாளர்கள் கேட்டால் பாவம் ஈழத் தமிழர்கள் என்பார்கள். அதைத் தாண்டி எதுவும் நடந்துவிட வில்லையே? தேர்தல் முடிவுகள்கூட விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கு சாதகமாக அமைந்துவிடவில்லையே?**

மக்களின் கோபம் காரணமாகத்தான் காங்கிரஸ் அத்தனை இடங்களில் தோற்றிருக்கிறது. தி.மு.க. ஆதரவு இல்லாவிட்டால் படுதோல்வி அடைந்திருக்கும். கலைஞரும் அடிக்கடி தன்னாலியன்றவரை மாநில சுயாட்சியை வற்புறுத்துகிறார். வைகோ தீவிரமாக ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கிறார்.

எதுவும் உடனடியாக நடந்துவிடுவதில்லை. சுதந்திரம் கேட்டு 21 ஆண்டுகள் கழித்துத்தானே நாடு விடுதலை பெற்றது. அதுபோல நாமும் நமது உரிமைகளுக்காகக் குரல்கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். என்றோ ஒரு நாள் விடிவு வரும், வராமலிருக்காது.

# அ.கா. பெருமாள்

"திராவிடச் சிந்தனை
தலித்துகளைக் கணக்கில்
எடுத்துக் கொள்ளாமல்
உருவாக்கப்பட்டது என்ற குரல்
இப்போது ஒலிக்க ஆரம்பித்து
விட்டது. தமிழ்த் தேசியம்
வலுப்பெறாததற்கு இதுபோலப்
பல காரணங்கள் உண்டு."

**அ.கா. பெருமாள்:** *நாட்டாரியல் அறிஞர், வரலாற்றாசிரியர்.*

**கேள்வி: தமிழ்த் தேசிய உணர்வு தமிழ்நாட்டில் எப்போது வேரூன்றத் துவங்கியது?**

*பதில்: தமிழகத்தில் தமிழ்த் தேசியம் என்பது பிராமணர்களுக்கும் சமஸ்கிருதத்திற்கும் எதிரான குரலாகத்தான் ஒலித்தது என்ற கருத்து இருக்கிறது. அது ஒரு விதத்தில் உண்மைதான். உண்மையான மொழி உணர்வுடன் ஆதரவுக் குரல் எந்தக் காலத்திலிருந்து ஒலிக்க ஆரம்பித்தது என்பதைத் துல்லியமாகக் கூறமுடியவில்லை.*

*கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நாவுக்கரசரும் பதினொன்றாம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரும் பதினேழாம் நூற்றாண்டில் கருணைப் பிரகாசரும் அதற்குப் பிறகு அதிவீரராம பாண்டியனும் குமரகுருபரரும் தமிழுக்காகக் குரல் கொடுத்தனர். இவர்கள் தமிழ் என்னும் மொழி பழமையும் பெருமையும் உடையது என்பதைப் புலப்படுத்தினார்கள். இவர்களின் குரல் பிராமணர்களுக்கோ, சமஸ்கிருதத்திற்கோ எதிரான குரல் அல்ல.*

*ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் உதவியுடன் 1784ல் ஆரம்பிக்கப்பட்ட* Royal Asiatic Society of Bengal

சமஸ்கிருதத்தின் பழமையையும் பெருமையையும் பேச ஆரம்பித்தது. இதனால் வரலாற்றாசிரியர்களும் இந்தப் பின்னணியில் எழுத ஆரம்பித்தனர். உதாரணமாக, வில்லியம் ஜோன்ஸ் போன்றவர்கள். பிராந்திய மொழிகள் சமஸ்கிருதத்திற்குக் கடன் பட்டவை என்று இவர்கள் பேச ஆரம்பித்தபோது எதிர்ப்புக் கிளம்பியது. தமிழ் மொழி உணர்வு பற்றிய தூண்டுதல் இதனால் ஏற்பட்டது.

ராபர்ட் கால்டுவெல் என்னும் பாதிரியாரின் (1814–1891) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் 1856ல் வெளியான பிறகு தமிழரின் தனித்தன்மை அறிவியல்பூர்வமாக நிறுவப்பட்டது. இதைத் தமிழத் தேசிய மைல் கல்லாகக் கொள்ள லாம். இந்தியா என்ற சொல்லை எப்படி ஐரோப்பி யன் உருவாக்கினானோ, அதேபோல, திராவிட மொழிகளில் தமிழ் பழமையானது என்பதை அறி வார்ந்த நிலையில் உருவாக்கியவரும் ஐரோப்பியர் தான். இந்த வேர் பிற்காலத்தில் பலமாக முளை விட்டது. 1904ல் கனகசபை பிள்ளையின் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்ற ஆங்கில நூல் வெளிவந்த பிறகு தமிழ்ப் பண்பாட்டு வரலாறு மீட்டெடுக்கப்பட்டது.

**யாழ்ப்பாணத் தமிழர்கள் பன்நெடுங்காலமாக தங்கள் மத்தியில் தமிழின உணர்வு இருந்துவருவதாகக் கூறுகிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

சிங்களர், இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த தமிழர் களை ஆரம்ப காலத்தில் உயர்வாக மதித்தனர். இது கிழக்கு மாகாணத்தில் வசித்த தமிழர்களிடம் மிகுந்த மனக்கசப்பை உருவாக்கியது. இதனால், தங்களு டைய தமிழ் உணர்வை ஸ்தாபிக்க வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது. இது பொது வான தமிழ்த் தேசிய உணர்வுக்குக் காரணமானது. யாழ்ப்பாணத் தமிழர்களில் வெளிநாடுகளுக்குச்

சென்றவர்களில் பலர் உயர் வர்க்கத்தினராய் இருந்தனர். இவர்களின் சைவ, வேளாள மேலாண்மை மொழி மேலாண்மையாக மாறியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் பிரிக்க முடியாதபடி இருந்தது. தமிழகத்தைப் போல யாழ்ப்பாணத்தில் பிராமண மேலாண்மை இல்லை. சைவ குருமார்களைப் பிராமணர்களுக்கு நிகராகப் பேசும் நிலை உண்டு. சடங்கு சார்பான விஷயங்களில் இது தீவிரமாக இருந்தது. சைவத்தின் சார்பாளராக இருந்த வேளாளர்கள் தங்கள் அடையாளங்களைத் தமிழிலிருந்து தேடினர்.

யாழ்ப்பாணத்தின் சமூக அங்கீகாரத்துடன் பேசப்படுவது சைவமும் தமிழும்தான். கார்த்திகேய சிவத்தம்பியின் கருத்துப்படி ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. தமிழை சைவத்துடன் இணைத்துப் பழமையைத் தேடிய தமிழறிஞர்கள் 18ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டனர். ஆறுமுக நாவலரைப் போன்ற அறிஞர்கள் தமிழ் உணர்வுடன் சைவத்தைப் பேசுவதற்குரிய சூழ்நிலை அவருக்கு முன்பே தோன்றிவிட்டது.

1862ல் வெளிவந்த வின்ஸ்லோவின் தமிழ் – ஆங்கில அகராதி இலங்கை அறிஞர்களின் உதவியுடன் வெளிவந்தது. உ.வே.சாவுக்கு முன்னோடியாக விளங்கியவர் சி.வை. தாமோதரன் பிள்ளை (1832–1901). இவர் தன் வீர சோழியப் பதிப்பு நூலில் (1891) தமிழ் இலக்கியங்களின் காலங்களை பாகுபாடு செய்ய ஆரம்பித்தார். பழமையான வளமான மொழி தமிழ் என்ற உணர்வை இந்த முகவுரை உருவாக்கியது.

**தமிழ்நாட்டில் சற்றுக் காலம் தாழ்த்தியே அத்தகைய உணர்வுகள் வளரத் தொடங்கியது என்பது உண்மையெனில், ஏன் அப்படி நடந்தது?**

தமிழகத்தில் தமிழ் அல்லாத மொழி பேசியவர்களின் ஆட்சி தொடர்ந்து நடந்துவந்திருப்பதை வரலாறு விரிவாகக் காட்டுகிறது. களப்பிரர், பல்லவர், நாயக்கர், மராட்டியர் என நான்கு பிற மொழியினரின் ஆட்சியால் மொழிக் கலப்பும் பண்பாட்டுக் கலப்பும் கலைகளின் சங்கமமும் நடந்தாலும் தமிழ் மொழியின் மீது இந்த அந்நியர்களின் பார்வை வேறுபட்டுத்தான் இருந்தது. நாயக்கர், மராட்டியர் காலத்தில் தமிழ் உணர்வு மேலோங்குவதற்குரிய சூழ்நிலை இருக்கவில்லை.

பல்லவர் காலத்திலிருந்தே பிராமணர் அல்லாதார் மாறுபாடு இருந்து வந்ததற்குச் சான்று உண்டு. விஸ்வகர்மா ஜாதியினர் பிராமணரிடம் முரண்டிய நிகழ்ச்சி சோழர் காலத்தில் ஆரம்பித்துவிட்டது. ஆனால், இந்த முரண்பாட்டுக்குச் ஜாதிய அந்தஸ்து அடையாளங்கள் காரணமாக்கப்பட்டனவே தவிர சமஸ்கிருத மொழி காரணமாக இருக்கவில்லை. பிற்காலச் சோழ அரசர்களில் ராஜ ராஜனைப் போன்ற மன்னர்களுக்கு சமஸ்கிருத மொழியின் மேல் வெறி இருந்திருக்கிறது. 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி' என்று தொடங்கும் கல்வெட்டு தொடர்பான வட்டார விளக்கம் இதை உணர்த்தும். என்றாலும் இது தமிழ் உணர்வுக்கு எதிராகச் செயல்படவில்லை.

**சைவ வேளாளர் தமிழகத்தில் தமிழுணர்வை வளர்த்தனர்; முக்கியமாக கிறிஸ்தவ தாக்குதலை எதிர்கொள்ள மொழி, மத உணர்வை ஊக்குவித்தனர் என்பது சரியா?**

சரியல்ல. தமிழகத்தில் மொழி உணர்வு மதரீதியாகச் செயல்பட்டது என்பதைவிட இலக்கியவாதிகள், தமிழ் அறிஞர்கள் வழி செயல்பட்டது என்பது தான் பொருத்தமானது. பண்டைய திண்ணைப் பள்ளிக்கூட அண்ணாவிகள் (உபாத்தியாயர்) தாங்

கள் சார்ந்த சமய இலக்கியங்கள், நீதி இலக்கியங் களைக் கற்பிப்பதில்தான் முனைப்புக் காட்டினார் கள். இவர்கள் மாணவர்களுக்கு மொழி உணர்வை ஊட்டியதைவிட நீதி, அறம் சார்ந்த விஷயங்களை யும் சைவம் அல்லது வைணவம் தொடர்பான புராண/ இலக்கியங்களையும் கற்பிப்பதன் வழி தமிழ் மீது ஆர்வத்தை ஊட்டினர். இந்த ஆர்வம் தமிழ் மீதுள்ள தேசிய உணர்வாக மாறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கவில்லை.

திண்ணைப் பள்ளி அண்ணாவிகள் சமஸ்கிருத வெறுப்பாளர்கள் அல்லர். இவர்கள் தங்களின் விருப்பமான சமயத்தின் சார்பாளராய் இருந்தனர். ஆரம்பகாலத்தில் கண்டெடுக்கப்பட்ட நன்னூல் கண்டிகை உரை ஏடுகளில் கிரந்த எழுத்துகள் இருந்தன. மெய்கண்ட சாத்திரங்களைப் படித்த சைவ வேளாளர்களுக்குக் கிரந்த எழுத்துகளை அண்ணாவிகள் கற்பித்திருக்கின்றனர். ஆகவே சைவ வேளாளர்கள் சைவ சமயம் சார்ந்த இலக்கியங்களையும் புராணங்களையும் கற்பிப்ப தில்தான் ஆர்வம் காட்டினர். இதன் வழி தமிழ் வளர்ந்தது என்று எடுத்துக்கொள்ளலாம்.

கிறிஸ்தவத் தாக்குதலை எதிர்க்கச் சைவம் பயன்பட்டது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. தென் மாவட்டங்களில் கத்தோலிக்கம் பரவுவ தைத் தடுக்க சைவ சமய விழிப்புணர்வு முயற்சி நடந்திருக்கிறது. மதுரை நாயக்க அரசனான முத்து வீரப்ப நாயக்கனின் (1609 – 1623) ஒன்றுவிட்ட சகோதரனான செவந்தியப்ப நாயக்கன் சைவ விழிப் புணர்வை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர். தென் மாவட்டங்களில் திருவாவடுதுறை மடம் வழி யாக சைவத்தைப் பரப்ப இவர் முயற்சி எடுத்தார். இங்கு மத உணர்வுதான் ஊக்குவிக்கப்பட்டது. மொழி உணர்வு அல்ல.

**சைவ மத உணர்வு தமிழ்த் தேசியத்தின் ஒரு முக்கியமான கூறா? நாத்திகர்களோ, வைணவர்களோ, சிறு தெய்வ வழிபாட்டில் ஈடுபடுபவர்களோ தமிழ் உணர்வு பெற முடியாதா?**

*நாட்டார் தெய்வ வழிபாடு எனப்படும் சிறு தெய்வ வழிபாடு வட்டாரத் தன்மை உடையது. ஒரு வட்டாரத் தெய்வத்தின் வழிபாட்டுக் கூறுகளை இன்னொரு வட்டாரத் தெய்வக் கூறுகளுடன் ஒப்பிட முடியாது. இதில் உள்ளுணர்வு, மரபு, நம்பிக்கை மூன்றும் முக்கியம். தத்துவார்த்தம் இவ்வழிபாட்டில் கிடையாது. வழிபாடு, சடங்குகள், கலை நிகழ்த்துதல் மூன்றும் இவற்றில் பிணைந்தவை. இத்தனை கூறுகளில் மொழி உணர்வு இரண்டாம் பட்சம்தான். நாட்டார் தெய்வங்கள் தொடர்பான நிகழ்த்து கலைகளின் பனுவல்கள் கூட பன்முகத் தன்மையுடன் மொழிக்கு அப்பால் உள்ளன. இதிலும் மொழி இரண்டாம் பட்சம். நாட்டார் தெய்வம் பற்றி முதல் ஆய்வை வெளியிட்ட ஹென்றி ஒயிட் ஹெட் (1903) என்பவர் முதல் இன்றுவரை உள்ளவர்கள் யாரும் இத்தெய்வ வழிபாடு வழியாக தமிழ் உணர்வு வந்தது என்று கூறவில்லை.*

*வைணவ மரபு வட இந்திய மரபுடன் தொடர்புடையது. சமஸ்கிருத மொழியுடன் நெருங்கியது. தமிழும் சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிரவாள நடையுடன் வைணவத்திற்குத் தொடர்பு அதிகம். என்றாலும் தென்கலை வைணவர் தமிழ் பாசுரங்களை வடமொழி வேதங்களுக்கு நிகராகவே கருதினர். இங்கும் மரபு, சடங்கு, மதரீதியான தத்துவார்த்தம், வழிபாட்டுக்கூறுகள், பாகவதச் செல்வாக்கு போன்றவைதான் முனைப்புடன் இருக்கும். தென்கலையினர் தமிழ் உணர்வு உடையவர்தாம். என்றாலும் மத உணர்வுக்குப் பின்பே மொழி உணர்வு இருக்கும்.*

தமிழக நாத்திகர்கள் தமிழ் இலக்கியங்கள், நாட்டார் நிகழ்த்து கலைகள், நாட்டார் வழிபாடுகள், இதிகாச புராணங்கள், பொதுவான சாஸ்த்ரீய கலைகள், அழகியல் கூறுகளையுடைய கவின் கலைகள், இசை வடிவங்கள் போன்ற எல்லாவற்றையுமே இவை பிராமணச் சார்புடையவை என்றோ, கடவுள் இல் கொள்கை என்றோ பார்த்தவர்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக இவை எல்லாவற்றையுமே இவர்கள் விமர்சிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாயினர். இதன் காரணமாய் இவர்கள் 2000 வருடப் பாரம்பரியம் உடைய தமிழ் இலக்கியம், பண்பாடு, கலைகளை உதற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாயினர். ஒரு மொழி இலக்கியங்களின் அழகியல் கூறுகளையும் தொன்மங்களையும் உதறுவது என்பது தரமான மொழி உணர்வைக் கொடுக்குமா என்ற கேள்வி எழுகிறது. தொன்மம், இலக்கியம், அழகியல் கூறுகளை உடைய கவின் கலைகள் தொடர்பில்லாத தமிழ் உணர்வு ஜீரணிக்க முடியாதது. தமிழ் நாட்டு நாத்திகர்களுடன் கேரளத்து நாத்திகர்களையும் கேரள மார்க்ஸிய வாதிகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது தமிழ் நாத்திகரின் தமிழ் உணர்வின் அர்த்தம் புரியும்.

கேரள மார்க்ஸியவாதிகளுக்கு கதகளியின் அழகியல் கூறுகளை அனுபவிக்கவோ, ஓணப் பண்டிகைகளைக் கொண்டாடவோ மதமோ, பிராமணரோ தடையாக இருக்கவில்லை. ஓணப் பண்டிகை மாபலி என்னும் சக்கரவர்த்தியின் நினைவுக்குக் கொண்டாடப்படுவது என்ற தொன்மம் கேரள மார்க்ஸியவாதியின் நினைவுக்கு வராது. ஓணம் மலையாளிகளின் பண்டிகை என்றே அவர்கள் பார்ப்பார்கள். நாட்டார் தெய்வ வழிபாடு சார்ந்த தெய்யம் என்ற கலையையோ, புராணப் பனுவல்கள் சார்புடைய கதகளி கலையையோ மதம் சார்ந்தோ, நம்பூதிரி சார்ந்தோ மலையாள மொழி

பேசும் மார்க்ஸியவாதி பார்ப்பதில்லை. அவற்றை அவன் மொழி உணர்வுடனேயே பார்க்கிறான். இத் தகைய பார்வை தமிழ் நாத்திகவாதியிடம் இல்லை.

சைவ மத உணர்வு தமிழ்த் தேசியத்தின் முக்கியக் கூறு என்பது ஓரளவு பொருத்தமுடையது. சைவ சமயம் பக்தி, சித்தாந்தம் என்னும் அடிப்படையில் நிலவியது. சைவத்தின் சித்தாந்தத்தை விமர்சித்த உட்சமயவாதிகள் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும் சைவத்திற்கும் தமிழிற்கும் தொடர்பு அதிகம் என்று கூறலாம். சைவக் கடவுளர்களுடன் சார்த்திக் கூறப்படும் தொன்மக் கதைகளில் தமிழ் உணர்வுடையனவும் உண்டு. இறையனார், களவி யல் உரை இயற்றினார். சிவவழிபாடுடைய அகத்தியர் இலக்கணம் யாத்தார். சிவன் தன் தொண் டனுக்குச் செய்யுள் இயற்றிக் கொடுத்தான் என்பன போன்ற பல தொன்மங்கள் சைவம் சார்புடையவை. இந்தக் கதைகள் மூலம் பெற்ற உணர்வு சராசரி சைவனுக்குத் தன் மொழி மீது நெருக்கத்தையும் உணர்வையும் உருவாக்கியிருக் கிறது என்று கூறுவதில் தவறில்லை.

சோழர் காலக் குகையிடிக் கலகம் பற்றிய சரியான செய்திகள் இன்னும் ஆராயப்படவில்லை. என்றாலும் வடநாட்டு சைவம் தமிழகச் சைவம் என்னும் முரண்பாடு இக்கலகத்திற்குக் காரணமா யிருந்திருக்கிறது.

**முதல் இந்தி எதிர்ப்புப் போரில் முன் நின்றது சைவர் கள்தான். ஆனால், பெரியாரின் நாத்திகவாதம், ஜாதி மறுப்பு - இரண்டையும் கண்டு மிரண்டு போய் தமிழ்த் தேசியம் பேசுவதையும் திராவிட இயக்கத்தை ஆதரிப்ப தையும் கைவிட்டனர் என்ற விமர்சனம் பற்றி...**

முதல் இந்தி எதிர்ப்புப் போரில் சைவர்களான வேளாளர்கள் மட்டுமல்ல, வேறு பலரும் கலந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், நாத்திகவாதமும்

ஜாதி மறுப்பும் இவர்களுக்கு உடன்பாடல்ல. இக் கருத்தில் உண்மையுண்டு. சமஸ்கிருத மொழியுடன் தங்களை அடையாளப்படுத்திய பிராமணர்கள், பிரிட்டிஷ் ஆட்சியில் ஆங்கில மொழியுடன் தங் களை இணைத்துக்கொண்டனர். இதனால் இவர் களைப் பொறுத்தவரை தமிழ் இரண்டாம் இடத் திற்குச் சென்றது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் திலேயே இந்த நிலை வந்துவிட்டது. வேதநாயகம் பிள்ளையின்,

“ஆங்கிலம் ஒன்றையே கற்றார் – அதற்கு
ஆவியோடு ஆக்கையும் விற்றார்
தாங்களும் அந்நியரானார் – இன்பத்
தமிழின் தொடர் பற்றுப் போனார்”

என்ற கவிதையை இங்கு சான்றாகக் கூறலாம்.

இந்தி எதிர்ப்பு உருவானதற்கு சமூக, அரசியல் காரணங்கள் உண்டு. மகாத்மா காந்தியின் இந்திய வருகைக்குப் பின் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி இந்தியாவிற்கென ஒரு பொது மொழியை உருவாக்க நினைத்தது. வட இந்தியாவின் பெரும்பாலான மக்கள் பேசிய சமஸ்கிருத வரிவடிவை எடுத்துக் கொண்டு, இந்தி மொழியை இதற்குத் தேர்வு செய்தனர். 1918–1920க்குள் மட்டும் தமிழ்நாட்டில் 40 இந்தி பிரச்சார மையங்கள் துவங்கப்பட்டன.

ஏற்கனவே தமிழில் சமஸ்திருதத் தாக்கம், ஆங் கில மோகம், அரசியலில் பிராமணரின் ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்த்தவர்கள் பொதுமொழியாக தமிழகத்தில் ஊடுருவிய இந்தியையும் எதிர்த்தனர். இவர்கள் இந்தியை சமஸ்திருதத்திற்குச் சமமாக வைத்துப் பார்த்தனர். அதே சமயம் பிராமணரான ராஜாஜி 1937இல் இந்தியைக் கட்டாயப் பாடமாக் கினார். இக்கால கட்டத்தில் சோமசுந்தரப் பாரதி யார், ரெட்டி நாயுடு, ஈ.வே.ரா., சௌந்தரபாண்டி

*யன், கி.ஆ.பெ. விஸ்வநாதம் என பல தரத்தாரும் இந்தியை எதிர்த்தனர். இப்படி எதிர்த்தவர்கள் எல்லோரும் வேளாளர்கள் மட்டுமல்லர். 1940ல் இந்தி விருப்பப் பாடமானது. இதன் பின் இந்தி எதிர்ப்பில் ம.பொ.சி., அப்துல் மஜீத், அருண் தங்கையா போன்றவர்கள் ஈடுபட்டனர்.*

**சங்க காலம் தொடங்கி தமிழ்ச் சமூகத்தில் ஜாதிக் கட்டுமானம் அவ்வளவு கடுமையாக இல்லை. பிராமணர் களுக்குத் தனிச் சிறப்பு எதுவும் இல்லை. ஆனால், விஜயநகர பேரரசின் காலத்தில் பிராமணர்களின் கரம் ஓங்க, பார்ப்பன எதிர்ப்புப் பேசத் தொடங்கியவர்கள் வெள்ளாளர்கள். எனவே அவர்களுக்கு அதில் உள்நோக்கம் இருந்திருக்கிறது.**

*சங்க கால ஜாதி அமைப்பு பற்றிய கருத்து முடிந்த முடிவாய் இல்லை. ஆனால், அப்போது ஜாதிய முரண்பாடு இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள லாம். சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த (இடை யில் களப்பிரர்கள் ஆண்டனர்) பல்லவர் காலத் தில் ஜாதி அமைப்பு புகுந்துவிட்டது. நால் வர்ணம் பற்றிய செய்திகள் இக்காலத்தில் அறிமுகமாகிவிட் டன. சோழர் காலத்தில் ஜாதிய முரண்பாடுகள் வந்துவிட்டன. பிராமணர்கள் சமூகத்தில் உயர்ந்த வர்களாகக் கருதப்பட்டனர்.*

*சோழர் காலத்தில் மொத்த ஜாதிகளும் வலங்கை, இடங்கை என்னும் பெரிய பாகுபாட்டில் அடங்கி இருந்தன. இரண்டிற்கும் இடையே நடந்த கலவ ரங்கள் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் உள்ளன. வலங்கை – இடங்கை கலவரத்தில் (1071) ராஜ மகேந்திரம் சதுர்வேதி மங்கலம் எரிக்கப்பட்டது. இடங்கை, வலங்கை – இரு பிரிவினருமே பிரா மணருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்திருக்கின்றனர். இப்படிக் கிளர்ச்சி செய்தவர்கள் தனிப்பட்ட ஜாதியினர் அல்லர். ஒரு குழுவினர்.*

பிற்காலச் சோழர் காலத்தில் பிராமணர்களின் செல்வாக்குப் பெருகியதற்கு வட்டார, நாட்டார் வழக்குகளில் சான்று உண்டு. முதல் ராஜ ராஜனுக்கு சமஸ்கிருத மொழியின் மீது இருந்த ஆர்வமும் ஒரு காரணமா என்பது ஆராயப்பட வில்லை. பிராமணர்களின் செல்வாக்குக்கு எதிராக விஸ்வகர்மாக்கள் வலிந்துகட்ட ஆரம்பித்தது சோழர் காலத்தில்தான். விஸ்வகர்மா ஜாதியின ரின் எதிர்ப்பு மராட்டியர் காலத்தில் தொடர்ந் ததற்கு மோடி ஆவணச் சான்று உண்டு.

தமிழக நாயக்கர் ஆட்சியில், பிராமணர்கள் பல விஷயங்களைத் தீர்மானிப்பவர்களாய் விளங்கினர் என்பது வெளிப்படையான செய்தி. இப்படியாக படிப்படியாக வளர்ந்த பிராமணர்களின் செல் வாக்கை வேளாளர் மட்டுமே எதிர்த்தனர் என்பது பொருத்தமில்லை. சோழர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் பிராமண எதிர்ப்பு வேறு சமூகங் களிடமும் இருந்திருக்கிறது. இது குறித்த தகவல் களை நாட்டார் வழக்காற்றில் பெரிய அளவில் தேடவில்லை என்பது ஒரு குறை.

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியிலும் பிரிட்டிஷ் ஆட்சியிலும் ஜாதிகளைப் பேணுவதில் சோழர், நாயக்கர்களுக்கு வெள்ளை அதிகாரிகள் சளைக்காத வராய் இருந்தனர். ஜாதிக் கலப்பற்ற நிலையே குலத் தொழில்களைப் பேணும். அது தன் ஆட்சிக்கு லாபம் என்ற சூட்சுமம் அவர்களுக்குத் தெரிந்தி ருந்தது. 1794இல் வெளிவந்த அறிக்கை ஒன்றில் பிரிட்டிஷ்காரரான சர் வில்லியம்ஸ் என்பவர் மனு நூலின் நுண்மைப் பாகுபாட்டுக் கொள்கை யைக் கடைப்பிடித்ததால் பல கோடி இந்துக் குடும்பங்களின் குலத் தொழில் முறை குலையா மல் இருக்கும். இது பிரிட்டனுக்குக் கூடுதல் செல்வத்தைக் குவிக்கும் என்கிறார்.

பிராமண எதிர்ப்பு, வேளாளர்களால் உருவாக்கப் பட்டதல்ல என்பதை நாட்டார் வழக்காற்றுச் செய்தி கள் வழி தொகுத்து நிறுவ முடியும். இது குறித்த முறையான ஆய்வு நிகழ்த்தப்படவில்லை. கி.பி. 17ஆம் நூற்றாண்டு முதல் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஜாதிகளிடம் பிராமண எதிர்ப்பு இருந்திருக்கிறது. மாதிரிக்கு சிலவற்றைச் சொல்ல முடியும்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் உள்ள கதைப் பாடல்களில் பிராமண வெறுப்பு கிண்டலாய்க் காட்டப்படுகிறது. இவற்றில் பிராமணக் கிழவர்கள் பரிகாசமான பாத்திரமாக வர்ணிக்கப்படுகிறார் கள். முத்தாரம்மன் என்னும் தெய்வத்தைப் பற்றிய கதைப் பாடலில் முப்புராதியர்களை தந்திரமாக அழிப்பதற்காகத் திருமால் பிராமண வேடம் போட்டுச் செல்கிறார். இதை வர்ணிக்கும் பகுதி பரிகாசமாக உள்ளது.

கூன் பார்ப்பான் ஆகவல்லோ மாயன்
கோலங்கள் கொள்ளுவர்ராம்
சோமன் தனை எடுத்துப் பார்ப்பான்
சுற்றியே தானும் வந்தான்
வேட்டி உடைதனிலே உண்டு நூற்றுக்கு
மேலே உண்டதன் பீற்றல்
நூறு வயதுடையோன் நடையில் நொந்தவர் போல் நடித்து
சோறு தருவீரோ பக்தர்களே
சூழவே கும்பிடுவேன்
மன்னித் துடிதுடிக்கும் கூன் பார்ப்பான்
மாங்கொட்டை மீசையிலே
பின்னிய ஈருடனே குன்னியும் பேனும் குடியிருக்க

பூண்ட கதவருகே கல்லீரல் போல

கூனிக் கொண்டு அந்த

....

சள்ளைக் கருவாடு மாட்டுக் குடலும் கூடி

வேப்பெண்ணெய் தாளித்தல்லோ கறி

உன்னிவரும் பார்ப்பானே ஒரு சக்தி உண்ணவாரும்.

(சுண்டப் பற்றி விளை கலைமாமணி
சரஸ்வதியின் வீட்டுக் கையெழுத்துப்படி)

அகால மரணமடைந்து தெய்வமாகிறவர்கள் தன் மரணத்துக்குக் காரணமாகிறவர்களையும் தனக்குப் பிடிக்காதவர்களையும் பழிவாங்குவதாகக் காட்டுவது பொதுவான நாட்டார் மரபு. இந்த வகைக் கதைப் பாடல்களின் இறுதிப் பகுதி ஆவேசமாக வர்ணிக்கப்படும். பூலங்கொண்டால் கதைப் பாடலில் இதுபோன்ற நிகழ்ச்சி வருகிறது. பூலங்கொண்டால் கொல்லப்படுகிறாள். இவளது பிணம் பிராமணர் குளிக்கும் கிணற்றில் போடப்படுகிறது. இதனால் பிராமணர் பூலங்கொண்டாளின் உறவினர்களுக்கு அரசு அதிகாரிகள் மூலம் துன்பம் கொடுக்கின்றனர். பூலங்கொண்டாள் இவனிடம் வரம் பெற்றபின் பிராமணர்களைப் பழிவாங்குகிறாள். இது கதைப்பாடலில்,

"துரிதமுடனே அகரத்திலே ஆழ்ந்து பழிமுடிப்பன் என

பருவமுள்ள பெண்கொடியாள் பார்ப்பாரக் கன்னிதனை

கொன்றுகூடக் கூட்டிக்கொண்டார்.

பதினாறு அகரம் சென்று பழிமுடித்த கையாலே

இதழுடனே பார்ப்பாரை இடித்தவரைக் கொல்லுதைய்யா" என வர்ணிக்கப்படுகிறது.

நீலி கதையில் பார்ப்பான் இலக்குமியின் பொன் அணிகலன்களுக்கு ஆசைப்பட்டு வஞ்சகமாய்க் கொன்றுவிடுகிறான். இதை இக் கதைப்பாடல்,

"மன்னுபுகழ் மறவரைப் போல மனதுறப்பாய் வேதியனும்

கசவாளி வேதியனும் கல்லை எடுத்து இட்டனளே" என்று கூறும்.

காத்தவராயன் கதைப் பாடலில் பார்ப்பனர் கிண்டல் செய்யும் பகுதி சுவாரஸ்யமாகக் கூறப்படுகிறது. காத்தவராயர் ஒரு மரத்தின் மேல் கண்ணாரம் வாசித்துக் கொண்டிருக்கிறான். அவன் காலைப் பிடித்து இழுக்கின்றனர் பார்ப்பனர். இதன் பிறகு பார்ப்பனர் அவமதிக்கப்படும் நிகழ்ச்சியைக் கதைப் பாடல் விரிவாகக் கூறுகிறது.

"பறைச்சேரி பறையர்களைப் பார்ப்பனர்கள் தன்னிடத்தில்

ஒருத்திக்கு ஒருவனாக உறங்கவைத்தார் உடனேயே

பறைச்சிகளைக் கொண்டுவந்து

பார்ப்பார்கள் தன்னிடத்தில் தூங்க வைத்து

செய்துமல்லோ துரையனார் பூதமது

அன்றைய ராத்திரியில் ஆயிரம் வேதியர்கள்

பறைச்சிகள் தம்மிடத்தில் படுத்துக்கொண்டு தாமிருந்தார்

பாப்பாத்தி தம்மிடத்தில் பறையர் படுத்திருந்தார்

.....

பறைச்சியருகிருந்து பார்ப்பார்கள் ஓடிவாரார்

பார்ப்பாத்தி வீட்டிலிருந்து பறையரெல்லாம்
வாறார்கள்"

என்று வர்ணிக்கிறது காத்தவராயன் கதைப்பாடல்.

அச்சில் வராத வாய்மொழி மரபில் உள்ள தெனாலிராமன் கதைகளில் பிராமணர்களைக் கிண்டல் செய்யும் Eroticகான பகுதிகள் உண்டு. பிராமணனின் குடுமி நீளமாக இருப்பதற்குக் காரணம் அவனது ஆண் குறியில் ரோமத்தின் வேர் அதிகமாயிருப்பது என்று சொல்லும் ஒரு கதை உண்டு. இதுபோலவே பிராமணப் பெண்ணின் தொடை, பெண்குறியை வர்ணித்துக் கிண்டல் செய்யும் வழக்காற்றுக் கதைகளும் உண்டு.

இப்படியான செய்திகள் எல்லாம் தொகுக்கப் படவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள், பிராமணர் களை வெறுத்த செய்திகள் இவற்றில் நிறையவே உள்ளன. எனவே பிராமண வெறுப்பு என்பது வேளாளர்களுடன் மட்டும் தொடர்புடையதாய் இல்லை. இது பிற்காலத்தில் அரசியலாக்கப்பட்ட பின்பு முறைப்படுத்தப்பட்டது என்று சொல்லிக் கொள்ளலாம்.

**அதுபோல தலித் மக்களையும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரையும் சைவர்கள் அரவணைத்துச் செல்லத் தயாராயில்லை. காலப்போக்கில் அவர்கள் காங்கிரசை ஆதரிக்கத் தொடங்கினர். பிராமணரல்லாத தமிழ்ச் சமூகம் பிளவுபட்டது. தமிழ்த் தேசியம் வலிமை பெறவில்லை. இவ்விமர்சனம் சரியா?**

இந்த விமர்சனம் பொருத்தமாகப்படவில்லை. இந்திய ஜாதியமைப்புப் படிநிலை உடையது. ஒரு ஜாதி தனக்கு அடுத்த படியின் கீழ் உள்ள ஜாதியை ஒடுக்குவது என்ற நடைமுறை பொதுவாக இருந்து வருகிறது. இது தொடர்பான, நுட்பமான விஷயங்கள் சேகரிக்கப்படவில்லை.

நான் தென் மாவட்டங்களில் 1890களிலிருந்து கள ஆய்வு செய்துவருகிறேன். இந்த ஆய்வு அனுபவங்களைத் தனி நூலாக எழுதியிருக்கிறேன் (சுண்ணாம்பு கேட்ட இசக்கி – 2006). என் அனுபவத்தில் படிநிலை ஜாதி அடக்குமுறையை நேரடியாகப் பார்த்திருக்கிறேன். பறையர் ஜாதிக்குரிய சுடலைமாடன் கோவிலின் விழாவில் குழுவர் என்னும் புல்லுக்கட்டி நாயக்கர் ஜாதியினரை விடமறுத்த நிகழ்ச்சி நடந்ததை நேரடியாகப் பார்த்திருக்கிறேன். இப்படிப் பல அனுபவங்கள். இதில் எனக்குக் கிடைத்த செய்தி, தலித் மக்களைப் பெரிய அளவில் அரவணைக்காமல் இருந்தது பிற்படுத்தப்பட்ட ஜாதியினர்தாம். எனவே வேளாளர் பிற ஜாதியினரை அரவணைக்கவில்லை என்பதற்குப் பொதுவான காரணம்தான் உண்டு. இதனால் அவர்கள் காங்கிரசில் இணைந்தார்கள் என்பது சரியல்ல.

தமிழ் பண்பாட்டின் கூறாக இருக்கின்ற பெரும்பாலான இலக்கியங்களையும் கலைகளையும் சடங்கு ஆச்சாரங்களையும் புறந்தள்ளிவிட்டுத் தமிழ் உணர்வுகொள்ள முடியாது என்று நம்பியதால் வேளாளர் சுயமரியாதை அமைப்பிலிருந்து விலகி காங்கிரசை ஆதரித்திருக்கலாம்.

இன்றைய தலித் அமைப்புகளில் சில பழைய திராவிடச் சிந்தனைகளுக்கு எதிராக இருப்பதற்குக் காரணத்தையும் இந்த இடத்தில் யோசித்துப் பார்க்கலாம். திராவிடச் சிந்தனை தலித்துகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் உருவாக்கப்பட்டது என்ற குரல் இப்போது ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. தமிழ்த் தேசியம் வலிமை பெறாததற்கு இது போல பல காரணங்கள் உண்டு.

**மாறி வரும் உலகில் இப்படிப்பட்ட மொழிசார்ந்த இன உணர்வுகள் வலுப்பெறுமா, இழக்குமா?**

வலுவிழக்கும் என்றுதான் தோன்றுகிறது. ஆங்கில மொழியின் மோகம், மிக அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. தமிழ் வழி அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை மிகவும் குறைந்து வருகிறது. தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவற்றில் 50 சதவீதம் அளவிற்கு ஆங்கிலக் கலப்புடன் பேசுவதைக் கேட்பதற்குரிய மனநிலையும் பக்குவமும் உருவாகிவிட்டன. இதற்கு எதிரான சர்ச்சைகள் அரசியலாக்கப் படவில்லை. அரசியல் கட்சிகள் தேர்தல்களில் மொழியின் நுட்பத்தையும் உணர்ச்சியையும் பயன்படுத்திய நிலை இப்போது இல்லை. இது போன்ற நிறையக் காரணங்களைச் சொல்ல முடியும்.

## பண்டிருட்டி ராமச்சந்திரன்

**"தமிழனுக்கென்று தனியாக ஒரு நாடு இருந்திருந்தால் இலங்கையில் இவ்வளவு தமிழர்கள் ஈவிரக்கமில்லாமல் கொலைசெய்யப்பட்டிருக்க மாட்டார்கள். நமது படைகளை அனுப்பி இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றியிருக்கலாம்."**

**பண்ருட்டி ராமச்சந்திரன்:** *முன்னாள் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர். 1987ஆம் ஆண்டின் இந்திய – இலங்கை ஒப்பந்தம் உருவானதில் மிக முக்கியப் பங்காற்றியவர். தற்போது தேசிய திராவிட முற்போக்குக் கழகத்தின் அவைத் தலைவர்.*

**கேள்வி. ஈழ விடுதலைப் போரில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள தோல்வி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*பதில்: ஆயுதமேந்திய போராட்டம் ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால் சிங்கள ஏகாதிபத்தியத் திற்கெதிராக எழுப்பப்பட்ட தனி ஈழக் கோரிக்கை இத்துடன் முடிவுபெற்றுவிட்டதாக நான் நினைக்க வில்லை. பல்வேறு வழிகளில் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதால்தான், தந்தை செல்வா காலத்தில் தனி ஈழக் கோரிக்கையை அவர்கள் எழுப்பினர். ஜனநாயக வழியிலான போராட்டத் திற்குப் பயன்கிடைக்காத நிலையில்தான் இளை ஞர்கள் ஆயுதம் ஏந்தினர். அப்போராட்டத்தினை அண்டை நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசு முறியடித்திருக்கிறது. குறிப்பாக இந்திய அரசு முழுக்க முழுக்க இலங்கைக்கு ஆதரவாக இருந்து மஹிந்தா அரசை ஊக்குவித்திருக்கிறது. தமிழக முதல்வர் மு. கருணாநிதியும் தமிழ் மக்களுக்கு பெரும் துரோகம் இழைத்திருக்கிறார். தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ராஜிநாமா செய்ய வேண்டும் என்ற அனைத்துக்*

கட்சிக் கூட்ட முடிவில் அவர் உறுதியாக இருந்திருப்பாரேயானால், இப்படி ஒரு சோக முடிவு ஏற்பட்டிருக்காது. தமிழகத்தின் நிர்ப்பந்தத்தில் மத்திய அரசு போரை தடுத்து நிறுத்தியிருக்கும். 50,000 அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டிருக்கமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஆயுதப் போராட்டத்தை நடத்திய அளவுக்கு உலக நாடுகளை எப்படி எதிர்கொள்வது, அவற்றின் ஆதரவைப் பெறுவதெப்படி போன்ற விஷயங்களில் பிழைபட்டுவிட்டார். அதன் விளைவை இன்று எல்லோரும் அனுபவிக்கிறோம். ஆனால் இப்படியெல்லாம் நிகழ்ந்துவிட்டதாலேயே இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளுக்குப் பின்னாலிருக்கும் நியாயங்களும் மறைந்துவிட்டதாகப் பொருளில்லை. அரசியல் தீர்வை வழங்கவேண்டிய கட்டாயம் நிச்சயம் உலக நாடுகளுக்கு இருக்கிறது.

**கருணாநிதி ஒரு கட்டத்தில், புலிகளைத் தீவிரமாக ஆதரித்தவர்தானே? அவர் ஏன் தன் நிலையை மாற்றிக் கொண்டார் என்று நினைக்கிறீர்கள்?**

விடுதலைப் புலிகள் என்றெல்ல, தமிழர் நலனில் கூட அவருக்கு உண்மையான அக்கறை என்றும் இருந்ததில்லை. தன் குடும்ப நலனைத் தாண்டி அவர் யோசித்ததே இல்லை. அறிக்கைகளும் பொதுக் கூட்ட உரைகளும் மற்றவர்களை ஏமாற்றுவதற்காகத்தான். ராஜிநாமா நாடகம், மனிதச் சங்கிலி நாடகம், உண்ணாவிரத நாடகம், இப்படி அரங்கேற்றிவிட்டு அமைதியாகிவிட்டார். அவருக்கு தனது ஆட்சியைக் காப்பாற்றுவதில் இருக்கும் அக்கறை வேறெதிலும் இல்லை.

**எம்.ஜி.ஆரின் அணுகுமுறை என்னவாக இருந்தது? எந்த அளவுக்கு அவர் விடுதலைப் புலிகளை ஆதரித்தார்?**

இலங்கை ராணுவத்தின் கொடுமைகளிலிருந்து மக்களை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கமே காப்பாற்ற முடியும் என்று எம்.ஜி.ஆர். நம்பினார். எனவே அவர் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் உறுதியாக இருந்தார். ஐ.நா. மன்றத்தில் இலங்கைத் தமிழர் நிலையை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைப் பணித்தார். அந்த நேரத்தில் ஐ.நாவின் நாற்பதாவது ஆண்டு விழா. எனவே உலகின் முக்கிய தலைவர்கள் பலர் அங்கே வந்திருந்தனர். அவர்களிடமெல்லாம் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி நான் எடுத்துக்கூறவேண்டுமென்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தியும் விரும்பினார். அதையும் நான் செய்துவிட்டு வந்தேன். மத்திய – மாநில அரசுகள் இரண்டும் இலங்கைத் தமிழர் நலனில் மிகுந்த அக்கறை காட்டின என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இன்றோ, நிலைமை தலைகீழாக இருக்கிறது. எனவே தமிழர்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

**இந்திரா தனி ஈழம் ஏற்படுத்த இலங்கை மீது படையெடுக்கலாம் எனத் திட்டமிட்டாரா?**

அப்படிச் சொல்லமுடியாது. அப்படி சிலர் கருத்து தெரிவித்ததென்னவோ உண்மைதான். ஆனால் பங்களாதேஷிற்கும் இலங்கைக்குமிடையே சில முக்கிய வேறுபாடுகள் இருந்தன. பங்களாதேஷைப் போலல்லாமல், இலங்கையில், தமிழர்கள் வடக்கு, கிழக்கு மட்டுமல்ல, கொழும்பு உள்ளிட்ட மற்ற பகுதிகளிலும் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்தனர்; இன்னமும் வாழ்கிறார்கள். இலங்கையோடு போர் தொடுக்கப்போய், சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழ் மக்களுக்கு ஏதேனும் விபரீதம் நிகழ்ந்தால் என்ன செய்வது, இலங்கை ராணுவமே அத்தகைய நடவடிக்கைகளில் இறங்கக்கூடுமே, அப்படியானால்

அம்மக்களைக் காப்பாற்றுவது யார் என்றெல்லாம் யோசித்தார் இந்திரா அம்மையார். அதனால்தான் இலங்கைத் தமிழர்களை சிங்களர்களின் கொடுமை களிலிருந்து காப்பாற்ற, போராளிக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுப்பதே சரியான வழி என்று அவர் நினைத்தார்.

ஆனால், ராஜீவ் காந்தி சிங்கள அரசு ஒரு அரசி யல் தீர்வுக்கு ஒத்துக்கொள்ளும் என்று நம்பினார், அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவரது செயல்பாடுகள் அமைந்திருந்தன. அதன் ஒட்டு மொத்த விளைவாக தமிழர்கள் இன்று பேரழிவினை சந்தித்திருக்கிறார்கள். இலங்கை அரசை, சிங்கள ராணுவ அரசை நம்புவது தவறு என்பதையே மீண்டும் மீண்டும் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

**இந்திய அமைதிகாக்கும் படை, விடுதலைப் புலிகளின் மீது போர் தொடுத்தபோது எம்.ஜி.ஆர் என்ன நினைத்தார்? அவருக்கு அதில் உடன்பாடில்லை என்றே செய்திகள் வெளிவந்தன. தனது அதிருப்தியை மத்திய அரசுக்கு தெரியப்படுத்தினாரா?**

ராஜீவ் – ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர் வரவேற்றார். அதற்கு மூன்று காரணங்கள்: வட கிழக்கு பிராந்தியங்களை ஒன்றிணைக்க இலங்கை அரசு முன்வந்தது. ஒப்பந்தத்தின் விளைவாக, உலக அளவில் போராளிக் குழுக்களுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கக்கூடிய சூழல் ஏற்பட்டது. அக்குழுக்கள் பிராந்திய அரசை ஆளுவார்களேயானால் அவர் களது கௌரவம் மேலும் உயரும். தவிரவும் முந்தைய காலகட்டங்களில் சிங்களத் தலைவர்கள் தமிழர் களுடன் ஏற்படுத்திக்கொண்ட எந்த ஒப்பந்தத்தை யும் மதிக்கவில்லை, நிறைவேற்றவில்லை, அப்படிப் பட்ட பின்னணியில், இந்திய அரசே புதிய ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என்பதற்கான உத்திரவாதமாக

இருந்தது. அதனால்தான் எம்.ஜி.ஆர் அந்த ஒப்பந்தத்தை மனதார வரவேற்றார்.

அந்த நேரத்தில் சிங்களர்கள் மத்தியில் இதற்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டபோது, அந்நிகழ்ச்சியை அன்றைய இலங்கை பிரதமர் பிரேமதாஸ புறக்கணித்தார். ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. ஊரடங்கு உத்தரவெல்லாம் போடப்பட்டது. ராணுவ அணிவகுப்பில் ராஜீவ் காந்தியையே துப்பாக்கியின் பின்புறத்தால் ஒரு சிங்கள வீரன் தாக்கமுயன்றான். அந்த அளவுக்கு அவர்கள் மத்தியில் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பிருந்தது. தமிழர்கள் வரவேற்றார்கள்.

ஆனால், விரைவிலேயே நிலைமை மாறத் தொடங்கியது. அதற்குக் காரணம், மத்திய அரசின் அணுகுமுறைதான். விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பதில் நிதானம் காட்டாமல், அவசரப்பட்டார் ராஜீவ். நாங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். ஆனால் மாநில அரசின் கருத்துகளை உதாசீனம் செய்து, தான்தோன்றித் தனமாக அவர் நடந்துகொண்டது அவருக்கே எமனாய் முடிந்தது.

**பிரபாகரன் எம்.ஜிஆருக்கு நெருக்கமானவராக இருந்தார். எம்.ஜி.ஆரைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக, மதுரை தமிழ் ஈழ ஆதரவாளர் மாநாட்டையே அவர் புறக்கணித்தார். போராளிக்குழுக் களுக்காக திரட்டிய நிதியில் தனது பங்கையும் பெற பிரபாகரன் மறுத்தார் என்பது உண்மையா?**

பிரபாகரன் கருணாநிதியை நன்கு அறிந்திருந்தார். அதனால்தான் அந்த டெசோ (Tamil Eelam Supporters' Organisation - TESO) நாடகத்தை அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. வெறும் 50 லட்ச ரூபாய்க்காக அங்கே சென்று கருணாநிதியின்

எம்.ஜி.ஆர் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு வலு சேர்க்கக் கூடாது என்று அவர் நினைத்திருப்பார். அந்த மதுரை மாநாடே, முதல்வர் எம்.ஜி.ஆர் ஒரு மலையாளி, அதனால்தான் அவருக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை இல்லை என்று மறை முகமாக மக்களுக்குச் சொல்லவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதை உணர்ந்தே பிரபாகரன் ஒதுங்கிக்கொண்டார்.

**ஆனால் இந்திய அமைதி காக்கும் படையுடன் மோதல்கள் தொடங்கியவுடன் உதவிகோரி எதிர்க் கட்சித் தலைவராக இருந்த கருணாநிதிக்குத்தானே பிரபாகரன் கடிதம் எழுதினார். அவர் எம்.ஜி.ஆர்.மீது நம்பிக்கை இழந்துவிட்டதைத்தானே இது காட்டுகிறது?**

இல்லை. அந்த சம்பவத்தின் பின்னணியை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ராஜீவ்–ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தினை ஏதோ சில காரணங்களினால் பிரபாகரன் ஏற்றுக்கொள்ள மறுத்தார். இந்தியாவோ அவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என விரும்பியது. எம்.ஜி.ஆரும் பிரபாகரனை வற்புறுத்திப் பார்த்தார். ஆனால் அவர் முயற்சி பலிக்கவில்லை. பிரபாகரன் எத்தகைய நெருக்கடியில் இருந்தார் என்பது எம்.ஜி.ஆருக்குத் தெரியாதல்லவா? இத்தனை உதவிகள் செய்தும் நாம் சொல்வதை பிரபாகரன் கேட்கவில்லையே என்ற ஆதங்கம் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டது. இது இரு நாடுகளுக்கு இடையிலேயான ஒப்பந்தம். அதில் பிரபாகரன் கையெழுத்திட வேண்டிய அவசியம் இல்லை. எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்தாலே போதும் என்று நான் கூறினேன். நான் சொன்னது ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரச்சினை அத்துடன் முடிந்தது.

எம்.ஜி.ஆர் இதனால் காயப்பட்டாலும்கூட, பிரபாகரன் மீது மிகுந்த பாசமும் அன்பும் கொண்டிருந்தார். தொடர்ந்து அவருக்கு உதவவே விரும்

பினார். ஆனால் அமைதி காக்கும் படை பிரச்சினை ஏற்பட்டபோது, எம்.ஜி.ஆரால் ராஜீவிடம் வாதாடி நமக்கு உதவ வைக்க முடியாது என்று பிரபாகரன் நினைத்தார். அதனால், அவர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருப்பார்.

**கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்று பல்வேறு கால கட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தொடர்ந்து ஆதரவு தெரிவிக்கப்பட்டும் ஈழம் ஒரு கனவாகவே இருந்து விட்டது. தனி மாநிலம்கூட அமையவில்லை. இது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

எந்த ஒரு லட்சியமும் எந்த ஒரு போராட்டமும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் வெற்றி பெற்று விடுமென உறுதியாகக் கூறிவிட முடியாது. தலாய்லாமாவைப் பாருங்கள். ஐம்பதாண்டுகளுக் கும் மேலாகப் போராடி வருகிறார். நேபாளத்தில் பல ஆண்டுகள் போராடி ஜனநாயக வழிமுறையை ஏற்றுக்கொண்டு சமூக மாற்றத்திற்கு போராடுகி றார்கள் மாவோயிஸ்டுகள். இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் சந்தர்ப்ப சூழலுக்கேற்பத்தான் போராட்டங்களின் போக்கு இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை அங்கு சிங்களர் கள் தமிழர்களுக்கு இழைத்த அநீதி கொஞ்ச நஞ்சமல்ல. தமிழர்கள் சுதந்திரமாக தலைநிமிர்ந்து வாழ முடியாதபடி செய்துவிட்டார்கள். அமைதி யைத் தேடி, வாழ்வைத் தேடி எங்கெங்கோ ஓடிப் போய்விட்டார்கள். இப்போதும் பல்லாயிரக்கணக் கானோரை கொன்று குவித்துத்தான் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்திருக்கிறார்கள். இவர்க ளோடு இணக்கமாக வாழ்வதென்பது முடியவே முடியாது. இன்றில்லாவிட்டாலும் இன்னொரு நாள் நிச்சயம் தனி ஈழம் அமைந்தே தீரும். ஜெய லலிதாவைப் பொறுத்தவரை அவருக்கு திராவிட

இயக்கத்தின் மீது கூட பற்றும் கிடையாது; மரியாதையும் கிடையாது, தமிழ்ப் பற்று அறவே இல்லை. அவரை நன்கு அறிந்தவன் நான். அப்படிப்பட்டவருக்கு இலங்கைத் தமிழர் மீது என்ன அக்கறை இருந்து விட முடியும்? எல்லாம் வாக்குகளைப் பெற்று விடலாம் என்ற நப்பாசை. அவ்வளவுதான்.

**எம்.ஜி.ஆருக்கு எந்த அளவுக்கு தமிழ் உணர்வு இருந்தது?**

அவர் மலையாளியாக இருந்தாலும் தன்னை வாழ வைத்தது தமிழகம்தான் என்று உறுதியாக நம்பினார். எனவே தன்னைத் தமிழனாகக் கருதிக் கொண்டார். தன் வாழ்நாளை தமிழ் மக்கள் நலனுக்காகவே அர்ப்பணித்துக்கொண்டார். ஒரு முறை ஒரு கேரள அரசியல் தலைவர் சிலை திறப்பு விழாவுக்கு அவர் சென்றிருந்தார். நானும் அப்போது உடனிருந்தேன். அவரை மலையாளத்தில் பேசச் சொன்னார்கள். அவர் உறுதியாக மறுத்துவிட்டார். எனக்கு மலையாளம் தெரியாது. நான் இங்கு பிறந்திருந்தாலும் என்னை வளர்த்து ஆளாக்கியது தமிழ்நாடு தான். என்றென்றும் நான் அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டிருகிறேன் என்றவர், தொடர்ந்து தமிழிலேயே பேசினார். அந்த அளவுக்கு அவர் தமிழ்ப் பற்றுமிக்கவர்.

**அவர் ஒரு மலையாளி என்று திமுக பிரச்சாரம் செய்தும் அது எடுபடாமல் போனது. காரணம் என்ன?**

தமிழர்கள் என்றுமே பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். தங்களுக்கு நல்லது செய்வோரை ஏற்றுக்கொள்வார்கள். கன்னடத்தை தாய்மொழியாகக் கொண்டிருந்தவரை நாம் தந்தை பெரியார் என்றல்லவா அழைக்கின்றோம்? தவிரவும் எம்.ஜி.ஆர் தனது திரைப்படங்கள் வாயிலாக தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையே வலியுறுத்துவார். நல்ல கொடையுள்ளம் கொண்டவர். இறுதிவரை மக்களுக்கு ஏதா

வது செய்யவேண்டும் என்று விரும்பினார். எனவே அவர் மீது மக்களுக்கு மிகுந்த ஈர்ப்பிருந்தது. கருணாநிதியால் அதைத் தகர்க்கவே முடியவில்லை. இன்னும் ஒரு ரகசியத்தையும் சொல்கிறேன்; அவருக்கு மலையாளிகள் மீது அவ்வளவாக நல்ல அபிப் ராயம் கிடையாது. அவர்கள் ஏதாவது விதண்டா வாதம் செய்துகொண்டே இருப்பார்கள் என்பார். கட்சியில்கூட மலையாளிகள் இல்லையே. சேர்த்துக் கொள்ளமாட்டார்.. (சிரிக்கிறார்).

**பெரியாரையும் அண்ணாவையும் தன் தலைவர்கள் என்று கூறிக்கொண்ட எம்.ஜி.ஆர்., கோவில்களுக்கெல் லாம் சென்றார். பின்னால் வந்த ஜெயலலிதாவோ யாகமே வளர்க்கிறார். பகுத்தறிவுச் சிந்தனை பேசும் திராவிட இயக்கத்தில் இப்படிப்பட்ட தலைவர்கள் எப்படி உருவாக முடிகிறது?**

எம்.ஜி.ஆர். இறை நம்பிக்கை உடையவர்தான். அதை மறுக்க முடியாது. அண்ணாவே 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றுதானே சொன்னார். ஆனால் எம்.ஜி.ஆர். தன் தாயைத்தான் தெய்வமாக மதித் தார், வழிபட்டார். தாயின் படத்தை வணங்கி விட்டுத்தான் வீட்டைவிட்டு புறப்படுவார். அவர் அவ்வப்போது சென்ற மைசூர் தாய் மூகாம்பிகை கோவிலுக்குப் போவது பற்றிச் சொல்லும்போது, அங்கே சென்றால் தன் தாயையே தரிசிக்கும் உணர்வு ஏற்படுவதாகக் கூறுவார். ஜெயலலிதாவைப் பற்றி சொல்ல ஒன்றுமே இல்லை. திராவிட இயக்கத்தின் அனைத்து கோட்பாடுகளுக்கும் முரணாக செயல்படுபவர். அவரைப் பற்றிப் பேசி என்ன பிரயோஜனம்?

**பிராமணரல்லாத தமிழர்களின் நலனே தங்கள் லட்சியம் என்றும் நாங்கள் பகுத்தறிவாளர்கள் என்றும் கூறிக் கொள்ளும் திராவிட இயக்கத்தினர் ஆலயங் களுக்குச் செல்லும் ஒரு மலையாளியையும் யாகம்**

**வளர்க்கும் ஒரு பிராமணப் பெண்மணியையும் தங்கள் தலைவர்களாக ஏற்றுக்கொள்கிறார்களே, அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

*அண்ணாவும்கூட நாத்திகத்தை வலியுறுத்தவில்லை. தவிரவும், கொள்கைப் பிடிப்பு நாளாக, நாளாக பல மட்டங்களிலும் தளரத்தானே செய்கிறது. யாரை வைத்துக்கொண்டு ஓட்டுகளைப் பெற முடியும் என்றுதான் எல்லோரும் நினைக்கிறார்கள். அது இப்படித்தான் ஜெயலலிதாவில் போய் முடியும்.*

*இன்னொன்றையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பெரியார் உருவாக்கிய திராவிடர் கழகம் தான் திராவிடர்களின் பார்ப்பனர் அல்லாதாரின் நலனை முன்னிறுத்தியது. திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி அல்ல. அது ஒரு பிராந்தியத்தைச் சுட்டுகிறது. திராவிடம், அதாவது தென்னாடு, அங்கே வாழும் மக்களின் முன்னேற்றத்திற்கான கட்சி. தேர்தலில் இறை நம்பிக்கை, மத நம்பிக்கை உடையவர்கள் பலர் வாக்காளர்களாக இருக்கும் போது, அத்தகைய நம்பிக்கை உடையவர்கள் தலை வர்களாவதில் வியப்பென்ன?*

*கருணாநிதியா, எம்.ஜி.ஆரா என்று முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்போது, இவர்களில் யார் தமிழர், யார் மலையாளி என்று மக்கள் பார்ப்ப தில்லை. இவர்களில் யார் நல்லது செய்வார்கள் என்று தோன்றுகிறதோ அவர்களுக்கே தங்கள் வாக்கை அளிப்பார்கள். அப்படி மக்களின் அபரிமிதமான நம்பிக்கையைப் பெற்ற எம்.ஜி.ஆர். இறுதிவரை ஆட்சி செலுத்தமுடிந்தது.*

*அதே போல் கருணாநிதியா, ஜெயலலிதாவா என்ற கேள்வி எழுந்தபோது கருணாநிதிமேல் இருந்த வெறுப்பால் மக்கள் ஜெயலலிதாவிற்கு வாக்களித் தார்கள். தவிரவும் அப்போது ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட நேரம். அந்த அனுதாப அலை*

காரணமாகவும் அ.இ.அ.தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. அதன் பிறகு மக்களுக்கு வேறு வழியில்லாமல் போய், இவரை விட்டால் அவர், அவரைவிட்டால் இவர் என்று மாற்றி, மாற்றி ஆதரவளிக்கிறார்கள். இதில் ஜாதி, இன உணர்விற்கெல்லாம் இடமே இல்லை.

**நீங்கள் சில காலம் பா.ம.கவிலும் இருந்திருக்கிறீர்கள்? அக்கட்சியில் எந்த அளவு தமிழின உணர்வு இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?**

பா.ம.கவிற்கும் தமிழின உணர்விற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது ஒரு ஜாதிக்கட்சி. பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டின் மூலமாக வன்னியர்கள் பயனேதும் பெறவில்லை என்ற வருத்தம் அம்மக்களிடையே பரவலாக இருந்தது. அதைப் பயன்படுத்தி, போராட்டங்களை நடத்தி, ராமதாஸ் செல்வாக்கு பெற்றார். பின்னர் அதைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் பெறுவதற்காக பாட்டாளி மக்கள் கட்சியைத் துவக்கினார். அப்போதுதான் நான் அதில் இணைந்தேன். வன்னியர்கள் மட்டுமல்லாது, தாழ்த்தப்பட்டவர்கள், இதர பிற்படுத்தப்பட்டவர்கள் என பல்வேறு தரப்பினரையும் அனுசரித்துப் போனால்தான் ஒரு அரசியல் கட்சி வலுப்பெற முடியும். ஆனால் ராமதாசுக்கு அப்படி ஒரு எண்ணமே இல்லை. அவர் அடிப்படையில் இன்னமும் தன்னை ஒரு வன்னியர் தலைவராகத்தான் பார்க்கிறார். எப்படிக் கட்சி வளரும்? தவிரவும் கட்சியில் தன்னைத் தவிர, தன் மகனைத் தவிர எவரும் முக்கியத்துவம் பெற்றுவிடக்கூடாது என்றும் நினைக்கிறார். அதனால்தான் என் போன்றோருக்கு அங்கே இடமில்லை. இப்போது வன்னிய மக்களின் நம்பிக்கையையும் அவர் இழந்துவிட்டார். தன் குடும்பத்தினர் நலன்தான் அவருக்கு பிரதானம் என்பதை மக்கள்

உணர்ந்துவிட்டனர். அவரை தமிழர் தலைவர் என்று யார் ஏற்றுக்கொள்கிறார்கள் சொல்லுங்கள். வன்னிய மக்களைத் தாண்டி அவருக்கு ஆதரவே கிடையாது. இதில் எங்கிருந்து வந்தது தமிழுணர்வு?

**இன்று தமிழுணர்வை வளர்க்கும் கட்சி எது என்று நினைக்கிறீர்கள்?**

ஓரளவிற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சொல்லலாம். மற்றபடி வேறு யாரும் இல்லை. சரியாகச் சொல்லவேண்டுமானால், பாமர மக்களிடையே தமிழுணர்வு மறைந்துவிட்டது அல்லது மங்கிவிட்டது. தமிழுணர்வு, திராவிட உணர்வு எல்லாமே அண்ணாவுடனேயே போய்விட்டதென நான் நினைக்கிறேன்.

கலைஞர் முதல்வரான நேரத்தில் காங்கிரஸ் பிளவுபட்டது. குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெறுகிறது. காமராஜரை ஆதரித்த தந்தை பெரியார், சிண்டிகேட் வேட்பாளரான சஞ்சீவ ரெட்டியை ஆதரிக்க சொல்லி அறிக்கை விடுகிறார். கருணாநிதியோ இந்திரா ஆதரித்த வி.வி. கிரியைத் தான் ஆதரிக்கிறார். காரணமென்ன? கருணாநிதி மீது வழக்குகள் இருந்தன. தன் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று பயந்தே, பெரியார் கூறியதையும் மீறி நடந்தார் கருணாநிதி. இப்படி தான், தன் குடும்பம் என்று ஒட்டுமொத்தமாக சுயநல அரசியல் திமுகவில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியபின் அக்கட்சியை, அவர்களது மேடைப் பேச்சை யார் நம்புவார்கள்?

**ஒரு மலையாளியான எம்.ஜி.ஆருக்கு நெருக்கமாக இருந்த நீங்கள் இப்போது ஒரு தெலுங்கரான விஜயகாந்தின் கட்சியில் இருக்கிறீர்கள். இதை எப்படி பார்க்கிறீர்கள்?**

நான் எம்.ஜி.ஆரை எப்படி ஒரு மலையாளியாகப் பார்க்கவில்லையோ அதேபோல் விஜயகாந்தையும்

தெலுங்கராகப் பார்க்கவில்லை. ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்து, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் பல லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்கிறார் விஜயகாந்த். தொடர்ந்து சரியான பாதையில் சென்று தமிழ் மக்களுக்கு நல்லது செய் கிறாரா என்றுதான் நாம் பார்க்கவேண்டும். அதற்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். அதை விடுத்து இவர் தெலுங்கரா, மலையாளியா என் றெல்லாம் ஆராயத் தேவையில்லை. அவருக்கு சிறப்பானதொரு எதிர்காலம் இருக்கிறதென நான் நினைக்கிறேன்.

**தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் பற்றி...?**

தமிழனுக்கென்று தனியாக ஒரு நாடு இருந் திருந்தால் இலங்கையில் இவ்வளவு தமிழர்கள் ஈவிரக்கமில்லாமல் கொலைசெய்யப்பட்டிருக்க மாட்டார்கள். உலகில் ஜார்ஜியாவில் ரஷ்யர்கள் தாக்கப்பட்டபோது ரஷ்யா தலையிட்டது – சைப்ரஸில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டபோது துருக்கி தலையிட்டது. கொசவோவிற்காக ஐரோப் பியப் படைகளே அங்கே சென்றன. உலகில் எந்த இனத்திற்கும் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் ஒன்று, அந்த இனம் ஆளும் நாடும் தலையிடுகிறது, அல்லது ஐ.நாவிடம் எடுத்துச் சொல்லி தம் இனத் தைப் பாதுகாக்க முயல்கின்றன. நமக்கும் நாடு என்று ஒன்றிருந்திருந்தால் நமது படைகளை அனுப்பி இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றி யிருக்கலாம். அந்த அளவில் தமிழனுக்கு ஓர் ஆபத்து ஏற்படும்போது அவனைக் காப்பாற்ற தனி நாடு ஒன்று இருப்பது அவசியம் என்பதைத்தான் அண்மை நிகழ்வுகள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

# து. ரவிக்குமார்

"அடையாள அரசியல்
என்பது வரையறைக்குட்
பட்டது. ஒரு விதத்தில்
பிற்போக்கான அணுகுமுறை
என்றும் சொல்லலாம். இன்று
ஜாதி அடையாளமாகக்
சுருக்கப்படும் தலித்
அரசியலையும் சேர்த்துத்தான்
சொல்கிறேன்."

**து. ரவிக்குமார்:** *விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர். சட்டமன்ற உறுப்பினர். குறிப்பிடத்தகுந்த தலித் அறிவுஜீவி.*

**கேள்வி. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியின் பின்னணி யில் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**பதில்.** தமிழ்த் தேசியத்தின் தேவை இப்போது அதி கரித்திருப்பதாகவே கருதுகிறேன். ஈழ நிகழ்வுகள் உலகெங்கும் தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை உருவாக்கியிருக்கின்றன. கற்பனை செய்யமுடியாத அளவுக்கு கொடுமைகள் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந் திருக்கின்றன. அதனால் உலகெங்கும் தமிழ் மக்கள் கோபமுற்றிருக்கின்றனர். அங்கே நடந்து முடிந் துள்ள, இன்னமும் நடைபெறுகிற கொடுமைகளை மத்திய அரசு தடுத்து நிறுத்தவில்லை என்ற வருத் தம் பரவலாக இருக்கிறது. இதுவரை தங்களைத் தமிழர்களாக உணராதவர்கள்கூட, தமிழர்கள் என்பதால் இந்திய அரசு நம்மை வஞ்சித்திருக் கிறது, இலங்கையில் வாழும் நமது ரத்த சொந்தங் களைக் கைவிட்டுவிட்டது என்று நினைக்கத் தொடங்கியிருக்கின்றனர். எனவே தமிழ்த் தேசிய உணர்வுகள் வலுப் பெறும், வலுப்பெறவேண்டும்.

**தீவிர தமிழினவாதம் பேசிய விடுதலைப்புலிகளின் தோல்வியை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இந்தத் தோல்வி, அவர்களுக்கு பரவலாக அனுதாபத்தையே பெற்றுத் தந்திருக்கிறது. அந்த அனுதாபத்தின் மீது மீண்டும் தமிழ்த் தேசிய உணர்வைக் கட்டியமைக்கமுடியும். ஆனால், போராட்ட காலங்களில் எத்தகைய தவறுகள் நிகழ்ந்தன, 9/11க்குப் பிறகு உலக அளவில் அரசுகளுக்கு எதிரான எந்த ஒரு போராட்டமும் எப்படிப் பார்க்கப்படுகிறது; அதற்கேற்றாற்போல் போராட்ட வடிவங்களை மாற்றிக் கொள்ளவேண்டுமா எனப் பல கேள்விகள் எழுகின்றன. குறிப்பாக, விடுதலைப் புலிகளுக்கு உலகளாவிய அளவில் மற்ற விடுதலை இயக்கங்களுடன் தொடர்பே இல்லை. அது அவர்களிடமிருந்த மிகப் பெரிய குறை. அதனாலேயே பல்வேறு பின்னடைவுகளை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. புலிகள் மட்டுமல்ல தேசிய இன விடுதலை பேசும் எந்தவொரு இயக்கமும் இன்று பிற நாடுகளிலுள்ள இயக்கம் எதனோடும் உறவு இல்லாமல்தான் இருக்கின்றன. இதனால் அவை தமது நாட்டைத் தவிர வேறு எதைப் பற்றியும் கவலைப்படாமல் உள்ளன.

இங்குள்ள அரசியல் கட்சிகளும் தவறிழைத்தன. இந்திய அரசின் உதவியையும் தலையீட்டையும் காட்டிய அக்கறையை மக்கள் மத்தியில் ஆதரவு அலையினை உருவாக்குவதில் அவர்கள் காட்டியிருந்தால், ஈழ விடுதலைப் போரின் போக்கு வேறு மாதிரியாக இருந்திருக்கக்கூடும். போராளிக் குழுக்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் வரையறைகளுக்கேற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ள முடியுமா என்பது பற்றியும் நாம் ஆராயவேண்டும். கியூபப் புரட்சிக்குப் பிறகு அதுகுறித்து ஆராய்ந்த ரெஜி தெப்ரெ "நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடும் ஒரு கட்சி ஒருபோதும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட

முடியாது. ஆனால் புரட்சியை நடத்தும் கெரில்லா இயக்கம் எப்போது வேண்டுமானாலும் தன்னை ஒரு அரசியல் இயக்கமாக மாற்றிக்கொள்ள முடியும்" எனக் குறிப்பிட்டார். ஆனால் இன்று யோசித்துப் பார்க்கையில் அது தவறான ஒரு முடிவாகவே தெரி கிறது. ரகசியத் தன்மை காரணமாக ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக இயங்கும் ஒரு கெரில்லா இயக்கம் மைய நீரோட்ட அரசியலில் ஈடுபடுவதும்கூட சாத்தியமற்ற ஒன்றுதான். தேசிய இன விடுதலை இயக்கங்கள் மட்டுமின்றி, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் இடதுசாரி இயக்கங் களும் இதுகுறித்து ஆய்வு செய்வது அவசியம். ஆயுதமேந்திய போராட்டங்கள் தொடர்ந்து தோல்வியைத் தழுவுவது ஏன் என்று அவர்களும் சிந்திக்கவேண்டும்.

இன்னொன்றையும் கவனப்படுத்த விரும்புகி றேன்; சோஷலிச நாடாக கருதப்படுகிற க்யூபா அப் படி அழைக்கப்படுவதற்கு தகுதியான நாடுதானா? இலங்கை அரசின் மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து ஐ.நா. சபையில் விவாதம் வந்தபோது அதற்கு முட்டுக்கட்டை போட்டு இலங்கை அரசைக் காப் பாற்றுவதில் பெரும் பங்கு வகித்தது கியூபா. மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் நட்பு நாட் டிற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு பிரச்சினையாகத்தான், ஈழத் தமிழர் படுகொலையை கருதியிருக்கிறது அந்நாடு. என்ன சோஷலிச நாடு அது? ஆக, இடதுசாரிகள் மத்தியிலும் ஆத்ம பரிசோதனை வேண்டும்.

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்தில் செயல்படும் தமிழ் உணர்வுக் குழுக்களின் அணுகு முறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பெருந்தவறுகளை இழைத்துவிட்டதாகவே நினைக்கிறேன். முதலாவதாக, இலங்கையில் மற்ற

போராளிக் குழுக்கள் குறிப்பாக என்.எல்.எஃப்.டி போன்ற இடதுசாரிக் குழுக்கள் அழிக்கப்பட்ட போது, இங்கிருந்த தமிழ் உணர்வாளர்கள் மௌனம் காத்தனர். இம்மாதிரி ஆதிக்கச் செயல்பாடுகளின் பின்விளைவுகளை அவர்கள் உணரவில்லை. தவிரவும் அவர்களெல்லாம் ஒருவித மயக்கத்தில் இருந்தனர். எல்லாவற்றையும் ஆயுதங்கள் தீர்மானித்து விடும் என்று தவறாகக் கணித்தனர். உண்மை தெரிய வந்தபோது அவர்களால் எதுவும் செய்ய இயலவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை நம் நாட்டுத் தமிழுணர்வாளர்கள் இந்திய அரசு ஈழ விடுதலையைப் பெற்றுத் தந்துவிடும் என்ற தவறான நம்பிக்கையில் இருந்திருக்கிறார்கள். அதனால்தான் 80களிலும் அவர்கள் இந்தியத் தலையீட்டைக் கோரினார்கள். இப்போதும் அப்படியே கோரிக்கை விடுத்தார்கள். ஓர் அரசு எப்படிச் செயல்படும் என்ற புரிதல் நமக்கு இல்லை. அதனால் வந்த கஷ்டம்தான் இது. இந்திய அரசின் அணுகுமுறையைக் காங்கிரஸ் கட்சியின் அணுகுமுறை என்று சுருக்கிப் பார்த்ததால் நேர்ந்த பிழை இது. அதன் விளைவைத்தான் நாம் தேர்தல்களிலும் பார்த்தோம்.

**நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

சிலர் கூறுவதைப்போல் தேர்தல் முடிவுகள் ஈழப் பிரச்சினையின் மீது மக்கள் அளித்த தீர்ப்பல்ல. இலவச கலர் டி.வி, இலவச அரிசி போன்ற சமூக நலத் திட்டங்கள்தான் மக்களின் வாக்களிப்பை இறுதியில் தீர்மானிப்பவையாயிருந்தன. மக்களை இவர்கள் அணிதிரட்ட மறந்ததால் ஈழப் பிரச்சினைக்கு ஆதரவான பிரச்சாரம் மாநில அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆர்ப்பாட்டங்களும் எழுச்சியும் நகர்ப்புறத்தை சார்ந்ததாகவே இருந்து விட்டன. கிராமப்புறங்களை எட்டவே இல்லை. இன்னொன்றையும் இங்கே குறிப்பிடவேண்டும்;

விடுதலைப் புலிகளை கடுமையாக எதிர்த்துவந்த ஜெயலலிதா திடீரென்று தனி ஈழம் கேட்டதும் கூட பலருக்கு உடன்பாடாயில்லை. தமிழினத்தைக் காக்க வாக்கு என்று கேட்டபோதும்கூட மக்கள் அலட்டிக்கொள்ளவில்லை. இவ்வாறாக பல முனை களில் நாம் செய்த பிழைகளின் விளைவே இறுதி யில் யாரும் எதிர்பார்க்காத பெரும் தோல்வி.

**உங்கள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனும் தீவிரமாகப் புலிகளுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார். ஆனால் இறுதியில் காங்கிரசுடன் கூட்டு சேர்ந்தார்...**

நாங்கள் மேற்கொண்ட முடிவு தமிழ்நாட்டு இளை ஞர்கள் மத்தியிலும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர் மத்தியிலும் கசப்புணர்வை ஏற்படுத்தியது உண்மை தான். ஆனால் தேர்தலைப் பொறுத்தமட்டில் எங்க ளது முடிவு சரியானது என்பது நிரூபணமாகிவிட் டது. ஈழத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தமட் டில் நாங்கள் எமது நிலைப்பாட்டில் எப்போதும் உறுதியாகவே இருக்கிறோம். இந்த விஷயத்தில் நாங்கள் எவரிடமும் நற்சான்றிதழ் பெற வேண்டிய தேவையில்லை. எது எப்படியோ, ஈழத் தமிழர் பிரச்சினை ஏன் இங்கே ஒரு தேர்தல் பிரச்சினை யாக மாறவில்லை என்பதை தமிழுணர்வாளர்கள் ஆய்வு செய்யவேண்டும். அப்போதுதான் சந்தர்ப்ப வாத அரசியல் மட்டுமல்ல; நாடாளுமன்ற அரசிய லின் எல்லையும் புரியவரும்.

**ஒரு சமூகம் முன்னேற இத்தகைய அடையாள அரசியல் தேவையா?**

ஒரு சமூகம் முன்னேறுவதற்கு, சில இலக்குக்களை அடைவதற்கு, அணி திரளவேண்டியிருக்கிறது. அத்தகைய திரட்டலுக்கு அடையாள அரசியல் தேவைப்படுகிறது. அது வர்க்க அடையாளமாக, இன அடையாளமாக, தேசிய அடையாளமாக,

ஏன் ஜாதி, மத அடையாளமாகக்கூட இருக்கலாம், இவற்றில் ஏதோ ஒன்றை வரித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அது போலத்தான் இன்று தமிழ்த் தேசியத்தை தமிழர்கள் முன்னிறுத்துகிறார்கள்.

**நீங்கள் ஒரு மார்க்சியராக புரிந்துகொள்ளப்பட்டவர்தான். பின்னொரு கட்டத்தில்தான் நீங்கள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் இணைகிறீர்கள், தலித் மேம்பாட்டை முன்னிறுத்துகிறீர்கள். மார்க்சீயமோ அத்தகைய குழு அடையாளங்களைப் புறக்கணிக்கிறது அல்லது கடந்து நிற்கிறது.**

நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். எந்த ஒரு சமூகத்திலும் வெவ்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு வகையான முரண்பாடுகள் கூர்மை அடைகின்றன அல்லது பிரதானப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இந்தியாவைப் பொறுத்தவரை, பிரித்தானியர்களுக்கெதிரான போராட்டத்தின்போது இந்திய தேசியத்திற்கும் காலனிய ஆட்சிக்குமெதிரான முரண்பாடே முன்னிலைப் படுத்தப்பட்டது. அப்போது தேசிய இனப் பிரச்சினை இல்லையா, ஜாதிப் பிரச்சினை இல்லையா, என்ன? இருந்தன. ஆனால் அன்றைய காலகட்டத்தில் காலனிய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று மக்கள் விரும்பினர். எனவே அத்தளத்திலே போராட்டம் தீவிரமாக நடந்தது. அது போன்றுதான் இப்போதும் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டதாக நினைக்கும்போது தமிழ்த் தேசிய உணர்வுகள் மேலோங்குகின்றன.

**மற்றவகையான அடையாள அரசியல் வர்க்க உணர்வுகளை இது மழுங்கடிப்பதாக நீங்கள் நினைக்கவில்லையா?**

ஒரு அடையாளம் முன்னிலைப்படுத்தப்படும்போது மற்ற வகை அடையாளங்கள் பின்னுக்குத்

தள்ளப்படுவதைத் தவிர்க்கமுடியாது. அந்த வகையில் தேசிய இனப் பிரச்சினை கூர்மை அடையும் போது வர்க்க உணர்வு மழுங்கித்தான் போகும். ஆனால் இவ்வித அடையாளங்கள் எல்லாமே கடந்து செல்லப்படவேண்டியவை, பிரபஞ்சம் தழுவிய மனித குல அடையாளமே நமது இறுதி இலக்காக இருக்கவேண்டும்.

**ஆனால் நீங்களே ஜாதி, தேசிய இன அரசியலில் தானே இறங்கியிருக்கிறீர்கள்?**

அது தவிர்க்கமுடியாத ஒன்று. ஒவ்வொரு மனிதனுக்கும் பல்வேறு அடையாளங்கள் உண்டு, குடும்பத் தலைவனாக, ஜாதி அல்லது தேசிய இனத்தைச் சேர்ந்தவனாக, ஒரு நாட்டின் குடிமகனாக என்று. எந்தக் கட்டத்தில், எந்த அடையாளத்திற்கு ஒருவர் முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது அன்றைய கால சூழலைப் பொறுத்தது. ஏதோ ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை ஒரு கட்டத்தில் நான் தேர்வு செய்கிறேன் என்பதாலேயே மற்றவகை அடையாளங்களை புறந்தள்ளுகிறேன் என்று சொல்லிவிட முடியாது.

**இனப் பிரச்சினையில் திருமாவளவன் அதிக அக்கறை காட்டிவருவது அப்பிரச்சினையை முன்னெடுக்கும் இடைநிலை ஜாதியினருடன் உறவை வலுப்படுத்திக் கொள்வதற்குத்தான் என்று சொல்லப்படுகிறதே ?**

அவ்வளவு கொச்சையாக அதை பார்க்கக்கூடாது. அதாவது ஈழப் பிரச்சினையில் உண்மையான ஈடுபாடு இல்லாமல் ஒரு உள்நோக்கத்தோடுதான் அவர் குரல் கொடுக்கிறார் என்று பேசுவது தவறு. தலித்துகள் தமிழின அடையாளத்தை மேற்கொள்வது, அதன் மூலம் ஜாதீய இழிவைத் துடைத்துக் கொள்ள முயல்வதென்பது அயோத்திதாச பண்டிதர் காலத்திலிருந்தே தொடர்கிற ஒன்றுதான்.

ஆனால் பண்டிதரின் அணுகுமுறை அத்துடன் நின்று விடவில்லை. பௌத்தத்துக்கும் தமிழுக்கும் உள்ள உறவை அவர் கண்டறிந்து சொல்லியிருப்பதைப் பார்த்தால், இங்கே தமிழர் என்று தம்மை அழைத்துக்கொள்ள தகுதியுள்ளவர்கள் தலித்துகள் மட்டும்தான் என்பதை நாம் உணரலாம்.

**தமிழ்த் தேசிய உணர்வு சைவ சித்தாந்தவாதிகளால் தங்கள் மதக்கோட்பாடுகளை கிறிஸ்தவர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது என்று ஒரு கருத்து இருக்கிறது..?**

அப்படிச் சொல்லிவிட முடியாது. தொல்காப்பியத்திற்கு பனம்பாரணர் எழுதிய சிறப்புப் பாயிரத்திலேயே "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுகத்து" என்று தமிழர் பகுதி வரையறுக்கபட்டிருக்கிறது. பின்னர் சிலப்பதிகாரத்தில்கூட தமிழுணர்வு பேசப்படுகிறது. எனவே நெடுங்காலமாகவே தமிழ்த் தேசியம் என்பது தமிழ்ச் சமூகத்தின் அடிநாதமாக இருந்து வந்திருக்கிறது.

சைவ வேளாளர்களும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள தமிழ்த் தேசியம் பேசியிருக்கிறார்கள். ஆனால் அதே காலகட்டத்தில் தலித் அறிஞர்கள் குறிப்பாக, அயோத்திதாச பண்டிதர் போன்றோர் 'நாங்களே தமிழர்கள்' என்று அறைகூவல் செய்திருப்பதையும் மறக்க முடியாது.

**ஆனால் இறுதி விளைவென்ன? அவர்கள் நோக்கம் எந்த அளவுக்கு ஈடேறியது?**

அறிவுத் தளத்தில் அவர் ஏற்படுத்திய தாக்கம் அதே அளவுக்கு அரசியல் தளத்தில் ஏற்படாமல் போயிருக்கலாம். ஆனால் இந்திய வரலாற்றை நேர்மையாக எழுத விரும்பும் எவருக்கும் அயோத்திதாசப் பண்டிதரிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. பௌத்தத்தின் வீழ்ச்சியும் தீண்டாமைக்

கொடுமையின் தொடக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என தனது ஆராய்ச்சியின் விளைவாக அவர் கண்டடைந்தார். பார்ப்பன மேலாதிக்கம் நிலவும் இந்து மதத்திலிருந்து பார்ப்பனரல்லாதோர் அனைவருக்குமான விடுதலை பௌத்தத்தில்தான் இருக்கிறது என்றார் அவர். அவர் வாழ்ந்த காலத்தில் பலர் அவரது கருத்துகளை ஏற்றுக் கொண்டனர். பிற்காலத்தில் அவர் மறக்கடிக்கப் பட்டிருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் பெரியார் பேசிய பல நல்ல விஷயங்களுக்கு அயோத்திதாசப் பண்டிதர்தான் முன்னோடி. இதை நாம் மறந்து விடக்கூடாது.

**அயோத்திதாச பண்டிதர், பெரியார் இருவரின் கருத்துகளும் எதிரெதிர் நிலையில், தமிழர் என்றால் பிராமணரல்லாதார், தலித் அல்லாதார் என்றுதான் அர்த்தம் என்பதைத்தான் நிரூபித்திருக்கின்றன எனக் கருதுகிறீர்களா?**

நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால் தமிழர் என்ற அடையாளத்தைப் புரிந்துகொள்வதில் இப் போதும் ஜாதித் தமிழர்கள் அப்படியான அணுகு முறையைத்தான் கடைபிடிக்கிறார்கள். தமிழ்த் தேசியத்தின் உள்ளடக்கம் அதுதான் என்று நான் கூறவில்லை. ஆனால் அப்படிப் புரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது என்கிறேன். எதிர்வரும் காலங்களில் தமிழ்த் தேசியம் வெற்றி அடையவேண்டுமெனில், அத்தகைய தடைகளை உடைத்தெறிந்தாகவேண் டும். தமிழ் அடையாளம் எவ்வாறு கட்டமைக்கப் பட்டது, அதில் என்னென்ன குறைபாடுகள் உள்ளன என்பதைக் கடந்த இரண்டு நூற்றாண்டுகளின் அனு பவங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும். பெரியாரைப் பொறுத்தவரை தமிழ் அடையாளம் என்பதை அயோத்திதாசர் அளவுக்கு வரலாற்றுப் பின்புலத்தோடு, பண்பாட்டு புரிதலோடு முன்

வைக்கவில்லை என்றபோதிலும் இப்போது சிலர் பேசுவதுபோல் அடிப்படைவாத மொழியில் அவர் அந்த அடையாளத்தைப் பேசவில்லை. அது முக்கியமானதாகும்.

**தமிழ்த் தேசியம் வெற்றி பெறவேண்டுமானால் தமிழுணர்வாளர்கள் என்னவிதமாக செயல்படவேண்டும்?**

தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்பும் தமிழ்த் தேசிய குழுக்களின் முன்பு இரண்டு முக்கிய பணிகள் இருக்கின்றன. முதலாவது விஷயம்: உலக அளவில் பல்வேறு நாடுகளில் இப் போது தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் மத்தி யில் தமிழின உணர்வுக்கு, தமிழின அடையாளத் திற்கு பொருளுள்ள ஓர் உள்ளடக்கத்தை உருவாக்க இத்தமிழ்த் தேசிய குழுக்கள் முன்வரவேண்டும். குறுகிய மனோபவத்தை விட்டொழிப்பது மிக மிக முக்கியம். ஈழப் போரின் தோல்விக்குப் பிறகு இத் தகைய மனோபாவம் அதிகரித்திருக்கிறது. அயல் நாடுகளில் வசிக்கும் ஈழத் தமிழர் மத்தியில் தாங் கள் தனித்து விடப்பட்டிருப்பதான உணர்வு அதிகரித் திருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் இந்தியத் தமிழர்கள் எல்லோரையும் வெறுப்போடு பார்க்கி றார்கள். இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு இந்த நாட்டில் வாழும் குடிமக்கள் அனைவரும் பொறுப்பு என்பதுபோல் பேசுகிறார்கள். ஒரு விதத்தில் அது உண்மைதான். ஒரு குடிமகன் தனது நாட்டின் செயல் களுக்குப் பொறுப்பு ஏற்கத்தான் வேண்டும். ஆனால் இந்தியாவில் வாழும் தமிழர்கள் "குடிமக்கள்" என்ற அந்தஸ்தை முழுமையாகப் பெற்றிருக்கிறார் களா என்பதோடு வைத்துத்தான் இதைப் புரிந்து கொள்ளவேண்டும். இன்றைய உலக எதார்த்தங் கள் என்ன? இன்று ஆயுதமேந்திய இயக்கங்கள் எப்படிப் பார்க்கப்படுகின்றன? பயங்கரவாதத் துக்கும் ஆயுதமேந்திய போராட்டத்துக்குமான வேறு பாட்டை மக்களுக்கு எப்படிப் புரிய வைப்பது?

என்பவை குறித்து சிந்திக்கவேண்டும். கடந்த நாற்பது ஆண்டுகளாக தேசிய இன அடையாளத்தை முன் வைத்துப் புரட்சிசெய்து ஆட்சியைக் கைப்பற்றிய நாடுகள் ஏன் ராணுவக் கொடுங்கோல் அரசுகளாக மாறின என்பதும் சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

இரண்டாவது விஷயம்: இந்தியாவைப் பொறுத்த வரை மாநிலங்களின் உரிமைகள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக பறிபோய்க்கொண்டிருக்கின்றன. மாநில மக்களின் உணர்வுகள் மதிக்கப்படுவ தில்லை. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடை யிலான முரண்பாடு ஒருபுறமென்றால், மாநிலங்க ளுக்கு இடையே இருக்கும் முரண்பாடு இன்னொரு புறம். தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் நமக்கு நம் அண்டை மாநிலங்களுடன் பல தாவாக்கள் இருக்கின்றன. அதற்கு நடுவராக மத்திய அரசுதான் இருக்கிறது. நாம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகி றோம். இந்நிலையில் மீண்டும் மாநில உரிமைக் கான போராட்டம் முன்னிலை பெறவேண்டிய தேவை உள்ளது. நமது உரிமைகளைக் காப்பதற்காக தமிழின அடையாளத்தை முன்வைக்கும் அதே நேரம் அது ஒரு குறுந்தேசிய வெறியாக மாறிவிடக்கூடாது என்பதிலும் நாம் கவனமாயிருக்கவேண்டும். வலது சாரி சாய்வுள்ள இன அடையாளம் அத்தகைய வெறியாக மாறிவிடும் வாய்ப்புகள் அதிகம். எனவே நாம் இடதுசாரி சார்புள்ள ஒரு இன அடையா ளத்தை முன்னெடுக்கவேண்டும். உலகம் தழுவிய மானுட விடுதலையின் ஓர் அங்கமே இன உரிமைப் போராட்டம் என்ற புரிதல் முதலில் தமிழ்த் தேசியம் பேசுவோர் மத்தியில் வரவேண்டும், இதை சாத்தியப்படுத்த வேண்டிய கடமை இடதுசாரிக ளுக்கே அதிகம் உள்ளது. அவர்கள் பாராமுகமாயி ருந்தால் அதனால் ஏற்படும் வெற்றிடத்தை அடிப் படைவாதிகள்தான் நிரப்புவார்கள்.

**ஆனால் இன வழித் தேசியம் என்பது பிற்போக்கான தாக, பெண்ணியத்திற்கெதிரானதாக, உண்மையான சமத்துவத்திற்கெதிரானதாகத்தானே இருந்து வந்திருக்கிறது?**

உண்மைதான். எவ்வித அடையாள அரசியலும் அப்படித்தான் ஆகும். அடையாள அரசியல் என்பது வரையறைக்குட்பட்டது. ஒருவிதத்தில் பிற்போக்கான அணுகுமுறை என்றும் சொல்லலாம். இன்று 'ஜாதி அடையாளமாக சுருக்கப்படும் தலித் அரசியலையும்" சேர்த்துத்தான் சொல்கிறேன். அதிலே எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்; அப்படிப் பட்ட அடையாளங்களை முன்னெடுக்கவேண்டிய கட்டாயம் அவ்வப்போது ஏற்பட்டாலும், அவை தற்காலிகமானவை, கடந்து செல்லப்படவேண் டியவை என்று நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

**இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்ற கருத்துரு சரிதானா?**

இல்லையென்றே நான் நினைக்கிறேன். ஏதோ ஒரு தேசிய இனம் தனது மொழியினை, பண்பாட்டுக் கூறுகளை மற்ற இனங்கள் மீது திணிக்கக்கூடிய சூழல் இன்றில்லை. எல்லா இனங்களின் மேல்தட்டு வர்க்கத்தினரும் அகில இந்திய அளவில் ஆளும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். தமிழர்கள், மலையாளிகள் உள்ளிட்டோரும் இப்படி ஏதோ ஒருவகையில் ஆட்சி அதிகாரத்தில் பங்குபெற முடிகிறது.

இப்போது நடப்பது கூட்டாட்சி இல்லை. கூட்டணி ஆட்சிதான். ஆனாலும் இதில் ஓரளவுக்காவது பல்வேறு மாநில மக்களும் தத்தம் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடிகிறது. இத்தகைய சூழலில் 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' போன்ற கோஷங்கள் பொருளற்றவை. பார்ப்பன–பனியா

சொல்லாடலெல்லாம் காலாவதியாகிவிட்டன. இன்று ஏகாதிபத்திய நலன்களை மேம்படுத்த முன் வருகின்ற எவரும், எந்த மாநிலத்தவராயினும் சரி, எந்த தேசிய இனமாயினும் சரி, அவர்கள் அதிகா ரத்தில் பங்குபெற முடிகிறது. இதிலே பாகுபாடு இல்லை. ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சிறு சதவிகிதத்தினர் அப்படிப் பயன்பெறும்போது, அம்மாநிலத்திலுள்ள மற்றவர்கள் தாங்கள் அனை வரும் அப்படிப் பயன்பெறுவது போல உணர்கின் றனர். எனவே இக்கால கட்டத்தில் தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இந்தியாவை சித் தரிப்பது பொருந்தாது.

**இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களின் எதிர்காலம் பற்றி?**

இந்தியாவை யார் ஆள்கிறார்கள் என்பது பற்றியே நமக்கு இன்னமும் தெளிவில்லை. ஆளும் வர்க் கத்தின் தன்மை பற்றி இப்போது நமக்கு கிடைக் கும் தகவல்களின் அடிப்படையில் புதிய கணிப்பு செய்யப்படவேண்டும். மொழி வழி தேசிய இன அடையாளத்தையும் தவிர்த்து பல்வேறு அடையா ளங்களும் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது, ஜாதி, மத, பிராந்திய அடையாளங்கள் என்று பல அடை யாளங்கள். அவையும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருக்கின்றன. இன்னொருபுறம் உலகமய மாதல் என்பது பல்வேறு அடையாளங்களை விழுங் கிய வண்ணம் இருக்கிறது. அப்படி இருக்கையில் தமிழ்த் தேசியம் மட்டுமல்ல; வேறு எந்த தேசியத் தின் எதிர்காலமும் கேள்விக்குரியதுதான். இருந்தா லும்கூட எந்தவொரு இனமும் தனது நியாயமான உரிமைகளுக்காக போராடும், போராடவேண்டும். அந்தவிதத்தில் தமிழ்த் தேசியப் போராட்டம் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நடந்து கொண்டுதான் இருக்கும்.

# சி. மகேந்திரன்

"கம்யூனிசம் எல்லாவித
ஒடுக்குமுறைகளுக்கும்
எதிரானது. அந்த அளவில்
நாங்கள் இன ஒடுக்கு
முறையையும் எதிர்க்கிறோம்.
இலங்கையில் நடப்பது
அதுதான். எனவேதான் அந்த
விடுதலைப் போராட்டத்திற்கு
எங்கள் ஆதரவு."

**சி. மகேந்திரன்:** *துணைப் பொதுச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலப் பிரிவு.*

**கே. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பொதுவாக கம்யூனிஸ்ட் கட்சிகள் தீவிரம் காட்டியதில்லை. ஆனால் இலங்கையில் யுத்தம் உச்சத்தில் இருந்தபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு முரண்பாடுகளையும் மறந்து, தமிழ்தேசியம் பேசும் கட்சிகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது. ஏன் அப்படி? அப்படிச் செய்தால் மக்களிடம் செல்வாக்கு பெறலாம் என்பதற்காகவா?**

*ப. அவ்வாறு தனது செல்வாக்கை வலுப்பெறச் செய்யவேண்டிய அவசியம் எங்கள் கட்சிக்கு இல்லை. அப்படி நாங்கள் எக்காலத்திலும் செய்தது மில்லை. சுய லாப நோக்கில் நாங்கள் அரசியலை அணுகுவதில்லை. யுத்தம் முற்றி ஒட்டுமொத்த தமிழினமும் அழிந்துவிடக்கூடிய ஆபத்து இருப் பதை நாங்கள் உணர்ந்ததால் எங்கள் நடவடிக்கை களை தீவிரப்படுத்தினோம். பின்னால் நடை பெற்ற நிகழ்வுகளும் எங்கள் உள்ளுணர்வு சரியே என்று நிரூபித்திருக்கின்றன. அப்பிரச்சினையில் எங்கள் செயல்பாடுகள் தொடர்ந்து தீவிரமாகவே இருக்கும்.*

**ஈழத்தில் ஏற்பட்டிருக்கும் தோல்வியும் தமிழ்நாட் டின் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் தமிழ்த் தேசியத்திற்கு ஒரு பின்னடைவுதானே? அவற்றை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பேரழிவு நம்மை யெல்லாம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கி றது. ஏகப்பட்ட உயிரிழப்புகள். லட்சக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். மிகப்பெரிய கொடுமை அங்கே அரங்கேறியிருக்கிறது. ஆயினுங்கூட இதையெல்லாம் ஒரு தோல்வியாக நான் பார்க்க மாட்டேன். இன்று உலக மக்கள் முன் மிகப் பெரிய கேள்வி ஒன்று எழுந்திருக்கிறது. இருபதாயிரத்திற் கும் அதிகமானோர், இறுதிக் கட்ட ராணுவத் தாக்குதலில் மரிக்கக்கூடும் என்று தெரிந்தும், இதற் காக புலம்பெயர்ந்த தமிழர்கள் பல்வேறு ஆர்ப் பாட்டங்களை நடத்தியும் தமிழகத்தில் தொடர்ந்து பல்வேறுவிதமான போராட்டங்கள் நடந்தும், ஐக்கிய நாடுகள் அவை எவ்வித நடவடிக்கையிலும் இறங்காதது ஏன் என்று எல்லோரும் கேட்கின்ற னர். இது நாள் வரை இலங்கைத் தமிழர் பிரச்சினை யாக மட்டும் இருந்தது இப்போது உலகெங்கும் உள்ள மனித நேயர்களின், மனித உரிமை ஆர்வலர் களின் போராட்ட மையப் புள்ளியாக மாறி இருக் கிறது. அந்த அளவில் இலங்கைத் தமிழர் விடுத லைப் போர் தோல்வியுற்றுவிட்டதாகக் கருத வேண்டிய அவசியம் இல்லை. ஒரு தேசிய இனத்தின் பிரச்சினை இப்போது மனித இனத்தின் நீதிக்கான தேடலாக மாறியிருக்கிறது. அதை ஒரு வெற்றியாகக்கூட கருதலாமே. தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகள் பற்றி கேட்கிறீர்கள். பலரும் சுட்டிக்காட்டுவதைப்போல் வெற்றி – தோல்விக்கு பல காரணிகள் உண்டு. இலங்கைத் தமிழர் பிரச் சினை மீதான வாக்கெடுப்பாக அதைக் கொள்ள முடியாது. தவிரவும் தமிழ்நாட்டைப் பொறுத்த

வரை தேர்தலில் பல மோசடி வேலைகள் நடந்திருக்கின்றன. மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்று கூடச் சொல்லலாம்.

அது ஒருபுறமிருக்க, இலங்கைத் தமிழர்களை காங்கிரசும் தி.மு.கவும் கைவிட்டுவிட்டன என்ற எண்ணம் தமிழக மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்துவிட்டது. மத்திய – மாநில அரசுகளின் நடவடிக்கைகள் ஆறாப் புண்ணை ஏற்படுத்திவிட்டன. எதிர்காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் செயல்பாட்டிற்காகவும் செயல்படாமல் இருந்ததற்காகவும் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

**இந்தியாவைப் பொறுத்தவரை அது தேசிய இனங்களின் சிறைக்கூடம் என நீங்கள் கருதுகிறீர்களா?**

சிறைக்கூடம் என்று சொல்லமாட்டேன். ஆனால் இங்கு வாழும் தேசிய இனங்களின் பிரச்சினைகளை மத்தியில் ஆளுவோர் போதிய அளவு புரிந்துகொள்ளாததன் காரணமாகவே நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் வெடிக்கின்றன.

இந்தியாவில் அத்தனை வேறுபட்ட இனங்கள் இருக்கின்றன. இந்தியே அதிகமான மக்கள் பேசும் மொழியாக இருந்தாலுங்கூட, இந்தி பேசாதவர்கள் 60 சதவீதத்திற்கும் மேலாக இருக்கின்றனர். நிர்வாகமோ பெருமளவு இந்தி பேசுவோர் கரங்களில் இருக்கிறது. இந்தியே நிர்வாக மொழியாக இருக்கிறது. இது பல்வேறு நடைமுறை சிக்கல்களை உருவாக்குகிறது. புதுதில்லியில் இருப்போர் இந்தி பேசாத மாநில மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளத் தவறுகின்றனர். பிரச்சினைகள் எழுகின்றன. இந்நிலை மாறவேண்டும். தேசிய இனங்களின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையையே எடுத்துக் கொள்ளுங்கள். வேறு எந்த மாநிலத்திலும் அண்

மைக் காலங்களில் ஒட்டுமொத்தமாக மக்கள் இவ்வாறு திரண்டெழுந்ததில்லை. அத்தனை ஆர்ப்பாட்டங்கள். 15 பேருக்கு மேல் தீக்குளித்தனர். அரவாணிகள் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினரும் இலங்கையில் போர் நிறுத்தம் கோரினார்கள். அவ்வாறெல்லாம் கதறி அழுதும் மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. இப்படித் தமிழ் மக்களின் உணர்வுகள் புறக்கணிக்கப்பட்டது அனைத்து கூட்டாட்சி நெறிகளுக்கும் முரணானதாகும். இந்நிலை தொடர்ந்தால் நாட்டின் ஒற்றுமை கேள்விக்குறியாகும்.

**தேசிய இன விடுதலைப் போராட்டமும் பாட்டாளி வர்க்கப்போரும் ஒன்றிற்கொன்று முரணானதா? பொதுவாக பூர்ஷ்வாக்கள், குட்டி பூர்ஷ்வாக்கள் தலைமையில் இன விடுதலைப் போராட்டங்கள் நடைபெறுகின்ற நிலையில், அத்தகைய போராட்டங்களில் வெற்றி பெற்றாலும், அடுத்த கட்ட புரட்சிக்கு மக்களைத் தயார் செய்ய இயலுமா? இன்று இந்தியாவிலும் சரி, மற்ற நாடுகளிலும் சரி, தேசிய இன அடையாளங்கள் வலுப்பெற்றுவரும் சூழலில், இன விடுதலை வழியான பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது சாத்தியமா?**

கம்யூனிச சித்தாந்தம் உருவானபோதும் இத்தகைய போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. சில வரையறைகளுக்குட்பட்டு மார்க்சும் ஏங்கெல்சும் அத்தகைய போராட்டங்களை ஆதரித்திருக்கின்றனர். அதே போல்தான் லெனினும் ஆதரித்திருக்கிறார். கம்யூனிசம் எல்லாவித ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானது. அந்த அளவில் நாங்கள் இன ஒடுக்குமுறையை எதிர்க்கிறோம். இலங்கையில் நடப்பது அதுதான். எனவேதான் அந்த விடுதலைப் போராட்டத்திற்கு எங்கள் ஆதரவு. அது ஒரு இன விடுதலைப் போர்தான். மானுட விடுதலைப் போரல்ல. ஆனாலும் அடுத்த

கட்டத்திற்கு அதனை எடுத்துச் செல்லமுடியும். அவ்வாறு எடுத்துச் செல்வது அங்கிருக்கும் புரட்சிகர சக்திகளின் கையில்தான் இருக்கிறது.

**தமிழகத்தைப் பொறுத்தவரை பெரும்பான்மையினரான பார்ப்பனரல்லாதாரை அணிதிரட்டிய பெரியாரின் பங்களிப்பு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

பெரியார் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்தார். அவர்களால் போற்றி வளர்க்கப்பட்ட மூடநம்பிக்கைகளை, மதக் கட்டமைப்பை சமரசமின்றி எதிர்த்தார். சுயமரியாதை உணர்வினை பரந்து பட்ட மக்கள் மத்தியில் அவர் ஊட்டினார். அந்த அளவில் அவர் தமிழ்ச் சமூகத்திற்கு மிக முக்கியமான பணியாற்றியிருக்கிறார். அதைத் தாண்டி வர்க்கரீதியான சிந்தனையை வளர்த்தாரா என்பது தேவையில்லாத கேள்வி. அவர் தனக்கென எடுத்துக்கொண்ட பங்கினை சிறப்பாகச் செய்தார். அதோடு விட்டுவிட வேண்டும்.

**ஆனால், தமிழுணர்வை வளர்த்தாரா?**

தமிழனுக்கு சுயமரியாதை இல்லை, பல்வேறு போதனைகளில் அவன் மயங்கியிருக்கிறான் என்பதை அவர் இடித்துரைத்தார். அப்படிச் செய்தது கூட தமிழுணர்வை வளர்ப்பதுதானே?

**1965ஆம் வருடப் போராட்டத்தின்போது குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அவர் எதையும் செய்யவில்லையே?**

முதன்முதலில் இந்தித் திணிப்பிற்கெதிராகக் குரல் கொடுத்தவரே அவர்தான். ஆனால் 1965ஆம் வருடப் போராட்டத்தின்போது மாணவர்கள் தங்கள் படிப்பை வீணாக்கிக்கொள்ளக்கூடாது என நினைத்தார். அதை வெளிப்படையாகவே சொன்னார். அதனால், அவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாடு எடுத்தார் என்று

பொருள் கொள்ளக்கூடாது. அவர் ஒன்றும் இந்தி ஆதிக்கத்தை ஆதரித்துவிடவில்லை. அவருக்கிருந்த வேறுபாடுகளை அவர் வெளிப்படுத்தினார்.

**நம் நாட்டில் ஜாதி அடையாளங்கள் முன்னிலைப் படுத்தப்பட்டு, அதைவிடப் பரந்த அடையாளங்களே மறக்கப்படும்போது மார்க்சீயம் போன்ற கோட்பாடுகளுக்கு எதிர்காலம் இருப்பதாகக் கருதுகிறீர்களா?**

நிச்சயமாக இருக்கிறது. உலகமயமாதலின் விளைவாக எந்த ஒரு சமூகத்திலும் ஒரு சிறு பிரிவினர் மற்றவர்களை சுரண்டி, அவர்களே எல்லாவற்றையும் அனுபவிக்கின்ற போக்கு, நிச்சயமாகப் பரந்துபட்ட மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தும். சமூக அமைப்பிற்குப் பின்னால் இருக்கும் உண்மைகள் விளங்கத் துவங்கும். ஆதிக்க சக்திகள் வளர, வளர அவற்றை எதிர்க்கும் சக்திகளும் வளரத்தான் செய்யும். அந்த அளவில் மார்க்சீயத்தின் அவசியத்தை மக்கள் உணர்வார்கள். தமிழ்நாட்டிலேயே பலர் மார்க்சீய நூல்களைப் படிக்கின்றனர். அத்தகைய நூல்கள் நிறைய மொழிபெயர்க்கப்படுகின்றன. இதெல்லாம் நம்பிக்கைக்குரிய அறிகுறியே.

**பல்வேறு சிறு குழு அடையாளங்கள் மேலோங்கும் போது தமிழ்த் தேசியம் என்னவாகும்?**

தமிழர்களின் வாழ்வியல் நெறிகள், பண்பாடு போன்றவற்றைக் காத்திட தமிழ்த் தேசியம் தேவைப்படுகிறது. பண்பாடு ஒரு சமூகத்தின் ஆணிவேராகும். அது அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். அங்கிருக்கும் புரட்சிகர சக்திகளின் கையில்தான் இருக்கிறது.

**தமிழகத்தைப் பொறுத்தவரை, பெரும்பான்மையினரான பார்ப்பனரல்லாதாரை அணிதிரட்டிய பெரியாரின் பங்களிப்பு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

பெரியார் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்தார். அவர்களால் போற்றி வளர்க்கப்பட்ட மூடநம்பிக்கைகளை, மதக் கட்டமைப்பை சமரசமின்றி எதிர்த்தார். சுயமரியாதை உணர்வினை பரந்துபட்ட மக்கள் மத்தியில் அவர் ஊட்டினார். அந்த அளவில் அவர் தமிழ்ச் சமூகத்திற்கு மிக முக்கியமான பணியாற்றியிருக்கிறார். அதைத் தாண்டி வர்க்க ரீதியான சிந்தனையை வளர்த்தாரா என்பது தேவையில்லாத கேள்வி. அவர் தனக்கென எடுத்துக்கொண்ட பங்கினை சிறப்பாகச் செய்தார். அதோடு விட்டுவிடவேண்டும்.

**ஆனால், தமிழுணர்வையாவது வளர்த்தாரா?**

தமிழனுக்கு சுயமரியாதை இல்லை, பல்வேறு போதனைகளில் அவன் மயங்கியிருக்கிறான் என்பதை அவர் இடித்துரைத்தார். அப்படிச் செய்தது கூட தமிழுணர்வை வளர்ப்பதுதானே?

**1965ஆம் வருட போராட்டத்தின்போது குறிப்பிட்டுச் சொல்லும் படியாக அவர் எதையும் செய்யவில்லையே?**

முதன் முதலில் இந்தித் திணிப்பிற்கெதிராகக் குரல் கொடுத்தவரே அவர்தான். ஆனால் 1965 போராட்டத்தின்போது மாணவர்கள் தங்கள் படிப்பை வீணாக்கிக்கொள்ளக்கூடாது என நினைத்தார், அதை வெளிப்படையாகவே சொன்னார். அதனால் அவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு எதிரான நிலை எடுத்தார் என்று பொருள் கொள்ளக்கூடாது. அவர் ஒன்றும் இந்தி ஆதிக்கத்தை ஆதரித்துவிடவில்லை. அவருக்கிருந்த வேறுபாடுகளை அவர் வெளிப்படுத்தினார்.

**நம் நாட்டில் சாதி அடையாளங்கள் முன்னிலைப் படுத்தப்பட்டு, அதைவிடப் பரந்த அடையாளங்களே மறக்கப்படும்போது மார்க்சீயம் போன்ற கோட்பாடுகளுக்கு எதிர்காலம் இருப்பதாகக் கருதுகிறீர்களா?**

நிச்சயமாக இருக்கிறது. உலகமயமாதலின் விளைவாக எந்த ஒரு சமூகத்திலும் ஒரு சிறு பிரிவினர் மற்றவர்களை சுரண்டி, அவர்களே எல்லாவற்றையும் அனுபவிக்கின்ற போக்கு நிச்சயமாக பரந்துபட்ட மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தும். சமூக அமைப்பிற்குப் பின்னால் இருக்கும் உண்மைகள் விளங்கத்துவங்கும். ஆதிக்க சக்திகள் வளர வளர, அவற்றை எதிர்க்கும் சக்திகளும் வளரத்தான் செய்யும். அந்த அளவில் மார்க்சீயத்தின் அவசியத்தை மக்கள் உணர்வார்கள். தமிழ்நாட்டிலேயே பலர் மார்க்சீய நூல்களை படிக்கின்றனர். நிறைய அத்தகைய நூல்கள் மொழி பெயர்க்கப்படுகின்றன. இதெல்லாம் நம்பிக்கைக் குரிய அறிகுறியே.

**பல்வேறு சிறு குழுஅடையாளங்கள் மேலோங்கும் போது தமிழ்த் தேசியம் என்னவாகும் ?**

தமிழர்களின் வாழ்வியல் நெறிகள், பண்பாடு போன்றவற்றை காத்திட தமிழ்த் தேசியம் தேவைப் படுகிறது. பண்பாடு ஒரு சமூகத்தின் ஆணி வேராகும். அது அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

# உ.ரா. வரதராஜன்

**"தமிழர் உரிமைகள்
பாதுகாக்கப்பட வேண்டும்
என்பதற்காக இந்திய
ஒற்றுமைக்கு ஊறு
விளைவிக்கவேண்டுமென்று
கூறுவது அபத்தம். நாடுகள்
பிளவுறும்போது அதனால்
பயன்பெறுவது ஏகாதிபத்திய
சக்திகள்தான்."**

**உ.ரா வரதராஜன்:** *தொழிற்சங்கவாதி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அவர், கடந்த ஆண்டு காலமானார். அவர் அளித்த இறுதிப் பேட்டிகளில் இதுவும் ஒன்று.*

**கேள்வி: இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடமா? தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கு உங்கள் கட்சியின் தீர்வு என்ன?**

*பதில்: இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் வாழ்வது உண்மை. அவை ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன, இருக்கக்கூடும். மொழி வழி தேசிய இனங்களுக்கு அவரவர் மொழி, பண்பாடு, வாழ்வியல் முறை போன்றவற்றை பேணிப் போற்றிட, பாதுகாத்திட எல்லா உரிமைகளும் வேண்டும் என்பதே எங்கள் கட்சிக் கொள்கை. அப்படிப் பல்வேறு இனங்கள் ஒருங்கிணைந்து வாழும் நந்தவனமாகத்தான் நான் இந்தியாவைப் பார்க்கிறேன்.*

*இந்தியாவைச் சிறைக் கூடம் என்று சொல்பவர்கள் ஒரு மொழியினர் மற்ற மொழி இனங்களின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கின்றனர், ஒடுக்குகின்றனர், பண்பாட்டு விழுமியங்களை அழிக்க முயல்கின்றனர் என்று கூறுவார்களேயானால் அதற்கான விளக்கங்களை அவர்கள்தான் தரவேண்டும். இந்தியாவில் இந்தி பேசுபவர்கள்*

அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். இந்தி பேசும் மாநிலங்களிலேயே பல வழக்கு மொழிகள் இருக்கின்றன என்றாலுங் கூட அவ்வப்போது இந்தி ஒரே ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டும் என்ற குரல் எழுகிறது. இன்னும் சிலர் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய மொழிகளுமே ஆட்சி மொழிகளாக வேண்டும் என்று கோருகிறார்கள். அக்கோரிக்கையை நாங்களும் ஆதரிக்கிறோம். அதைத் தாண்டி சிறைக் கூடம், தேசிய இனங்கள் ஒடுக்கப்படுகின்றன போன்ற கருத்துகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

**பொதுவாக மார்க்சிஸ்ட் கட்சி தேசிய இனங்களின் பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. மாறாக இந்திய ஒற்றுமையைப் பாதுகாப்பதிலேயே அக்கறை காட்டுகிறது என்ற விமர்சனம் இருக்கிறதே?**

இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு. உண்மை என்னவென்றால், நாடுகள் பிளவுறும்போது அதனால் பயன் பெறுவது ஏகாதிபத்திய சக்திகள்தான். எனவே இந்தியாவிலும் நாங்கள் சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்துகிறோம். இதனை எந்த வகையிலும் எந்த ஒரு தேசிய இனத்தின் நலனுக்கும் முரணானதாக நாங்கள் நினைக்கவில்லை. தமிழர் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக இந்திய ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கவேண்டும் என்று கூறுவது அபத்தம். இந்தியா சிதறுண்டால்தான் எந்த ஒரு தேசிய இனத்தின் உரிமையும் பாதுகாக்கப்படும் என்று சொல்வதும் ஏற்றுக்கொள்ள முடியாத வாதம். தமிழர் உரிமைகள், இந்திய ஒற்றுமை இரண்டையுமே ஒரு சேரக் காக்கமுடியும் என்றுதான் நாங்கள் நம்புகிறோம்.

**சிங்களப் பேரினவாதம் பேசும் இலங்கையின் முக்கிய இடதுசாரிக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனாவை**

**உங்கள் கட்சி மாநாடுகளுக்கு அழைத்ததால் நீங்கள் இலங்கைத் தமிழர் நலனுக்கு எதிரானவர் என்ற பிரச்சாரம் இங்கே நடந்தது. அது குறித்து என்ன சொல்கிறீர்கள்?**

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை ஏற்கக் கூடிய சிங்களக் கம்யூனிஸ்ட் தலைவர்களை கொன் றொழித்ததை பல ஆண்டுகளுக்கு முன்பே எங்களது இன்றைய பொதுச்செயலாளர் பிரகாஷ் கராத் கடுமையாகச் சாடியிருக்கிறார். ஆனால் சர்வதேச அளவில் சோஷலிசத்திற்குப் பெரும் பின் னடைவு ஏற்பட்ட பின்னர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் அனைத்துக் கட்சிகளுட னும் தொடர்பு கொள்வது, அவற்றுடன் ஓர் உறவை ஏற்படுத்திக்கொள்வது என்பது எங்கள் கட்சியைப் பொறுத்தவரை ஒரு நடைமுறையாகியிருக்கிறது. அந்த வகையில்தான் புது தில்லியில் நடைபெற்ற எங்கள் கட்சியின் 18ஆவது காங்கிரசிற்கு அவர்களை அழைத்தோம். அப்போது அவர்களுடன் நாங்கள் நடத்திய கலந்தாய்வின்போதும் ஒன்றுபட்ட இலங் கைக்குள் தமிழர் பிரச்சினைகளுக்கு ஓர் அரசியல் தீர்வு வேண்டுமென்று வலியுறுத்தினோம்.

பின்னர் இலங்கையின் இரு முக்கிய கட்சிகளுக் கிடையே தமிழர் பிரச்சினையை அணுகுவது குறித்து ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதை ஜேவி.பி. ஏற்றுக் கொள்ளாமல் ஆளுங் கூட்டணியிலிருந்து விலகியது. அப்படிச் செய்தது தமிழர் நலனுக்கு எதிரானது, ஒட்டுமொத்த இலங்கையின் நலனுக்கும் எதிரானது என்று நாங்கள் கருதியதால் கோவையில் நடந்த எங்களது 19ஆவது காங்கிரசிற்கு அவர்களை அழைக்க வில்லை. இவ்வாறாக உலக அளவில் சோஷலிச சக்தி களை ஒன்றிணைப்பது, ஏகாதிபத்தியத்தை எதிர்ப் பது என்ற அடிப்படையிலிருந்துதான் நாங்கள் இத் தகைய பிரச்சினைகளை அணுகுகிறோம்.

**அண்மைக் காலங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈழத் தமிழர் பிரச்சினையில் காட்டிய வேகத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காட்டவில்லை. அதற்கு காரணம் என்ன?**

*1980களிலிருந்து இன்றுவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரே வகையான நிலைப்பாட்டைத்தான் எடுத்து வந்திருக்கிறது. அப்போதே 50 சதவீதத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் சிங்களர்கள் அதிகம் வாழும் தெற்கு, மேற்குப் பகுதிகளில் இருந்ததாக புள்ளிவிவரங்கள் கூறின. அப்போதே அப்படியென்றால், அதைத் தொடர்ந்து நடந்த போரின் காரணமாக இன்னும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்து சிங்களவர் வாழும் பகுதிகளுக்கு சென்றிருக்கக்கூடிய சாத்தியக் கூறு அதிகம். அரசியல் தீர்வு பற்றிப் பேசும்போது இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.*

*அதுமட்டுமல்ல; இலங்கைத் தமிழர் மத்தியில், தமிழ் பேசும் முஸ்லிம்களும் கணிசமான எண்ணிக்கையில் இருக்கின்றனர். அவர்களும் ஒன்றுபட்ட இலங்கையில் வாழவே விரும்புகின்றனர். விடுதலைப் புலிகள் அல்லாத தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி போன்ற அமைப்புகளின் நிலைப்பாடும் இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஏதோ விடுதலைப் புலிகள்தான் இலங்கைத் தமிழர்களின் ஒரே பிரதிநிதி, அவர்களை ஆதரிக்காதவர்கள் தமிழர் நலனுக்கு விரோதமானவர்கள் என்பது போல சித்தரிக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது.*

*இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான தீர்வைத்தான் அக்கட்சியின் அகில இந்தியத் தலைமை முன்வைக்கிறது. கடந்த ஆண்டு அவர்கள் உண்ணாவிரதத்திற்கு ஏற்பாடு செய்தபோதும், அந்த ஆர்ப்பாட்டம் விடு*

தலைப் புலிகளை ஆதரித்து அல்ல என்று சி.பி.ஐ உறுதி அளித்த பின்பே நாங்கள் அதில் பங்கேற்றோம். ஆனால் தா. பாண்டியன் அவர்கள் தமிழ் மாநில செயலாளராகப் பொறுப்பேற்ற பின்னர், விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் மற்ற கட்சிகளைவிட மிகத் தீவிரமாகவே பேசுகிறது அக்கட்சி. அகில இந்திய அணுகுமுறைக்கும் இங்கே இவர்கள் செயல்பாட்டிற்கும் இடையே ஒரு முரண்பாடு நிச்சயமாக இருக்கிறது. அது ஏன் என்பதை அவர்கள்தான் விளக்கவேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை விடுதலைப் புலிகளை மையமாக வைத்தோ, ராஜீவ் காந்தி கொலையை மையமாக வைத்தோ பார்ப்பதில்லை. மாறாக ஒட்டுமொத்த இலங்கைத் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டே கொள்கைகளை வகுத்துக்கொள்கிறோம். அம்மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதிலோ, அவர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதை வலியுறுத்துவதிலோ நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை.

இப்போதெல்லாம் எங்கள் நிலைப்பாட்டை ஒட்டியே மற்ற கட்சிகளும் அரசியல் தீர்வை வலியுறுத்துகின்றன. தேர்தல் பிரச்சாரத்தின்போது ஜெயலலிதா அம்மையார் வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு கருத்துகளைக் கூறினாலுங்கூட, தேர்தல்களுக்குப் பிறகு நடந்த அவர்கள் கட்சியின் செயற்குழுகூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்திலும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் கோ.க.மணி சட்டமன்றத்தில் பேசுகையிலும் எங்கள் நிலைக்கு வலுவூட்டும் கருத்துகளே முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வேறுவிதமாகப் பேசுவார்களேயானால் அது அவர்களது உரிமை. அது பற்றி நாங்கள் ஒன்றும் கூறுவதற்கில்லை.

**அரசியல் தீர்வு என்கிறீர்கள்; ஆனால் அப்படி ஒரு தீர்வு பிறக்க நீங்கள் என்ன முயற்சி எடுத்திருக்கிறீர்கள்? இந்தியாவோ, மற்றவர்களோ எப்படி அணுக வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

*இந்தியா இப்பிரச்சினையில் போதுமான அக்கறை காட்டவில்லை. எங்கள் பொதுச்செயலாளர் பிரகாஷ் காரத்கூட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் காட்டிய ஆர்வத்தில் பத்தில் ஒரு பங்கை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டியிருந்தால் நிச்சயம் ஒரு நல்ல தீர்வை கண்டிருக்கமுடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக பயங்கரவாதத்திற்கெதிரான ஒரு ராணுவ நடவடிக்கையாக மட்டுமே அங்கே நடந்த போரை மத்திய அரசு பார்த்தது. ராஜீவ் காந்தி கொலையையும் தாண்டி அப்பிரச்சினைக்கு மற்ற பரிமாணங்கள் உள்ளன என்பதை அவர்கள் உணரவேயில்லை.*

**இப்பிரச்சினையில் தமிழக அரசின் அணுகுமுறை பற்றி?**

*திமுக தொடர்ந்து தனது நிலைப்பாட்டை மாற்றி வந்திருக்கிறது. அது அவர்களுக்கே தர்மசங்கடத்தையும் உருவாக்கியிருக்கிறது. என் தமிழ் மக்களைக் கொன்ற இந்திய அமைதிகாக்கும் படையினை வரவேற்கச் செல்லமாட்டேன் என்ற கருணாநிதி, "இனி நான் என்ன செய்யமுடியும், பிரபாகரன் பிடிபட்டால் அவர் கௌரவமாக நடத்தப்பட வேண்டும்" என்று சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்தியா தலையிடாவிட்டால் தமிழக எம்.பிக்கள் அனைவரும் ராஜிநாமா செய்யவேண்டும் என்றவர், அதிலும் உறுதியாக இருக்கமுடியவில்லை, எதிர்க்கட்சிகளின் எள்ளலுக்கு ஆளானதுதான் மிச்சம். முதல்வர் கருணாநிதி ஏதாவது ஒரு*

கட்டத்தில் உறுதியாக இருந்திருந்தால் இன்று நிலைமை வேறு மாதிரி இருந்திருக்கக்கூடும். தவிர வும் தமிழகத்தில் இலங்கைப் பிரச்சினையை அவர வர் தங்கள் சொந்த அரசியல் லாபத்திற்கு பயன் படுத்திக்கொள்ள முயற்சிப்பதும், இதில் ஒருமித்த கருத்து உருவாகாமல் போனதற்கு ஒரு காரணம்.

**சி.பி.ஐயைப் போன்றில்லாமல், உங்கள் கட்சியில் பிராமணர்கள் ஆதிக்கம் இருப்பதால்தான் உங்களுக்கு பெரியாரியத்தின் மீதோ, தமிழ்த் தேசியத்தின் மீதோ அதிக அக்கறை இல்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே?**

இதுபோல சிலர் கூறிவருவது எனக்குத் தெரியும். பிளவுபடாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலும், இரண்டாகப் பிரிந்த பிறகும், எங்கள் தலைவர்கள் பற்றி இப்படிப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இது ஏதோ மலையாளிகள், பிராமணர்கள் கட்சி என் றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் இவையெல்லாம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள். தவிரவும் எங்கள் கட்சியில்தான் தலைவர்களிலிருந்து தொண்டர் கள் வரை, ஏராளமானோர் ஜாதி மறுப்புத் திரு மணம் செய்திருக்கிறார்கள். பெரியார் மீது அரசி யல்ரீதியாக எங்களுக்குப் பல விமர்சனங்கள் உண்டு. தி.மு.கவே, இந்தியா விடுதலை பெற்றது குறித்த பெரியாரின் நிலைப்பாட்டை கண்டித்துத் தானே பிறந்தது. அவர் ஈரோட்டுப் பாதையிலே தொடர்ந்திருப்பாரேயானால், தமிழ்ச் சமூகத்தின் நிலை இன்று வேறு மாதிரி இருந்திருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

ஆனால் சமூகரீதியாக, ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை, பகுத்தறிவு உள்ளிட்ட தளங்களில், அவ ரது பணி மகத்தானது. அதை நாங்கள் அங்கீகரிக்கி றோம். முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். அதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. எங்கள்

வருத்தமே பெரியாரின் இத்தகைய ஜீவாதாரமான கொள்கைகளை திராவிடக் கட்சிகளாக தங்களை வரித்துக் கொள்ளும் அமைப்புகள் புறக்கணித்து விட்டன அல்லது அவற்றை விட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டன என்பதுதான். பெயரில் மட்டும்தான் திராவிடம் எஞ்சி நிற்கிறது. உண்மைப் பெரியாரை – சமூக மாற்றத்திற்காக பாடுபட்ட அந்தப் பெரியாரை, மீட்டெடுக்கவேண்டிய அவசியம் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்.

**கீழவெண்மணி சம்பவத்தில் பெரியார் நில வுடைமையாளர்களை ஆதரித்தது உண்மையா?**

பெரியார் என்றல்ல, அன்று முதல்வராக இருந்த அண்ணாவே என்ன செய்தார்? ராமமூர்த்தி கட்சிக் காரர்களுக்கு ஆபத்து எதுவும் வந்துவிடாது என்று தான் பதற்றம் அதிகரித்தவேளையிலும் குறிப் பிட்டு வந்தார். பின்னர் 42 பேர் உயிருடன் எரிக்கப் பட்டனர். வருத்தப்பட்டார். அவ்வளவுதான். எங் களது போராட்டம் நிலப்பிரபுத்துவத்திற்கெதி ரானது, ஜாதிக் கொடுமைகளுக்கு எதிரானது என் பதை அன்று பெரியார் உணராமல் சில கருத்து களை அவர் சொல்லி இருக்கலாம். அதனால் அவர் மீது எங்களுக்குள்ள மரியாதை மாறிவிடப் போவதில்லை. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவர் எப்படி நடந்துகொண்டார் என்பதை மாத்திரம் வைத்து நாம் ஒரு தலைவரை மதிப்பீடு செய்துவிட முடியாது.

**தமிழ்த் தேசியம் என்ற ஒன்று தேவைதானா?**

தமிழ் மொழி பேசப்படும்வரையில் அவ்வின அடையாளங்கள், இனப்பற்று, பண்பாட்டுக் கூறுகள் எல்லாம் இருந்துகொண்டுதான் இருக்கும். அந்த வகையில் மொழி வழித் தேசியம் அவ்வினத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும் நியாயமே.

**உலகமயமாதல் பின்ன்ணியில் மார்க்கசியத்திற்கோ, தமிழ்த் தேசியத்திற்கோ எதிர்காலமிருக்கிறதா?**

பூமிப் பந்து ஒரு கிராமமாக சுருங்குவதாக சொல் லிக் கொண்டாலும், உண்மை என்னவெனில், உலகின் பல்வேறு பகுதிகளிலும் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றன். ஜாதி, மத, இன, நிற வேறுபாடுகள் கூர்மை அடைந்து கொண்டிருக்கின்றன. மனித இனத்தின் பிரச்சினை களுக்கு மூலதனத்திடம் தீர்வு இல்லை. மாறாக மார்க்கசியத்திடமே இருக்கிறது. இன்று உலகளா விய அளவில் நாம் பார்க்கும் பொருளாதாரச் சிக்கல் மார்க்சியத்தின் தேவையினையே வலியுறுத்துகிறது. ஆகவே மார்க்கசியத்திற்கும் அதன் வழியில் தேசிய இன விடுதலைக்கும் மிகச் சிறப்பான எதிர்காலம் காத்திருக்கிறது என்றுதான் நாங்கள் நம்புகிறோம்.

# ஞானசேகரன்

**"இப்போது மக்கள் பல்வேறு இன்னல்களுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்றால் விடுதலைப் புலிகளே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இந்திய அரசையோ, காங்கிரசையோ குறைசொல்லிப் பயனில்லை."**

**ஞானசேகரன்:** *1991லிருந்து தொடர்ந்து வேலூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வரும் ஞானசேகரன், விடுதலைப் புலிகளின் தீவிர எதிர்ப்பாளராக அறியப்படுபவர். காங்கிரஸ் தலைவர். வழக்கறிஞர்.*

**கே. இந்தியாவில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் ஒடுக்கப்படுவதாக கூறப்படுவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

ப. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் நமது இந்தியத் திருநாடு. அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய நமது அரசியல் அமைப்புச் சட்டம், பல்வேறு மதத்தவரும் இங்கே வாழ்வதை ஏற்றுக் கொள்ளும் வகையில் மதச்சார்பின்மையை ஒரு தாரக மந்திரமாகவே சொல்லுகிறது. தவிரவும் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் நடக்கும் நமது தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள அனைத்து கட்சிகளும் ஜனநாயகத்தை மதித்தே நடந்து வந்துள்ளன. இந்தச் சூழலில் இந்தியாவில் எந்த ஒரு இனமும் அடக்கப்பட்டதாகக் கூறப்படுவது தவறு.

**தமிழர்களுக்குத் தமிழுணர்வு வேண்டுமா, வேண்டாமா?**

தமிழனாகப் பிறந்த அனைவருக்கும் தமிழுணர்வு நிச்சயம் தேவை. நம் அனைவருக்கும் மொழி

உணர்வு வேண்டும், பெருமை வேண்டும். அதில் இருவேறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது. அதே நேரம் நாம் மற்ற மொழிகளை வெறுத் தொதுக்க வேண்டிய அவசியம் இல்லை. வெளிநாடுகளில் நம் இளைஞர்கள் பணிபுரிய, வாழ ஆங்கிலம் தேவைப்படுகிறது. அதேபோல் புதுதில்லி என்றால் இந்தி தேவைப்படுகிறது. நாம் எந்த மொழியையும் ஒதுக்கக்கூடாது.

**1937இலிருந்து 1965 வழியாக இலங்கைத் தமிழர் களுக்கு ஆதரவான சமீபத்திய ஆர்ப்பாட்டங்கள்வரை, தொடர்ந்து காங்கிரசும் காங்கிரஸ் அரசுகளும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிராகவே இருந்திருக் கின்றன என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.**

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக பல்வேறு முயற்சிகளை காங்கிரஸ் அரசுதான் தொடர்ந்து எடுத்து வந்திருக்கிறது, அன்னை இந்திரா காந்தி காலத்தில்தான் போராளிக் குழுக்களுக்கு பல்வேறு உதவிகள் அளிக்கப்பட்டன. அதற்குப் பின்னர் ராஜீவ் காந்தி காலத்தில் இந்திய–இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது. தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி களுக்கு அதிக அதிகாரம் வழங்க இலங்கை அரசு ஒப்புக்கொண்டது. ராஜீவ் காந்தியே பிரபாகர னுக்கு புல்லட் ப்ரூஃப் சட்டையை அணிவித்து, உங்கள் நாட்டிற்குச் சென்று தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ உதவுங்கள் என்று வாழ்த்தி அனுப்பினார். ஆனால் அந்த ராஜீவ் காந்தியைத்தான், ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடி குண்டை அனுப்பிக் கொன்றார்கள். எவ்வளவு பெரிய கொடுமை? இலங்கைத் தமிழர் போராட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அடி அது.

ஸ்ரீசபாரத்தினத்தில் துவங்கி பத்மநாபா, அமிர்தலிங்கம் என்று பலரை விடுதலைப் புலிகள் கொன்றொழித்து உலகமக்களின் அனுதாபத்தை

இழந்தனர். இறுதியில் போராட்டத்திலும் தோல்வியுற்றனர். இப்போது மக்கள்தான் பல்வேறு இன்னல்களுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்றால், விடுதலைப் புலிகளே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இந்திய அரசையோ, காங்கிரசையோ குறை சொல்லிப் பயனில்லை.

**அண்மைக் கால இலங்கை நிகழ்வுகளில் மத்திய அரசின் அணுகுமுறை உங்களுக்கு ஏற்புடையது தானா? போர் நிறுத்தம் கோரியும் இலங்கைத் தமிழர்கள் துயர்துடைக்கவும் இலங்கை அரசை வற்புறுத்துமாறும் காங்கிரசார் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்ததுண்டா? அப்படி வைத்திருந்தால் அதற்கு என்ன பதில் கிடைத்தது?**

எங்களுடைய கோரிக்கையின் பேரில்தான் மத்திய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. போர் ஓய்ந்த நிலையில் அங்கே இடம்பெயர்ந்தோரின் மறுவாழ்வுக்கென 500 கோடி ரூபாய் ஒதுக்கப் படுமென குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரையிலே அறிவிக்கப்பட்டது. அதேபோல் இரண்டு மாத காலமாக நடுக்கடலில் அல்லாடிக் கொண்டிருந்த வணங்கா மண் கப்பலில் இருந்த பொருட்கள் இலங்கையில் உள்ள இடம்பெயர்ந் தோரை சென்றடையுமாறு செய்ததும் எங்கள் அரசு தானே? ராஜீவ் படுகொலையிலிருந்து நாங்கள் இன்னமும் முழுமையாக மீளவில்லை. அக்கொடுஞ் செயலைச் செய்த விடுதலைப் புலிகளை மன்னிக்க வும் நாங்கள் தயாராக இல்லை. ஆனால் ராஜீவின் துணைவியார், அன்னை சோனியா காந்தி, ராஜீவின் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நளினியை மன்னிக்குமாறு சிபாரிசு செய்தார் என்பதை மறந்துவிடக்கூடாது.

**பொதுவாகவே மத்திய அரசு, தமிழர் நலன்களைப் புறக்கணிப்பதாகத்தானே கருதப்படுகிறது?**

அது தவறு. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. முன்னெப்போதுமில்லாத அளவுக்கு தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் அமைச்சர் களாக இருக்கிறார்கள். நிறைய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தமிழகத்தில் மத்திய அரசால் அமல்படுத்தப்படு கின்றன. எவ்விதத்திலும் தமிழகம் புறக்கணிக்கப் படுவதாகக் கூறமுடியாது.

**நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழகத்தில் பல காங்கிரஸ் தலைவர்கள் தோல்வியுற்றது, ப. சிதம்பரத் தின் சர்ச்சைக்குரிய வெற்றி - இதெல்லாம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரசின் அணுகுமுறை குறித்து இங்குள்ள தமிழர்களின் அதிருப்தியை வெளிப் படுத்துவதாக நீங்கள் நினைக்கவில்லையா?**

ஏன் தோல்வி என்று நினைக்கவேண்டும்? 40 இடங்களில் 28 இடங்களில் எங்கள் கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது. அது பெரும் வெற்றிதானே? சில தலைவர்கள் தோல்வியுற்றிருக்கலாம். ஜனநாயகத் தில் இதெல்லாம் சகஜம். இலங்கைப் பிரச்சினை காரணமாகத்தான் எங்களுக்குத் தோல்வி என்றால், இலங்கை மீது படையெடுத்து தனி ஈழம் அமைக்க உதவுவேன் என்று மேடைக்கு மேடை பேசிய ஜெயலலிதாவின் கூட்டணி ஏன் படுதோல்வியடைய வேண்டும்? பா.ம.க. போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் தோல்வியுற்றது. தமிழ், தமிழ னென்று முழங்கிய வைகோவே தோற்றுப் போனார். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? அவர்களது இலங்கை நிலைப்பாட்டை மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதையா? இல்லை, மாறாக, மக்கள் பல்வேறு உள்நாட்டுப் பிரச்சினை களை மனதில் வைத்துத்தான் வாக்களித்தி ருக்கிறார்கள். இதில் இலங்கையைப் போட்டு குழப்பிக்கொள்ளக்கூடாது.

**தமிழ்த் தேசியமும் இந்திய தேசியமும் ஒன்றுக் கொன்று முரணானதா? தமிழ்மக்களின் உணர்வு களைப் புரிந்துகொண்டு காங்கிரஸ் செயல்படுவதாக நினைக்கிறீர்களா, அல்லது தன்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமா?**

*தேசியம் என்பதே ஒரு தேசத்தை அடிப்படை யாகக் கொண்டதுதான். இந்தியாவில் ஒரே ஒரு தேசியம்தான் இருக்கமுடியும், அது இந்திய தேசியம் தான். இந்தியாவில் பிறந்து, வளர்ந்து, வாழும் நாம் அனைவரும் இந்தியப் பிரஜைகள்தான் என்பதை மறக்கக்கூடாது. இந்தியா என்ற கட்டமைப்பு உறுதியாக இருந்தால்தான் நம் எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும். மற்றபடி மாநிலத்திற் கொரு தேசியம் என்பது நாட்டு ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும். மொழிப் பற்று என்பது வேறு. நமது மாநிலத்தின் உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பது வேறு. இனதேசியம் பேசுவது வேறு. அப்படிச் செய்வது நமக்கு நலம் பயக்காது.*

*நமக்கு அண்டை மாநிலங்களுடன் ஏற்படுகிற சர்ச்சைகளுக்கெல்லாம் காரணம், மாநில உணர்வுகள் ஓங்குவதுதான். எல்லோரும் வாக்குகளுக் காக, எங்கள் கட்சியையும் சேர்த்துத்தான் சொல் கிறேன், அந்தந்த மாநில உணர்வுகளுக்கு தீனி போடு கின்றனர். பொதுவுடைமை பேசும் கம்யூனிஸ்டுகள் ஏதேதோ சாக்குச் சொல்லி முல்லைப் பெரியார் அணையில் நீர்தேக்க அளவைக் கூட்ட விடாமல் செய்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. விவசாயிகள் வாடுகிறார்கள். ஆக, மாநில உணர்வுகள் வளர, வளர சிக்கல்கள்தான் பெருகுகின்றன.*

*மாநிலப் பிரச்சினை ஒன்றை மையமாக வைத்து ஒரு தேசியக் கட்சி போராட்டம் நடத்த வேண்டுமென்றால் அகில இந்தியத் தலைமையின்*

அனுமதி வேண்டியிருக்கிறது. சில சமயம் அது எரிச்சலை ஏற்படுத்தலாம். ஆனால் அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். ஏனெனில் அகில இந்தியத் தலைமை பரந்த நாட்டின் நலனை மனதில் கொண்டே முடிவுகள் எடுக்கும். இந்திய தேசியமே ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கு, இணக்கமான சூழலுக்கு வழி வகுக்கும்.

**பார்ப்பன எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, ஈழப் பிரச்சினை போன்றவற்றில் காங்கிரசின் நிலைப்பாடு சரி என நினைக்கிறீர்களா?**

நிச்சயமாக. பார்ப்பன எதிர்ப்பு என்பது தேவையற்ற ஒன்று. பார்ப்பனர்களாகப் பிறந்துவிட்டனர் என்ற காரணத்தினாலேயே அவர்களை எதிர்ப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. சமூகத்திலுள்ள மற்ற பிரிவினரைப் போல அனைத்து உரிமைகளையும் பெற்று அவர்கள் வாழவேண்டும். மொழிப் பிரச்சினையிலும் நாங்கள் தமிழுணர்வை மதிக்கிறோம், எல்லோருக்கும் அவ்வுணர்வு வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். 1965இல்கூட இந்தி எதிர்ப்புப் பிரச்சினையில், காமராஜர் தெளிவாகவே சொன்னார் – ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் இந்தி வந்து குந்திவிடும். அதே நேரம் மற்ற மொழிகளுக்கு எதிராக இருக்கவேண்டாம். அவ்வாறிருப்பது, வெளி மாநிலங்களில் நமது இளைஞர்களுக்கு கிடைக்கும் வேலைவாய்ப்பை கெடுப்பதாகும்.

ஈழத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் எடுத்த பல்வேறு முன் முயற்சிகள் பற்றி நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். புலிகளின் தீவிரவாதமே அவர்களது அழிவிற்கு வழிவகுத்தது. 'வாளை எடுத்தவன் வாளால்தானே அழியவேண்டும்.' அவர்களது தான்தோன்றித்தனத்தால் ஏற்பட்ட விளைவுகளையே அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

# தியாகு

"மொழி என்பது ஒரு
இனத்தின் முக்கிய
அடையாளம். இந்தியாவை
இன்று ஆள்வோர் அந்த
அடையாளத்தைக் கருவறுக்க
முயல்கின்றனர். இதைத்
தேசிய இனங்கள்
உணர்கிறபோது மத்திய
அரசுக்கு எதிரான
போராட்டங்கள் வெடிக்கும்."

**தியாகு:** *தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர். தமிழிலக்கியம் மற்றும் மார்க்சியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் தாய்மொழி வழிக் கல்வியிலும் மிகுந்த அக்கறை காட்டிவருகிறார்.*

**கேள்வி: நக்சல்பாரி இயக்கத்தில் முழுமூச்சாக ஈடுபட்டு, ஒரு கொலை வழக்கில் தண்டிக்கவும்பட்டு, 15 ஆண்டு காலம் சிறையில் இருந்த நீங்கள் எப்படி தமிழின உணர்வாளராக மாறினீர்கள்?**

*பதில்: வர்க்கம், இனம், நிறம், பால், ஜாதி இப்படி எத்தளத்திலும் சுரண்டல் நடப்பதை நம்மால் ஏற்க முடியாது. அனைத்துவித சுரண்டல்களையும் எதிர்க்கும் விதமாகத்தான் நான் நக்சல்பாரி இயக்கத்தில் இணைந்தேன். ஆனால் இந்தியாவில் முதற்கட்டமான ஜனநாயகப் புரட்சி நிகழாமல் அடுத்தகட்டமான பாட்டாளி வர்க்க புரட்சி சாத்தியமில்லை. அந்த ஜனநாயகப் புரட்சிக்கு தேசிய இனங்களின் விடுதலை அவசியம் என்று உணர்ந் தேன். எனவே தமிழின உணர்வுகளைத் தட்டி யெழுப்பும் பணியில் என்னை ஈடுபடுத்திக்கொண் டேன். தோழர் லெனினும் தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார். எனவே எனது போராட்ட வாழ்க்கை சரியான திசையில்தான் போய்க்கொண்டிருக்கிறது.*

**நீங்கள் எக்காலகட்டத்தில் இத்தகைய புரிதலுக்கு, புதிய ஜனநாயக புரட்சிக்கு தேசிய இனங்களின் விடுதலை தேவை என்பதான கருத்தியலுக்கு வந்து சேர்ந்தீர்கள்?**

*நான் சிறையில் இருந்தபோதே நக்சல்பாதை பற்றி மீளாய்வு செய்யத் தொடங்கினேன். சாரு மஜூம்தாரோடெல்லாம் நீண்ட விவாதங்களை நடத்தியிருக்கிறேன்.*

*இந்தியா ஒரு நாடல்ல, மாறாக பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. நம்மை அடிமைப்படுத்தி இருந்த பிரித்தானியர்கள் அவர்கள் நிர்வாக வசதிக்காக உருவாக்கிய ஓர் அமைப்பே இந்தியா. இங்கே தொடர்புகொள்ள ஒரு பொதுமொழி இல்லாததே நாடு தழுவிய புரட்சி ஏற்பட பெரும் தடைக்கல்லாக இருக்கிறது என்று நான் அப்போதே உணர்ந்திருந்தேன். வாரங்கல்லிலிருந்து பீர்பம் வரை நீண்ட பயணம் என்று சாரு மஜூம்தார் கூறியபோது நான் குறுக்கிட்டு ஆந்திராவைத் தாண்டும்போது அம்மாநில விவசாயப் போராளிகளுக்கு மொழிச் சிக்கல் வந்துவிடுமே என்று சுட்டிக்காட்டினேன். தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் தங்கள் விடுதலைக்காகப் போராடி வெற்றிபெறுவதன் வாயிலாகவே புதிய ஜனநாயக புரட்சிக்கு நாம் வித்திட முடியும், அதன் பிறகே நாம் சோஷலிசம் பற்றி பேசமுடியும்.*

*வேறு பல காரணங்களினால் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தாலும் தேசிய இனப் பிரச்சினை என்னை உறுத்திக்கொண்டே இருந்தது. நான் சிறையிலிருந்து விடுதலையான நேரம்தான் இலங்கையில் போராட்டம் தீவிரமடைந்துகொண்டிருந்தது. அப்போது மார்க்சிஸ்ட் கட்சி மற்றவர்களை விடவும் ஈழவிடுதலைக்கு எதிராக கடுமையானதொரு நிலைப்பாட்டை எடுத்தது. அதனால், ஒரு கட்டத்தில் சி.பி.எம்மிலிருந்து வெளியேற முடிவெடுத்தேன்.*

நான் அக்கட்சியிலிருந்தபோதுதான் திலீபன் 42 நாட்கள் உண்ணாவிரதமிருந்து இறந்தார். அது என்னை மிகவும் பாதித்தது. என் மகளுக்கு திலீபா என்று பெயர் சூட்டினேன். என்ன அப்படி ஒரு பெயர் என்று தோழர்கள் கேட்டனர். ஆணாக இருந்திருந்தால் திலீபன் என்று பெயர் வைத்திருப்பேன். பெண்ணாக இருந்தாலும் திலீபனின் தியாகத்தினை என்றென்றும் நினைவுகூரும் வண்ணம் திலீபா என்று வைத்தேன் என்றேன். கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர்தான் நான் திலீபன் மன்றம் துவக்கினேன்.

**நீங்கள் தமிழின விடுதலை வேண்டுமென்கிறீர்கள்? அப்படியானால் அவர்களை ஒடுக்குவது யார், எவருடைய பிடியிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ளவேண்டும்? இப்பிரிவினர்தான் நம்மை அடிமைப்படுத்தியிருக்கிறார்கள் என்று நீங்கள் விளக்கினால்தானே, நிரூபித்தால்தானே மக்கள் உங்கள் பின் அணி திரள்வார்கள்?**

இந்தியாவை ஆண்டுகொண்டிருப்பது ஒரு குறிப்பிட்ட இனம், வர்க்கம் என்று கூற இயலாது. அது ஒரு கலவை. பெரு முதலாளிகள், பார்ப்பன பனியாக்கள், சமஸ்கிருதமயமாக்கப்பட்ட இந்தியைப் பரப்பத் துடிக்கும் மேல்ஜாதி வட இந்தியர்கள் எனப் பல பிரிவினர் இப்போது நம்மை ஆளும் வர்க்கத்தில் அடங்குவர். மொழியை வைத்தே நம்மையும் மற்ற தேசிய இனங்களையும் அவர்கள் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். வட இந்தியாவில் வசிக்கும் சமஸ்கிருத இந்தி பேசாதவர்களும் இவ்வாறு சுரண்டப்படுகின்றனர். மொழி என்பது ஒரு இனத்தின் மிக முக்கிய அடையாளம். இந்தியாவை இன்று ஆள்வோர் அந்த அடையாளத்தைக் கருவறுக்க முயல்கின்றனர். இதை தேசிய இனங்கள் உணர்கின்றபோது மத்திய அரசுக்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கும், இறுதியில் அந்தந்த இனத்திற்கான நாடுகள் உருவாகும்.

**எந்த அளவுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தகைய இன உணர்வைப் பெற்றிருக்கிறார்கள்? இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுகள், அவற்றுக்கான எதிர்வினை, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள், இவையெல்லாம் எதைக் சுட்டிக்காட்டுகின்றன?**

*பல தமிழ் இளைஞர்கள் 'இந்தியா' என்ற மயக் கத்திலிருந்து விடுபட்டிருக்கிறார்கள், அது கணி சமான முன்னேற்றம்தானே?*

இந்தியா என்ற அமைப்பு தங்களுக்கு நன்மை பயக்கும், அதற்குள் தங்கள் எதிர்காலத்தை அமைத்துக்கொண்டுவிடலாம் என்று நம்பி வந்தவர்கள் இன்று மத்திய அரசு தமிழர் நலனில் அக்கறை கொள்ளாதது மட்டுமல்ல, இலங்கையி லுள்ள நமது சகோதரர்களை அழித்தொழிப்பதற்கு துணை போயிருக்கிறது; போர்நிறுத்தம் என்ற நமது கோரிக்கையினை முற்றிலுமாக அலட்சியப்படுத்தி யிருக்கிறது; எனவே இது நமது நலன் காக்கும் அரசல்ல, மாறாக நம்மை ஒடுக்கும் அரசு என்று புரிந்துகொண்டுவிட்டனர். இது தமிழின விடுதலை முயற்சியில் முக்கியமான கட்டம். எங்கள் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஆர்ப் பாட்டங்களுக்கெல்லாம் பேராதரவு இருந்தது. முத்துக்குமாருக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர். முத்தாய்ப்பாக முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் தோல்வியுற்றனர். உள்துறை அமைச் சர் சிதம்பரம் எப்படி வெற்றிபெற்றார் என்பதே ஒரு சிதம்பர ரகசியமாகத்தான் கருதப்படுகிறது.

இன்னொன்று, தேர்தல் வெற்றி – தோல்வி போன்றவற்றை இன உணர்வின் வெளிப்பாடாக கருத வேண்டிய அவசியம் இல்லை. நாங்களும் தி.மு.க. – காங்கிரஸ் அணிக்கு எதிராக கச்சை கட்டவில்லையே. அ.இ.அ.திமுகவின் நிலைப்பாடு சந்தர்ப்பவாதம் என்று நாங்கள் நன்கு உணர்ந்தே இருந்தோம். நெருக்கடியான காலகட்டத்தில்

முன்வந்து தரப்பட்ட ஆதரவு என்பதால் அதை நாங்கள் வரவேற்றோம். தேர்தல்களுக்குப் பிறகு காங்கிரசிற்கு அ.இ.அ.தி.மு.க. ஆதரவு தேவைப் படும் நிலை ஏற்பட்டிருந்தால் இவர்களும் சற்றும் தயங்காமல் நேசக்கரம் நீட்டியிருப்பார்கள். ஈழத்தை மறந்திருப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

ஆனாலும் தமிழர்களின் மனங்களைக் காயப் படுத்திய காங்கிரசிற்குப் பாடம் கற்பிக்கவேண்டும் என்ற நோக்கில்தான் நாங்கள் அவர்களைக் குறிவைத்தோம், அதுவும் எல்லா தொகுதிகளிலும் அல்ல. விருதுநகரில் நிச்சயம் வைகோ வெற்றி பெற்றுவிடுவார் என்று மெத்தனமாக இருந்தோம். தேனி போன்ற தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.க. சுலபமாக வெற்றி பெற்றுவிடுமென்று நினைத்து அங்கெல்லாம் கோட்டைவிட்டோம். ஆனால் இறுதியில் முடிவுகள் எங்களுக்கு ஓரளவு திருப்தியே. செய்தி காங்கிரசிற்கும் தி.மு.கவிற்கும் சென்றிருக்குமல்லவா...

**ஆனால், பலர் காங்கிரசிற்கு மனமுவந்து வாக் களித்திருக்கின்றனர். சிதம்பரத்தை எதிர்த்துப் போட்டியிட்ட இளைஞர் ராஜீவ் இரண்டாயிரத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற்றார். காங்கிரசின் '100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம்' அவ்வணியின் வெற்றிக்கு முக்கியமானதொரு காரணியாகக் கருதப் படுகிறது. எங்குமே இலங்கைப் பிரச்சினையை மைய மாக வைத்து வாக்களித்ததாக செய்திகள் இல்லை....**

நீங்கள் சொல்வதும் சரிதான். ஆனால் தேர்தல் என்று வரும்போது வெற்றி – தோல்வியை, ஜாதியிலிருந்து, பணத்திலிருந்து, அதிகாரம் தவறாகப் பயன்படுத்து வது உள்ளிட்ட பல பிரச்சினைகள் தீர்மானிக் கின்றன. தவிரவும் தமிழக மக்கள் அனைவருமே இலங்கைப் பிரச்சினை காரணமாக கொதித்தெழுந்து விட்டனர், இன உணர்வு கொழுந்துவிட்டு

எரிகிறது என்று நாங்கள் கூறவில்லையே. மத்திய அரசின் நிலைப்பாடு அம்பலமாயிருக்கிறது என்றுதான் கூறுகிறோம். இதை நாங்கள் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

**அவ்வாறு எடுத்துச் செல்ல எத்தகைய அம்சங்கள் உதவும் என நினைக்கிறீர்கள்?**

நம் நாட்டில் பெரும்பான்மையினர் விவசாயிகள். அவர்களுக்கு நீராதாரம் மிக முக்கியமானதொரு விஷயம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை காவிரியிலிருந்து, பெரியார் அணையிலிருந்து, பாலாறு வரை நமது மக்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்படுகின்றனர். இந்தி ஆட்சி மொழியாக இருப்பதால் நம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் நீதி கிடைப்பதில்லை. இம்மாதிரி பிரச்சினைகள் தீவிரமாகும்போது, ஆட்சியாளர்களின் அணுகுமுறையின் காரணமாக மக்களின் இன்னல்கள் அதிகமாகும்போது தானாகவே இன உணர்வு பொங்கியெழும்.

**இலங்கைப் பிரச்சினையை ஒட்டி எத்தனையோ ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. முத்துக்குமார் உள்ளிட்ட சிலர் தீக்குளித்தனர், ஆனால் மக்கள் தமிழ்த் தேசியத்தின் பக்கம் திரண்டதாகத் தெரியவில்லை, மாறாக, இந்தி எதிர்ப்புப் போரின்போது மிகப் பெரிய தாக்கம் இருந்ததாக கருதப்பட்டது. பின் நடந்து முடிந்த தேர்தல்களில் தோல்வியுற்ற காங்கிரஸ், அதன் பிறகு ஆட்சிக்கு வர முடியவில்லை. அப்படி எதுவும் இப்போது நடப்பதாகத் தெரியவில்லையே, ஏன்?**

இந்தி எதிர்ப்புப் போர் ஓர் நீண்ட நெடிய வரலாற்றின் உச்சகட்டம் என்று சொல்லலாம். திராவிடர் கழகம், தி.மு.கவின் பல்வேறு போராட்டங்களின் விளைவாக நம் தமிழ் மக்கள் 1965க்கு தயாராக இருந்தார்கள். பாரதூர விளைவுகளை அப்போராட்டம் ஏற்படுத்தியது. அத்தகையதொரு

தயாரிப்புப் பணி இப்போது நடைபெறவில்லை. தவிரவும் தமிழ்த் தேசிய உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய தி.மு.க. மிகவும் நீர்த்துப்போய்விட்டது. எல்லா கட்சிகளுமே இலங்கைத் தமிழர் பற்றி அக்கறை இருப்பதாகக் கூற, மக்களுக்கு அதன் அடிப்படையில் வாக்களிப்பது சிக்கலாகிவிட்டது. இன்னும் முக்கியமாக 1942க்குப் பிறகு 1965ஆம் வருடப் போராட்டம் கிராமப்புறங்களிலும் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த அளவுக்கு இலங்கைப் பிரச்சினையின் வீச்சு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

**பொதுவாக தமிழின உணர்வாளர்கள், விடுதலைப் புலிகளை நியாயப்படுத்தியே வந்திருக்கிறீர்கள். அவர்கள் தவறுகளுக்காக அவர்களை விமர்சனம் செய்யாமல் அரசு நடவடிக்கைகளை மட்டும் விமர்சனம் செய்யும் போது உங்கள் நம்பகத்தன்மை குறைகிறது. அதனா லேயே பெரிய அளவிலே மக்கள் மத்தியில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக எழுச்சி எதுவும் இல்லை என்றால் சரியாக இருக்குமா?**

ஈழத் தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு அபரிமிதமான ஆதரவு அளித்தனர். அதுதானே முக்கியம். வெளிநாட்டு ஊடகங்களில் விடுதலைப் புலிகளின் செயல்பாடுகள் குறித்து கடுமையான விமர்சனம் இருந்தது. அதன் விளைவாக எதிர்ப்புணர்வும் இருந்தது. ஆனால் உலகமெங்கும் விடுதலை இயக்கங்கள் மத்தியில் ராணுவ அணுகுமுறை காணப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பல்வேறு நக்சலைட் இயக்கங்கள்கூட துரோகிகள் என்று சிலரை தண்டிக்கின்றன. பிறகு அவ்வாறு மரண தண்டனை கொடுத்தது தவறு என்கின்றன. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அது துவங்கிய சில ஆண்டுகளிலேயே விடுதலைப் போராட்டத் தலைமையேற்க வேண்டிய சூழல்.

நீண்ட அரசியல் அனுபவமில்லாத, பொடியன்கள் என்றழைக்கப்பட்டவர்களிடம் அப்படிப் பொறுப்புகள் சுமத்தப்படும்போது தவறுகள் நிகழ்வது இயற்கை. அதற்காக அவர்களது பங்களிப்பை குறைத்து மதிப்பிடக்கூடாது. அவர்களால் பாதிக்கப்பட்ட குழுக்களைச் சார்ந்தவர்களே பின்னொரு கட்டத்தில் அவர்களுடன் இணைகிறார்கள். தவிரவும் நாங்கள் அவ்வப்போது அவர்களது தவறுகளை சுட்டிக்காட்டி இருக்கிறோம். எனவே எங்களது தொடர்ந்த ஆதரவு நிலை எங்களது நம்பகத்தன்மையினை குறைத்துவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க வாதமல்ல.

**சந்தைப் பொருளாதாரத்தினால் கவரப்படுவிட்ட நமது இளைஞர்களுக்கு, தங்கள் சொந்த முன்னேற்றத்திற்கு அப்பாற்பட்ட எவ்விஷயத்திலும் அதிகம் ஈடுபாடில்லை என்பதும் உண்மைதானே...**

ஓரளவுதான் உண்மை. இத்தகைய போக்கு இருக்கும் அதே கட்டத்தில்தானே முத்துக்குமாரும் முகிழ்த்தார். அது போன்று தமிழின விடுதலை என்ற இலக்கால் உந்தப்படும் இளைஞர்களையும் நான் அன்றாடம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அவர்களை தமிழுணர்வு அமைப்புகள் சரிவர பயன்படுத்துமானால் விடுதலைப் போர் உக்கிரமாகும் என்பதில் ஐயமில்லை.

# பெ. மணியரசன்

"சொந்த தேசத்தை உருவாக்கிக் கொள்ளாத பாட்டாளி வர்க்கம் சர்வதேசியத்திற்கு உருப்படியான பணி எதையும் செய்ய முடியாது. எனவே தமிழ்த் தேசியம் என்ற கோட்பாடு பொதுவுடமைக் கொள்கைக்கோ, பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்திற்கோ எதிரானது அல்ல."

**பெ. மணியரசன்:** *பொதுச் செயலாளர், தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சி.*

*2009ஆம் வருடம் ஜூலை 12ந் தேதி திருச்சியில் தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி தமிழ்த் தேசியம் – சிறப்பு மாநாடு என்ற மாநாட்டை நடத்தியது. அதிலிருந்து பேட்டி துவங்குகிறது.*

**கே. உங்கள் மாநாட்டின் அவசியம் என்ன? என்ன விதமான கருத்துகள் அங்கே பேசப்பட்டன? மக்கள் வருகை எந்த அளவுக்கு இருந்தது? ஊடகங்களின் ஆதரவு எப்படி? உங்கள் மாநாட்டிற்குக் கிடைத்த வரவேற்பை தமிழ்த் தேசியத்திற்கான எதிர்காலத்தை அளவிடும் அளவுகோலாக கொள்ளலாமா?**

ப. தமிழ்நாட்டுத் தமிழர்களின் ஆற்றுநீர் உரிமைகள், தாயக மண்ணுரிமைகள், தமிழகத்தில் தமிழர்களுக்குரிய தொழில், வணிக, வேலைவாய்ப்பு உரிமைகள் போன்றவை பறிபோனதை மீட்க வலியுறுத்தல், தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவு, சிங்கள அரசின் வதை முகாம்களில் சிக்கி அழிந்து கொண்டிருக்கும் தமிழர்களை மீட்டல், தமிழக முகாம்களில் உள்ள ஈழத் தமிழர் வாழ் நிலையை மேம்படுத்தல் எனப் பல கோரிக்கைகளை முன்வைத்து இம்மாநாடு நடைபெற்றது.

தமிழகமெங்குமிருந்து தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களும் தமிழ் இன உணர்வாளர்களும் திரளாக வந்திருந்தனர். பெருங்கூட்டம். இந்த மாநாட்டிற்குப் பெரும் வரவேற்பு கிடைத்

தது. தமிழக மக்கள் தமிழ்த் தேசியப் பதாகையை ஏந்திப் போராடுவார்கள் என்பதற்கான சான்றாக இம்மாநாடு அமைந்தது. ஊடகங்களைப் பொறுத்த வரை திருச்சி மண்டலத்தில் பெரும்பாலான ஏடுகள் மாநாட்டுச் செய்திகளை வெளியிட்டன. தொலைக்காட்சி ஊடகங்கள் மாநாட்டுச் செய்தி களை வெளியிடவில்லை. செய்திகளை உருவாக்குப வர்கள் மக்கள். அவற்றை வெளியிடுபவையே நம் ஊடகங்கள். தமிழ்த் தேசியப் புரட்சி அரசியல் மக்கள் இயக்கமாக வளரவளர ஊடகங்கள் அதற்கு உரிய முக்கியத்துவம் தரும்.

**விடுதலைப் புலிகளின் தோல்வி, அவர்களைத் தீவிர மாக ஆதரித்த அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தல்களில் பெற்ற தோல்வி - இவற்றின் பின்னணி யில் நீங்கள் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட தோல்வியாக இதைக் குறுக்கிப் பார்க்கக் கூடாது. தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரழிவு என்றுதான் பார்க்க வேண்டும். இந்தத் தமிழின அழிப்பை நடத்திய சிங்கள இன வெறி அரசுக்கு ஆயுதம், நிதி ஆகியவற்றை வாரி வழங்கி ஈழத் தமிழரின் குருதியில் இந்தியாவும் கை நனைத்தது. உலக நாடுகள் சிங்கள அரசுக்கு எதிராகத் திரும்பிவிடாமல் தடுக்கும் அரசியல் முயற்சியில் இந்தியா தீவிரமாகச் செயல்பட்டது.

இதனால் கடந்த மக்களவைத் தேர்தலில் காங் கிரசைத் தோற்கடியுங்கள் என்று தமிழ்த் தேசிய அமைப்புகளும் தமிழின உணர்வாளர்களும் பிரச்சாரம் செய்தனர். 16 இடங்களில் போட்டி யிட்ட காங்கிரஸ் 8 இடங்களில் தோற்றது. எங்கள் முயற்சிக்கு 50 விழுக்காட்டு வெற்றி கிடைத்திருக் கிறது. ஈழ ஆதரவுக் கட்சிகள் தோல்வி அடைந் ததை வைத்துத் தமிழ்த் தேசியத்தின் எதிர்

காலத்தை மதிப்பிட முடியாது. எந்தத் தேர்தல் கட்சியும் தமிழ்த் தேசிய அரசியலை முதன்மை இலக்காகக் கொண்டு செயல்படவில்லை.

**உலகளாவிய பொதுவுடைமை பேசும் நீங்கள் எப்படித் தமிழ்த் தேசியத்திற்குள் வந்தீர்கள்?**

தமிழ்த் தேசியம் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் மார்க்சிய லெனினியத்திற்கும் எதிரானதல்ல. உலகம் முழுவதும் தேசிய இன அடிப்படையில்தான் அரசுகள் அமைந்துள்ளன. ஒரு மொழி, ஒரு பண்பாடு கொண்டு ஒரு தொடர்ச்சியான நிலப்பகுதியில் காலம் காலமாக வாழ்ந்து வரும் மக்கள் சமூகம்தான் ஒரு தேசத்திற்கான அடிப்படை அலகு என்ற கருத்தியல் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் வலியுறுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் தேசங்கள் நிறுவப்பட்டன.

இவ்வாறான தேச அரசு உருவாக்கத்தை காரல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் ஆதரித்தனர். ஒரு தேசிய இனம் பிற தேசிய இனங்களுடன் சமத்துவ அடிப்படையில் சேர்ந்து கூட்டாட்சியில் இருப்பதா அல்லது பிரிந்து தனி நாடு அமைத்துக் கொள்வதா என்பதை அந்தத் தேசிய இனம்தான் முடிவு செய்ய வேண்டும் என்றார் லெனின். பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை ஒவ்வொரு தேசிய இனத்திற்குமுள்ள அடிப்படை உரிமை என்றார் லெனின். சோவியத் ஒன்றியத்தை அவ்வாறே அமைத்தார்.

சொந்த தேசத்தை நிறுவிக் கொள்ளாத பாட்டாளி வர்க்கம் சர்வ தேசியத்திற்கு உருப்படியான பணி எதையும் செய்ய முடியாது என்றார் ஏங்கெல்ஸ். எனவே தமிழ்த் தேசியம் என்ற கோட்பாடு பொதுவுடைமைக் கொள்கைக்கோ, பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்திற்கோ எதிரானது அல்ல.

தமிழ்த் தேசிய இனம் இந்தியாவில் ஓர் அடிமைப் பட்ட இனமாகவே உள்ளது. அதற்கு இறையாண்மை யுள்ள சொந்த அரசு கிடையாது. காலனி ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் உத்திகளில் ஒன்றாக மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் உருவாக் கப்பட்ட அதே சட்டப் பேரவை இன்றும் உள் ளது. இறுதி அதிகாரமோ, முழுமையான அதிகா ரமோ தமிழக சட்டப்பேரவைக்கு இல்லை. எப் போழுது வேண்டுமானாலும் கலைக்கப்படலாம். குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்படலாம்.

தமிழக வரி வருவாய், இயற்கை வளங்கள் அனைத் தும் இந்திய அரசுக்கே உரியவையாக உள்ளன. தமிழகத்திலிருந்து வரி வருவாயையும் இயற்கை வளங்களையும் எடுத்துக்கொள்ளும் இந்திய அரசு "மானியம்" என்ற பெயரில் தமிழகத்திற்குப் பிச்சை போடுவது, சகிக்க முடியாத சுரண்டலும் அவ மதிப்பும் ஆகும். தமிழ் மொழிக்கு உரிய இடம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இல்லை. எட்டாவது அட்டவணையில் மொட்டையாக 'மொழிகள்' என்று போடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் மட்டுமே தமிழ் இடம் பெறுகிறது. தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய மொழி என்ற உரிமை அரசமைப்புச் சட் டத்தில் தமிழுக்கு வழங்கப்படவில்லை. எனவே தான் ஒடுக்கப்பட்ட காலனியாக இருக்கும் தமிழ்த் தேசியத்திற்கு இறையாண்மை வேண்டுமென்று கோரும் தமிழ்த் தேசியத்தை முன்வைக்கிறோம்.

இந்தியாவின் பிற தேசிய இனங்களுக்கோ அல் லது உலகில் உள்ள மற்ற தேசிய இனங்களுக்கோ எதிரானது அல்ல தமிழ்த் தேசியம். ஐ.நா. மன்றத்தின் உரிமை அட்டவணையில் கூறியுள்ளபடி, தமிழ்த் தேசிய இனத்திற்குத் தன்னுரிமை கோருகிறோம்.

**தமிழ்த் தேசியவாதிகள் பெருமுதலாளிகள் என்றும் பிற்போக்காளர்கள் என்றும் பெண்ணடிமைச் சிந்தனை**

**யாளர்கள், தலித் எதிர்ப்பாளர்கள் அல்லது தலித்துகள் குறித்து அக்கறை இல்லாதவர்கள் என்றும் விமர்சனம் இருக்கிறது. உங்கள் கருத்து என்ன?**

மேற்படிக் குற்றச்சாட்டுகள் எல்லாம் வெறும் அவதூறு. தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கும் அமைப்புகள் மார்க்சிய – பெரியாரிய – அம்பேத்கரிய கருத்தியல்களை ஏற்றுக் கொண்டவை. நடைமுறையில் அவை பன்னாட்டு முதலாளியக் கொள்ளைக் கொள்கையான உலகமயம், வர்ண – ஜாதி ஆதிக்கம் – பார்ப்பனியம், தீண்டாமை, பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி வருகின்றன.

**பெரியார் பார்ப்பனர்களை எதிர்ப்பதில் காட்டிய அக்கறையினை, தலித் மேம்பாட்டிலோ அல்லது தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுப்பதிலோ காட்டவில்லை என்று சொன்னால் அது சரியாகுமா?**

அது சரியல்ல. தலித் விடுதலைக்கு மெய்யாகப் போராடியவர் பெரியார். வர்ண–ஜாதி எதிர்ப்புப் போராட்டம், பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டம் என்பவை தலித் விடுதலைப் போராட்டத்தின் அடித்தளம்தான். சுதந்திரத் தமிழ்நாடு என்ற லட்சியத்தை அவர் 1938லிருந்து 1973 டிசம்பரில் இறக்கும்வரை வலியுறுத்தினார். 'தமிழ்த் தேசியம்' என்ற ஒரு கருத்தியலை அவர் முன்வைக்கவில்லை என்றாலும் இன்று தமிழ்த் தேசியம் என்று நாங்கள் வரையறுத்துள்ள கோட்பாடு, பெரியாரின் கருத்தியல்களையும் உள்ளடக்கியதுதான்.

பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடியதால் அதை எதிர்த்த போராட்டத்திற்கு அவர் முன்னுரிமை கொடுத்தார். வரலாற்று நாயகர்களாக விளங்கிய தலைவர்கள் சமூக மாறுதலுக்கான பல்வேறு முற்போக்குக் கருத்துகளைச் சொன்னாலும் ஒரு குறிப்பிட்ட இலக்கிற்கு முதன்மை

கொடுத்துப் போராடுவது என்பது உலகில் பலர் கையாண்ட நடைமுறைதான். தனிப்பட்ட பார்ப்பனர்களைப் பெரியார் எதிர்க்கவில்லை. பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைத்தான் எதிர்த்தார்.

**இன்று ஜாதிக்கு ஒரு சங்கம் என்று முளைத்துக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ்த் தேசியம் என்பது நடைமுறை சாத்தியம்தானா?**

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது வெள்ளை ஆட்சியாளர்கள் இப்படித்தான் கேட்டார்கள். இந்தியாவில் எத்தனை ஜாதிகள், மதங்கள், இனங்கள்– நீங்கள் எப்படி ஒன்றாகப் போராட முடியும் என்று கேட்டார்கள். அந்த வினாவுக்கு விடை அளிப்பது போல் பாரதியார் எழுதிய பாடலை இங்கு நினைவு கொள்வது நல்லது.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி – எனில்
அந்நியன் வந்து புகல் என்ன நீதி?"

தேச விடுதலைக்குப் போராடிய எல்லா சமூகங்களிலும் உள் முரண்பாடுகள் இருக்கவே செய்தன. அயலார் ஆதிக்கத்தை எதிர்த்தல் என்று வரும் போது அதற்கு உட்பட்டவையாக உள்முரண்பாடுகள் செயல்புரியும். அண்மையில் ஈழத்தில் தமிழின அழிப்புப் போரை சிங்கள இனவெறி அரசு நடத்தியது. அதற்கு ஆதரவாக இந்தியா செயல்பட்டது. அப்போது தமிழகம் கொதித்து எழுந்தது. தலித் மக்கள் உள்ளிட்ட எல்லா ஜாதி மக்களும் "தமிழர்கள்" என்ற இனஉணர்ச்சி அடிப்படையில் பொங்கி எழுந்தனர். போராட்டங்கள் நடத்தினர். தமிழ் இனம், தமிழ் மொழி என்ற பொதுமைக்குள் அடங்கியவைதான் இங்குள்ள ஜாதிகள். ஜாதி அமைப்புகளும் அப்படியே.

ஆற்றுநீர் உரிமையைப் பறிக்கும் போதும், தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் போதும் இங்குள்ள

எல்லா ஜாதித் தமிழர்களும் பாதிக்கப்படுகிறார் கள். அதன் வலியை உணர்கிறார்கள். எனவே தமிழ்த் தேசியப் புரட்சி எல்லாப் பிரிவுத் தமிழர் களுக்கும் தேவையானதே. தமிழ்த் தேசியம் எழுச்சி பெறுவதை ஜாதி அமைப்புகள் தடுத்துவிடாது.

**இன்று இளைஞர்கள் திரைப்படங்களிலும் தொலைக் காட்சிகளிலும் கணினிகளிலும் தங்களைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் எல்லோ ருக்கும் பொதுவான ஒரு தேசியம், மானுடத்தைப் போற்றும் ஒரு லட்சியம் என்பதெல்லாம் பகல் கனவா?**

தொழில்நுட்பப் புரட்சியை முதலாளியம் தனது வர்க்கத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். இந்தத் தன்னல வெறியானது, மக்களி டம் எதிர் வினையைத் தூண்டும். உலகமயம் இன்றைக்கு லட்சக்கணக்கானோரை வேலையிலி ருந்து விரட்டித் தெருவில் விட்டுள்ளது. அமெரிக்கா விலேயே இந்த அவலம் அன்றாடக் காட்சியாகி விட்டது. எந்தத் தொழில்நுட்பப் புரட்சியைக் கொண்டு மக்களை வெறும் வாடிக்கையாளர் களாகவும் நுகர்வோராகவும் மாற்றினார்களோ, அதே தொழில்நுட்பப் புரட்சி மக்களைப் போராளி களாகவும் மாற்ற உள்ளது. எஜமானர்கள் மாட்டிய அடிமை விலங்கை உடைத்துக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்பார்ட்டகஸ் அதே விலங்கால் எஜமானர்களைத் தாக்கினான். நவீன காலத்தில் கருவிகள் மாறி இருக்கின்றன. அவ்வளவே. எனவே, மனித நேயம், உண்மையான தேசியம் என்ற உயர் லட்சியங்கள் வருங்காலத்தில் செழிக்கும்.

# விடுதலை ராஜேந்திரன்

**“பல்வேறு இனங்களைக் கொண்ட இந்நாட்டின் எதிர் காலம் கவலைக்குரியதுதான். அந்தந்தப் பகுதிகளில் மாநில உணர்வுகள் தலை தூக்குகின்றன. இந்திய தேசியம் என்பதைவிட மொழிவழித் தேசியம் மேலோங்கிக் கொண்டிருக்கிறது”**

**விடுதலை ராஜேந்திரன்:** *பொதுச் செயலாளர், பெரியார் திராவிடர் கழகம்*

**கேள்வி: அண்மைய தேர்தல் முடிவுகளும், விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வியும் தமிழின உணர்விற்கு கிடைத்திருக்கும் பின்னடைவு என்று சொல்லலாமா?**

*பதில்:* இல்லை. அப்படிச் சொல்லமுடியாது. தேர்தல் வெற்றி – தோல்வி, களத்திலே முன்வைக்கப்படுகிற பிரச்சினைகளை வைத்துமட்டும் ஏற்படுவதில்லை. கூட்டணி, எந்தெந்தப் பகுதியில், எவ்வளவு வாக்குப் பதிவு போன்ற எத்தனையோ காரணிகள் அதைத் தீர்மானிக்கலாம். தேர்தல் ஒரு சதுரங்க விளையாட்டு. சாதுரியமாக காய்களை நகர்த்துவோருக்கே வெற்றி கிடைக்கிறது.

ஒன்றை நீங்கள் கவனிக்கவேண்டும். காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு ஈழப் பிரச்சினையில் பெரும் துரோகம் செய்துவிட்டதென்று எங்களைப் போன்றோர் பிரச்சாரம் செய்தோம். அக்கட்சியின் முக்கிய தலைவர்கள் தோல்வியுற்றிருப்பது மக்களுக்கு அக்கட்சியின் மேலுள்ள கோபத்தை எடுத்துக்காட்டுவதாகும் என்று பொருள் கொள்ளலாம்.

தவிரவும் அஇஅதிமுக அணி, நடிகர் விஜயகாந்த், மனிதநேயமக்கள் கட்சி–புதிய தமிழகம் அணி – இவர்களின் வாக்குகளைக் கூட்டினால் அது திமுக–காங்கிரஸ்–விடுதலைச் சிறுத்தைகள் அணி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளைவிட அதிகமே.

எனவே, இந்த first-past-the-post அமைப்பு முறையில் ஏற்படும் தோல்வி என்பது தேர்தலிலே முன் வைக்கப்பட்ட பிரச்சினைகள் மீது மக்கள் அளித்துள்ள தீர்ப்பாகக் கருதமுடியாது.

அதற்கும் அப்பால், கருணாநிதி காங்கிரசுடன் கூட்டு சேர்ந்தாலும் தனக்கு அக்கறை இருப்பதாக காட்டிக்கொண்டு உண்ணாவிரதமெல்லாம் இருந்தார். இதுவரை கடுமையான விடுதலைப் புலி எதிர்ப்பு நிலை எடுத்து வந்த ஜெயலலிதா தேர்தலில் தனி ஈழத்திற்காகவே குரல் கொடுத்தார். இதெல்லாமே தமிழ் இன உணர்விற்கு கிடைத்த வெற்றிதான்.

**விடுதலைப் புலிகளுக்கு களத்தில் ஏற்பட்ட தோல்வி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அத்தோல்வி நம்மில் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது, இன்னமும்கூட அந்த அதிர்ச்சியிலிருந்தும் துக்கத்திலிருந்தும் நம்மால் மீளமுடியவில்லை.

ஆனாலும் இது ஒரு தற்காலிகத் தோல்வியாகத்தான் இருக்கும் என நாங்கள் நம்புகிறோம். ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றி – தோல்வியை நிர்ணயிப்பதில் சர்வதேச அரசியலுக்கும் முக்கிய பங்கிருக்கிறது. செப்டம்பர் 11க்குப் பிறகு எல்லா விடுதலைப் போர்களும் பயங்கரவாதமாக பார்க்கப்படுகின்றன. இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குறித்த விசாரணை வேண்டுமென்று கோரினால், சோஷலிசம் பேசும் சீனா, க்யூபாகூட அத்தகைய தீர்மானத்திற்கெதிராக வாக்களிக்கின்றன. அல்லல் படும் மக்களைப் பற்றி கவலைப்படாமல் அரசு

என்ற முறையில், தனது ஒற்றுமையைக் காப்பாற்றிக்கொள்ள எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்ற ரீதியில் அத்தகைய நாடுகளெல்லாம் செயல்படுகின்றன. இவ்வளவுதான் அவற்றிற்கு மக்கள் மீது இருக்கும் அக்கறை.

ஆனாலும்கூட இலங்கைத் தமிழர்கள் ஒடுக்கப்படும்வரை, அவர்களது நியாயமான உரிமைகள் மறுக்கப்படும்வரை, அவர்களை சிங்கள அரசு எதிரிகளாக பாவிக்கும் வரை, அவர்களது போராட்டத்திற்கான நியாயங்களும் தொடர்கின்றன. அது என்றேனும் ஒரு நாள் வெற்றி பெற்றே தீரும். அதுவே வரலாறு நமக்குக் கற்றுத் தரும் பாடம்.

**தமிழகக் கட்சிகள் இப்பிரச்சினையில் நடந்து கொண்ட முறை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வேறு அணுகுமுறையினைக் கைக்கொண்டிருந்தால் இலங்கையில் வேறு மாதிரியான முடிவு ஏற்பட்டிருக்குமா?**

அப்படிச் சொல்ல முடியாது. மத்திய அரசு தமிழர்களுக்கெதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்ட பிறகு என்ன போராடி, என்ன பயன்? ஆனாலும் நமது எதிர்ப்பை நாம் ஆவேசமாகவே வெளிப்படுத்தினோம். அதை உலகம் உணர்ந்துகொண்டது. அந்த அளவில் நமக்கு திருப்திதான்.

தமிழுணர்விருந்த அனைத்து கட்சிகளும் தங்களால் இயன்றவரை நேர்மையாகத்தான் போராடின. தேர்தல் காரணங்களுக்காக அவர்கள் ஒரு கட்டத்தில் வெவ்வேறு பாதையில் சென்றிருக்கலாம். ஆனால் அவர்களது உணர்வுகளை, அவர்களது போராட்டங்களினால் ஏற்பட்ட தாக்கத்தை குறைத்து மதிப்பிடலாகாது.

**40 ஆண்டு கால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் எந்த அளவுக்கு தமிழின உணர்வு வளர்ந்திருக்கிறது என நினைக்கிறீர்கள்?**

தமிழன் என்ற அடையாளத்தையே ஜாதி என்ற அடையாளம் முற்றிலுமாக மறைத்துவிடுகிறது. தமிழனுக் கோர் ஆபத்து என்றால் தெருவுக்கு வராத மனிதர்கள், தங்கள் ஜாதிக்கு ஆபத்து என்றால் போராட்டத்தில் குதிக்கிறார்கள். அந்த அளவுக்கு ஜாதிய சிந்தனை நம் மக்கள் மத்தியில் வேரோடியிருக்கிறது. இதற்கெல் லாம் பார்ப்பனீயமே காரணம். எனவே அதை எதிர்த்து சமரசமில்லாமல் பெரியார் போராடினார். அப்போராட்டம் தொடர்கிறது. தொடரவேண்டும்.

**திராவிடக் கட்சிகளும், தலைவர்களும் முற்றிலுமாக நம்பகத்தன்மையை இழந்ததால்தானே ஈழத் தமிழர் ஆதரவு போராட்டமும் பிசுபிசுத்தது? 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது இருந்த மக்கள் எழுச்சியை நாம் காணமுடியவில்லை?**

இந்தி எதிர்ப்புப் போரில் மாணவர்கள் முன் நின்றிருந்தாலும், அவர்கள் பின்னே தி.மு.க. நின்றது. அதனாலேயே போராட்டம் வலுப்பெற்றது. மாநில மெங்கும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

அண்மைக் கால இலங்கை நிகழ்வுகளும் மக்களை கொதித்தெழவைத்தன. அன்று நடந்ததைப் போலவே இளைஞர்கள் தீவிரமாக ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். இந்தி எதிர்ப்புப் போரைவிட அதிகம் பேர், பதினைந்து பேருக்கு மேல் இம்முறை தீக்குளித் தனர். அப்படி இருந்தும் பெரிதாக போராட்டம் வலுப்பெறவில்லை என்றால், அதற்குக் காரணம் இங்கிருக்கும் அரசியல் கட்சிகள்தான். குறிப்பாக, பெரிய கட்சிகளான, தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., காங் கிரஸ், இப்போது வளர்ந்து வரும் விஜயகாந்தின் தே.மு.தி.க. ஆகியவைதான் தங்கள் அரசியல் லாபத்திற் காக இலங்கைத் தமிழர் நலனை காவுகொடுத்து விட்டன. அவற்றில் எதுவும் போராட்டத்தில் இறங்கிய இளைஞர்கள் பின் நிற்கத் தயாராயில்லை.

அதுவே பெரிதாக இம்முறை இனஎழுச்சியை நம்மால் காணமுடியவில்லை.

இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டும்; அன்று காங்கிரஸ் மிக முரட்டுத்தனமாக போராட்டத்தைக் கையாண்டு, மாணவர்களின் கோபத்தை அதிகப்படுத்தியது. ஊடகங்களும் காங்கிரஸ் அரசிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்தன. மேலும் நான் சொன்னதுபோல் தி.மு.கவின் ஆதரவும் இருந்தது. எனவேதான் போராட்டம் வலுப்பெற்றது.

ஆனால் இம்முறை மிகத் தந்திரமாக தி.மு.க. அரசு நடந்துகொண்டது. தாங்களும் போராட்டத்திற்கு ஆதரவானவர்கள் போல் காட்டிக்கொண்டே அதனை முறியடித்தார்கள். ஊடகங்கள் தீவிர விடுதலைப் புலி எதிர்ப்பாளர்களாக இருக்கின்றன. கட்சி ஆதரவும் இல்லை. எனவே ஈழத் தமிழர் பிரச்சினையில் மக்களுக்கு அக்கறை இருந்தும் அவர்கள் மேல் அனுதாபம் இருந்தும் அவ்வுணர்வு அப்போது போல் இப்போது வெளிப்படவில்லை.

**1965ஆம் வருட இந்தி எதிர்ப்புப் போரில் பெரியார் ஏன் ஆர்வம் காட்டவில்லை?**

நிறைய காரணங்கள் இருந்தன. அவர் அன்றைய பக்தவத்சலம் ஆட்சியை எதிர்த்து போராட்டங்கள் பல நடத்தியிருந்தும், அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்தார். தி.மு.கவைவிடவும் அவர் காமராஜரை நம்பினார்.

இந்தி எதிர்ப்புப் போரைப் பயன்படுத்தி காமராஜரின் காங்கிரசை வீழ்த்தி தி.மு.க. ஆட்சிக்கு வரமுயல்கிறது. அதுவும் பார்ப்பனத் தலைவரான ராஜாஜியுடன் சேர்ந்துகொண்டு. 1938ல் இந்தியை பள்ளிகளில் அறிமுகப்படுத்தி, முதல் போராட்டத்திற்கு வழிவகுத்த ராஜாஜி ஏன் திடீரென இந்தி

எதிர்ப்பாளராகவேண்டும்? பார்ப்பனர்களும் ஊடகங்களும் ஏன் இந்தியை எதிர்க்கவேண்டும்? அவர்கள் பச்சைத் தமிழன் காமராஜர் மீது கொண்டிருந்த வன்மத்தாலேயே இது நடந்தது என்றார் பெரியார். எனவே அவர் போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்தார்.

**பெரியார் தனி ஈழக் கோரிக்கை பற்றி என்ன நினைத்தார்?**

அவருடைய கால கட்டத்தில் தனி ஈழக் கருத்துரு பெரிதாக வளர்ந்துவிடவில்லை. அந்நேரத்தில் அது ஒரு அரசியல் போராட்டமாகவே இருந்தது. வட்டுக் கோட்டை மாநாடு வரை தனி ஈழம் என்பதே தமிழர்களின் கோரிக்கையாக வலியுறுத்தப்படவில்லை. அம்மாநாட்டின் போது பெரியார் உயிருடன் இல்லை.

அதற்கு முன்னர் தந்தை செல்வா சென்னைக்கு வந்தபோது பெரியாரைச் சந்தித்தார். அப்போது பெரியார், நாங்களே புதுதில்லிக்கு அடிமையாக இருக்கிறோம். அந்நிலையில் நாங்கள் உங்களுக்கு எப்படி உதவ முடியும் என்று கேட்டார். பெரியாரின் கவனம் முழுதும் தமிழ்நாட்டுத் தமிழரின் நலனை மேம்படுத்துவதில்தான் இருந்தது.

**பெரியார் ஏன் திராவிடர் கழகம் என்று பெயரிட்டார்? தமிழர் கழகம் என்றல்லவா அழைத்திருக்கவேண்டும்?**

வெகுகாலமாக பலரும் கேட்கும் கேள்வி இது. திராவிடர் என்ற சொல்லை தென்னிந்தியர் என்ற பொருளில் அவர் பயன்படுத்தவில்லை. மாறாக அது பார்ப்பனரல்லாதாருக்கான ஒரு இயக்கம் என்பதை வலியுறுத்தவே அப்படி ஒரு சொல்லை அவர் பயன்படுத்தினார். ஏனெனில், தமிழருக்கான இயக்கம் என்று கூறினால் பார்ப்பனர்கள் நாங்களும் தமிழ் பேசுகிறவர்கள்தான்; எங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்பார்கள். இயக்கமோ, தமிழ்ச் சமூகத்தைப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து, பார்ப்பனீய

சிந்தனையிலிருந்து, பார்ப்பன சுரண்டலிலிருந்து மீட்டெடுக்கப் புறப்பட்டிருக்கும் இயக்கம். எனவே திராவிடர் என்ற சொல்லே பொருத்தமானது என அவர் நினைத்தார். பார்ப்பனர்கள் தங்களை ஆரியர்கள் என்று கூறிக்கொள்ளும்போது அவர்கள் ஒரு திராவிட அமைப்பில் சேர முன்வரமாட்டார்கள்.

மற்ற திராவிட மொழிபேசுவோர் வாழும் பகுதிகள் சிலவும் அன்றைய சென்னை மாகாணத்தில் இருந்த சூழலில், அது தனி ஒரு நாடாக பிரிக்கப்பட வேண்டும் என்று கோரினார். எனவேயும் அவர் திராவிடம் என்ற சொல்லை பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் ஆரியர்களிடமிருந்து திராவிடர்களை பிரித்துக் காட்டவே அவர் திராவிடர் கழகமென்றார்.

மற்றபடி, மற்ற மொழிக்காரர்களையெல்லாம் தன் இயக்கத்தில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. மொழி வழி மாநிலங்கள் பிரிந்தபோது, "அப்பாடா, கன்னடர்களும் தெலுங்கர்களும் மலையாளிகளும் போய்விட்டார்கள். நான் இனி தமிழர் நலனுக்காக மட்டுமே குரல் கொடுக்கலாம்" என்று அவர் குறிப்பிட்டிருப்பதை நாம் மறக்கக்கூடாது.

**பெரியார் கண்முன்னேயே திராவிட இயக்கம் சீரழியத் தொடங்கிவிட்டது. கருணாநிதி ஆட்சியில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் தலைவிரித்தாடின. ஆயினும் பெரியார் மௌனம் காத்தார். அவர் மட்டும் விமர்சித்திருந்தால் திருப்பம் ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம். திராவிடத் தலைவர்களின் நம்பகத்தன்மையும் கூடி இருக்குமல்லவா?**

தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. ஆகிய கட்சிகளைத் திராவிடக் கட்சிகளாக, பெரியாரின் வழித்தோன்றல்களாக பார்ப்பதே தவறு. பெரியாரிடமிருந்த கடவுள் மறுப்புக் கொள்கையோ அல்லது ஜாதி மறுப்போ இவற்றிடம் அறவே இல்லை.

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் வேண்டாம். இது மதச்சார்பற்ற அரசு என்றார். விமர்சனங்களெல்லாம் எழுந்தன. ஆனால் இறுதியில் என்ன ஆனது? இன்னமும் அத்தகைய கடவுள் படங்கள் பல அலுவலகங்களை அலங்கரிக்கின்றன. எந்த அரசும் அதைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. இரண்டு கட்சிகளிலும் இறை நம்பிக்கையுடைய பலர் இருப்பதை, யாகங்கள் வளர்ப்பதை, பார்ப்பனீய மதிப்பீடுகளை அப்படியே உள்வாங்கியிருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். காங்கிரசைக் காட்டிலும் அதிகமாக ஏதோ பெரியாரின் கொள்கைகளைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதோடு சரி. 69 சதவீத இட ஒதுக்கீடு இக்கட்சிகள் ஆள்வதால்தான் கிடைத்திருக்கிறது. அந்த அளவில் திருப்திப்பட்டுக்கொள்ளவேண்டியதுதான்.

தமிழ் மக்கள் ஒரேயடியாக மூடப் பழக்க வழக்கங்களுக்கு பலியாகிவிடவில்லை. பார்ப்பனத் தரகர்கள் இல்லாமல் கடவுளை நாங்கள் வேண்டிக் கொள்கிறோம் என்று சொல்லும் பலரை நாம் பார்க்கமுடிகிறது. பகுத்தறிவிற்குக்கூட ஒருவித மதிப்பிருக்கிறது. கல்விதான் வாழ்க்கையில் முன்னேற ஒரே வழி என்று அடிமட்டத்தில் உள்ளவர்கள் கூட உணர்ந்திருக்கின்றனர். ஜாதிரீதியிலான இட ஒதுக்கீடு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதெல்லாம் பெரியாரின் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றிகள்தான். ஆனால் நாம் போக வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கிறது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

**காங்கிரசாரின் தமிழ் உணர்வு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

காமராஜர் இருந்தவரைதான் அவர்களுக்கு தமிழினம் பற்றிய கவலை இருந்தது. ஆனால் அதன் பிறகு

அவர்கள் இந்திய தேசியத்தில் தங்களை இழந்து விட்டார்கள். செல்வாக்கும் இழந்தார்கள்.

**தமிழின உணர்வுத் தளத்தில் பார்ப்பனர்கள் எங்கிருக்கிறார்கள்?**

பெரும்பான்மையாக இருக்கிற பார்ப்பனரல்லாதோரை ஒடுக்கவே பார்ப்பனியம் பயன்பட்டிருக்கிறது. தனிப்பட்ட பார்ப்பனர்கள் சிலர் முன்னேற்றக் கருத்துடையவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் மத்தியில் "தங்கள் மூதாதையர் செய்தது தவறு. மதத்தைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் அனுபவித்து வருகிறோம். இப்போது விட்டுக் கொடுத்து விடவேண்டும். அதுதான் சமூக நீதி" என்று சொல்ல எந்த அமைப்பும் முன்வரவில்லையே. அப்படி ஓர் பிரச்சாரம் செய்ய எந்தப் பார்ப்பனரும் முயலவில்லையே. இடஒதுக்கீட்டை அவ்வளவு கடுமையாக எதிர்க்கிறார்களே. எனவே நாம் அவர்களை தொடர்ந்து எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. இவ்வளவிற்குப் பிறகும் நாட்டைவிட்டு வெளியேறுங்கள் என்றோ அல்லது உங்களுக்கு இங்கு வாழ உரிமை இல்லை என்றோ கூறவில்லையே. உங்களுக்கு உரிய பங்கை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். மற்றவர்கள் பங்கில் கைவைக்காதீர்கள் என்றுதான் சொல்கிறோம்.

இன்றளவும் பூணூல் அணிந்து தாங்கள் உயர்ஜாதிக்காரர்கள் என்று காட்டிக்கொள்ளும் அவர்களுடன் பல்வேறு தளங்களில் மோதவேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட சூழலில் அவர்களுக்கு தமிழுணர்வு இருக்கிறதா, இல்லையா என்பது எங்களுக்கு முக்கியமே இல்லை.

**தமிழ்த் தேசியம் இனி எத்திசையில் செல்லும், செல்லவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட இந் நாட்டின் எதிர்காலம் கவலைக்குரியதுதான். அந்தந்தப் பகுதிகளில் மாநில உணர்வுகள் தலைதூக்குகின்றன. இந்திய தேசியம் என்பதைவிட மொழிவழித் தேசியம் மேலோங்கிக்கொண்டிருக்கிறது. மாநிலக் கட்சிகளின் செல்வாக்கும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் இப்போது அதிக இடங்களில் வெற்றி பெற்றிருந்தாலும், மாநிலக் கட்சிகள்தான் நடுவண் அரசு உருவாவதில் பெரும் பங்கு வகிக்கும் எனத் தோன்றுகிறது.

அதே நேரம் தமிழ், தமிழ் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை. தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் ஜாதிப் பிளவுகளையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும், ஆதிக்க ஜாதியினரால் தலித் மக்கள் கொடுமைப்படுத்தப்படும் போது உரத்து குரல் கொடுக்கவேண்டும். அதேபோல பெண்ணடிமைத்தனத்தை எதிர்க்கவேண்டும். இப்படிப் பல தளங்களில் நாம் போராடினால்தான் தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

**தமிழ்த் தேசியவாதம் பேசுவோர் பழமைவாதிகளாகத் தோன்றுகிறார்களே?**

அதுவும் சரிதான். கற்பு எனும் கோட்பாடு இவர்கள் கையில் படாதபாடு படுகிறது. பெரியாரோ, கற்பு என்பது பெண்களை ஒடுக்கவே உதவுகிறது என்றார். இவர்களோ, கற்பு என்கிறார்கள், கண்ணகி என்கிறார்கள். இதையெல்லாம் பெரியார் வன்மையாகக் கண்டித்தார். சிலப்பதிகாரத்தை தமிழனின் பெருமை பேசும் காவியமாக இவர்கள் கருதுகின்றனர். அதனால் தான் குஷ்பு பிரச்சினையில் இவர்கள் நிலைப் பாட்டை நாங்கள் எதிர்த்தோம்.

## அ. மார்க்ஸ்

"எந்த தேசியப் போராட்டமும்
முன் நகர வேண்டுமானால்
தேசிய இனத்திற்கான
பன்மைத்தன்மைகளை அது
அங்கீகரிக்க வேண்டும். பல
உள் அடையாளங்கள்
அங்கீகரிக்கப்பட்டு அவற்றிற்
குரிய இடங்கள் உத்தரவாதம்
செய்யப்பட வேண்டும்."

**அ. மார்க்ஸ்:** *எழுத்தாளர், விமர்சகர், சமூகப் போராளி. பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வுபெற்று முழு நேரமாகச் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அகில இந்தியக் குழுவின் துணைத் தலைவராகவும் மனித உரிமைக்கான மக்கள் கழகத்தின் (PUHR) மாநில அமைப்பாளராகவும் இருந்து வருகிறார்.*

**கேள்வி: விடுதலைப் புலிகளின் தோல்வியை எப்படிப் பார்க்கிறீர்கள்? இது தேசிய இன விடுதலை என்ற தத்துவத்திற்கு கிடைத்த தோல்வியா?**

*பதில்: விடுதலைப் புலிகள் பல தவறுகளைச் செய் தார்கள். எந்த ஒரு ஆயுதந்தாங்கிய போராட்டமா னாலும் அது அரசியல் தளத்திலும் வலுவுடைய தாக இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் என் றைக்கும் அரசியலுக்கு முக்கியத்துவம் அளித்ததே இல்லை. பிரபாகரன் சொல்வதே அங்கு வேத வாக் காக இருந்தது. அரசியல்ரீதியாகக் கருத்து வேறு பாடு கொண்டவர்கள் யாராக இருந்தபோதிலும், அது ஆண்டன் பாலசிங்கமாகவே இருந்தாலும்கூட – ஒன்று அழித்தொழிக்கப்பட்டனர் அல்லது ஓரங்கட்டப்பட்டனர். சமீப காலத்தில் உலக அரசி யலில் ஏற்பட்ட மாற்றங்கள் எதையும் அவர்கள் கணக்கில்கொள்ளவே இல்லை. குறிப்பாக இரண்டு மாற்றங்களை அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. முதலாவதாக, செப்டம்பர் 11க்குப் பின் உலக அளவில் உருவாக்கப்பட்டுள்ள 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற சொல்லாடல். சுமார் 30*

ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கிக்கொண்ட ஆயுதப் போராட்ட இலக்கணத்தில் அவர்கள் எந்த மாறுதலையும் செய்யவில்லை. 'பயங்கரவாத அமைப்பு' என உலக நாடுகளால் முத்திரை குத்தப்படத்தக்க காரியங்களை தொடர்ந்து செய்து கொண்டே இருந்தார்கள். வேறெப்போதும் இல்லாத வகையில் 36 நாடுகள் புலிகள் அமைப்பைத் தடைசெய்யும் நிலை ஏற்பட்டது. இதன் மூலம் ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் இருந்த அரசியல் நியாயம் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

இதே காலகட்டத்தில், உலக அளவில் ஆயுதப் போராட்டங்களை மேற்கொண்டிருந்த பல இயக்கங்கள் தமது அணுகுமுறைகளில் பல மாற்றங்களைச் செய்தன. அயர்லாந்து விடுதலைப் படையினர் 2006ல் ஆயுதங்களைப் போட்டுவிட்டு 'வேறு வகைகளில் தம் குறிக்கோளை எட்டுவது' என்று அறிவித்தனர். பாலஸ்தீனத்தில் ஹமாசும், நேபாளத்தில் மாவோயிஸ்டுகளும் தேர்தலில் பங்கேற்று ஆட்சி அமைத்தனர். அராஃபத்தின் பாலஸ்தீன விடுதலைப் படையினர் சென்ற சில மாதங்களுக்கு முன்பு ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளனர். ஆயுதப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும்போதே பேச்சு வார்த்தைகள், ஐக்கிய முன்னணி அமைத்தல் என்ற நடைமுறைகளை முன்னெடுத்துச் சென்றதற்காக நேபாள மாவோயிஸ்டுகளைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, 90களில் ஏற்பட்ட உலகளாவிய இன்னொரு மாற்றத்தையும் - விடுதலைப் புலிகள் கண்டுகொள்ளவில்லை. 1989க்குப் பின் உலகம் இன்னொரு பெரிய மாற்றத்தைச் சந்தித்தது. அதாவது பெர்லின் சுவர் இடிந்து, சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும்

கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் இருந்த ஆட்சிகள் கவிழ்ந்த பிறகு உலகளவில் இதுகாறும் ஒடுக்கப்பட்ட பல்வேறு அடையாளத்தினர் தம் அடையாளங்களை உறுதி செய்யத் தொடங்கினர். எந்த ஒரு தேசிய இனமும் ஒருபடித்தானது (homogenous) அல்ல. பல்வேறு உள் அடையாளங் களை ஒடுக்கியே, ஏதோ ஒரு பெரும்பான்மையின் அடிப்படையில் தேசியக் கற்பிதம் (imagining a nation) செய்யப்படுகிறது. ஆனால் சோவியத்தின் வீழ்ச்சிக் குப் பிறகு இந்த உள் அடையாளங்கள் அழுத்தமா கத் தம்மை உறுதிசெய்து கொள்ளத் தொடங்கின. இந்தியாவில் தலித்துகள், பிற்படுத்தப்பட்ட ஜாதியி னர் எல்லாம் அரசியல்ரீதியாக தமக்குரிய இடங் களைக் கோரும் நிலை உச்சமாகியது. நேபாளத்தை ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டோமானால், முதன்முறையாக ஜனஜாதி, மாதேசிகள், தலித்துகள் என்றெல்லாம் புதிய அரசியல் அடையாளங்கள் உருவானபோது நேபாள மாவோயிஸ்டுகள் இந்த எதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு தமது அரசியல் திட்டத்தை மறுவரையறை செய்தனர்.

விடுதலைப் புலிகள் இந்த அம்சத்திலும் பெருந் தவறிழைத்தனர். ஈழத் தமிழ்ச் சமூகமும் ஒருபடித் தானதல்ல. மலையகத் தமிழர்களை நீங்கள் விட்டு விட்டாலும்கூட பாரம்பரிய ஈழத் தமிழர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே வரலாறு முழுமையும் ஆதிக்க சக்திகளாக விளங்கினர். முஸ் லிம்கள், கிழக்கு மாகாணத்தினர், தலித்துகள் எல் லாம் இந்த யாழ்ப்பாண வெள்ளாள ஆதிக்கத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டதில்லை. உலக அள வில் ஏற்பட்ட மாற்றங்களைப் போலவே ஈழத்தி லும் 90க்குப் பின் இந்நிலை உறுதிப்பட்டது. போர்ச் சூழலில் இது வெளிப்படையாகத் தெரியாவிட்டா லும் ஈழ அரசியலைக் கூர்ந்து கவனித்து வந்தவர்

கள் இதை அறிந்திருந்தனர். புலிகள் எல்லோரையும் விரோதித்துக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களைத் துரத்தினர். கருணா பிரிந்து தனி அமைப்பைத் தொடங்கியதற்கு ஆதிக்கப் போட்டி ஒரு காரணம் என்றபோதிலும், இன்னொரு பக்கம் கிழக்குப் பகுதியினரின் யாழ்ப்பாண ஆதிக்கத்திற்கு எதிரான உணர்வுகளின் வெளிப்பாடாகவும் அது அமைந்தது.

இந்தப் பின்னணியில் உங்கள் கேள்விக்கு நேரடியாக ஒரு பதிலைச் சொல்ல வேண்டுமானால், இனி எந்த தேசியப் போராட்டமும் முன் நகர வேண்டுமென்றால் தேசிய இனத்திற்கான பன்மைத் தன்மைகளை அது அங்கீகரிக்க வேண்டும்; தேசிய இன அடையாளத்திற்குள் உள்ளடக்கப்படும் பல உள் அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட்டு அவ்வவற்றிக்குரிய இடங்கள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். இந்தப் பன்மைத்துவத்தை மறந்து மதம், இனம், மொழி என்பது போன்ற ஏதோ ஒரு ஒற்றை அடையாளத்தில் தேசிய இனங்களை ஒருபடித்தானதாக வரையறை செய்வது இனி அவ்வளவு எளிதல்ல. அதே போல சர்வதேச அரசியல் சூழலைக் கவனத்தில் கொண்டு அவை தம் செயல்பாடுகளை வகுத்துக்கொள்ளவேண்டும்.

**இலங்கையைப் பொறுத்தமட்டில் மஹிந்த ராஜபக்சே அரசின் மனித உரிமை மீறல்களை நீங்கள் தொடர்ந்து கண்டித்து வருகிறீர்கள். அதே நேரம், நீங்கள் நடத்தும் கூட்டங்களில் விடுதலைப் புலிகளை விமர்சிப்பதைத் தவிர்க்கிறீர்கள், இல்லையா? அத்தகைய அணுகுமுறை இப்பிரச்சினைக்கு முழுக்க முழுக்க சிங்கள அரசுதான் காரணம் என்ற எண்ணத்தை வலுப்படுத்தத்தானே செய்யும்? விடுதலைப் புலிகள் மீதான விமர்சனங்களை பொதுக் கூட்டங்கள் வாயிலாக மக்கள் முன் வைக்கத் தவறுவதும் ஒரு குற்றம்தானே?**

எங்களைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளின் அணுகுமுறையையும், ஈழத் தமிழர்களின் அரசியல் நியாயங்களையும் பிரித்துப் பார்க்கிறோம். சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை இலங்கையில் நிலவுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இன்றைய இலங்கை அரசு, முற்றிலும் ஜனநாயகம் இல்லாத ஒரு குடும்ப ஆட்சி; இராணுவ நிலைப் பட்ட, ஊழல்கள் மலிந்த, எவ்விதமான சட்ட ஒழுங்கும் செயல்படாத ஒரு ஆட்சி. இது தமிழர்களுக்கு மட்டுமின்றி சிங்கள மக்களுக்கும் ஜனநாயகத்தை மறுக்கும் ஆட்சி. பன்னாட்டு மூலதனங்களுக்கு முற்றிலுமாகத் தன் சந்தையையும் நாட்டையும் திறந்துவிட்ட ஒரு ஆட்சி. மிகப் பெரிய அளவில் தம் சொந்த குடிமக்களைக் கொன்று குவித்து, உள்நாட்டிலேயே அகதிகளாக்கியுள்ள ஒரு ஆட்சி. இந்த அரச பயங்கரவாதத்தை விமர்சிக்காதிருக்க முடியாது.

அதே நேரத்தில் விடுதலைப் புலிகளின் ஜனநாயக மறுப்பை, பாசிசத் தன்மையை, சக இயக்கங்களை அழித்த கொடுமையை, முஸ்லிம்களை விரட்டிய வேதனையை எல்லாக் காலங்களிலும் சுட்டிக்காட்டிக் கண்டித்து வந்தவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் நாங்கள். விடுதலைப் புலிகளை விமர்சிக்க நாங்கள் தயங்கியதுமில்லை, தவறியதுமில்லை. பிரச்சினையைப் புலிகளோடு நிறுத்திவிடாமல் அதைத் தாண்டியும் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே, "இலங்கையில் போரை நிறுத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான பிரச்சாரக் குழு" என்றொரு அமைப்பை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறோம். அருந்ததி ராய் போன்றவர்களை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முதன் முதலில் கருத்துத் தெரிவிக்க வைத்தோம். "இலங்கையில் அடுத்தது என்ன: ஒரு அரசி

யல் தீர்வை நோக்கி" என்றொரு கருத்தரங்கை நடத்தி, டாக்டர். பாலகோபால் முதலானவர்களின் கருத்தைப் பதிவு செய்தோம். முதன்முதலாக சிராஜ் மசூர் என்கிற இலங்கையின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரைப் பேச வைத்தோம்.

**எப்படியும் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்குப் பரவலான அனுதாபம் இருப்பது போலத்தானே தெரிகிறது. தேர்தல் முடிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு சராசரித் தமிழர்கள் மத்தியில் இலங்கையில் நடைபெறும் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் குறித்துக் கோபமும், ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார் என்பதற்காக இப்போது நமது சொந்தங்களை அங்கே அல்லாடவிடுவதா என்பது போன்ற உணர்வுகளையும் நம்மால் பார்க்க முடிகிறதே?**

நீங்கள் சொல்வது சரிதான். இங்குள்ள தமிழர்கள் எப்போதும் ஈழத் தமிழர்களின்பால் அனுதாபம் கொண்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர். ஈழத் தமிழர்கள் மற்றும் அவர்களின் போராட்டங்கள் குறித்து இங்கே இரு அணுகுமுறைகள் இருக்கின்றன. ஒன்று உச்சபட்சக் கோரிக்கைகளை வைக்கும் Maximalist அணுகுமுறை. விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மட்டுமே இம்மாதிரிக் கோரிக்கையை வைக்கின்றனர். தனி ஈழம் ஒன்றே தீர்வு என்பது இவர்களது கோரிக்கை. அதுவும் புலிகளின் தலைமையிலான தமிழ் ஈழம். இன்னொரு சாராரின் அணுகுமுறை குறைந்தபட்சக் கோரிக்கை. Minimalist அணுகு முறை. இலங்கையில் போரை நிறுத்த வேண்டும். தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதும் அகதிகளாக்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும். பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கைகள் இவ்வகைப்பட்டவை.

Maximalist கோரிக்கைகளை வைத்து தமிழக அரசியலை ஆக்கிரமிக்க முனைந்தவர்கள் இதைத் தமிழகம் தழுவிய பெரிய மக்கள் இயக்கமாகக் கொண்டு செல்ல இயலவில்லை. முக்கிய தேர்தல் பிரச்சினையாக அதை மாற்ற முனைந்தவர்கள் தோற்றுத்தானே போனார்கள்? Minimalist கோரிக்கைகளை முன்வைத்தவர்களைத்தானே மக்கள் ஆதரித்தனர். தேர்தல் முடிவுகள் அதைத் தானே காட்டுகின்றன.

இலங்கையானாலும் சரி, இந்தியாவானாலும் சரி, தமிழர்களை ஒற்றைக் குழுமமாக, பன்மைத்து வமற்ற ஒருமைச் சமூகமாகப் பார்ப்பது தவறு. பல்வேறு உள் அடையாளங்களையும் அங்கீகரித் தல் அவசியம். உலகமயம் பல மாற்றங்களை மக்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ளது. நமது வாழ்க்கை முறை, பணிச் சூழல் எல்லாம் மாறியுள்ளன. உலக அளவில் தகவல் தொடர்பு, தொழில்நுட்பம் பெருக்கம், குடியேற்றம், பணப் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து போன்றவை அதிகரித் திருக்கின்றன. கிட்டத்தட்ட 96 நாடுகள் இரட்டைக் குடியுரிமையை வழங்கியுள்ளன. நமது நாட்டு முதலாளிகள் வெளிநாடுகளில் தொழில் நிறுவனங் களை, பன்னாட்டு நிறுவனங்களை வாங்கு கிறார்கள். இன்னொரு பக்கம் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருகின்றன. பன்னாட்டு விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் குழுக்கள், கால்பந்தாட்டக் 'கிளப்'கள் போன்றவையெல்லாம் முன்பு சாத்தியமா? இவை எல்லாம் தேசிய உணர்வு உருவாக்கத்திலும், கட்டமைப்பிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை எல்லாமே வரவேற்கத்தக்கவை என்று நான் சொல்லவில்லை. ஆனால் தேசிய இயக்கங்கள் இவற்றை எல்லாம் கணக்கில் கொள்ளாமல் இனி முன் நகர முடியாது.

**இந்தியா என்பதே தேசிய இனங்களின் சிறைக் கூடம், அச்சிறையிலிருந்து வெளியே வந்தால்தான் அடுத்த கட்டப் புரட்சிக்குச் செல்ல முடியும் எனப் பல நக்சல் இயக்கங்கள் கூறுகின்றன. விடுதலைப் புலிகளின் தனி ஈழக் கோரிக்கையையும் இந்த இயக்கங்கள் ஆதரிக்கின்றன.**

ஈழப் பிரச்சினையை அணுகுவதில் எல்லா நக்சல் இயக்கங்களையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. விடுதலைப் புலிகளைப் பாசிச இயக்கம் என வரையறுக்கும் ம.க.இ.க போன்ற இயக்கங்களும் நக்சல் பிரிவினர்தான். தமிழக மாவோயிஸ்டுகள் மட்டுமே முழுமையாக விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள் எனக் கருதுகிறேன்.

நக்சல்பாரி இயக்கம் உருவாகி கிட்டத்தட்ட நாற்பதாண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. நீங்கள் சொன்னதுபோல இந்தியாவை தேசிய இனங்களின் சிறைக்கூடமாகப் பார்ப்பது, அரைக் காலனிய, அரை நிலப் பிரபுத்துவச் சமூகமாக இந்தியாவை வரையறுப்பது. முதலாளிகளைத் தரகு முதலாளிகளாக வரையறுப்பது, நிலவும் ஜனநாயக முறையை மறுத்து ஆயுதப் போராட்டத்தை (Protracted Peoples War) முன்னெடுப்பது, சோவியத்தை ஏகாதிபத்தியமாகப் பார்ப்பது முதலான அம்சங்களில் அவர்கள் ஒரு மாற்று அணுகு முறையை முன்வைத்தனர். இந்த வகையில், சமீப கால இந்திய அரசியலில் அவர்களின் பங்களிப்பு பாரதூரமானது. யாராலும் மறுக்க முடியாதது. ஆனால் அவர்களது அணுகுமுறைகளில் பல தவறுகள் இருந்ததை அனுபவபூர்வமாக உணர்ந்து, தொடர்ந்து பல மாற்றங்களை அவர்கள் செய்து கொண்டனர். வர்க்க எதிரியை அழித்தொழிப்பது, மக்கள் திரள் அமைப்புகளை உருவாக்காமல் ஐக்கிய முன்னணிகளைக் காட்டாமல் வெறும் ஆயுதப்

போராட்டங்களை மட்டுமே நம்புவது என்கிற நிலைபாடுகளை அவர்கள் இன்று கைவிட்டுள்ளனர்.

எனினும் நாற்பதாண்டுகளில் உலகில் ஏற்பட்ட மகத்தான மாற்றங்கள் எல்லாவற்றையும் முழுமை யாக உள்வாங்கி, விவாதித்து, தமது திட்டங்களை அவர்கள் மாற்றியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. குறிப்பாக சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சி, மார்க்சியத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு ஆகியவை குறித்த பெரிய விவாதங்களோ, சுய விமர்சனமோ அங்கே நிகழ வில்லை. அதேபோல உலகமயம் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் குறித்த பரிசீலனையும் மிகக் குறைவே. தரகு முதலாளி, தேசிய முதலாளி, அரசு, இறை யாண்மை முதலிய பல கருத்தாக்கங்களிலும் வரை யறைகளிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டி உள்ளது.

அதேபோல தேசிய இனம் குறித்த பார்வையி லும் அவர்கள் இன்றைய மாற்றங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். எனினும் ஒன்றைக் குறிப்பிட் டுச் சொல்ல வேண்டும். தேசிய இனங்களின் சிறைக் கூடமாக இந்தியாவைப் பார்த்த அவர்கள்தான், வர்க்கப் போராட்டத்தில் ஜாதிக்குரிய முக்கிய பங்கையும் வற்புறுத்தியவர்கள். அந்த வகையில் தேசிய இனத்திற்குள்ளான ஜாதி என்கிற பன்மைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்ட பரம்பரியம் அவர் களுக்கு உண்டு. பிற பன்மைத்துவங்களையும் ஏற்றுக் கொண்டு, நேபாள மாவோயிஸ்டுகளின் அனு பவங்களின் அடிப்படையில் அவர்கள் தமது இனம் குறித்த பார்வையை விசாலமாக்குவது அவசியம்.

இதற்குத் தடையாக அவர்களிடம் இருப்பது தேசத்தை இயற்கையான (Natural) ஒன்றாகப் பார்க் கும் பழைய அணுகுமுறையே. தேசம், தேசிய உணர்வு என்பதெல்லாம் இயற்கையானதல்ல, அது அரசியல்

ரீதியான ஒரு கட்டமைப்பே (Construction) என்கிற நவீன சிந்தனைகளை ஏற்றுக்கொண்டால், தேசத்தை எவ்வாறு ஜனநாயகரீதியாக, எல்லோரையும் உள்ளடக்கிக் கட்டமைப்பது என்று முயற்சிக்க முடியும். மாறாக, தேசத்தை இயற்கையானது எனக் கொண்டால் நிச்சயம் அந்தக் கட்டமைப்பு சிலரை விலக்கியதாகவே அமையும். அவர்கள் மீதான அடக்கு முறையாக அது முடியும். இந்த வகையில்தான் தேசியத்தையும் பாசிசத்தையும் பிரிக்கும் எல்லைக் கோடு மிகவும் பலவீனமானது என நவீன சிந்தனை யாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேசம் ஒரு கற்பிதம்; அது இயற்கையானதல்ல; அரசியல்ரீதியாக கட்டமைக்கப்படுவது என்ற கருத்தை நீண்ட நாட்களாக நான் முன்வைத்து வருகிறேன்.

**ஒரு இனம் ஒடுக்கப்படும்போது அவ்வினத்திற்குள் இருக்கும் பிரிவுகளில் அல்லது பிளவுகளில் மேலதிக கவனம் செலுத்துவதால் இன விடுதலை முயற்சியே பாதிக்கப்படும் என்ற வாதத்திற்கு என்ன சொல்கிறீர்கள்?**

இப்படிச் சொல்வதைத்தான் தேசியத்தின் வன் முறை என்கிறோம். இப்படிச் சொல்லும் கணத்தில் ஒடுக்குமுறை தொடங்கி விடுகிறது. நீ உன் உரிமை யைக் கோருவதும், உன் தனித்துவ அடையாளத்தை வற்புறுத்துவதும் தேச விடுதலையைப் பலவீனப் படுத்திவிடும்; அதனால் நீ வாயை மூடிக் கொண் டிரு. இல்லையேல் உன் வாய் மூடப்படும் என்ற பாசிசக் குரலைத்தான் இதில் கேட்க முடிகிறது. எந்த ஒரு தொலைதூர லட்சியத்தின் பெயராலும் ஒரு உட்பிரிவு இப்படி நசுக்கப்படுவதை நாம் ஏற்க முடியாது. தவிரவும் இந்த வாதத்தின் அடிப்படை யில் எந்த ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்திவிட முடியும். ஏகாதிபத்தியம்தான் இன்றைய மிகப் பெரிய எதிரி. ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்காக

நம் உள் வேறுபாடுகளை மறந்து ஒன்றாக நிற்போம் என ராஜபக்சே தமிழர்களைப் பார்த்துச் சொல்ல லாம். பிரிட்டிஷ்காரர்கள்தான் நம் பொது எதிரி. அதனால் தலித்துகள் தனி ஒதுக்கீடு கோரக் கூடாது என்று காந்தி சொல்லவில்லையா?

தேசியப் போராட்டத்தைக் காரணம் சொல்லித் தானே இலங்கைத் தமிழ் முஸ்லிம்கள் 80,000 பேர் 18 ஆண்டுகளாகத் தம் வாழிடங்களிலிருந்து விரட்டப் பட்டு உள் நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ள னர். தேசியத்தைச் சொல்லித்தானே காத்தான்குடி யில் தொழுதுகொண்டிருந்த முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தேசியத்தைச் சொல்லித்தானே சக தமிழ் இயக்கங்கள் துடைத்தழிக்கப்பட்டன.

தனி அடையாள வற்புறுத்தல்கள் எல்லாம் தேசியப் போராட்டத்தை பலவீனப்படுத்திவிடும் என்கிறவர்கள் அப்போதெல்லாம் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இன்று விடுதலைப் புலி களுக்குத் துதிபாடும் எந்த மனச்சாட்சியுள்ள மனி தனோ, இயக்கமோ இந்தப் பதினெட்டு ஆண்டு களில் தமிழ் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி வாய் திறந்ததுண்டா? ஒடுக்குப வனையும், ஒடுக்கப்படுபவனையும் 'தேசியம்' என்ற மந்திரச் சொல்லால் கட்டிப்போடும் இம் முயற்சியை நாம் ஏற்க முடியாது. தமிழ்த் தேசியம் இன்று ஒரு இந்து அடையாளத்தை நோக்கி நகர்வதையும் நாம் காணத் தவறக் கூடாது. ஈழப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் என்று காரணம் சொல்லி ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க. பாசிசக் கும்பல்கள் நடத்தும் ஊர்வலங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் கொஞ்சமும் தயக்கமின்றி விடுதலைப் புலி ஆதர வாளர்கள், நெடுமாறன் முதலானவர்கள் கலந்து கொள்கிறார்கள். ஈழப் போராட்டத்தை காந்தி எதிர்த்தால் அவரையும் எதிர்ப்போம்; கோட்சே

ஆதரித்தால் அவரையும் ஆதரிப்போம் என சீமான் முழங்குகிறார். இந்தச் சீமான்தான் இன்று பெரியார் திராவிட கழகத்தின் முக்கிய பேச்சாளர். வைகோ டெல்லியில் நடத்திய போராட்டத்திற்கு அத்வானி அழைக்கப்பட்டார். விடுதலைப் புலி ஆதரவு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவின் இல. கணேசனை ஆதரித்து வாக்குக் கேட்கவில்லையா? தேசியத்தின் பெயரால் இந்து வலதுசாரிப் பாசிசத்தை இவர்கள் ஆதரிப்பதும், அதோடு கைகோர்த்து அரசியல் செய்வதும் நான் சொல்வதைத்தானே நிரூபிக்கிறது?

இறந்த கால அநீதிகளைச் சொல்லி, ஒளிமய மான எதிர்காலம் ஒன்றைக் கட்டமைத்து, எந்த ஒரு மக்கட் பிரிவின் நிகழ்காலத்தையும் அழிப் பதை நாம் ஏற்க முடியாது. இவர்கள் சொல்லும் ஒளிமயமான எதிர்காலத்தில் பன்மைத்துவம் காக்கப்படுவதற்கான, ஜனநாயகம் நிறுவப்படுவ தற்கான, சிறுபான்மையோர் பாதுகாக்கப்படுவதற் கான எந்த உத்தரவாதமும் கிடையாது.

மாறாக பல்வேறு உள் அடையாளங்களையும் ஏற்று, அவற்றுக்கான இடங்களை உறுதிசெய்து அதன் மூலம் கட்டமைக்கப்படும் ஒற்றுமையின் பின்னணியில் தேசியப் போராட்டத்தையோ, வேறெந்தப் போராட்டத்தையோ முன்னெடுக்கும் போதுதான் அந்தப் போராட்டம் உண்மையிலேயே வலுமிக்கதாக இருக்க முடியும். நேபாளம் இதற் கொரு எடுத்துக்காட்டு. 21ஆம் நூற்றாண்டில் எந்த ஒரு தேசியப் போராட்டமும் உள் இன அடையா ளங்களை மறுத்துவிட்டு முன் நகர முடியாது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் நடை பெற்று வரும் தேசியப் போராட்டங்களில் காணப் படும் தேக்கத்திலும்கூட இந்தப் பிரச்சினை இருக்

கவே செய்கிறது. எடுத்துக்காட்டாக மணிப்பூரை எடுத்துக்கொண்டால் ஆதிக்கம் செலுத்தும் மெய்டி இனத்திற்கும் பிற இனப் பிரிவுகளுக்கும் இடையில் முரண்கள் இருக்கின்றன. இப்படி நிறையச் சொல்லலாம். சுருங்கச் சொல்வதானால், ஒரு இனத்தின் பன்மைத் தன்மையை அங்கீகரிப்பது அந்த இன விடுதலைக்கு வலுசேர்ப்பதாக அமையுமே ஒழிய அதை பலவீனப்படுத்தாது. பலவீனப்படுத்திவிடும் என்று சொல்வது பாசிசத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்து விடுகிறது.

ஒற்றைத் தமிழ் அடையாளம் எப்போதும் தலித்துகளையும், முஸ்லிம்களையும் விலக்கியே வந்துள்ளது. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் 'மாட்டிறைச்சி தின்னாராயுள்ள தமிழர்கள்' எனச் சொல்லவில்லையா? சென்ற நூற்றாண்டின் முற்பாதியில் நடந்த பின்னி மில் போராட்டத்தைப் பற்றி 'பறையர்களை வைத்து தமிழர்களை அடிக்கிறார்கள்' என இங்கு ஒரு தமிழறிஞர் பேசவில்லையா? தேசியக் கட்டமைப்பு ஆணாதிக்க ஒடுக்குமுறையுடன் அமைவதையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. தமிழ்ப் பெண் கவிஞர்களை ஆபாசமாக எழுதுகின்றனர் எனச் சொன்னது யார்? தமிழ்த் தேசியவாதிகள்தானே? குஷ்புவிற்கு எதிராக வழக்குப் போட்டவர்களும் வன்முறை செய்தவர்களும் யார்? பண்டைத் தமிழ்க் கற்பின் பெருமையைப் பேசிய தமிழ்த் தேசியவாதிகள்தானே?

வரலாற்றுப் பழம்பெருமை பேசுவது எல்லாம் மக்களின் பன்மைத்துவத்தை மறுப்பதிலேயே கொண்டுவிடும். வலதுசாரிகளும் மற்றவர்களை விலக்குகிற, வெறுக்கிற அரசியலை செய்பவர்களும் தான் வரலாற்றை நம்புவார்கள். இந்துத்துவ அரசியல் இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு. வரலாற்றைக் கொண்டாட மறுத்த காந்திதான் இந்து-

முஸ்லிம் ஒற்றுமைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக நம் முன் நிற்கிறார். கனக – விஜயர் தலையில் கல் சுமந்த பெருமையை மேடைகளில் முழங்கும் தா.பாண்டியர்கள் இது குறித்து யோசிக்க வேண்டும்.

**இப்படி தமிழன தேசியவாதிகளை விமர்சிக்கும் உங்கள் மீது, இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு வால் பிடிக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் படுகிறது. உள் முரண்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அல்லது பூசி மெழுகும் வேலையைத்தானே நீங்கள் முஸ்லிம்கள் விஷயத்தில் செய்கிறீர்கள்? அது மட்டும் சரியா?**

வன்முறையை யார் தூண்டினாலும், பயங்கர வாதத்திற்கு யார் காரணமானாலும் அதை நாம் ஏற்க முடியாது. எத்தகைய உன்னத அரசியல் நோக்க மானாலும் arbitrary ஆக, அப்பாவி மக்களைக் கொல் வதை யாரும் ஆதரிக்க முடியாது. சக மனிதர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் செயல்களாகத்தான் பயங்கரவாத நடவடிக்கைகளை நாங்கள் பார்க்கி றோம். இத்தகைய பயங்கரவாதச் செயல்களைக் கண்டிப்பது, தண்டிப்பது என்பதற்கெல்லாம் மிகப் பிரம்மாண்டமான அரசு எந்திரங்கள், ஊடகங்கள் இருக்கின்றன. யாராலும் கண்டுகொள்ளப்படாத மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதற்கு நாங்கள் முன்னுரிமை அளித்துச் செயல்படுவதை பயங்கரவாதத்தை ஆதரிப்பதாகச் சுருக்கிப் பார்க் கக்கூடாது. சிறுபான்மையினரின் பயங்கரவாதத்தை மட்டுமல்ல; மாவோயிஸ்டுகளின் வன்முறையைக் கூட, அவை அரச வன்முறைக்கு எதிரானதாகவே இருந்தபோதிலும் அதை நாங்கள் கண்டிக்கத் தவறு வதில்லை. டாக்டர். பினாயக் சென், டாக்டர். பால கோபால் போன்ற மனித உரிமைப் போராளிகள் இதை வெளிப்படையாகச் சொல்லியுள்ளனர்.

வன்முறை குறித்த எனது பார்வையை ‘அரசு, இறையாண்மை, ஆயுதப் போராட்டங்கள்’ என்ற சமீபத்திய கட்டுரை ஒன்றில் விரிவாகச் சொல்லி இருக்கிறேன். வலதுசாரி இந்து பாசிசத்திற்கு எதிராக ஒடுக்கப்படும் முஸ்லிம்கள் பக்கத்தில் முழுமையாக நிற்கிறேன் என்பதற்காக அவர்கள் சொல்லும் எல்லாக் கருத்துகளையும் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதல்ல. எடுத்துக்காட்டாக, சிலவற்றைச் சொல்ல முடியும். முஸ்லிம் இயக்கங்கள் மரண தண்டனையை ஆதரிக்கின்றன. நாங்கள் எதிர்க்கிறோம். பள்ளிகளில் பாலியல் கல்வி தேவை என நான் வற்புறுத்தி எழுதியதை முஸ்லிம் இதழ்கள் கண்டித்துள்ளன. அதேபோல ஒரு பால் புணர்ச்சியைக் குற்றமாக்கும் இ.பி.கோ 377ஆவது பிரிவை நீக்க வேண்டும் என நான் பத்தாண்டுகளாக எழுதி வருகிறேன், பேசி வருகிறேன். இதையும் முஸ்லிம்கள் ஏற்பதில்லை.

முஸ்லிம்கள் மத்தியில் உலகளவில் நடைபெற்று வரும் பல உள் விவாதங்களை மிக விரிவாக ஒரு முஸ்லிம் இதழில் நான் தொடராக எழுதியுள்ளேன். ‘இஸ்லாமிய விவாதங்கள்’ என்கிற அந்தக் கட்டுரை எனது ஒரு தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. உள் விவாதங்கள், கருத்து வேறுபாடுகளைச் சொல்வதன் மூலம் முஸ்லிம் ஒற்றுமை பாதிக்கப்படும் என நான் நினைக்கவில்லை.

**இப்போது இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமை அடிப்படையில், மனித நேய அடிப்படையில் குறுகிய கால, நீண்ட கால செயல் திட்டம் எப்படி இருக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

நீண்டகால ஆயுதப் போராட்டம் நடைபெற்ற எந்த இடத்திலும் உடனடியாக உச்சபட்சக் கோரிக்கைகளை வைப்பது பெரும் ரத்தக் களறிக்கே இட்டுச் செல்லும். தனி ஈழம் என்கிற உச்சபட்சக்

கோரிக்கை இப்போது சாத்தியமில்லை என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று உடனடியாக அங்கு செய்ய வேண்டியது 30 ஆண்டு காலப் போரில் அனைத்தையும் இழந்து நிற்கும் தமிழ் மக்களுக்கு முழு நிவாரணத்தை அளிப்பதுதான். நிழற்சிறைகளாக உள்ள அகதி முகாம்கள் ஒழிக்கப்பட்டு அங்குள்ளவர்கள் தம் பழைய வாழிடங்களுக்குத் திரும்பிப் பழைய வாழ்வை மீட்டுருவாக்கம் செய்துகொள்ள எல்லா விதமான உதவிகளும் செய்யப்பட வேண்டும்.

படிப்படியாகத் தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவம் நீக்கப்பட வேண்டும். ஆனால் ராஜ பக்சே அரசோ மேலும் மேலும் தமிழ்ப் பகுதி களில் இராணுவத் தலைமையகங்களை ஏற்படுத்தி வருகிறது. இராணுவத்தில் மேலும் 50,000 பேர் சேர்க்கப்பட இருப்பதாகவும் அறிவித்துள்ளது. இதை நிறுத்துவதற்கு சர்வதேச அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

வெற்றி மமதை காரணமாக பெருந்தேசிய இனவெறி அங்கே இன்று உச்சத்தை அடைந்தி ருக்கிறது. ராஜபக்சே போன்றவர்களின் தேர்தல் வெற்றிக்கு இது தேவைப்படுகிறது. இவ்வாறு கட் டமைக்கப்படும் இனவெறி தமிழர்களை நோக்கி மட்டுமல்லாமல் பிற சிறுபான்மையினரை நோக்கி யும், சிங்கள ஜனநாயக சக்திகளை நோக்கியும் திரும்பு கிறது. இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதிலும் அதற்காகப் போராடுவதிலும் சிங்கள ஜனநாயக, இடதுசாரி சக்திகள் கவனம் செலுத்தவேண்டும். இன்றைய உடனடித் தேவை ஒரு பகை மறுப்பு (Reconciliation). முஸ்லிம்கள் உள்ளிட்ட மூன்று இன மக்களும் இது குறித்து சிந்திக்க வேண்டும். சிங்கள மக்களுக்கு இதில் கூடுதல் பொறுப்பு உண்டு.

அரசியல் தீர்வு குறித்த விவாதம் மீண்டும் தொடங்கப்பட வேண்டும். பெரிதாகப் பேசப்படும் 13ஆவது சட்டத் திருத்தம் 'இந்தியக் கூட்டாட்சியின் ஒரு மோசமான பிரதியாக்கம்' என்று அன்று நாங்கள் நடத்திய கருத்தரங்கில் பாலகோபால் பேசினார். ஒரு நல்ல பிரதியாக்கமாக இருந்தால்கூட அது முழுமையானதாக இருக்க முடியாது. ஏனெனில் இந்தியக் கூட்டாட்சி முறை அப்பழுக்கற்ற ஒன்று அல்ல. ஏராளமான குறைபாடுகள் உள்ளன. அதிகாரங்கள் மத்தியிலேயே குவிந்துள்ளன. எனவே, இன்னும் நீதியான ஒரு அரசியல் தீர்வை நோக்கிச் செயல்படுதல் அடுத்த கட்டச் செயல்பாடாக இருக்க வேண்டும்.

அமர்தியா சென் சொல்வது போல முழுமையாக நீதியுள்ள (Perfectly Just) ஒரு சமூகம் என்றுமே சாத்தியமே இல்லை. ஆனால் மேலும், மேலும் நீதியை நோக்கிய நகர்வுக்குச் சாத்தியமான சமூகமாக அது அமைய வேண்டும். இந்தப் பொதுவான கருத்து இன்று ஈழத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கும் பொருத்தமானதே.

ஒரு கண்ணியமான அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கு மிகப் பெரிய அழுத்தத்தை அளிப்பது நமது கடமை. சிங்கள – தமிழ்த் தேசிய இனங்களுக் கிடையே மட்டுமின்றி தமிழ்ச் சமூகத்திற்குள்ளேயே ஒரு பகை மறப்பு இன்று உடனடித் தேவையாக இருக்கிறது. பகை மறப்பு நடவடிக்கைக்கு நம் முன் உள்ள மிகப் பெரிய எடுத்துக்காட்டு தென் ஆப்பிரிக்கா. பகை மறப்பு என்பது பழைய தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சிப்பதாக இருக்கும் அதே நேரத்தில், பழிவாங்குவதாக அமைந்துவிடக்கூடாது. கிழக்கு மாகாணத்தவர், முஸ்லிம்கள், யாழ்ப்பாண சமூகத்தினர் தமது பழைய பகைகளை மறந்து

ஒன்றுபட வேண்டும். வடக்கு – கிழக்கு இணைப்பு, முஸ்லிம்கள், பஞ்சமர்கள் ஆகியோரின் பிரச்சினைகள் தொடர்பான தமிழ் மக்களின் கருத்துகளை அறிய பொது வாக்கெடுப்பு ஒன்றையும் நடத்தலாம்.

எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் மூனறு அம்சங்களில் தமது பழைய பாதையிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர். அவை: 1) ஆயுதப் போராட்டத்தை நிறுத்திக் கொள்வது, 2) பேச்சுவார்த்தைகளில் பிற இயக்கங்களுடன் சேர்ந்து பங்கேற்பது, 3) முஸ்லிம்களுடனான இடைவெளியைக் குறைப்பது.

இந்த மூன்றும் வரவேற்கத்தக்க பாதை விலகல். இது தொடர வேண்டும்.

“அண்ணா முதல்வரான பிறகு
இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை
மட்டுப்படுத்தவே முயன்றார்.
தனது ஆட்சிக்கு
எவ்விதத்திலும் இடையூறு
வருவதை அண்ணா
விரும்பவில்லை. போராட்டம்
எங்கள் கையில் பத்திரமாக
இருக்கிறது என்று மட்டும்
சொல்லிக்கொண்டார்”

**பா. செயப்பிரகாசம்:** *தமிழக அரசின் செய்தித்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 'சூரியதீபன்' என்ற பெயரில் எழுதிவருகிறார். இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றிருக்கும் இவர், தீவிர தமிழுணர்வாளராக அறியப்படுபவர்.*

**கேள்வி. 1967லிருந்து தொடர்ந்து திராவிடக் கட்சிகளே ஆட்சியில் இருந்து வருகின்றன. எந்த அளவுக்கு அவை தமிழுணர்வை மேம்படுத்தும் வகையில் செயல் பட்டிருக்கின்றன?**

*பதில்: 'திராவிட' என்று பெயருக்கு முன்னால் வைத்துக் கொண்டுவிட்டால் அவை திராவிடக் கட்சிகளாகிவிடுமா? இரு கட்சிகளின் ஆட்சியிலும் தமிழ் உணர்வுக்கு, தமிழ் இனத்தின் நலனுக்கென எதுவும் செய்யப்படவில்லை. திமுக உதட்டளவிலாவது திராவிடம் பேசும், தமிழினம் பற்றி முழங்கும். அ.இ.அ.தி.மு.கவில் அதுவும் இல்லை. அவ்வளவுதான் வேறுபாடு. தேர்தல் அரசியலுக்கு வந்து அதிகாரத்தை அனுபவிக்கவேண்டும் என்று நினைப்பவர்களிடம் இலட்சிய வேகம் எதையும் எதிர்பார்க்கமுடியுமா?*

**1965ஆம் வருட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.**

*1965 இந்தி எதிர்ப்புப் போராட்டம் தன்னெழுச்சியாகத் துவங்கியதுதான் என்றாலும், பின்னிருந்து இயக்கியது தி.மு.கவினர்தாம். எல்.கணேசன் போன்ற*

வர்களெல்லாம் இதில் முக்கிய பங்காற்றினார்கள். "இன்று இங்கே மறியல், நாளை அங்கே மறியல்" என்று சென்னையில் முடிவெடுக்கப்பட்டு மாநிலம் முழுமைக்கும் தகவல் அனுப்பப்பட்டது. ஆனால், தலைவர்களே எதிர்பாராத வகையில் சில நாட்களிலேயே போராட்டம் மிகவும் தீவிரமடைந்தது. பெருமளவு மக்கள் ஆதரவு கிடைத்தது. கிராமப் புறங்களில்கூட எதிர்ப்புணர்வு மேலோங்கியது. வடக்கத்திக்காரன் நம்மை அடிமையாக்க முயல்கிறான் என்று நினைத்தார்கள். ஒட்டுமொத்த தமிழ்நாடே கொந்தளிக்கத் துவங்கியது. அந்த நேரத்தில்தான் போராட்டத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற சமிக்ஞை அவசர அவசரமாக தி.மு.கவிடமிருந்து தான் வந்தது. காரணம், போராட்டம் கைமீறிப் போகிறது என்று அவர்கள் அஞ்சியிருக்கவேண்டும். அடுத்த கட்டத்திற்கு கொண்டுசென்று அதனை இன விடுதலைப் போராட்டமாக மாற்றவேண்டுமென்று அவர்கள் நினைக்கவில்லை. அரசியல் அதிகாரத்தை அனுபவிக்க விரும்புபவர்களுக்கு எப்படி போர்க் குணம் இருக்கும்?

அண்ணா முதல்வரான பிறகு இந்தி எதிர்ப்பின் தீவிரத்தை மட்டுப்படுத்தவே முயன்றார். இந்தித் திணிப்பு தொடர்வதால் போராட்டமும் தொடர வேண்டும் என்று தி.மு.க. இளைஞர்கள் வற்புறுத்தினர். கோவையில் தனித் தமிழ்நாடு கொடி கூட ஏற்றப்பட்டது. ஆனால் அத்தகைய முயற்சிகள் இறுதியில் தோற்றுப்போயின. மாணவர்கள் மீண்டும் களத்தில் இறங்கியபோது இரா. ஜனார்த்தனம் போன்றோரை அனுப்பி போராட்டத்தை கைவிடச்செய்தது தி.மு.க. அரசு. தனது ஆட்சிக்கு எவ்விதத்திலும் இடையூறு வருவதை அண்ணா விரும்பவில்லை. போராட்டம் எங்கள் கையில் பத்திரமாக இருக்கிறது என்று மட்டும் சொல்லிக் கொண்டார். ஆனால் போராட்டம் எதுவும் நடைபெறாதவாறு பார்த்துக்கொண்டார்.

பிற்காலத்தில் தி.மு.க. பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைக்கும்வரை சென்றது. இலங்கையில் தமிழ் இன அழித்தொழிப்பிற்குப் பின் நின்ற காங்கிரசுடன் கைகோர்ப்பதிலும் தன் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதிலும் தனது சொந்த பந்தங்களை வளப்படுத்துவதிலும் அதிக அக்கறை காட்டுகிறார் கலைஞர். இம்மாதிரி சந்தர்ப்பவாத நடவடிக்கைகளுக்கு முதல் தி.மு.க. அரசின் காலத்திலேயே வித்திட்டாகிவிட்டது. இனவிடுதலைப் போர் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது.

**தி.மு.கவினருக்கு வாய்ப்புகள் கொடுப்பதற்கென்றே 1971ஆம் ஆண்டு கருணாநிதியால் நியமிக்கப்பட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களில் ஒருவர்தானே நீங்களும்?**

நீங்கள் சொல்வது சரிதான். என் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் பல்வேறு நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் நானும் மனுப்போட்டு அரசுப் பணியில் சேர்ந்தேன். அதே நேரத்தில்தான் (சசிகலா) நடராஜன், முதல்வரின் நம்பிக்கைக்குரிய செயலர்களில் ஒருவரான ராஜமாணிக்கம் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். நான் அத்துறையிலேயே பணியாற்றிவிட்டு ஓய்வுபெற்றுவிட்டேன்.

தி.மு.கவின் சீரழிவு 1967லேயே தொடங்கிவிட்டது. புதிய அமைச்சர்களும் தலைவர்களும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களும் நடந்துகொண்ட முறை எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அது அருவருப்பாக இருந்தது. அவற்றையெல்லாம் விவரிக்க இயலாது. திருப்பரங்குன்றம் பகுதியின் முக்கிய புள்ளி அக்கினிராசுவின் பெயர் அப்போதே உணவுக்கிடங்கு ஊழலில் அடிபட்டது.

வட்டம், மாவட்டம், அண்ணன், தம்பி, கூழைக் கும்பிடு, ஊழல், மற்றவகையான ஒழுங்கீனங்கள் நாளுக்கு நாள் வளர்ந்ததே தவிர, குறையவில்லை. எல்லோரிடமிருந்தும் விலகி இருப்பதுதான்

என்னால் முடிந்த காரியம். என்னை மௌனமான எதிரி என்றார் பெ.சீனிவாசன். ஏன் எங்களுடன் கலக்கவேமாட்டேன் என்கிறீர்கள் என்று காளிமுத்து கேட்டார். தான் தலைவர் என்று முடிவுசெய்து விட்ட ஸ்ரீனிவாசன் என்னுடன் பேசுவதைக்கூட தவிர்த்தார். இவர்களிடம் நான் ஒரு சில பரிந்துரைகளுக்காகச் சென்றபோது மிக மனம் நொந்திருக்கிறேன்

பல முறை மனம் வெறுத்து பணியிலிருந்து விலகி மீண்டும் விரிவுரையாளராகிவிடலாமா என்று யோசித்திருக்கிறேன். பல்வேறு கட்டாயங்களின் காரணமாக தொடரவேண்டியதாகிவிட்டது. முதல் தலைமுறை தலைவர்களிடமே இப்படி ஒழுங்கீனம் இருந்திருக்குமானால் வேறு எப்படி அவ்வியக்கம் வளர்ந்திருக்கும். மனம் நொந்து போய்த்தான் இடது சாரிகளின் பக்கம் சென்றேன். அவர்களுடைய புரிதலும் அணுகுமுறையும் எனக்கு சரியென்றுபட்டது. அவர்களுடனேயே இருந்துவிட்டேன்.

**உங்களை அனைத்துவிதமான இலங்கைத் தமிழர் ஆதரவு ஆர்ப்பாட்டங்களிலும் காணமுடிகிறதே?**

ஆம். 1983 இனப் படுகொலைக்குப் பிறகு நாங்கள் இலங்கைத் தமிழருக்காக தீவிரமாகக் குரல் கொடுக்கத் துவங்கினோம். தமிழின விடுதலை மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இனங்களும் விடுதலை பெறவேண்டும் என்று நினைக்கிறோம். அதன் பிறகே வர்க்கப் புரட்சி பற்றி நாம் சிந்திக்கமுடியும். தமிழினத்தின் பெயரால் வாக்குகளைப் பெறும் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழின விடுதலைக்கு. தொடர்ந்து பின்னடைவு ஏற்படுவதுதான் சோகம்.

**அதாவது 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு தமிழகத்தில் இருந்த தாக்கத்தை இப்போது ஏன் நாம் பார்க்கமுடியவில்லை?**

ப. மக்களிடம் செல்வாக்கு பெற்ற திராவிடக் கட்சி கள் கொள்கையளவில் மிக மிக நீர்த்துப்போய் விட்டன. அங்கே ஈழத்தில் தன் சொந்த மகனையே களத்தில் பலி கொடுக்கிறார் ஒரு தலைவர். இங்கோ சொந்த மகன், மகள், பேரன் என்று தனது வாரிசுகளுக்கு பதவி வாங்கித் தருவதற்காக சுயமரியாதையையும் தியாகம் செய்ய தயாராய் இருக்கிறார் இன்னொருவர்.

இன அரசியல் பேசும் எந்தக் கட்சித் தலைவரி டமும் நேர்மை இல்லை. நாடிநரம்பு புடைக்கப் பேசும் வைகோ ஒரு கட்டத்தில் விடுதலைப் புலி களை ஒழிப்பதில் முன்நின்ற, வாய்ப்பு கிடைத்தால் மீண்டும் அப்படி செய்யக்கூடிய சந்தர்ப்ப வாதியான ஜெயலலிதாவின் முன் சப்தநாடியும் ஒடுங்கி நிற்கிறார். ராமதாசோ இறுதிவரை தனது மகனை அமைச்சராக வைத்து அழகுபார்த்தார். திருமாவளவன் காங்கிரசுடனேயே கூட்டணி அமைக்கிறார். எப்படி இவர்களை மக்கள் நம்பு வார்கள்? போராட்டத்தில் இறங்கவேண்டிய இளைஞர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இனத்தைப் பற்றி, மொழியைப் பற்றி, சமூகத்தைப் பற்றிய எவ்வித அக்கறையும் இன்றி இருக்கின்றார் கள். சினிமா, டிவி, செல்போன், ஐடி. என்று இப்படிப் போகிறது அவர்கள் வாழ்க்கை. இந்நிலையில் எப் படி அவர்களிடம் போர்க் குணத்தை எதிர்பார்க்க முடியும்? அவர்களுக்கு முன்மாதிரியான அரசியல் தலைவர்கள் யார் இருக்கிறார்கள்?

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வேறு இளைஞர் க்ள் மனதை வக்கரித்து வைக்கின்றன. இத்தொலைக் காட்சி நிறுவனங்களெல்லாம் யாரால் நடத்தப் படுகின்றன? இவர்களுக்கெல்லாம் கடுகளவேனும் சமூக உணர்வு இருந்தால் இப்படியெல்லாம் செய் வார்களா? இன்றக்குத்தான் சன் டிவியும் கலைஞர் டிவியும் இப்படி இருக்கின்றன என்று நினைக்க

வேண்டாம். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. தமிழுணர்வுடன் செயல்பட்டு, நிர்வாகத்தில் தமிழைப் புகுத்துவதில் ஆர்வம் காட்டிய தமிழ்க்குடிமகனை முரசொலி மாறன் மிகவும் ஏளனமாகப் பேசுவார். அப்படி இருந்தது திமுக தலைமையின் தமிழுணர்வு.

**ஓர் இடதுசாரி இயக்கத்தில் இணைந்துவிட்ட உங்களுக்கு இத்தகைய தலைவர்களுடன் பழகுவது எப்படி இருக்கிறது?**

என்ன சொல்வது? எங்களது முடிவுப்படி ஒரு சில போராட்டங்களில் கலந்துகொள்கிறோம். அவை எல்லாம் அவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள். நோக்கங்களில் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. தனி ஈழம்தான் தீர்வு என்று நாங்களும் நினைப்பதால் நாங்கள் பங்கேற்றோம். மற்றபடி அவர்களின் பார்வைகளுடனோ, அணுகுமுறைகளுடனோ எங்களுக்கு உடன்பாடில்லை.

**தமிழின தேசியம் பேசுவோர் தலித் மக்கள் நிலை குறித்து கவலைப்படுவதில்லை என்று விமர்சனம் இருக்கிறதே...**

நீங்கள் கூறுவது சரிதான். மேலவளவு, திண்ணியம், கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி எனத் தொடர்ந்து தலித்துகளுக்கு எத்தனையோ அநீதிகள் இழைக்கப்பட்டாலும், நெடுமாறன் போன்றவர்கள் அமைதி காக்கின்றார்கள். அப்படிச் செய்வது தமிழின அணி திரட்டலை பாதிக்கும் என்று அவர்கள் நினைப்பது போலத் தெரிகிறது. அதாவது அவர்களைப் பொறுத்த வரை தமிழர்கள் என்ற வரையறையில் தலித்துகள் அடங்கமாட்டார்கள் என்றாகிறது. அது மட்டுமல்ல; முஸ்லிம்கள் வளைகுடாவிலிருந்து நாடு கடத்தப்பட்டபோதோ, அதற்கு முன்னர் கிழக்கில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் கொலையானபோதோ நமது தமிழின உணர்வாளர்கள் கண்டித்ததில்லை. ஆனால். நான் அவர்களிடம்

இதைப்பற்றியெல்லாம் விவாதிப்பதில்லை. அதனால் பயனில்லை. ஆனாலும் இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க, அவர்களுடன் கைகோர்க்க எக்காலத்திலும் தயங்கமாட்டேன்.

**இன்றைய நிலையில் தமிழின தேசியத்தின் எதிர்காலம் எப்படி இருக்கிறது என நினைக்கிறீர்கள்?**

சிறப்பாக இருப்பதாகவே கருதுகிறேன். காரணம் மத்திய அரசு தங்களுக்கு அந்நியமான அரசு, தங்கள் நலனுக்கு எதிரான அரசு என்று மக்களுக்கு மெல்ல மெல்ல புரிந்துவிட்டது. இது ஒருகால கட்டத்தில் வெடித்துக் குமுறத்தானே செய்யும்? அதற்கு எது விசையாக அமையும் என்று என்னால் சொல்ல இயலவில்லை. உலகமயமாதலின் போக்கில், முதலாளித்துவத்திற்கே உரித்தான திடீர் பொருளாதார வீழ்ச்சி அல்லது இந்திய ஆளும் வர்க்கம் ஏதேனும் ஒரு பகுதியில் கட்டவிழ்த்துவிடும் வன்முறை — இவையெல்லாம் சேர்ந்தோ அல்லது ஏதாவது ஒன்றோகூட அப்படிப் பெரும் புரட்சியை உருவாக்கிவிடும் என்றே நம்புகிறேன். அதற்காக உழைக்கவேண்டியதுதான் புரட்சியாளனின் கடமை.

# டி.எஸ்.எஸ். மணி

"இந்திய அரசு எந்திரம்
பரந்துபட்ட மக்களுக்கு
எதிரானது. அதைத் தகர்ப்பது
நமது முதல் புரட்சிக்
கடமையாக இருக்கிறது.
அதற்குத் தேவையான
அனைத்துத்
தந்திரோபாயங்களையும்
நாம் கையாள வேண்டும்."

**டி.எஸ்.எஸ். மணி:** *வினோத் மிஸ்ரா தலைமையிலான நக்ஸலைட் இயக்கத்தின் தமிழக முன்னோடிகளில் ஒருவர்.*

**கேள்வி: மார்க்சியத்தால் ஈர்க்கப்பட்டு பொது வாழ்வுக்கு வந்த நீங்கள் ஏன் இப்போதெல்லாம் அதிகமாக தமிழ் தேசிய இனப் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்துகிறீர்கள்?**

**பதில்:** நான் எந்தத் தமிழ் இன உணர்வாளர் அமைப் பிலும் இல்லை. ஆனால் அத்தகைய பல அமைப்பு களுடன் இணைந்து செயலாற்றுகிறேன் என்பது உண்மை. அப்படிச் செய்யவேண்டியது காலத்தின் கட்டாயம். எழுபதுகளிலும் எண்பதுகளிலும் வர்க்க முரண்பாடுகள் இந்தியாவில் கூர்மையடைந்திருப் பதாக நினைத்தோம், எனவே வர்க்கப் போராட்டத் திற்கான நடவடிக்கைகளில் இறங்கினோம். இப்போது இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிரான மனநிலை தமிழக மக்கள் மத்தியில் வளர்ந்திருக்கிறது. ஆசியா வையே தன் ஆளுகையில் வைத்துக்கொள்ள விரும்பும் இந்தியப் பேரரசு, இலங்கையில் தமிழின விடுதலைப் போராட்டத்தை அழித்திருக்கிறது, இன அழித் தொழிப்பிற்கு மத்திய ஆட்சியாளர்கள் துணை போயிருக்கிறார்கள், விடுதலைப்புலிகளுக்கெதிரான போரை இவர்கள் பின்னின்று நடத்தியிருக்கிறார்கள், சக தமிழர்கள் இப்படிக் கொன்று குவிக்கப்பட காரணமாய் இருந்த இவர்களை தமிழ்மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். இத்தகைய தொரு சூழல் இங்கே தேசிய இன விடுதலைக்கான

போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உதவும். எனவே அந்தப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன்.

இந்திய அரசு எந்திரம் பரந்துபட்ட மக்களுக்கு எதிரானது. அதைத் தகர்ப்பது நமது முதல் புரட்சிக் கடமையாக இருக்கிறது. அதற்குத் தேவையான அனைத்து தந்திரோபாயங்களையும் நாம் கையாள வேண்டும். வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய கம்யூனிஸ்ட் கட்சிகளே அகில இந்திய அமைப்புகளை உருவாக்கி வைத்திருக்கின்றன. 'இந்தியா' என்ற மாய பிம்பத்தின் மீது மக்கள் நம்பிக்கையை வளர்க்கவும், ஆளும் வர்க்கத்தின் அட்டகாசங்களுக்கு வலு சேர்க்கவுமே இந்த அணுகுமுறை பயன்படுகிறது. மாறாக, கம்யூனிஸ்டுகள் அந்தந்த தேசிய இனங்களின் விடுதலைக்காகவே அணி திரளவேண்டும். ஐக்கிய இந்திய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று உருவாக வேண்டும்.

**வர்க்கப் போராட்டத்திலிருந்து நீங்கள் இன விடுதலைப் போராட்டத்திற்கு மாறியதை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?**

தவறாகக் கூறுகிறீர்கள். நான் மாறவில்லை. மானுடம் வெல்லவேண்டும், வெல்லும். எவ்வித பேதமுமற்ற, எவ்வித சுரண்டலுமற்ற ஒரு சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்ற லட்சியத்திலிருந்து நான் மாறவில்லை. ஒரு போதும் மாறவும்மாட்டேன். ஆனால் சந்தர்ப்ப சூழலைப் பொறுத்து ஏதாவது ஒரு பிரச்சினை முன்னிறுத்தப்படுகிறது. அவ்வகையில் இன்று தேசிய இனங்களின் பிரச்சினை, அவ்வளவே.

பெண்கள், சாதியம், சுற்றுச்சூழல் போன்ற பிரச்சினைகளையும் கடந்த காலங்களில் மார்க்சிஸ்டுகள் புறக்கணித்திருக்கின்றனர். அதன் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இனியும் அத்தவறை செய்யக்கூடாது என்றுதான் நான் வற்

புறுத்துகிறேன். இன்றைய காலகட்டத்தில் தமிழின உணர்வு, தமிழர்கள் மத்தியில் கொழுந்துவிட்டெரியும்போது அதைக் கண்டுகொள்ளாமலிருப்பது, அத்தகைய போராட்டங்களில் பங்குபெறாமலிருப்பது பெரும் தவறு. எச்சமூகத்திலும் இப்படிப் பல்வேறு தளங்களில் பலவகையான சிந்தனை நீரோட்டங்கள் ஓடிக் கொண்டே இருக்கும். அவற்றில் ஒன்றை நாம் முன்னிலைப்படுத்துவதால் மற்றவற்றை புறந்தள்ளுவதாகப் பொருளல்ல. அரசு எந்திரத்தை, அதிகார வர்க்கத்தை வீழ்த்த எந்த ஆயுதத்தைப் பயன்படுத்த முடியுமோ, அதை நாம் பயன்படுத்த வேண்டும்.

**எந்த அளவுக்கு இன உணர்வு தமிழ்நாட்டுத் தமிழர்கள் மத்தியில் ஓங்கியிருப்பதாக கருதுகிறீர்கள்? எவ்வளவு முத்துக்குமார்கள் உருவாகி இருக்கமுடியும்?**

உண்மையைச் சொல்லவேண்டுமேயானால், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் எழுச்சி, இலங்கைப் பிரச்சினையின் பின்விளைவே. மக்கள் இலங்கையில் வாழும் நம் இனத்தவர், நசுக்கப்படுகிறார்கள், ஒடுக்கப்படுகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள், அவர்களை நம்மால் காக்கமுடியவில்லை, இதற்குக் காரணம் மத்திய அரசே என்று புரிந்துகொண்டிருக்கிறார்கள். தமிழனுக்கு இந்த இந்திய அரசிடமிருந்து நியாயம் கிடைக்காது என்ற உணர்வு இன்று மேலோங்கி இருக்கிறது. ஒட்டுமொத்தமாக இந்திய அரசியல் அமைப்பை எதிர்த்தே இந்தக் கோபம் திரும்பும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

**பொதுவாக இன விடுதலைப் போராட்டங்களுக்கு பெரு முதலாளி வர்க்கம், அவர்களைச் சார்ந்து நிற்போர்தானே தலைமை ஏற்கின்றனர். அதை ஒரு படிக்கட்டாக வைத்துக்கொள்வோம் என்று வாதிட்டாலும்கூட, அவர்கள் பிற்போக்காளர்களாக, பாரதூரமான சமூக மாற்றங்களில் அக்கறையில்லாதவர்களாகவே இருக்கிறார்கள் என்பது வரலாறு காட்டும் பாடம். தமிழ்நாட்டில்கூட இன்று**

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முன்நிற்பது மேல் ஜாதியினர், மற்றும் இடைநிலை ஜாதியினர்தாம். விடுதலைச் சிறுத்தைகளும் அதில் தங்களை இணைத்துக் கொண்டாலும் தலைமை மற்ற ஜாதியினரிடமே இருக்கிறது. பழ.நெடுமாறனோ, ராமதாசோ அல்லது வைகோவோ தலித் மக்கள் பாதிக்கப்படும் எப்பிரச்சினைக்கும் முகம் கொடுப்பதில்லை. ராமதாஸ் தலித்துகளுக்கு எதிரான நிலையே பல கட்டங்களில் எடுத்து வருகிறார். இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

இப்படி எல்லாம் வறட்டுத்தனமாக பிரித்துப் பார்க்க நான் தயாரில்லை. ஒரு தேசிய இனம் பாதிக்கப்படும் போது யார் குரல் கொடுத்தாலும் நாம் அவர்களுடன் கைகோர்க்கவேண்டும். இங்கே பா.ம.கவின் ராமதாசையோ அல்லது மூவேந்தர் முன்னேற்றக் கழக சேதுராமனையோ தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளாக்கக் கருதவில்லை. அவர்களும் குரல்கொடுக்கிறார்கள், அவ்வளவே. தலித் பிரச்சினை குறித்து நெடுமாறன் அறிக்கை விட்டாரா, வைகோ அறிக்கை விடுகிறாரா என்பதல்ல பிரச்சினை. தமிழர் நலனுக்காகக் குரல் கொடுக்கின்றனர், வரவேற்போம். மற்றபடி தலித் மக்களின் உரிமைக்கான போராட்டமும் தொடரும்.

**தமிழ் மக்கள் மத்தியில் மத்திய அரசுக்கு எதிரான உணர்வு கொந்தளிப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் காங்கிரசுடன் கைகோர்த்த தி.மு.க. பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. இலங்கையின் மீது படையெடுத்து ஈழத்தை உருவாக்குவேன் என்று முழங்கிய ஜெயலலிதா வின் அ.இ.அ.தி.மு.க. தோல்வி அடைந்திருக்கிறது. பா.ம.க. போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும், வைகோ முகம் தெரியாத நபரிடமும் தோற்றுப்போயினர். மற்ற காங்கிரசார் தோற்றனர், ஆனால் தனி ஈழ அபிமானிகள் குறிவைத்த ப.சிதம்பரம் வெற்றி பெற்றிருக்கிறார். இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்று நினைக்கிறீர்கள்?**

என்னைப் பொறுத்தவரை தன்னை இலங்கைத் தமிழர் நலனின் அக்கறை உள்ளவராகக் காட்டிக் கொள்வதில் கருணாநிதி வெற்றிபெற்றுவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். அவருக்கு ஆதரவாக சன், கலைஞர் டிவி, இன்னும் சில பத்திரிகைகள், செய்திகள் வெளியிட்டன. மக்களும் நம்பிவிட்டனர். விடுதலைப்புலிகளின் கடும் விமர்சகராக இருந்த ஜெயலலிதா தேர்தல் நேரத்தில் ஈழ ஆதரவாளராக மாறியது மகிழ்ச்சிக்குரியதே. ஈழத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்த செய்தி ஜெயலலிதாவின் பிரச்சாரத்தால்தான் அடித்தட்டு மக்களை சென்றடைந்தது. ஆனால் தொடர்ந்து ஈழத் தமிழர்களுக்காக குரல்கொடுத்துவருவதாக முதல்வர் கூறிவந்ததும் மக்கள் மனதில் பதிந்துவிட்டது. எனவே இருபுறமும் ஈழத் தமிழர்க்கு ஆதரவான சக்திகளே இருந்த நிலையில், தொடர்ந்து முயற்சி எடுத்துவந்தவர் கருணாநிதி என்ற புரிதலில் அவரது அணிக்கு ஆதரவு அளித்துவிட்டார்கள்.

**அதாவது அவரது ஆறரை மணிநேர உண்ணாவிரதத்தை மக்கள் நம்பினார்கள், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்திற்குப் போட்டியாக இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையைத் துவக்கியதையும் அவர்கள் வரவேற்றார்கள் என்கிறீர்கள்...**

ஆமாம், மக்கள் நம்பினார்கள், அதனாலேயே அவரை ஆதரித்தார்கள், இன்னும் சொல்லப்போனால் நல உரிமையின் பேரணிகளுக்கு அனைத்து மாவட்டங்களிலும் நல்ல வரவேற்பிருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்தே வாக்களிக்க முடிவு செய்திருந்த மக்கள், அதிகமாகச் செய்தது கலைஞர் என்ற நினைப்பில் அவருக்கு ஆதரவாக வாக்களித்து விட்டார்கள். காங்கிரசின் முக்கிய தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டதும் மக்களின் மனநிலையை சுட்டிக்காட்டுவதாகும்.

**ஆனால் ப.சிதம்பரம், காங்கிரசின் அதி முக்கிய புள்ளி வென்றுவிட்டாரே?**

*மிகக் குறைவான வாக்குவித்தியாசத்தில்தான் வென்றிருக்கிறார். மேலும் அவர் கருணாநிதியின், தி.மு.க. அரசின் கொள்கைகளை முன்னிலைப் படுத்தியே வாக்குகேட்டார்.*

**அவரது பிரச்சாரத்துக்கு நாங்கள் சென்றிருந்தோமே, அவர் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அளித்த கடன் உதவி, மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் இவற்றைப் பற்றியல்லவா பேசினார்....**

*(சற்று கோபமாக) நீங்கள் ஓரிரு கூட்டத்திற்குத் தான் போயிருப்பீர்கள், எங்களது ஆட்கள் எத்தனையோ கூட்டங்களுக்குப் போய் தகவல் சேகரித்திருக்கிறார்கள். தமிழக அரசின் சாதனைகளை முன்வைத்துப் பேசியதால்தான் அவர் வெற்றி பெற்றார். கருணாநிதியே முழுக்க முழுக்க தனது அரசின் திட்டங்களைப் பற்றித்தான் பேசினார், எழுதினார், மத்திய அரசை அவர் நம்பவில்லை.*

**ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், மற்றும் மத்திய அரசின் மீது இருந்த நல்லெண்ணம், மாநில அரசின் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டம் இவற்றின் காரணமாகத்தான் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வென்றதாக பரவலாகக் கருதப்படுகிறது?**

*அதெல்லாம் ஊடகங்களின் திரிப்பு. நாடாளுமன்றத் தேர்தலை சட்டமன்றத் தேர்தலாக சித்தரிப்பதில் கலைஞர் வெற்றிபெற்றுவிட்டார்; அதுதான் உண்மை.*

**இறுதியாக, தமிழ் இன உணர்வு இயக்கத்தின் எதிர்காலம் என்ன?**

*இப்போது அடிநாதமாக இருக்கும் அவ்வுணர்வு காலப்போக்கில் வலுப்படும், பெரும் சக்தியாக உருவெடுக்கும். அதனை முன்னெடுக்கும் கட்சிகளின் தலைமையில் தமிழினம் விடுதலை பெறும், இது உறுதி.*

தற்போது விற்பனையில்

# ஸ்கூப்


## சமகால வரலாற்றுச் சம்பவங்களின் பின்னணி ரகசியங்கள்

### குல்தீப் நய்யார்




இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்றுவரை இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட பல சம்பவங்களை அருகிலிருந்து கவனித்திருக்கிறார் பிரபல பத்திரிகையாளரான குல்தீப் நய்யார். சுமார் 60 வருட காலமாகப் பத்திரிகையாளராக இருந்து வரும் 82 வயது குல்தீப் நய்யார், இந்தியா – பாகிஸ்தான் பிரிவினை காலம் முதல் லாகூருக்கு நட்பு பஸ் விடப்பட்டது வரை, இந்த 60 வருடங்களில் தான் எழுதிய முக்கிய “ஸ்கூப்”களை இந்தப் புத்தகத்தில் சுருக்கமாகத் தொகுத்திருக்கிறார். முகமது அலி ஜின்னா, மௌண்ட் பேட்டன், இந்திய – பாகிஸ்தான் எல்லையை வகுத்த ராட் க்ளிஃப், லால் பகதூர் சாஸ்திரி, காமராஜர், இந்திரா காந்தி, பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியாளர் ஜியா உல் ஹக் ஆகியோரை சந்தித்து, உரையாடிய குல்தீப் நய்யாரின் பத்திரிகையுலக அனுபவங்கள் 34 கட்டுரைகளாக இந்த நூலில் பதிவாகியிருக்கின்றன.

ஆங்கிலத்தில் *SCOOP: Inside Stories from the Partition to the Present* என்ற பெயரில் வெளியான இந்தப் புத்தகத்தை விறுவிறுப்பான நடையில் தமிழில் வழங்குகிறது மதுரை பிரஸ்.




**தமிழில்:** கே. முரளிதரன்

**பக்கங்கள்: 250 விலை: ரூ. 140**




## கதிரேசன் செட்டியாரின் காதல்

### (ஒரு துப்பறியும் நவீனம்)

**மா. கிருஷ்ணன்**

கதிரேசன் செட்டியாரின் வீட்டுப் பணியாள் ஒருவன் கத்தியால் குத்திக் கொல்லப்படுகிறான். அந்தக் கொலையின் பின்னணி என்ன, கொலை செய்தது யார்? ஆரம்பத்திலிருந்து முடிவுவரை விறுவிறுப்பாக நகரும் இந்த நாவலின் மொழிநடை மிகவும் வசீகரமானது. புதிதாக வரையப்பட்டு, புத்தகத்தில் இடம்பெற்றுள்ள பிரத்யேகமான சித்திரங்கள் வாசிப்பு அனுபவத்தை இனிமையாக்குகின்றன.

**பக்கங்கள்: 242 விலை: ரூ. 125**

## இந்திரா காந்தியைக் கொன்றது யார்?

**தாரிக் அலி**

**தமிழில் கே. முரளிதரன்**




இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைக் கொலைசெய்தவர்களின் பெயர்கள் மட்டும்தான் நமக்குத் தெரியும். ஆனால் அவர்கள் மட்டும்தான் இதில் ஈடுபட்டிருந்தார்களா? இந்திரா மீது சீக்கியர்களுக்கிருந்த உண்மையான ஆதங்கத்தை வேறு பெரிய சக்திகள் சிலவும் பயன்படுத்திக்கொண்டன என்கிறார் தாரிக் அலி. *The Assassination: Who killed Indira G?* என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியான புத்தகத்தின் தமிழாக்கம்.




**பக்கங்கள்: 176 விலை: ரூ. 160**

## நிழல் வீரர்கள்

### ஒரு ரா அதிகாரியின் நினைவுக் குறிப்புகள்

### பி. ராமன்

**தமிழில்: கே. முரளிதரன், கே. கார்த்திக்**




*இந்தியாவின் அயலக உளவு அமைப்பான Research & Analysis Wing (R&AW) குறித்துப் பல புத்தகங்கள் அந்த அமைப்பிற்கு வெளியில் இருப்பவர்களால் எழுதப்பட்டுவிட்டன. முதல் முறையாக 'ரா'வின் உயர் மட்டத்தில் பல காலம் பணியாற்றிய ஒருவர் அந்த அமைப்பைப் பற்றி விரிவாகச் சொல்கிறார். ராவின் பலம், பலவீனங்களையும் வெற்றி தோல்விகளையும் பாரபட்சமற்ற பார்வையில் முன்வைக்கிறது இந்த நூல். இந்தியாவின் சமகால நிலவியல் சார்ந்த அரசியலை, வெளியுறவுக் கொள்கையைப் புரிந்துகொள்ள விழையும் யாரும் படித்தாக வேண்டிய புத்தகம். The Kao Boys of R&AW என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியான நூலின் தமிழாக்கம்.*

**விலை: ரூ. 220; பக்கங்கள்: 304**

## விரைவில் வெளிவரயிருப்பவை

# அச்சமில்லை

## பகத் சிங்கின் வாழ்வும் மரணமும்

### குல்தீப் நய்யார்

*இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகத்தான பங்களிப்புச் செய்த பகத் சிங்கின் வாழ்க்கை வரலாறு. பகத் சிங் வாழ்ந்த, போராடிய, தூக்கிலிடப்பட்ட இடங்களுக்குச் சென்று பகத் சிங்கைச் சந்தித்த வர்களை, பழகியவர்களைப் பார்த்துத் தகவல்களைத் திரட்டி இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார் பிரபல பத்திரிகையாளரான குல்தீப் நய்யார். 7 ஆண்டு கால கள ஆய்வின் மூலம் தகவல்களையும் ஆவணங்களை யும் திரட்டி எழுதப்பட்ட புத்தகம். Without Fear என்ற பெயரில் வெளியிட்ட நூலின் தமிழாக்கம்.*

# பகத் சிங்கை காந்தி கைவிட்டாரா ?

### வி.என். தத்தா

*இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் மகாத்மா காந்தியும் பகத் சிங்கும் முரணான இரு துருவங்கள். லாகூர் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு பகத் சிங்கிற்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, மகாத்மா காந்தி மிகவும் செல்வாக்கான தலைவராக உருவெடுத்திருந்தார். அவர் நினைத்திருந்தால் பகத் சிங்கைத் தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றி யிருக்க முடியுமா? காந்தி – இர்வின் ஒப்பந்தத்தின் போது நடந்தது என்ன? ஆங்கிலத்தில் Gandhi and Bhagat Singh என்ற பெயரில் வெளியான புத்தகத்தின் சரளமான தமிழாக்கம்.*

# கடைசிச் சக்கரவர்த்தி

## வில்லியம் டால்ரிம்பிள்

*1857ஆம் வருட சுதந்திரப் புரட்சியைப் பற்றி பல நூறு புத்தகங்கள் எழுதப்பட்டுவிட்டன. வில்லியம் டால்ரிம்பிளின் இந்தப் புத்தகமும் அந்த புரட்சியை மையமாகக் கொண்ட நூல்தான். ஆனால், இந்தச் சம்பவத்தைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களிலேயே மிகவும் விறுவிறுப்பான, சுவாரஸ்யமான புத்தகம் இது. அந்தப் புரட்சி, அதற்கான காரணம், அதன் விளைவுகள், அந்தப் புயலில் சிக்கி சின்னா பின்னமான கடைசி முகலாய அரசனான பகதூர் ஷா ஜாஃபரின் வாழ்க்கை என வரலாற்று நூல்களில் ஒரு காப்பியம் என இந்தப் புத்தகத்தைச் சொல்லலாம். The Last Mughal என்ற பெயரில் வெளிவந்து உலகமெங்கும் பல விருதுகளை அள்ளிக் குவித்த இந்தப் புத்தகம் விரைவில் தமிழில்.*

இந்தப் புத்தகத்தின் தயாரிப்பு, உள்ளடக்கம்
பற்றிய உங்கள் கருத்துகளை, ஆலோசனைகளை
எங்களுக்கு எழுதுங்கள். அடுத்த பதிப்பை
மேம்படுத்த அவை எங்களுக்கு உதவும்.
*மின்னஞ்சல் முகவரி:* maduraipress@gmail.com

இன தேசியம் குறித்தும் தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு என்ற புரிதல் குறித்தும் விவாதிக்கும் தொகுப்பு. ஒரு பக்கம் தமிழகம் உலகமயமாகிக்கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளின் அற வீழ்ச்சி. இத்தகைய சூழலில் தமிழ்த் தேசியம் உருக்கொண்ட விதம், தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் குறித்து தமிழுணர்வாளர்கள், இத்தகைய கருத்தாக்கத்தில் ஆர்வம் கொண்டவர்கள், அரசியல் தலைவர்கள், அறிவுஜீவிகள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்பியதன் விளைவே இத்தொகுப்பு.

தமிழ்த் தேசியம் குறித்தும் இலங்கை இனப் போராட்டம் குறித்தும் ராஜன் ஹூல், சா.செ. சந்திரஹாசன், மறவன்புலவு சச்சிதானந்தம், மணியரசன், டி.எஸ்.எஸ். மணி உள்ளிட்டோரின் விரிவான பேட்டிகள். தமிழ்த் தேசியம் குறித்தும் அதன் போக்கு குறித்தும் அறிய விரும்புவோர் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய தொகுப்பு.

மதுரை பிரஸ்

ரூ. 160

ISBN 978-81-909332-0-9
00001
9 788190 933209